# உரைநடைத் தெளிவு

## ஓர் அறிமுகம்

க. சொக்கலிங்கம், எம்.ஏ.,
(சொக்கன்)

வாசுகி சொக்கலிங்கம், பி.ஏ., எம்.ஃபில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைநடைத் தெளிவு

## ஓர் அறிமுகம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
இல; 234
கே.கே.எஸ்வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல; 2573

வித்துவான் க.சொக்கலிங்கம், எம்.ஏ.
(சொக்கன்)
வாசுகி சொக்கலிங்கம், பி.ஏ., எம்.ஃபில்.

குமரன் பப்ளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன்: முதற் பதிப்பு: நவம்பர், 2000

உரிமை: ஆக்கியோருக்கு

உரைநடைத் தெளிவு
(ஓர் அறிமுகம்)

| | | |
|---|---|---|
| Title | : | URAINADAI THELIVU |
| Subject | : | Introducing Prose in Tamil |
| Author | : | Vidvan A. Sockalingam, M.A. |
| No. of Pages | : | 182 |
| Size | : | 14 x 22 cm. |
| Type | : | 10 Point |
| Paper | : | 16 kg Creamwove |
| Binding | : | Art Board |
| Typeset | : | 'NAM Process', Ph: 4331808 |
| Publishers | : | Kumaran Publishers<br>3, Meigai Vinayagar Street,<br>Vadapalani,<br>Chennai - 600 026. |

Printing by : **DHEVA OFFSET PRESS**, Chennai-5. Ph : 8589656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## படையல்

பேரா சிரியர் பெரும்புகழ்வித் யானந்தன்
சீரார் 'கலைமகிழ்நன்' தீந்தமிழில் - ஆராத
அன்புடனே வாழ்ந்த அவரடிக்கிந் நூலினைநாம்
இன்பாய்ப் படைத்தோம் இணைந்து.

க. சொக்கலிங்கம்
வாசுகி சொக்கலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாக்கியத்திலே சொல்லொழுங்கு | 1 |
| 2. | எழுவாய் பயனிலை அமைய வேண்டிய முறைமை | 8 |
| 3. | தோன்றா எழுவாய், தோன்றாப் பயனிலை தோன்றாச் செயப்படுபொருள் | 18 |
| 4. | எழுத்துக்களுக்கு ஒலியே அடிப்படை | 25 |
| 5. | ஆக்கச் சொற்கள் | 35 |
| 6. | திரிசொற்கள் | 51 |
| 7. | வேர்ச் சொற்கள் | 60 |
| 8. | சொற்கள் சொற்றொடர்களின் அமைப்பில் புணர்ச்சி பெறும் இடம் | 69 |
| 9. | சொற்களில் இடைவெளி விடலும் குறியீடுகளும் | 89 |
| 10. | வழுவமைதி எனப்படும் மயக்கம் | 100 |
| 11. | மரபு பேணுதல் | 111 |
| 12. | நடையியல் | 116 |
| | பின்னிணைப்பு - 1 | 136 |
| | பின்னிணைப்பு - 2 | 151 |
| | பின்னிணைப்பு - 3 | 157 |
| | பின்னிணைப்பு - 4 | 159 |
| | அட்டவணை | 162 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

முதுநிலைத் தமிழ் பேராசிரியர்

அ. சண்முகதாஸ்,
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நீண்டகாலமாகத் தமிழ்மொழியின் இயல்புபற்றி எண்ணி எழுதி வருபவர் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள். அவருடைய மகள் வாசுகி இலக்கியக் கோட்பாடு பற்றி நன்கு எண்ணி எழுதுபவர். இவர்கள் இருவரும் சேர்ந்து தமிழ்மொழியின் அமைப்பு, நடை ஆகியன பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதியாக '**உரைநடைத் தெளிவு-ஓர் அறிமுகம்** என்னும் நூல் வெளிவருகின்றது.

''வாக்கியத்திலே சொல்லொழுங்கு'' என்னும் கட்டுரையுடன் நூல் தொடங்குகின்றது. இன்று தமிழ்மொழியினைப் பல பொது இடங்களிலும் மக்களூடகங்களிலும் பிழையாகப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம்; கேட்கிறோம். ஆங்கில மொழியைப் பயன்படுத்தும்போது அதிலே அமைப்புப் பிழைகள். நடைப்பிழைகள், இலக்கணப் பிழைகள் வராமற் பயன்படுத்த வேண்டுமென எண்ணும் எம்மவர்கள் எம்முடைய மொழியை மட்டும் பிழையாகப் பயன்படுத்துவது பற்றி எவ்வித மனத் தாங்கலும் இல்லாமல் இருக்கிறார்கள். 'சொக்கன்' போன்ற தமிழறிஞர்கள் இப்பிழையைப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? எனவேதான், இன்று நாள்தோறும் நாம் பயன்படுத்தும் வாக்கியங்களில் அல்லது தொடர்களில் ஏற்பட்டுவரும் பிழைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்தியமைப்ப தற்குரிய வழிவகைகளை ஆசிரியர்கள் காட்டுகின்றனர்.

'பிழைப் பகுப்பாய்வு' (Error Analysis) மொழியாய்விலே ஒரு பகுதியாகும். மொழி வளர்ச்சிக்கும் பேணலுக்கும் இத்தகைய ஆய்வு வேண்டப்படுவதொன்று. இந்நூலின் பெரும்பாலான பகுதி இத்தகைய ஆய்வினையே மேற்கொள்கின்றது. தமிழ் மொழியைப் பிழையறப் பயன் படுத்துதற்குரிய வழிகள் சுட்டப்படுகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகள் எம்முடைய மொழியிலும் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்க முடியாதது. கடதாசிப் பயன்பாடும் அச்சுப்பொறிப் பயன்பாடும் சொல், சொற்றொடர், இணைப்புச் சொற்கள் ஆகியவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் அமைப்புக்களை மாற்றியுள்ளன. அவற்றுடன் குறியீடுகளின் பயன் பாட்டையும் ஏற்படுத்தியுள்ளன. 'சொற்களில் இடைவெளி விடலும் குறியீடுகளும்' என்னும் ஓர் இயல் இந்நூலிலே இடம் பெறுகின்றது. இன்றும் இனி வரும் ஊழியும் கணினிக் காலமாகும். கணினியிலே தமிழ்மொழியைப் பயன்படுத்துபவர்கள் சொற்களில் இடைவெளி விடல் தொடர்பாக நிறையப் பிழை விடுகின்றனர். ஆங்கிலத்திலே 'daughter' என்னும் சொல்லை 'daugh ter' என்று பிரித்து எழுதுவதற்கு நாமும் விடோம். கணினிக்கும் அத்தகைய அறிவு ஊட்டப்பட்டுள்ளது. தமிழ் மொழி தொடர்பாகவும் அவ்வறிவினை ஊட்ட வேண்டும். குறியீடுகள் பற்றிய விளக்கமும் எடுத்துக்காட்டுகளும் இந்நூலிலே சிறப்பாக அமைந் துள்ளன. மாணவர்களுக்கு அவை பயனளிப்பன.

பள்ளி மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர் வரை படித்துப் பயன்பெறக் கூடிய நூலாக இது அமைகின்றது. மறைமலையடிக ளும் நீலாம்பிகை அம்மையாரும் போன்று சொக்கனும் வாசுகியும் தமிழ்மொழி பற்றித் தெளிவான விளக்கங்களைத் தமிழ் மாணவர்களுக்கு இந்நூலூடாக வழங்குகின்றனர்.

இன்றைய தமிழ்மொழிக்குப் புத்திலக்கணம் வகுக்க வேண்டும் என்றும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய சிக்கல்கள் யாவை என்றும் மொழியியலாளர் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய இலக்கண ஆக்கத்துக்கு இந்நூலும் பங்களிக்கும் என்பதிலே ஐயமில்லை. இந்நூலைத் தமிழுல குக்கு அறிமுகஞ் செய்து இவ்வணிந்துரையை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளை,
கல்விப்பணியாளர்.
யாழ்ப்பாணக் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.

**'சொக்கன்'** நாடறிந்த எழுத்தாளர்; உரையாளர்; கட்டுரையாளர்; கவிஞர்; நல்லாசிரியர்; அதிபர்; இலங்கைக் கல்வி நிருவாக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அலுவலகர்.

இவர், தமிழை மரபு தவறாமற் கற்று வித்துவான் பட்டம் பெற்றவர்; இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை மாணிப் பட்டதாரி.

**'வாசுகி'** ஆசிரியர்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியத்தில் ஆய்வு செய்து முதுமெய்யியல் பட்டம் பெற்றவர்; தமிழியல் ஆய்வில் மேலும் முனைந்து நிற்பவர்.

'மொழித்திறத்தின் முட்டறுத்த' மூதறிஞரான சொக்கனும் அவர்தம் மகள் வாசுகியும் இணைந்து எழுதியுள்ள **'கட்டுரைத் தெளிவு—ஓர் அறிமுகம்'** என்ற நூல் கற்போருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இருபத்தோராம் நூற்றாண்டை எதிர்கொள்ளக் காத்திருக்கும் நாம் இன்றுவரை எமது அன்னை மொழியாம் தமிழைப் பிழையற எழுதவோ பேசவோ இயலாது இடர்ப்படுகின்றோம். இது ஆசிரியர் தொடக்கம் ஆய்வாளர் வரை காணப்படும் பெருங் குறைபாடாகும்.

நாம் அன்றாடம் விடும் இலக்கணப் பிழைகளைக் களைந்து நல்ல தமிழ் எழுதத் தூண்டும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது; பின்னிணைப்பாக வரும் கலைச் சொல்லாக்கம் உள்ளிட்ட பகுதிகள் மிகுபயன் விளைப்பன.

அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழ்மொழி இயங்கியல் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பது இன்றைய எதிர்பார்ப்பு.

எதிர்பார்ப்புக்கேற்ப எழுதுவதிலே பலவித இடையூறுகள் இருக்கின்றன. எதிர்ப்படும் இடையூறுகளை வென்று நாம் தமிழை அறிவியல் மொழியாக மாற்ற வேண்டும்.

மாற்றத்தை விரும்புகின்ற பலரும் ஏற்கும் வண்ணம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பள்ளி தொடக்கம் பல்கலைக் கழகம் வரை பயன்படுத்தத் தக்கதாக விளங்கும் இந்நூலை எழுதியுள்ள இவர்களை ஆதரிப்பதன் ஊடாக மேன்மேலும் இத்தகைய நூல்கள் வெளிவர உதவுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தமிழ் மொழியினை ஓரளவு கற்றும் கடந்த நாற்பத்தாறாண்டுகளாய் இம் மொழியினைக் கற்பித்தும் தமிழினது ஆக்க இலக்கியம், ஆற்றல் இலக்கியம் என்பவற்றில் ஈடுபட்டுத் தம்மால் இயன்ற பணியினை ஆற்றியும் வருபவர் ஒருவர். தமிழைச் சிறப்புப் பாடமாய்த் தெரிந்து கற்றுப் பல்கலைக் கழகப் பட்டங்கள் பெற்றதோடு, கடந்த ஆறாண்டுகள் உயர் வகுப்புக்களிலே தமிழ்மொழியைக் கற்பித்தும் வருவதால் அதன் பழைமையிலும் புதுமையிலும் ஈடுபாடுகொண்டு, அதனுடைய வளர்ச்சிக் குத் தம்மாலான பணியை ஆற்றிட விழைபவர் மற்றொருவர்.

இவ்விருவரும் தந்தை மகள் என்ற தமது உறவிலும் தமிழுறவையே மேலாகக் கருதுவதால், அதனுடைய இன்றைய செல்நெறியினைக் கூர்ந்து நோக்கியும் அதுபற்றிக் கலந்துரையாடியும் வருவதன் பெறுபேறே **'உரை நடைத் தெளிவு—ஓர் அறிமுகம்'** என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல்.

## ஆங்கிலமும் தமிழும்

இந்நூற்றாண்டின் நடுப்பகுதிவரை — இரு நூற்றாண்டுகளுக்கு மேலாய் உலகின் வல்லரசாய் விளங்கிய பெருமை பிரித்தானியாவுக்கு உண்டு. 'கதிரவன் மறையாத பேரரசு' என்ற புகழுக்கு உரித்தாகி, உலகெங்கணும் தனது மேலாண்மையைப் பரப்பிப் பொருள் வளத்தோடு, ஆங்கிலமொழி வளத்தையும் அது பெருக்கிக்கொண்டது. தனது ஆட் சிக்கு உட்பட்ட நாடுகளின் மொழிகளிலே தனது தாக்குறவினை (Influence) ஏற்படுத்தியதோடு அது நின்றுவிடவில்லை. உகந்தன, சிறந்தன எனத் தான் கருதிய நலன்களை அவ்வந்நாட்டு மொழிகளிலிருந்து பெற்றுங் கொண்டது.

தமிழ் எமது தாய்மொழி. உலகின் மூத்த மொழிகளில் அதுவும் ஒன்று. தொன்மை, செழுமை, இனிமை, நெகிழ்வு என்ற பல சிறப்புக்க ளும் எம் மொழிக்கு உள்ளன. 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'. காலத்துக்கு தேவைக்கும் பொருந்தும் வகையிலே எமது தாய்மெழி, எல்லாத் துறைகளிலும் ஆங்கிலத்துக்கு ஈடாக வளர்ச்சி காணல் வேண்டும். 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி'. வானம் அளந்தது அனைத்தும் அறிந்து வளர்மொழி ஆதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழின் இன்றைய நிலை:**

காலத்தின் போக்கிற்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஒரு மொழியானது, தன்னை இசைவாக்கம் செய்து கொள்வது இன்றியமையாதது என்பதை யாவரும் ஏற்பர். காலம் என்ற நீரோட்டத்துடன் இணைந்தும், வேண்டுமிடத்து எதிரேறியும் தன்னை எத்தகைய சூழலுக்கும் ஏற்றவகையிலே அமைத்துக் கொள்ளாதாயின் மெல்ல மெல்லச் சென்று தேய்ந்து, அது மாய்வதைத் தவிர்த்தல் இயலாததாகும். முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் ஈடுகொடுக்கும் ஆற்றல் மொழி வளர்ச்சிக்கு வேண்டப்படும் முதன்மைப் பண்பு எனறு நாம் கருதுகின்றோம். மேற்குறித்தவை எமது அருமைத் தமிழ்மொழிக்கும் பொருந்துவதே, எந்தக் கருத்தினையும் உள்ளீர்க்கும் திறனும் உணர்ச்சி வெளிப்பாட்டாற்றலும் பிழையற அமையும் பொழுதே முழுமை பெறுகின்றன. இந்த முழுமை தமிழுக்கு இன்றுள்ள நிலையில் அமைந்து விட்டதா என்பதே கேள்வி.

சொற்பிழைகள், வாக்கிய அமைப்புப் பிழைகள், புத்தாக்கச் சொல் மயக்கங்கள், ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களை வரையறை கடந்து கையாள்வதனால் ஏற்படும் கருத்துச்சிதைவுகள் என்ற பலவும் இன்று தமிழினது வளர்ச்சி நெறிக்குத் தடைகளாய் உள்ளன.

**நூலின் நோக்கம்**

வகுப்பறைகளிலும் பொதுமக்கள் தொடர்புக் கருவிகளிலும், ஆக்க இலக்கியம், ஆற்றல் இலக்கியம் என்பன சார்ந்து வெளிவரும் நூல்களிலும் மேற்குறித்த பிழைபாடுகளை அவ்வப் போது காணநேர்ந்தமையை எமது அறிவுக்கு எட்டிய அளவில் ஆராய்ந்து, அவற்றைப் போக்கிட யாது செய்யலாம் என்று மேற்கொண்ட முயற்சியின் வெளிப்பாடே இந்நூல். இராமனின் பெருமுயற்சிக்கு அணில் புரிந்த சிறு தொண்டின் அளவினதே இஃது என்பதை மறுக்க முயல்வோமானால், அஃது எமது மடைமையே. அம் மடைமை எமக்கில்லை.

**கூட்டு முயற்சி தேவை**

தமிழில் ஆழ்ந்த அறிவும் இலக்கணம், மொழியியல் ஆகிய இரு துறைகளிலும் சிறப்புத் தேர்ச்சியும் தமிழிலே புதியனவாய் அறிமுகமாபுள்ள கலை, அறிவியற்றுறைகளிலே புலமையும் பெற்ற பலரும் கூடித் தமிழின் செல்நெறியினை ஆர, அமர ஆராய்ந்து கூட்டு முயற்சியாய் மேற்கொள்ள வேண்டிய பெரும் பணியை,இவற்றில் ஒன்றிலாவது திறம் படைக்காத நாம் மேற்கொண்டுள்ளோம் என்று பெருமை பாராட்ட இந்நூலினை வெளியிடவில்லை. புலஞ்சார் அறிஞர்கள், எதிர்காலத்திலே செய்ய வேண்டிய பெரும் பணிக்கு எமது நூல் உந்துதலாகவும் குறிகாட்டியாகவும் அமைய வேண்டும் என்ற பேரார்வமே இந்நூலாக உருக்கொண்டது. எனவே இதன்கண் அறிஞர்கள் கண்டு வெளிப்படுத்தப் போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைகள் கூட எதிர்காலத்திலே நாமும் இந்நூலைப் படிப்போரும் திருந்துவதற்கு வாய்ப்பளிக்கலாம் என்று உறுதியாக நம்புகின்றோம்.

இதனை எழுதுகையில், உலகப் புகழ்பெற்ற மெய்யியல் அறிஞர், பேட்றன்ற் றசல் (Bertrand Russell) தாம் எழுதிய ''மேற்கு நாடுகளின் மெய்யியல் வரலாறு'' (History of Western Philosophy) என்னும் நூலின் முகவுரையின் தொடக்கத்திலே கூறியது எமது நூலுக்கும் பொருந்துவதே என்ற எண்ணம் உண்டாயிற்று.

* ''இந்நூலானது, அது பெறுவதற்குத் தகுதியான ஐயமற்ற கொடுங் கண்டனத்திலும் கூடுதலான கண்டனத்திலிருந்து தப்பிக் கொள்ள வேண்டுமாயின், மன்னிப்பிற்கும் விளக்கத்திற்குமாய்ச் சில சொற்கள் வேண்டப்படுகின்றன.''

அரண் செய்வோர்

''அஞ்சுதல் அஞ்சாமை பேதைமை'' என்பது வள்ளுவர் வாய் மொழி. இந்நூலிற் சில கருத்துக்களை எடுத்துரைக்க தேர்ந்தபொழுது, 'அஞ்சுதல் அஞ்சாப் 'பேதையரோ நாம்?' என்ற ஐயம் உண்டாகிச் சிறிது தளர்ச்சியும் ஏற்பட்டது உண்மையே.

1. எழுத்தாளரின் எழுத்திலும், உரையாடுவோரின் பேச்சிலும் ஆங்கிலம் கலப்பது பற்றி எடுத்துச் சொல்லலாமா? காலத்தின் விரைந்த ஓட்டத்திலே இவற்றை முதன்மைப்படுத்தித் 'திருந்த வேண்டும்' என்றால் அது நகைப்பிற்கிடமாகாதா?
2. மரபுகள், இலக்கணக் கட்டிறுக்கம் என்பவற்றைத் தளர்த்துமாறு வேண்டுவது இவற்றைப் பேணுகின்ற தமிழறிஞருக்குச் சீற்றத்தினை உண்டாக்காதா?
3. புதுமை விழைவோர், பழைமை பேணுவோர் ஆகிய இரு சாரரும் முகஞ் சுழிக்க மாட்டார்களா?

மேற்குறித்த வினாக்கள் எம்மைப் பெருமளவு உறுத்தின என்பதை நாம் மறுக்கவில்லை.

ஆனால் எம்மைப்போல் எண்ணுவோர் சிலரின் கூற்றுக்களை அண்மையிலே படிக்க வாய்ப்புக் கிடைத்தமையால், எமது அச்சமும் தயக்கமும் மறைந்தன. எமது முடிபுகளை அரண் செய்ய அவர்களின் கூற்றுக்களை இங்குத் தருகின்றோம்.

---

"A few words of apology and explanation are called for, if this book is to escape even more severe censure than it doubtless deserves"

(History of Western Philosophy - Preface, 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''— ...தங்களை அறிவு ஜீவிகள் (இன்டலெக்சுவல்ஸ்) என்று காட்டிக் கொள்ள விரும்புகின்றவர்களின் போக்காகவும் இது காணப்படு கின்றது. தமிழில், தமிழ் வாசகர்களுக்கு எழுதுகிறோம் - சிந்திக்கிறோம் கருத்துக்களை வெளியிடுகிறோம் என்பதையே அவர்கள் மறந்து விடுகிறார்கள். இதை ஒரு பாஷன் ஆக மதித்து இப்படித் தமிழும் இங்கிலிஷ்ூம் கலந்து எழுதா விட்டால் மற்றவர்கள் தங்களை அறிவுஜீவி கள் என்று மதிக்கமாட்டார்கள் என்று எண்ணியும் இதைக் கையாள்வதில் சந்தோஷமும் பெருமையும் கொண்டவர்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

*(வல்லிக்கண்ணன், தீபம் செப்டம்பர் - 1982)*

''சு. அழகேசன் எழுதிய 'தொல்காப்பியமும் மரபும்' என்னும் கட்டுரையில் (41) தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், செய்யுள், உலகியல், நூல் என்னும் அறுவகை மரபுகளை உணர்த்துகின்றது என்று விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், ''தொல்காப்பியம் மரபு யாது?'' என நூலினுள் யாங்கணும் காட்டாத போதிலும்'' என்று முதலில் அவர் குறிப்பிடுவது தவறு. **"மாற்றருஞ் சிறப்பின் மரபு"** என மரபியல் முதற் சூத்திரத்தில், மரபு என்பது இடையில் ஒருவர் மாற்ற முடியாதது'' என்று குறித்துள்ளமை காணலாம். ''தொல்காப்பியர், மரபுதானே மாறுதற்கும் உரியதே என்ற எண்ணத்தில் சில மாற்றங்கள் செய்துள்ளார்'' எனக்கூறும் அவர். (சு. அழகேசன்) ''மரபு உலகிற்கு அப்பாற்பட்டுக் காலமாற்றத்தால் இலக்கணவுலகில் காணப்படும் அனைத்து மாற்றங்களையும் ஏற்க வேண் டும் எனப் புறனடைகள் மூலம் அறிவுறுத்தித் தாம் ஒரு சிறந்த இலக்கண ஆசிரியர் என்பதைப் பறைசாற்றுகின்றார்'' என முடித்திருப்பது முற்றிலும் பொருத்தமே.

**ஆ. சிவலிங்கனார் — இலக்கணக் கட்டுரைகள் — எண்பத்திரண் டில் தமிழ்-314**

இவ்விரு கூற்றுக்களிலும் முதலாவது கூற்றிற்கு உரியவர் முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன். புதிய இலக்கிய வடிவங்களையும் படைப் புக்களையும் ஏற்று அத்துறைகளிலே தாமும் பங்களிப்புச் செய்துள்ள ஒருவர், புதுமையிலும் புதுமை, மிகைப்புதுமை செய்வோரைக் கண்டனம் செய்வது, கருத்திற் கொள்ள வேண்டுவதாகும்.

திரு. சு.அழகேசனின் கூற்றிற்கு விளக்கம் தந்து, தவற்றையும் எடுத்துக்காட்டி, அதேபோது, 'சிறந்த இலக்கண ஆசிரியர், **''காலமாற்றத் தால் இலக்கண உலகில் காணப்படும் அனைத்து மாற்றங்களையும் ஏற்க வேண்டும்''** என்பதை உணர்ந்து புறநடைகள் மூலம் அறிவுறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்' என்ற கூற்றினை. "முற்றிலும் பொருத்தமே" என ஏற்றுக் கொள்பவர் அ.சிவலிங்கனார். அவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பியத் திட்ட முதுநிலை அலுவர் என்பதிலிருந்தே இவர்தம் தகுதிப்பாட்டினை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம். (பேச்சு நடை, தமிழிலே கெட்டுப் போயிருப்பது பற்றிய கருத்துரைத்தவர் மூதறிஞர் ராஜாஜி. அவரின் கூற்று நூலின் இறுதியிலே தரப்பட்டுள்ளது.)

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே.**

*(நன்னூல் — உரியியல் 462)*

**பிழைகாண்போர் விடும் பிழை**

பெயர் சுட்டியும் சுட்டாதும் பலரின் கூற்றுக்களிலிருந்து பிழைகளை இந்நூலிலே எடுத்துக்காட்டி அவற்றின் திருத்தத்தையும் தந்துள்ளோம். "இவ்வாறு செய்யும் நீங்கள் பிழையே விடுவதில்லையா?" என்று எவராவது வினவினால் அந்தவினா முறையானதே. இதற்கு விடை, நாம் விட்ட பிழைகளை எடுத்துக் காட்டவும் திருத்தவும் நாம் தயங்கவில்லை என்பதே.

எடுத்துக்காட்டு:- "காலம் சென்ற சம்பந்தன் லண்டன் சென்றார்" — சொக்கன்.)

ஆக, 'பிழைப் பகுப்பாய்வு' (Error analysis) மொழியாய்வில் ஒரு பகுதி எனப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது அணிந்துரையிலே கூறியாங்கு, அதில் ஈடுபட்ட நாமும் பிழைகளுக்கு அப்பாற்படவில்லை என்பதையும் கூறியே ஆகவேண்டும். எமது நோக்கம், பிறர்பிழை காண்பது மட்டுமன்று; எமது பிழையையும் கண்டு திருந்துவதே. ஆதலால் இதனை எழுதும் நாமும் இதனைப் படிக்கும் நீங்களும் 'தக்க இன்ன தகாதன இன்ன' என்று தீர ஆராய்ந்து, திருந்த வேண்டும் என்பதே எமது வேணவா.

**சான்றுகள்**

இந்நூலுக்குப் பழந்தமிழிலக்கண நூல்களான தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றிலிருந்து பெருமளவு சான்றுகள் கொள்ளப்பட்டன. திருக்குறள், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம் என்பனவும் சிறிய அளவிற் பயன்பட்டன. மொழியியல் சார்ந்த நூல்கள், பொருத்தமான திறனாய்வு நூல்கள், கட்டுரை நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்பனவும் வேண்டுமிடங்களிலே எடுத்தாளப்பட்டன. நாளிதழ்கள், தாளிகைகள் ஆகியனவும் விலக்கல்ல. இவை பற்றி அடிக்குறிப்புக்களிலே ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளோம். அட்டவணையிலும் இவை பட்டியலிடப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

இந்நூலை எழுதிய காலத்திலும், எழுதி முடித்த காலத்திலும், அவ்வப்போது பலரோடும் கலந்துரையாடி அவர்களின் நெறிப்படுத்தலை யும், அறிவுரைகளையும் பெற்றோம்.

இந்நூலை எழுதுமாறு எம்மைத் தூண்டியதோடு கையெழுத்துப் படிகளைப் படித்து மிக நுணுக்கமான பயன் மிக்க திருத்தங்களை அன்புரிமையோடு கூறியவர் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் (நந்தி)

முன்னாட் கல்விப் பணிப்பாளர் திரு. நா.சுந்தரலிங்கம் நாம் வேண்டியாங்கு, தமது வலயத்தின் முதன்மையாசிரியர்கள் (Master teachers) யாவரையும் ஒன்று கூட்டி அவர்களோடு நூலின் உள்ளடக்கம் பற்றிக் கலந்துரையாட வாய்ப்பளித்தார். முதன்மையாசிரியர்களும் தங்க ளின் கருத்துரைகளை எடுத்துரைத்து நூலிலே சில திருத்தங்களை மேற்கொள்ள உதவினார்கள்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணாக்கியர், யாழ்ப்பாணம், ஆரியதி ராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச, பால பண்டித மாணாக்கர், மாணாக்கியர் ஆகியோருடனும் அவ்வப் போது நாம் கலந்துரையாடியும் எடுத்துரைத்தும் பெற்ற நற்பயன்கள் பல.

பலாலி ஆசிரியர் கல்லூரி முதல்வரும், கவிஞருமான திரு. சோ.பத் மநாதன், தமது நெருக்கடியான கடமைகளுக்கிடையே நூலின் சில இயல்களைப் படித்து வேண்டிய திருத்தங்களைச் சுட்டிக்காட்டினார்; திருத்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, அவர்தம் துணைவியார் ஆகிய இருவரும் நூலின் கையெழுத்துப் படியைப் படித்து, அதன் பயன்பாடு பற்றிக் கலந்துரை யாடி நூல் வடிவில் இதனை விரைவிற் கொண்டு வருமாறு ஊக்கினர்.

யாழ்ப்பாணக் கல்விவலயத்தின் கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. க.கனகசிங்கம், இந்நூலுருவாக ஆற்றிய பணி மிகப் பெரிது. மறக்கவெண் ணாதது. சரவை பார்த்தலிலும் (proof reading), வடசொற்களுக்கு மாற்றீடுகளான தமிழ்ச் சொல்லாக்கத்திலும் முழுமனத்தோடும், மனநிறை வோடும் அவர் ஈடுபட்டார். (கனகசிங்கமும் சொக்கனும் இணைந்து தொகுத்து புதுவனவாய் ஆக்கியும், கல்வித்துறைக்கான 'பணியாட்சிக் கலைசொற்களின்' பட்டியல் ஒன்றை அமைத்து அஃது இந்நூலின் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)

கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தின் முன்னாள் முதல் வர் திரு. ஆ.சபாரத்தினம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாள் துணை முதல்வர் பிரமஸ்ரீ ப.சர்வேஸ்வர ஐயர் ஆகியோர் நூலின் சில பகுதிகளைச் சரவை பார்த்தும் வடசொற்களின் கருத்துக்களைத் தெளிவாக்கியும் உதவினர்.

எமது குறுகிய கால வேண்டுகோளினை மனமுவந்து ஏற்று, நூலைப் படித்துச் சிறந்ததோர் அணிந்துரையினை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் பீடாதிபதி அ.சண்முகதாஸ் வழங்கியுள்ளார். யாழ்ப்பாணக் கல்விவலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை முன்னுரையும் வழங்கியுள்ளார். இவை நூலின் தகுதியை உயர்த்துகின்றன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய்ப் பிரிவு நடத்திய பத்திரிகையாளர் பயிற்சி நெறி (1999)யின் பயிலமர்விலே மொழிக்கட்டிறுக்கம், நடையியல் என்ற தலைப்புக்களிலே நாமிருவரும் உரையாற்ற அச்சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, அமைப்பாளர் திரு. ஐயா சச்சிதானந்தன் செயலாளர் திரு.இ.மயில்வாகனம் ஆகியோர் வாய்ப்பளித்தனர். இப்பயிலமர்விலே இருநூறுக்கும் மேற்பட்ட பயிலுநர்கள் கலந்து கொண்டு தங்கள் வினாக்கள் மூலம் எம்மை மேலும் மேலும் நூல் பற்றிய எண்ணங்களை விரிவாக்க உதவினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்), கோப்பாய் ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் செல்வி நி.நல்லையா ஆகியோர் நூலினைப் படித்துத் தமது கருத்தினைச் சுருக்கமாகவும் செறிவாகவும் எழுதித் தந்தனர். பிரவேச பண்டிதர் வகுப்பிலே கற்று வரும் மாணாக்கன் செல்வன் ந.நவராஜ் படி எடுத்தலில் உதவி புரிந்தார். நூலின் தலைப்புப் பெயரினை அழகாய் எழுதி உதவியவர், இளமைக்கால நண்பர் திரு. செ.இரத்தினகோபால்.

எமது நூலினைத் தகுதி வாய்ந்ததொரு வெளியீட்டு நிறுவனத்தின் ஆதரவில் வெளியிடல் வேண்டும் என்று நாம் முடிவு செய்த பொழுது, எமது நினைவிற்கு முதலில் வந்தது முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம் என்னும் நிறுவனமே. பல்வேறு இடர்பாடுகளுக்கும் நீண்டகால இடைவெளிக்கும் முகங் கொடுத்து முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், கடந்த பத்தாண்டுகளில் ஆறு ஆய்வு நூல்களை வெளியிட்ட பெருமைக்கு உரியது என்பதை நாம் அறிந்திருந்தோம். பல்கலைக் கழகத்திலும், வெளியிலும் உள்ள துறைசார் அறிஞர் பலர் இக்கழகத்தின் செயற்குழுவில் உள்ளமை குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகும்.

எனவே, மேற்குறித்த கழகத்தினரை அணுகி எமது நூலினை வெளியிட்டு உதவுமாறு நாம் வேண்டியதில் வியப்பில்லை. முத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுக் கழகத்தினர் தமது செயற் குழுவினைக் கூட்டி எமது வேண்டுகோளினை ஆராய்ந்து நூல் வெளியீட்டினை நடத்த இசைவு தந்தனர். அவர்களின் ஆதரவில் 6-3-99 சனிக்கிழமை 'உரைநடைத் தெளிவு-ஓர் அறிமுகம்' யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் குமாரசுவாமி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

நூலுக்கு வெளியீட்டுரையினை நாடறிந்த நல்லறிஞர் பேராசிரியர் நா.சுப்பிரமணியன், (பொதுச் செயலாளர், மு.வெ.க.யா) நிகழ்த்தவும், கவிஞர் இ.முருகையன் (யாழ். பல்கலைக்கழக முன்னாள் முதுநிலைத் துணைப் பதிவாளர்), பண்டிதர் செ.திருநாவுக்கரசு (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி), ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர்.

இவ்விடத்தில் கவிஞர் இ.முருகையன் பற்றிச் சில சொல்லியாக வேண்டும். அறிவியல், ஆங்கிலம், தமிழ் என்பவற்றிலே ஆழ்ந்த புலமையும் கவித்துவ ஆளுமையும் வாய்ந்தவர் இவர். இரண்டு நாள்களின் முன்பு இவரைக் கண்டு சில மணித்துளிகள் உரையாட வாய்ப்பு நேர்ந்தது. மொழிபெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம் ஆகிய துறைகளிலும் பட்டறிவு மிக்க இவரின் அறிவுரைகள் புதிய சில எண்ணக் கருக்களைத் தோற்றுவித்தன. நூல் அச்சாகு முன்னர் இவரோடு கலந்துரையாடவில்லையே என்ற கழிவிரக்கமும் ஏற்பட்டது. நூலின் அடுத்த பதிப்பில் இவருடைய அறிவுறுத்தல்களைக் கருத்திற் கொண்டு ஆவன செய்வோம்.

இந்நூலின் இரண்டாவது பதிப்பினைத் தமிழகத்தில் வெளிக்கொணரும் எமது அவாயினை நிறைவு செய்யும் வகையில் வெளியிட்டு வைக்கும் திரு. கணேசலிங்கன் அவர்களின் உறுதுணை மறக்கற்பாலதன்று.

நன்றி கூறல் என்ற மரபிற்குள் மட்டும் கூறுகின்ற நன்றியாக எமது நன்றியை இவர்கள் கொள்ளாதிருத்தல் வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டி அமைகின்றோம்.

க.சொக்கலிங்கம் (சொக்கன்)
**வாசுகி சொக்கலிங்கம்**

''வாணி''
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,
இலங்கை,
2000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வாக்கியத்திலே சொல்லொழுங்கு

**சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய**
**யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப**
**கானக நாடன் சுனை.**[1]

''கானக நாடனாகிய தலைவனின் நாட்டிலுள்ள நீர்ச் சுனையிலே சுரைக்குடுவை ஆழும். அம்மி மிதக்கும், யானை நீந்தும், முயல் நிலையாக நிற்கும்.'',

இது மேலேயுள்ள பாடலுக்கு நேர்பொருள். சுரைக் குடுவை பாரமற்றது. அது மிதக்குமேயன்றி ஆழ்ந்து போகாது. அம்மி பாரமானது. அஃது ஆழ்ந்து போகுமேயன்றி மிதக்காது. யானையோ மலை போன்றது. அதற்கு நீந்தவேண்டிய நிலை ஏற்படாது. முயலோ சின்னஞ்சிறு விலங்கு. அது நிலையாக நிற்பது எப்படி?

இப்பாடலிற் பொருட் பொருத்தம் ஏற்படுத்தப் பின்வருமாறு பாடற் சீர்களை ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

**சுரை மிதப்ப அம்மி ஆழ — வரையனைய**
**யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப**
**கானக நாடன் சுனை**

இப்பொழுது பொருள் பொருத்தமுடையதாகக் காண்கின்றோம். ஆனால், பாடலை இயற்றிய புலவர் சீர்களை இவ்வாறு மாற்றி அமைக்க வேண்டிய காரணங்கள் யாவை?

1) இஃது ஓர் அகப்பாடல். தலைவன், தலைவிக்கு அவளை மணப்பதாக வாக்களித்திருந்தான்; ஆனால் மணத்திற்கான காலத்தினை நீட்டித்தான். இவ்வாறு நீட்டிப்பதைப் பழந்தமிழிலக்கிய மரபிலே (அகத்திணை மரபிலே) 'வரைவு நீட்டித்தல்' என்பர். (வரைவு—திருமணம்) திருமண நீட்டிப்பினாலே தலைவி கவலை கொள்கின்றாள்; வெறுப்பும் அடைகின்றாள். இவ்விருவேறு உணர்ச்சிகளையும் தலைவனுக்குப் புலப் படுத்தத் தலைவியோ அவளின் தோழியோ அவனுக்குக் கூறியதாக அமைந்தது இப்பாடல். ''தலைவன் நாட்டிலே எல்லாம் இயற்கைக்கு மாறாகவே நடக்கின்றன. தலைவனும் சொல்வேறு செயல்வேறானவ னாய்த் தனது தலைமைப்பாட்டிற்கு ஏற்காத வகையில்

---

1. நன்னூல் - மொழிமாற்றுப் பொருள் கோளுக்கு உரையாசிரியர் எடுத்துக் காட்டியுள்ள பாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதும் இயற்கையே'' எனும் குறிப்புப் பொருள் தோன்ற இவ்வாறு கூறியிருக்கலாம். (கூறுவதாகப் புலவர் செய்த கற்பனை இது)

2) குறிப்புப் பொருளைப் பெறவைப்பதற்ககாக மட்டுமன்றிப் பாடலுக்குரிய ஓசைப்பண்பினைத் தரும் எதுகை, மோனை என்பவற்றிற்கு இசைவாகவும் சீர்களை இடம் மாற்றுவதுண்டு. (சுரை, வரை, யானை, கானக என்பன எதுகைகள், இப்பாடலிலே கொண்டு கூட்டிய போதும் எதுகை இடம் பெயரவில்லை)

எனினும் பாடலுக்கு நேர்பொருள் கொள்ள வேண்டுமாயின் சீர்களைப் பொருளுக்கு அமைவாய்க் கொண்டு கூட்டல் வேண்டும். இதனை இலக்கண ஆசிரியர் ''மொழிமாற்றுப் பொருள்கோள்'' (சீர்களைப் பொருளுக்கேற்ப இடம் மாற்றியமைத்தல்) என்பர்.

இவ்வாறு அமைக்கையில் பாடலுக்குரிய ஓசைப்பண்பு மறைந்து பாடல் வாக்கிய நிலையினை அடைகின்றது.

நன்னூலாசிரியரான பவணந்தி முனிவர், மேலே தரப்பட்ட பொருள் கோள் உட்பட எட்டுப் பொருள்கோள்களைத் தந்துள்ளார்.[2]

ஓசையையே முதன்மையாகக் கொண்டு ஆக்கப்படும் செய்யுள்களின் பொருட் புலப்பாட்டுக்கு மேற்குறித்த பொருள்கோள்கள் மிக மிக இன்றியமையாதவையே, என்பதை மறுத்தல் இயலாது. (செய்யுள்களை ஆக்குவதற்கான விதிமுறைகளைக் கூறும் யாப்பிலக்கணம், அசை சீர், தளை, தொடை, அடி என்பவற்றை வரையறை செய்துள்ளது.)

ஆனால் ஓசை நயத்தினை முதன்மைப் படுத்துவது உரைநடைக்கு வேண்டப்படாதது. கருத்துப் புலப்பாட்டினை தெளிவாகவும் மயக்கமின்றியும் தருவதே உரைநடையின் முதன்மையான இலக்கு. காரண காரியத் தொடர்பும் தருக்கரீதியான ஒழுங்குமுறையும் உரைநடைக்கு இன்றியமையாதன. வாக்கிய அமைப்புக்கு 'யாற்று நீர்ப் பொருள்கோளும்' (ஆற்று நீர் போன்று தெளிவாகப் பொருள் கொள்ளல்), 'நிரல்நிறைப் பொருள் கோளும்' (பொருளை நிரைப்படுத்தி ஒழுங்குபடக் கூறல்) போதியன என்பதே எமது கருத்தாகும்.

சொற்களை அவற்றிற்குரிய இடங்களில் அமைக்காது சிதற விடுவதால் நேர்மாறான பொருட்பேறு உண்டாகும். எடுத்துக்காட்டாக, க.பொ.த.(உ/த)த் தமிழ், மாதிரி வினாத்தாளிலே பிழைதிருத்தத்திற்குத் தரப்பட்ட வாக்கியம் ஒன்றைக் காட்டலாம்.

---

[2] நன்னூல்-பொதுவியல், நூற்பா 411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மன்னார் மாவட்டத்தில் மோசமான ஆசிரியர்ப் பற்றாக்குறை நிலவுகிறன்றது' இவ்வாக்கியத்திலே கூறக் கருதியது.

'மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர்ப் பற்றாக்குறை மோசமான எண்ணிக்கையில் நிலவுகின்றது,' என்பதாகும்.

ஆனால்,

மோசமான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை வரவேற்கக் கூடிய தன்றோ?

பத்திரிகையிலே வெளியான சிறுகதை ஒன்றிலே வந்துள்ள பின்வரும் வாக்கியத்தை நோக்குங்கள்.

''அம்மா நேற்று மாலை கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச் சத்தத்தைக் கேட்டதிலிருந்து ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மன நிலை மீண்டும் பாதிக்கப்பட்டிருந்தது''

இவ்வாக்கியத்தில் பொருள் (1) நேர்மாறாக உள்ளதையும் வாக்கிய அமைப்பிற்கு (2) வேண்டாத மேலதிகச் சொல் ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

(1) நேர்மாறு:- 'கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச் சத்தத்தைக் கேட்டதிலிருந்து ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மனநிலை' என்பது ஆசிரியர் கருதியதற்கு நேர்மாறானதாகும்.

அவர் கூற நினைத்தது: (முன்பு) ஓரளவு தேறியிருந்த அம்மாவின் மனநிலை, கிராமத்தையே அதிரவைத்த அந்த வெடிச்சத்தத்தைக் கேட்டதிலிருந்து மீண்டும் பாதிக்கப்பட்டிருந்தது. (''பாதிக்கப்பட்டிருந்தது'' என்ற இறந்தகாலத் தொடர்ச்சி (Past continuous) பாதிக்கப்பட்டது, என்று (முடிவுற்ற இறந்தகாலமாக) அமைந்திருப்பின் சிறப்பாகும்.

(2) ''அம்மா'' என்ற தொடக்கச் சொல் தேவையற்றது.

பொருள் மயக்கம் உண்டாகும் வண்ணம் சொற்களை அவற்றிற்குரிய இடங்கள் மாறி இடுவதால் ஏற்படும் பிழைபாடு ஒரு பக்கம் என்றால், பொருட் பொருத்த மற்ற வாக்கியங்கள் மற்றொரு பக்கம் அமைவதும் சுட்டிக்காட்ட வேண்டுவதே. இம்மறுபக்கத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் கீழே தரப்படுகின்றன.

1) காலஞ் சென்ற சம்பந்தன் லண்டன் சென்றார்.

2) தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருந்து புத்திசுவாதீனம் உள்ள மனநோயாளிகள் தப்பி ஓடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வாக்கியத்தில், காலம் சென்ற சம்பந்தன் பின்பு எவ்வாறு லண்டன் செல்ல முடியும்? இவ்வாக்கியம் பின்வருமாறு அமைவதே பொருத்தமாகும்.

''தாம் காலமாவதற்குச் சிலகாலத்திற்கு முன் சம்பந்தன் லண்டன் சென்றார்.''

இரண்டாவது வாக்கியத்தில் 'புத்தி சுவாதீனம் உள்ள மன நோயாளி கள்' என்ற சொற்றொடர் அது தரவேண்டிய கருத்துக்கு நேர் எதிரான கருத்தைத் தந்தள்ளது. (இச் சொற்றொடர் அமைந்த வாக்கியம் சில ஆண்டுகளுக்கு முன்பு செய்தித்தாள் ஒன்றில் வெளியாயிற்று.)

சுவாதீனம் (சுவ + ஆதீனம்)=தற்கட்டுப்பாடு. புத்தியைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பவர் மனநோயாளியாவது எங்ஙனம்? எனவே இவ்வாக்கியம்.

''தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருந்து புத்திசுவாதீனமற்ற மன நோயாளிகள் தப்பி ஓடினர்'' என அமைந்திருத்தல் வேண்டும்.

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களையும் அவற்றின் திருத்திய வடிவங்க ளையும் நோக்குங்கள்.**

1. **ஐ.நா. சபையின் சித்திரவதைகள், மற்றும் கொடூரமான மனிதாபிமா னமற்ற நடவடிக்கைக்கு எதிரான** அமைப்பு மேற்படி சித்திரவதைக ளில் ஈடுபடும் நபர்களை நீதிமுன் நிறுத்துமாறு அரசைக் கோரியுள் ளது. (சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதாபிமானமற்ற நடவடிக்கைக்கு எதிரான ஐ.நா சபையின் அமைப்பு எனத் திருத்த வும்.)
2. **குறுகிய நோக்கம் கொண்ட பி.ஜே.பி யின் நேசக் கட்சிகளுடைய** மூளையற்ற ஆலோசனைகள் இந்த நம்பிக்கையுணர்வைச் சில நிமிடங்களில் தகர்த்துவிடக் கூடியன.

    (பி.ஜே.பி யின் நேசக்கட்சிகளுடைய குறுகிய நோக்கம் கொண்ட மூளையற்ற ஆலோசனைகள் இந்த நம்பிக்கையுணர்வைச் சில நிமிடங்களில் தகர்த்து விடக் கூடியன.
3. **தயவுசெய்து இந்தப் பாதையால் செல்பவர்கள்,** தங்கள் வாகனங்களி லிருந்து இறங்கிச் செல்லவும்.

    (இந்தப் பாதையால் (வாகனங்களில்) செல்பவர்கள் தயவு செய்து வாகனங்களிலிருந்து இறங்கிச் செல்லவும்)
4. **மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஆசிரியர்களின்** கூற்றுக்கள், படிப்பவருக்குப் பெரிதும் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆசிரியர்களின் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கூற்றுக்கள், அவற்றைப் படிப்பவருக்குப் பெரிதும் பயன் தரும்)

5. பலகோடி ரூபாக்களைப் பலர் பட்டினியால் செத்துமடிய அதே மனிதரைக் கொன்று குவிக்கச் செலவு செய்து கொண்டு மனித நேயம் பற்றிப் பேசுவது கோமாளித்தனம்.

(பலர் பட்டினியால் செத்து மடியும் நிலையிலிருக்க, அம் மனிதரைக் கொன்று குவிப்பதற்குப் பல கோடி ரூபாக்களைச் செலவு செய்து கொண்டு மனிதநேயம் பற்றிப் பேசுவது கோமாளித்தனம்.)

6. கந்தையா செல்வநாயகம், முன்னாள் மகிழூர் மகாவித்தியாலய அதிபர் 7-4-1998 இல் காலமானார்.

(மகிழூர் மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் கந்தையா செல்வநாயகம், 7-4-1998 இல் காலமானார்.)

7. பெரிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளனான இவர்களின் மூத்த மகன் சிவசொரூபன், திருமகள் என்னும் மங்கையை மணந்தான்.

(பெரிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளனும் இவர்களின் மூத்தமகனுமான சிவசொரூபன், திருமகள் என்னும் (பெயருடைய) நங்கையை மணந்தான்.)

8. இடைவிடாது அலைக்கழிப்புக்கு உள்ளாகும் அதிகாரபீடத்தின் கொடிய கரங்களிலே சிக்கி மக்கள் அடையும் அவலங்கள் சொல்லில் அடங்காதவை.)

(அதிகாரபீடத்தின் கொடிய கரங்களிலே சிக்கி இடைவிடாது அலைக்கழிப்புக்கு உள்ளாகும் மக்களின் அவலங்கள் சொல்லில் அடங்காதவை.

9. குடாநாட்டு மக்களை மிரட்டி நிதி சேகரித்தல் என்ற சில இயக்கங்களின் இதுவரை காலமுமான கோட்பாடு இப்போது தளர்ந்து வருவதாகக் கேள்வி.

(இதுவரை காலமும் குடாநாட்டு மக்களை மிரட்டி நிதி சேகரித்தலைத் தமது கோட்பாடாகக் கொண்டிருந்த சில இயக்கங்கள், அதினின்றும் தளர்ந்து வருவதாகக் கேள்வி)

10. நேற்றைய கூட்டத்துக்கு உதவிப் பிராந்திய முகாமையாளர் முதன்மை விருந்தினராய்க் கலந்து கொண்டார்.

(நேற்றைய கூட்டத்துக்குப் பிராந்திய உதவி முகாமையாளர் முதன்மை விருந்தினராய்க் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தம்மைக் **கொலை செய்தவனையும்** ''தத்தா நமர்'' என்று கூறி அவனைக் கொல்லவிடாது தடுத்தவர் மெய்ப்பொருள் நாயனார்.

(தம்மைக் கொல்ல முனைந்தவனையும் ''தத்தா நமர்'' என்று கூறி அவனைக் கொல்லவிடாது தடுத்தவர் மெய்ப்பொருள் நாய னார்.)

12. தொழிலாளர்களின் நரம்புகள் **முறியும்** அளவுக்கு வேலை வாங்குவ தில் அவர் மகாசூரர்.

(தொழிலாளர்களின் நரம்புகள் அறுந்துபோகும் அளவுக்கு வேலை வாங்குவதில் அவர் மகாசூரர்.)

13. **மழை பெய்ததன் காரணமாக வயல்களில்** வெள்ளம் நிறைந்து வழிந்தது.

(மழை பெய்ததன் (காரியமாக) பயனாக வயல்கள் வெள்ளத் தால் நிறைந்து வழிந்தன.)

14. 27-05-98 இல் மு.ப. 11.05 மணிவரையுள்ள சுப வேளையிலே திறந்து வைக்கப்படும் எமது வர்த்தக நிலையத்திற்கு வருகை தந்து **அச்சுபவேளையில்** கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின் றோம்.

(27-05-98 இல் மு.ப. 11.05 மணிவரையுள்ள சுப வேளையில் திறந்து வைக்கப்படும் எமது வர்த்தக நிலையத்திற்கு வந்து, **திறப்பு விழாவில்** கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.)

15. அவனுடைய கனவுகள் பஞ்சுப்பொதியிலே தீப்பட்டது போல முற்றாகக் **கலைந்து** போயின.

(அவனுடைய கனவுகள் பஞ்சுப்பொதியிலே தீப்பட்டது போல முற்றாக எரிந்து போயின.)

16. எதிலிகளாய் அகதி முகாங்களில் அவலப்படும் மக்களைக் காண் போர் கல் மனம் படைத்தவராயினும் **தீயிற்பட்ட மெழுகாய் உருகி** விடுவர்.

(எதிலிகளாய் அகதி முகாங்களில் அவலப்படும் மக்களைக் காண்போர், கல்மனம் படைத்தவராயினும் கசிந்து இளகி விடுவர்)

17. ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி மாளிகையிலிருந்து காணா மற் போன விலைமதிப்பற்ற—வரலாற்றுச் சிறப்பு மிக்க—ஓவியம் ஒன்று லண்டன் ஏல விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட் டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவ்வாக்கியத்தில் **விலைமதிப்பற்ற** என்ற சொற்றொடர் 'மதிப்பே இல்லாத' என்ற பொருளைத் தருகின்றது. விலைமதித்தற் கரிய'; 'விலைமதிக்க முடியாத' என்பவற்றில் ஒரு சொற்றொடரைக் கையாளலாம்.)

18. சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே பழுதடைந்த பொருள் கள். பாவனையாளர்களின் தலைகளிலே கட்டியடிக்கப்படுகின்றன.

(பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றில்..... 'சில பல' என்பது சிலவும் பலவுமான எனப் பொருள் மயக்கத்தினை ஏற்படுத்தும்)

19. கைதானோர், காணாமற்போனோர், பாதுகாவலர் சங்கத் தூதுக்குழு வினர், மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்குச் சென்று பிரதேச **இணைப்பாளரிடம்** பேச்சு வார்த்தை நடத்தினர்.

**(கைதானோரதும், காணாமற்போனோரதும்** பாதுகாவலர் சங்கத் தூதுக்குழுவினர் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத் திற்குச் சென்று பிரதேச **இணைப்பாளரிடம்** பேச்சுவார்த்தை நடத்தி னர்.)

20. இன்று உலகமயமாதல் திறந்த பொருளாதாரம் என்ற நாடுகளின் பொருளாதாரக் கொள்கையினை அடுத்துத் திரை இசைகளுக்குள் ஏகாதிபத்திய மேற்கத்திய இசைகள் ஊடுருவியுள்ளன.

(உலக) நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளான உலகம யமாதல் திறந்த பொருளாதாரம் என்பவற்றால் திரை இசைகளுக் குள் ஏகாதிபத்திய மேற்கத்திய இசைகள் ஊடுருவுகின்றன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. எழுவாய், பயனிலை அமைய வேண்டிய முறைமை

''வினையடியாகத் தோன்றும் பால்காட்டும் சொற்களும் (வினை முற்று) பெயரடியாகத் தோன்றும் பால்காட்டும் சொற்களும் (பெயர்) தொடர்கையில் ஒரு பாலுக்குரிய சொல் மற்றொரு பாலுக்குரிய சொல் லோடு மயங்குதல் கூடாது. தத்தமக்குரிய பாற் சொற்களோடு மயங்குவ வதே (கூடுவதே) தமிழ் மரபாகும்.'' [1]

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் செய்துள்ள வரை யறை இது.

எ—டு: அவன் (ஆண்பால்) வந்தான் (ஆண்பால்)
அவள் (பெண்பால்) வந்தாள் (பெண்பால்)
அவர்கள் (பலர்பால்) வந்தார்கள் (பலர்பால்)
அது (ஒன்றன்பால்) வந்தது (ஒன்றன்பால்)
அவை (பலவின்பால்) வந்தன (பலவின்பால்)

இவ்வாறு வருகையில் பால் மட்டுமன்றித் திணை, இடம், காலம், வினா, விடை என்பவற்றிலும் ஒன்று பிறிதொன்றோடு மயங்காதிருப்பது இன்றியமையாததே. [2] அவ்வாறு மயங்கினால் அது வழுவாகும்.

மேலே காட்டிய எடுத்துக் காட்டுக்கள் மிகவும் எளிமையானவை. ஏனெனில் அவை தனிவாக்கியங்கள் (Simple Sentences). பெயரடைகள், வினையடைகள், இணைப்புச் சொற்கள், இடைச்சொற்கள் கொண்டு விரிக்கப்படும் தொடர் வாக்கியங்கள் (Compound Sentences), ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்டோ அமையும் துணைவாக்கியங்களை உள்ளடக்கிய கலப்பு வாக்கியங்கள் (Complex Sentences) என்பவை ஆக்கப்படும் பொழுதே சிக்கல்கள் உண்டாகின்றன; பொருந்தா மயக்கங்கள் ஏற்படு கின்றன. கீழே தரப்படும் வாக்கியங்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

---

[1] வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

**(தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம் 11)**

[2] திணையே பால் இடம் பொழுது வினா இறை மரபாம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே

**நன்னூல், பொதுவியல், 275)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சமகாலத்தின் அறிவியற்றேவைகளை நிறைவு செய்வதற்கு உகந்ததான கலைச்சொற்களை உருவாக்கும் பணி மிகவும் இன்றியமையா தனவாகும்.

2. ''இக்கற்கை நெறிகளில் கற்க விரும்புகிறவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து, முத்திரை இடப்பட்ட தபாலுறையையும் இணைத்து அனுப்பி வைக்கப்படும்'' என்று (நிறுவன) அலுவலர் தெரிவித்துள்ளார்.

முதல் வாக்கியத்திலே 'உகந்ததான' என்னும் ஒருமைப் பெயரடை (தொழிற்பெயர்) 'கலைச்சொற்களை' என்னும் பன்மைப் பெயர்ச் சொற்றொடருடனும் பணி என்னும் ஒருமைப் பெயர் இன்றியமையாதன என்னும் பன்மை வினைமுற்றுடனும் மயங்கின.

இரண்டாவது வாக்கியத்தில் எழுவாய் 'விரும்புகிறவர்கள்' என்பது, (வினையாலணையும் பெயர்) அது, அனுப்பி வைக்கப்படும் என்னும் செயப்பாட்டு வினைமுற்றைப் பயனிலையாய் ஏற்றது தவறு.

வேறு, இல்லை உண்டு, வேண்டும், படும், தகும் என்பன இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொது என்ற வகையில் 'படும்' என்பது வந்தமை தவறில்லைத்தான். ஆனால்,

'விரும்புகின்றவர்கள்...........அனுப்புதல் வேண்டும்' என வாக்கியம் அமைந்திருத்தல் வேண்டும். அல்லது

'விரும்புகின்றவர்களால்..........விண்ணப்பப் படிவம் பூர்ததி செய்யப்பட்டு முத்திரை இடப்பட்ட தபால் உறை அதனோடு இணைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படும். (தபால் உறையை இணைத்து எனவும் அமைக்கலாம்.) என அமைக்கலாம். ஆனால் அவ்வமைப்பு, அறிவுறுத்தலாய் அமையாது (Instruction), கூற்று (Statement) ஆக அமைந்து விடும்.

உம்மை இடைச்சொற்களால் இணைக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் பன்மை வினைமுற்றையே கொள்ளல் வேண்டும். ஒருமை வினைமுற்றினைக் கொள்வது தவறு.

**எ—டு:** வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் விசாரித்தால் அவ்வாறு கைது செய்யப்படவில்லை என்று கைவிரிக்கப்படுவதும் பின்னர் அவர்கள் காணாமற் போனவர்களாகக் கருதப்படுவதும் வழமையாகி விட்டது.

...... செய்யப்படுவதும் ........ கைவிரிக்கப்படுவதும் ....... கருதப்படுவதும் வழமைகளாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பந்தியிலே, ஒருவரைக் குறிக்கக் கையாளப்படும் மதிப்புப் பன்மை அப்பந்தியில் தொடர்ந்து கையாளப்படலே முறை. இடையில், பன்மைக்குப் பதில் ஒருமையைக் கையாளல் பொருத்தமற்றதாகும்.

''பாரதியார் பாடல்களிலே அவரின் உணர்ச்சிக் குமுறல்கள் வெளிப் படும் இடங்கள் பல உள்ளன. அவை அவர் அன்று கண்ட தமிழ்ச் சமூகத்தின் கீழ்மைப் போக்கினால் ஏற்பட்டவை ....... பாரதி செஞ்சொற் கவிஞன்; உள்ளத்தில் உண்மை ஒளிவேண்டி நின்றவன்.

பாரதியார் ........ கவிஞர் ....... நின்றவர்.

இக்கட்டுரையின் வேறோர் இடத்திலே காட்டியாங்கு வேறு, இல்லை, உண்டு, வேண்டும், படும், தகும் என்பன இருதிணை, ஐம்பால், மூவிடத்துக்கும் பொதுவானவை என்பதும் ஒன்று.

எ—டு:- 1. அவன் வேறு, அவள் வேறு, அவர்கள் வேறு, அது வேறு, அவை வேறு, நான் வேறு, நாங்கள் வேறு, நீ வேறு, நீங்கள் வேறு.

2. அவன் இல்லை, அவள் இல்லை, அவர்கள் இல்லை, அது இல்லை, நான் இல்லை, நாங்கள் இல்லை, நீ இல்லை, நீங்கள் இல்லை.

3. 'உண்டு' என்பதும் 'பொதுவினை' என்று இலக்கணம் கூறியபோ தும் இன்று வழக்கிலே அஃது அவ்வாறு கையாளப்படுவது அரிது.

அவன் உண்டு, அவள் உண்டு ..... என்று உயர்திணை முப்பால்க ளிலோ, நான், நீ முதலாம் தன்மை முன்னிலை இடங்களிலோ கையாளப்ப டுவதில்லை; அது உண்டு, அவை உண்டு என அஃறிணை இருபால்களி லுமே கையாளப்படுகின்றது.

'வேண்டும்' என்ற வினைமுற்று, தொழிற்பெயரோடு கூடி வருகை யில் அந்தத் தொழிற்பெயரே எழுவாயாயும் அமைந்து விடுவதனால் அது உயர்திணைக்குப் பயனிலை ஆவதில்லை என்பர் மு.வரதராசனார்.

எ—டு:- நீங்கள் நாளை வருதல் வேண்டும்.

ஆனால் **'நீங்கள் வருதல்'** என்ற இரண்டுமே 'வேண்டும்' என்ற பயனிலைக்கு எழுவாயாகக் கொள்ளப்படுவதும் தவறில்லை

வருதல் என்ற தொழிற்பெயருக்கு மாற்றீடாக வரவேண்டும், செய்ய வேண்டும் என்ற வினையெச்சத் தொடரைக் கையாள்கையில் அந்தத் தொடரே பயனிலையாகக் கொள்ளப்படும். அவ்வகையில் ''வேண்டும்'' என்பது பொதுவினை முற்றாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும், தகும் என்பனவும் இக்காலத்தில், பொதுவினைகளாகக் கையாளப்படுவதில்லை.[3] படும் என்பது செயப்பாட்டு வினைக்குரியது.

எ—டு: என்னால் இவ்வேலைகள் செய்து முடிக்கப்படும். ''தகும்'' என்பது அஃறிணை வினைமுற்றாகவே கையாளப்படும்.

இவனுக்குக் 'குரங்கு' என்ற பட்டம் தகும்.

எண்ணுப்பொருளில் ''உம்'' மையிடைச் சொல் பெற்று வரும் 'என்றும்' 'என்பதும்' ஆகவும். ஆயும் முதலான இணைப்புச் சொற்களை ஒரு சீர்மையாகக் கையாள்வதே சிறப்பு.

அவன் நல்லவன் என்பதும் வல்லவன் என்றும் நாம் அறிவோம்.

என்றோ,

அவன் நல்லவனாகவும் வல்லவனாயும் உள்ளான் என்று நாம் அறிவோம்.

என்றோ, எழுதுவதனால் ஒத்த சீர்மை கெட்டுவிடும். இவைபோலவே 'உடனும்' 'ஓடும்', ஆதலாலும், ஆயினும், முதலாக வருவனவற்றையும் ஓர் ஒழுங்கிற் கையாள்வது வாக்கியத்தின் அமைப்பு முறைக்கு உகந்ததாகும்.

குழு, சங்கம், கூட்டம், படை முதலியன தொகுதிப்பெயர்கள் (Collective Nouns). இவற்றினை எழுவாயாகக் கொண்டு வரும் வாக்கியங்கள், பொருத்தமான வகையில் அல்லது பன்மை ஒருமை எண்கொண்ட பயனிலைகளைப் பெறுவதே முறைமை. பலர்பாற்பன்மை வினைமுற்றைப் பயனிலையாகக் கொள்வது பிழை.

1. நேற்றுச் சித்தன்கேணியில் படைகள் சுற்றி வளைத்தனர்...
2. நேற்றுச் சித்தன்கேணியில் படை சுற்றி வளைத்தன...
3. நேற்றுச் சித்தன்கேணியில் படையினர் சுற்றி வளைத்தது. (வளைத்தன)

இம்மூன்று வாக்கியங்களிலும் வந்துள்ள வளைத்தனர், வளைத்தன, வளைத்தது (வளைத்தன) என்பன முறையே வளைத்தன, வளைத்தது, வளைத்தனர் எனத் திருத்தப்படல் வேண்டும்.

---

[3] உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் வையத்து
அலகையுள் வைக்கப் படும்.

**(திருக்குறள், புல்லறிவாண்மை 810)**

இத் திருக்குறளிலே **என்பான்** - எழுவாய்; **வைக்கப்படும்** - பயனிலை. பரிமேலழகரும் **'சொல்லுவான்** - எழுவாய், **கருதப்படும்** - பயனிலை' என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை என்ற பன்மையோடு ஒவ்வொன்று, ஒவ்வொரு என்னும் சொற்கள் தொடர்வது பன்மை - ஒருமை மயக்கமாகும்.

இவற்றுள் ஒவ்வொன்று, ஒவ்வொரு என எழுதுவதே முறை. இதே போன்று ஒவ்வொரு மனிதர்களும் என்று எழுதுவதை விடுத்து ஒவ்வொரு[4] மனிதனும் என்றாங்கு எழுதுவதே சரியானது. (ஆங்கிலத்தில் Each, Every என்பன ஒருமையை உணர்த்துவதை ஒப்பிட்டு நோக்கலாம்.)

---

[4] ஒரு என்பது (ஒன்று போன்று) அஃறிணையாதலால் உயர்திணைக்கு உரிய மனிதரைக் குறிக்கையில் ஒருவன், ஒருத்தி, ஒருவர் எனக்குறித்தல் வேண்டும் என்பது இலக்கணம்.

எ—டு:- ஒருவன் (ஆகிய) இராமன். ஒருத்தி (ஆகிய) சீதை; இராமன் ஒருவன், சீதை ஒருத்தி. ''ஒரு சீதை, ஒரு (ஓர்) இராமன் என்பன பிழையானவையெனில் பால்காட்டும் விகுதி பெறாதபெயரெச்சங்கள் அடைகளாக வருவதும் தவறுதானே?'' என ஆசங்கை கிளப்புலவர் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை (வந்த மனிதன்). எனவே ஒரு இராமன் (பண்டிதமணி சி.க. கையாண்டது) என்றாங்கு எழுதுவது தவறன்று. 'ஒரு' உயர்திணை அடைமொழியாய் வந்தமைக்குப் புறநானூற்றில் எடுத்துக்காட்டு உண்டு.

ஒரு மகள் அல்லது இல்லோள் செருமுகம் நோக்கிச் செய்கென விடுமே.

(புறம் 279 (10-11 அடிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீழே தரப்படும் வாக்கியம் ஒவ்வொன்றினதும் பிழைதிருத்தம் அதன தனை அடுத்துத் தரப்படுகின்றது.**

1. **மிகவும் விரிவானதும்** பயன்பாடு மிக்கதும் பலராலும் **அறியப்படாத துமான** செய்திகளுக்குச் செய்தித்தாள்கள் முக்கியத்துவம் வழங்கு **கின்றன.**

   .......... விரிவானவையும் பயன்பாடு மிக்கவையும் ......... அறியப்ப டாதவையுமான ..........

2. நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தலைவரின் கோரிக்கையைச் சபை ஏகமனதாய் ஏற்றுக்கொண்டனர்.

   ............... ஏற்றுக் கொண்டது.

3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், **தனது** குறிக்கோளினின்றும் எக்காலத்தி லும் தவறியவரல்லர்.

   ............. தமது குறிக்கோளினின்றும்

4. இரண்டு குழந்தைகளில் ஒன்று தாயின் சேலையைப் பிடித்துக் கொள்ள மற்றக் குழந்தை அவளின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறி அழுதான்.

   .............. கதறி அழுதது.

5. 'காணாமற் போனவர்கள், இறந்தவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டும்' என்ற கோரிக்கைகள் அதற்கெனத் தெரியப் பட்ட குழுவினால் நிறைவேற்றப்பட்டது.

   ................அவற்றிற்கெனத்.................. நிறைவேற்றப்பட்டன.

6. இவ்வளவு அழிவுகளுக்கும் **காரணம் இவன்தான்** என்று மக்கள் கண்ணன் மீது குற்றம் சாற்றினர்.

   .............. காரணன் ...........

7. சமூக உறவு மாற்றங்கள் விழித்தெழுந்த பெண்ணுலகின் சமகால **எதிர்பார்ப்புக்கள்,** மாறிவரும் பெண்மையின் **உரிமைக் குரல்கள்,** பணத்துக்குத் தலைவணங்கா ஏழைமையின் **நிமிர்வு என்பனவே** மணவாழ்வின் வெற்றிக்கு ஆதாரம்.

   ................ ஆதாரங்கள்.

8. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் இம்மூன்று பாடங்களிலே சித்திய டைந்தோர் இப்பரீட்சைகளுக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர். இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

   ................. இவற்றிற்கான ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கொலை, களவு, விபசாரம், குடி, பொய் **என்பன** கொடிய பாதகச் செயல்களாகக் கொள்ளப்படுகின்றது.

.................. கொள்ளப்படுகின்றன.

10. கல்வியின் **பயனாவது** ஒழுக்கம், ஆன்மிக உணர்வு, நற்குடி மகனாதல், கல்விக்கேற்ற தொழில்வாய்ப்புப் பெறுதல் என்பனவாம்.

கல்வியின் பயன்களாவன ....................

11. கவிக்கோமானாகிய கம்பன் தமிழுக்குக் **கதியானவர்** என்பது யாவரும் அறிந்த உண்மை.

............. கதியானவன் என்பது .......

12. எந்நேரமும் ஆரவாரமும் விழாக்கோலமுமாய்த் திகழ்ந்த **யாழ்ப் பாண மாநகர்** அண்மைக்கால அசம்பாவிதங்களால், பாழடைந்து அழகிழந்து காட்சி தருகின்றன.

.............. தருகின்றது.

13. போக்கிரி முயலார் தம்முடைய பகைவர்களான **கரடியாரையும் ஓநாயாரையும்** தொலைவிலே கண்டதும் ஓடி ஒளித்தது.

............... ஒளித்தார்.

14. முல்லைக்கல், எம்.கே.ஐயப்பன், பேராசிரியர் அரவிந்தாட்சமேனன் இம்மூன்று மனித **நிலைகளும்** சமூகத்தின் பலதரப்பட்ட மானிட நிலைகளையும் பிரதிநிதித்துவம் **செய்கின்றவைகள்.**

................ மனிதநிலையினரும் ...... பிரதிநிதித்துவம் செய்கின்ற வர்கள்.

15. இந்த விவகாரம் குறித்து நோர்வேயின் அரசாங்க அதிகாரிகளுடன் பேச **முயற்சி** மேற்கொண்டுள்ளது.

................. மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16. ''அந்த மனிதர் ஆரைத்தேடி **வந்தது.**'' என்று கேள்'' என மேலதிகாரி பணியாளுக்குக் கட்டளையிட்டார்.

................. ஆரைத் தேடி வந்தவர்?................

17. நிலையாமையாகிய யதார்த்த நிலையினை நன்குணர்ந்தவர்களும் தமக்கு நெருங்கியவர் மறையும் போது அதிர்வதும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாகி மீளமுடியாது தவிப்பதும் தவிர்க்க **முடியாததா கின்றது.**

............ தவிர்க்க முடியாதனவாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கலைகள் அனைத்துமே அசல் வாழ்க்கைக்கு உட்பட்டவை தான்.[5] இலக்கியக்கலையும் இதற்கு விலக்கல்ல.

.............. உட்பட்டவைதாம் ................

19. இவ்வரிசையிற் கணேசையர் 'வித்தகம்' என்ற பத்திரிகையில் 'ஈழநாடும் தமிழும்' என எழுதிவந்த கட்டுரைகள். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர்' என்ற நூலாக 1939 ஆம் ஆண்டு வெளிவந்தது.

................ வெளிவந்தன.

20. தொன்று தொட்டு நமது நாட்டிலே செந்தமிழும் சைவமும் சிறந் தோங்கியுள்ளன என்றும் எம் மக்கள் சைவ சமயாசாரங்களிலே அணுவளவும் தவறாது கடைப்பிடிப்பவர்கள் என்பதும், வரலாற்று வாயிலாகவும் அநுபவ ரீதியாயும் நாம் அறிந்துள்ளோம்.

.............என்பதும் ............என்பதும் ...........வரலாற்று வாயிலா கவும் அநுபவ வாயிலாகவும்............

21. பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களின் இலக்கியத் தரத்தையும் அந்தந்தக் கால கட்டத்து எழுத்தாளர்களின் கண்ணோட்டம், அவர்க ளது நடை, உத்தி, கதை அமைப்பு, அக்காலத்துப் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளை அவர்கள் அணுகிய விதம்பற்றியும் வாசகர்கள் (இக்கதைகள் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம்.

இலக்கிய தரத்தையும் ............விதத்தையும்............

22. எழுத்தாளன் ஒருவனுடைய படைப்பானது அவனுடைய உருவாக் கத்திறத்தினால் மட்டுமன்றி அவனுடைய மனித நேய வெளிப்பாடு கொண்டு சாசுவதமான புகழுக்கு உரியதாகின்றது.

............. மனிதநேய வெளிப்பாட்டினாலும் ............

---

[5] அனைத்தும் என்பது பலவற்றையும் உள்ளடக்கிய ஒருமை, யாவும், எல்லாம் என்பன மாற்றீட்டுச் சொற்களாய்ப் பயன்படுத்தப்படலாம். ஆனால் வழக்கின் வலிமை அனைத்தும் என்ற சொல்லுக்குப் பன்மைப் பொருளை வழங்கி விட்டது.

கலைகள் அனைத்துமே என்று எல்லாக் கலைகளையும் உள்ளடக்கியபின், இலக்கியக்கலை அவற்றிலிருந்து வேறானதாய், தனித்ததாய் விளங்குவது எங்ங னம்? இவ்விரு வாக்கியங்களும் தருக்க ஒழுங்குள் அடங்காமையும் கவனிக்கத் தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பேச்சின் முக்கியமான அம்சம் இலக்கியம் பற்றியும் தேச விடுதலை பற்றிய இயக்கங்களின் அன்றைய நிலைபற்றியுந்தான் இருக்கும் ............ பற்றிய இயக்கங்களின் - என்ற தொடரிலே, **'பற்றிய'** என்ற சொல் வேண்டப்படாதது.

24. நாளெல்லாம் உழைத்தும் கூலி கிடைக்காத கொடுமையும் ஒவ் வொரு நாளும் வாங்கிய கடனை அடைக்காமல், கடைக்காரரிடம் கெஞ்சி, கூத்தாடிப் பொருள்கள் பெற்று வந்து உணவு சமைக்கும் இழி நிலையும், பிள்ளைகளுக்கு வாங்கித் தின்பதற்குக் கூடத் துட்டுத்தர மறுக்கும் குடும்பத் தலைவியும் தாயுமான முத்தக்காவின் படைப்பு இக்கதையில் அழுத்தமாக வெளிப்படுகிறது. நாளெல்லாம் உழைத்தும் கூலி கிடைக்காத கொடுமையும், வாங்கிய கடனை அடைக்காமல் கடைக்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடிப் பொருள்கள் பெற்று வந்து உணவு சமைக்கும் இழி நிலையும், பிள்ளைகளுக்கு வாங்கித் தின்பதற்குக் கூடத் துட்டுத்தர மறுக்கும் குடும்பத் தலைவி யும் தாயுமான முத்தக்காவின் படைப்பு மூலம் இக்கதையில் அழுத்தமாக வெளிப்படுகின்றன.

**(சிக்கலான வாக்கியங்கள் என்பதால் இனி வருவனவற்றை முழுமையாகத் திருத்தித் தந்துள்ளோம்.)**

25. அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் மாகாணசபைத் தேர்தலை நடத்து மாறு கோரியும் நாட்டின் அமைதியையும், பொருளாதாரத்தையும் அடியோடு சீர்குலைக்கும். உள்நாட்டுப் போரினை உடனடியாக நிறுத்தும்படியும், பேச்சு வார்த்தைகளைக் கூடிய விரைவிலே தொடங்குமாறும் எதிர்க்கட்சிகள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள் ளன.

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ்[6] (விதிகளின் படி, விதிகளின் அடிப்படையில், விதிகளுக்கமைவாய்) மாகாண சபைத் தேர்தல் களை நடத்துமாறும் நாட்டின் அமைதியையும் பொருளாதாரத்தை யும் அடியோடு சீர்குலைக்கும் உள்நாட்டுப் போரினை உடனடியாக நிறுத்துமாறும் பேச்சு வார்த்தைகளைக் கூடிய விரைவில் தொடங்கு மாறும் எதிர்க்கட்சிகள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன.

26. 'மிகக் குறுகிய கால இடைவெளி' என்பதும் 'பல இலட்சக்கணக்கில் மக்களைச் சென்றடைய வேண்டும்' என்பதும் தொழில் நுட்பவியற்

[6] அவசரகாலச் சட்ட விதியின் கீழ் — 'Under the emergency act' என்பதன் நேரடித் தமிழ் மொழிபெயர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிவையும், பெருமளவு முதலீட்டையும் உள்ளடக்கிய செயற்பாடுகள் என்பவற்றை மனங்கொள்ள வேண்டியுள்ளது.

மிகக் குறுகிய கால இடைவெளி' என்பதும் 'பல இலட்சக் கணக்கில் மக்களைச் சென்றடைய வேண்டும்' என்பதும் தொழில் நுட்பவியற் செறிவையும் பெருமளவு முதலீட்டையும் உள்ளடக்கிய செயற்பாடுகளின் அடிப்படையிலேயே மனங்கொள்ள வேண்டியுள் ளன. (தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன.)

# 3. தோன்றா எழுவாய் தோன்றாப் பயனிலை, தோன்றாச் செயப்படுபொருள்.

''தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களுக்கும் உரிய பெயர்கள் (எழுவாய்களாய்) வெளிப்பட்டுத் தோன்றுதலே சிறப்பு என்பர் இலக்கண ஆசிரியர்'' [1]

''அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கோடலும் உண்டு. அது செவ்விதன்று ''[2]

இவை, இலக்கண நூற்பா ஒன்றுக்கான உரைகள். இக்கூற்றுக்களிலிருந்து வாக்கியங்கள் பெரும்பாலும் எழுவாய்களைப் பெற்றே வரும் என்பதும், சிறுபான்மை பெறாமல் வருவதும் உண்டு என்பதும் புலனாகின்றன.

தோன்றா எழுவாய்

எ—டு:

| | | |
|---|---|---|
| நாளை பாடசாலைக்கு வருவாயா? | — | வருவேன் (நான்) |
| இவன் யார்? | — | என் தம்பி (இவன்) |
| நான் என்ன செய்தல் வேண்டும் | — | இதனைச் செய்(நீ) |

முழுமையான கருத்துப் பேற்றினை வாக்கியங்கள் அவாவி நிற்கின்றன. பெரும்பாலும் உரையாடலின்போதும் சிறுபான்மை எழுத்தின்போதும் எழுவாய்கள், கேட்போரதும் படிப்போரதும் ஊகிப்பிற்கு விடப்படுவதிலே தவறில்லை. இலக்கண ஆசிரியர் 'செவ்விது' (நல்லது) என்றும் உரையாசிரியர் அதற்கு மேலதிக விளக்கமாக, 'செவ்விதன்று' என்றும் அரண் செய்தாலும் உலக வழக்கின் வலிமை கருதித் தங்கள் கருத்தினை வலியுறுத்தவில்லை. ('நல்லது, எனினும் தோன்றா எழுவாயையும் ஏற்கலாம்.' 'நல்லதல்லத்தான். ஆனாலும் வழக்கு நோக்கி ஏற்பதும் தவறல்ல.')

---

1. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வயின் நிலையல் செவ்வி தென்ப

(தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்பா 68)

2 மேற்படி நூற்பாவுக்குச் சேனாவரையர் என்ற உரையாசிரியர் தந்துள்ள உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| எ—டு: | தோன்றா எழுவாய் |
| 1. நேற்றுஅலுவலகத்துக்கு வந்தேன். | நான் |
| 2. நேற்றுத்தான் ஊருக்குப் போனார். | அவர் |
| 3. பட்ட காலிலே படும். | கல் |
| 4. கண்டறியாதன கண்டேன். | நான் |
| 5. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம் | எவரும், நீங்கள் |
| 6. எப்பொழுது கண் திறப்பாரோ? | கடவுள் |

தோன்றா எழுவாய்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டவை என்பதும் மனங் கொள்ளத்தக்கது.

1. இதுதான் எழுவாய் என்று திட்டவட்டமாகக் கொள்ள இடமளிப் பன.

2. மீட்டும் மீட்டும் குறித்த ஓர் எழுவாயையே கையாளுவதால் வாக்கிய அழகு கெடும் என்ற முடிவிற்கு வரக்கூடியன.

பின்வரும் இரு பந்திகளையும் நோக்கினால் அவை மேற்குறித்தவற் றிற்கு முரணானவையாய் அமைந்திருத்தல் காணலாம்.

எ—டு: சுந்தரேசன் பழகுவதற்கு இனியர்; பண்பாளர்; அன்பே வடிவா னவர்; அவரின் நண்பர் சிவஞானம்; வீட்டிற்கு நாள் தவறாது செல்வார்; பல விடயங்களையும் கலத்துரையாடுவார்; பெயருக்கு ஏற்ற அழகர்.

இப்பத்தியிலே நாள் தவறாது வீட்டுக்குச் செல்பவர் சுந்தரேசனா, சிவஞானமா என்ற ஐயம் உண்டாகின்றது. மூன்று வாக்கியங்களுக்குப் பின், 'பெயருக்கேற்ற அழகர்' என்று வருவது கொண்டு மட்டுமே தோன்றா எழுவாய்கள் சுந்தரேசனைச் சுட்டின என்பதை அறிந்து கொள்கின்றோம்.

எ—டு: அவர் பல்வேறு துறைகளிலே ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்க ளின் பேரவை (செனற்) அங்கத்தினராக இருந்தார். மேலும் அவர் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்ப் ரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டக் குழுவில் இருந்தார். அவர் இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்தார்.

இப்பந்தியிலே ஒவ்வொரு வாக்கியத்திலும் 'அவர்' என்ற எழுவாய் அமைந்திருப்பது அழகன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவாய் வெளிப்படத் தோன்றாமலும் வாக்கியங்கள் அமைவது போல, பயனிலைகளும் அவ்வாறு வெளிப்படத் தோன்றாது வாக்கியங் கள் அமையலாமா என்பது கேள்வி. பயனிலை எப்பொழுதும் வெளிப் பட்டு வருதலே முறைமை என்பர்.[2]

ஆனால், இந்த வரையறை எல்லாக் காலங்களிலும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது என்று அறுதியிட்டுக் கூறல் இயலாது[2]

பழமொழிகளிற் சில, பயனிலைகள் பெறாமலே முழுமையான பொருட்பேற்றைத் தருகின்றன.

**தோன்றாப் பயனிலை**

எ—டு:

| | | |
|---|---|---|
| 1. | மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை. | பெய்யும் |
| 2. | ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம். | உண்டாகும் |
| 3. | இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம். | உண்டாகும் |
| 4. | வளர்த்தால் தாடி, சிரைத்தால் மொட்டை. | ஆகும், ஆகும் |
| 5. | கழுதை கெட்டால் குட்டிச்சுவர். | (அருகில்) நிற்கும். |

தேடுக.

ஓர் அகக்காட்சியையோ, புறக்காட்சியையோ ஆற்றல் நிறைந்த எழுத்தாளன் ஒருவன், உணர்ச்சி பூர்வமாகவும் யதார்த்தமாகவும் தங்கு தடையின்றி வெளிப்படுத்துகையிலே பயனிலைகள் அவனுக்கு வேண்டப் படாதவையாகவும் அமைந்து விடுவதுண்டு.

---

[2] பயனிலைக்கு இருநிலையும் ஓதாது எழுவாய்க்கே
ஓதுதலாலும் பயனிலை வெளிப்பட்டே நிற்கும்'

**(தொல்.68, சேனாவரையர்)**

[2] உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

**உடையார் முன் இல்லார் போல** — செல்வரின் முன்பு வறியவர் போல, **ஏக்கற்றும்** — ஆசையினால் தாழ்ந்து நின்றும், **கற்றார்** — கற்றவர்கள் ('உயர்ந்தோர்' என்ற பயனிலை வருவிக்கப்பட்டது) கல்லாதவர் கடையர் — (அவ்வாறு) கற்காதவர் கீழானவர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார், ''முன்பு ஏழைகளாயிருப்பினும் ஆசையால் தாழ்ந்து கற்றவரே செல்வர். (உடையார்). அவ்வாறு கல்லாதவரே கடையர்.'' என்று கருத்துரைப்பர். அவர் உரையின்படி இக்குறளிலே எழுவாய், பயனிலை அமைந்த இருவாக்கியங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு: 1. சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக்கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மஞ்சள் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம்.

................

— பாரதி

2. சாலையிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நசித்துப் போன தசைக்கூட்டத்திலும் வீரியத்தைத் துள்ளவைக்கும் மோகன வடிவம்........ ஆனால் அந்தப் பதுமையின் கண்களிலே ஒரு சோகம் — சொல்லில் அடைபடாத சோகம். சாபத்தின் விளைவு.

— புதுமைப் பித்தன்

3. எங்கும் மௌனம், ஏகாந்தப் பெருங்ககனம்......... தூரத்திலே ஒரு நெருப்புச் சுடர் ........ அவ்வளவுதான்.

— பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

எனினும் எவ்வித காரணமுமின்றிப் பயனிலைகள் தோன்றா வகையில் வாக்கியங்களை அமைக்க வேண்டியதில்லை.

தமிழிலே செயப்படுபொருள் குன்றிய வினை **(Intransitive verb)**, செயப்படுபொருள் குன்றாவினை **(Transitive verb)** என்னும் இருவகை வினைமுற்றுக்கள் உள்ளன.

எதை, யாரை, எவற்றை முதலாம் வினாக்கள் எழுப்பப்பட்டு வாக்கியத்தில் விடை காண முடியாத நிலையில் அமையும் வினைமுற்றுக்கள் செயப்படுபொருள் குன்றியவை.

1. அவன் தரையிலே
   தலை குப்புற விழுந்தான் — எதை விழுந்தான்? —
   
   விடை இல்லை

2. அவன் படுக்கையிலிருந்து
   எழுந்தான் — எதை எழுந்தான்? —
   
   விடை இல்லை

3. அவன் விரைவாக ஓடினான் — எதை ஓடினான்? —
   
   விடை இல்லை

∴ விழுந்தான், எழுந்தான், ஓடினான் ஏன்பன செயப்படுபொருள் குன்றிய வினைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினான், கற்றான், உதைத்தாள், பெற்றாள் முதலியன செயப்படு பொருள் குன்றா வினைமுற்றுக்கள்.

செயப்படுபொருள் வெளிப்படத் தோன்றாத இடத்தும், குறித்த வாக்கியத்தின் வினைமுற்றுக்கள் (பயனிலைகள்) அச் செயப்படுபொருளை ஊகிக்க இடந் தந்து நிற்கும்.

எ—டு: 1) கலைச்செல்வி அழகாகப் பாடினாள்

— எதைப் பாடினாள்? பாட்டை.

2) தமிழ்ச்செல்வன் ஒழுங்காகக் கற்றுவந்தான்

— எதைக் கற்றுவந்தான்? பாடத்தை.

3) கமலன் கோபத்தோடு உதைத்தான்

— எதை உதைத்தான்? நாயை

4) அன்று என்னிடமிருந்து இம்மாணாக்கன் பெற்றான்.

— எதைப் பெற்றான்? பரிசை.

ஆக, தோன்றா எழுவாய்
தோன்றாப் பயனிலை
தோன்றாச் செயப்படுபொருள்

என்பன வாக்கியங்களிலே சிறுபான்மையாய் அமைவது தவறாகாது என்பது மேற்குறித்த எடுத்துக்காட்டுக்களால் நன்கு புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் வாக்கியங்களிலே எழுவாய், பயனிலை செயப்படுபொருள் என்பன மறைந்து நிற்கின்றன.**

**(அவற்றை அவ்வவற்றின் எதிர்வரிசைகளிற் காண்க)**

| | | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|---|
| 1. | அழகாகப் பாடுகிறாள் | அவள் | பாட்டு | ... |
| 2. | அன்று பால் போலும் வெள்ளிநிலா | ... | ... | எறித்தது |
| 3. | ஆற அமர இருந்து வயிறார உண் | நீ | உணவை | ... |
| 4. | இப்படியே கவலையீனமாயிருந்தால் முடிவு? | ... | ... | என்னாகும்? |
| 5. | எல்லாம் அவன் செயல் | இவை, இது | ... | ... |
| 6. | எவர் சொன்னாலும் ஆய்ந்தோய்ந்து முடிவு எடுக்க வேண்டும் | நீங்கள், எவரும் நாங்கள் | (அவர்)சொன்ன வற்றை முடிவை | ... |
| 7. | என்றும் போல் அன்றும் அவலங்கள் குழப்பங்கள், குண்டு வீச்சுக்கள், மரண ஓலங்கள் | ... | ... | இடம்பெற்றன |
| 8. | கள்வன் பிடிபட்டதும் கண், முகம் என்று பாராது தாக்கினர் | பிடித்தவர் | அவனை | ... |
| 9. | சொன்னால் கேட்க வேண்டும் | நீ(நான்) | அவற்றை(அதை) | ... |
| 10. | தமிழுக்கு அமுதென்று பேர் | ... | ... | உள்ளது |
| 11. | தாராள மனம் படைத்த வள்ளல்களுக்கு இன்று அருந்தல் | ... | ... | ஏற்பட்டுள்ளது. |
| 12. | நல்ல பாடம் | இது | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 13. நாடு என்பது பிற நாடுகளை நாடாத வளமுடையது என்பர் | புலவர், திருவள்ளுவர் | ... | ... |
| 14. நீண்ட காலத்தின்பின் கண்டதும் அந்தத் தாய் ஓடிச்சென்று ஆரத் தழுவி முத்தமிட்டாள் | ... | மகனை | |
| 15. நேற்று இடம் பெற்ற சுற்றி வளைப்பின்போது கண்ணில் பட்ட அப்பாவி மக்களுக்கு ஈவிரக்கம் இன்றிப் பலத்த அடி | ... | ... | விழுந்தது, கிடைத்தது |
| 16. பட்டுப் போர்த்த வயிறு | | | இருந்தது, உள்ளது, அமைந்திருந்தது |
| 17. போயும் போயும் உன்னை உதவிக்கு அழைத்ததன் பயன்? | ... | ... | இதுதான் |
| 18. முன்பின் தெரியாத நாட்டிற்கு முதன்முதலாகச் சென்றவனுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட நிலை | ... | ... | ஏற்பட்டது |
| 19. யார்க்கெடுத்துரைப்பேன் | நான் | ... | ... |
| 20. வாய்க்குவாய் காட்டினால் பல் உடைபடுவாய் | நீ | .... | .... |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. எழுத்துக்களுக்கு ஒலியே அடிப்படை

மொழியின் தோற்றம் பேச்சு. பேச்சுக்கு அடிப்படையான சிறப்பு ஒலியே எழுத்து. மொழி என்ற சொல்லே மொழிதலைக் குறிப்பதுதான்[1] 'மொழிக்கு முதற்காரணமாகிய (அணுத்திரள்) ஒலியே எழுத்து' என்பர் நன்னூலார்.[2]

பேச்சின்போது உணர்ச்சிக்கேற்பவும், தொலைவிலுள்ள ஒருவரைக் கூவி அழைக்கவும் உயிர் நெட்டெழுத்துக்களையோ குற்றெழுத்துக்களையோ, மெய்யெழுத்துக்களையோ அவற்றில் கால அளவுக்கும் (ஒரு மாத்திரை - கைந்நொடிப்பொழுது, கண்ணிமைப்பொழுது) கூடுதலாக நீட்டுவதுண்டு.

எ—டு: ஐயோ (ஓ, வந்திட்டி (டீ-இ)யோ?, தம்பீ (பி.பீஇ) அடிச் (ச் ச்) சனெண்டால்.....!

செய்யுள்களிலும் சீர்களின் குறையை நிரப்பவும் இசை நிரப்பவும் உயிர், மெய்யெழுத்துக்களின் மாத்திரையை நீட்டி ஒலிப்பதுண்டு.

எ—டு: கெழீஇய,..., கெடுப்பதூஉம்., கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம். இலங்ங்கு வெண்பிறை சூடீசன் அடியார்க்கு

இவற்றை முறையே உயிரளபெடை, ஒற்றளபெடை என இலக்கண ஆசிரியர் வழங்குவர். தொல்காப்பியர் ''இவ்வாறு நீட்டம் வேண்டும் இடங்களில் அவற்றிற்கான அளபளவுக்கு நீட்டி ஒலி எழுப்புக என்பர் புலவர்'' என்பர். (எழுப்புக) என்பதை **எழுஉதல்''** என்ற சொல்லினால் அவர் குறிப்பிடுவார்.[3] அவர் குறித்ததிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. எழுத்து 'எழு' 'எழுது' என்ற இரண்டு வினையடிகளின் அடிப்படையிலும் தோன்றியது என்பதே அந்த உண்மை. அஃதாவது ஒலியினை (மொழிக்கு முதற்காரணமானது) எழுப்புவதும் (ஒலி வடிவு) அதனை

---

[1] மொழிதல் என்ற தொழிற்பெயர். தனக்குரிய 'தல்' விகுதி பெறாமலும் பகுதி (மொழி) அளவில் நின்று தொழிலைக் குறிக்கின்றது. இவ்வகையான தொழிற்பெயர், 'முதனிலைத் தொழிற் பெயர்' எனப்படும்.

[2] **நன்னூல், எழுத்ததிகாரம், எழுத்தியல் 58.**

[3] **தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூன்மரபு 6.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டிலோ, தாளிலோ எழுதுவதும் (வரிவடிவம்) எழுத்து என்ற சொல்லில் அடங்குகின்றன.

இவற்றுள்ளும் ஒலி வடிவமே முதன்மையானது என்பதை மொழியியலாரும் ஒப்புவர். எழுத்துக்கு அவர்கள் வழங்கிவரும் பதம் 'ஒலியன்' (Phoneme) என்பதாகும்.[4]

எழுத்தின் ஒலி வடிவம் மாறுவதில்லை. ஆனால் அதன் வரிவடிவம் காலத்துக்குக் காலம் மாறலாம் என்பதற்குக் கல்வெட்டுக்கள், காலந்தோறும் எழுந்த இலக்கணநூல்ககள், அண்மையில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தம் என்பவற்றைச் சான்று காட்டலாம். ''ஆக, ஒரு மொழியின் ஒலிவடிவங்கள் (எழுத்துக்களை) மாறாமலும் திரிபடையாமலும் பேணுவதே அதன் தனித்தன்மையைக் காப்பதற்கு வழி'' என்று இலக்கண ஆசிரியர் உணர்ந்தனர்.

தமிழ் மொழியில் எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவு (மாத்திரை), அவை பிறக்கும் இடங்கள் (பிறப்பியல்), அவை பிறக்கும் இட அடிப்படையில் முதல், சார்பு எழுத்துக்களாய் ஆதல், மொழிக்கு முதலில், இடையில், கடையில் வரும் எழுத்துக்கள் (முதனிலை, இடைநிலை (மெய்ம் மயக்கம்), இறுதி நிலை) இவை எனல், சொற்கள் ஒன்றுடன் மற்றொன்று புணரும் ஒழுங்குமுறை (புணர்ச்சி) என்பன முதன்மைப்படுத்தப் பட்டுத் தமிழ் இலக்கண நூல்களிலே (எழுத்ததிகாரத்தில்) விரிவாகப் பேசப்படுகின்றன.

தமிழிலே பயின்றுவரும் சொற்கள் நான்கு வகைகளாய்ப் பாகுபடுத்தப்பட்டன. தமிழ் (செந்தமிழ் நிலம்) நிலத்திலே தமிழ் மக்கள் உருவாக்கிக் கையாண்ட சொற்கள் இயற் சொற்கள். தமிழ் நிலத்தினைச் சூழ்ந்திருந்த பன்னிரு நிலங்களிலே (கொடுந்தமிழ் நிலங்களிலே) வழங்கித் தமிழ் நிலத்திற்கு அறிமுகமானவை திசைச் சொற்கள். ஒரு காலத்திலே பாரத நாட்டின் பிரதேசங்கள் எங்கணும் சமயம் பண்பாடு முதலியவற்றை இணைத்து நின்ற தேசிய மொழியான சமஸ்கிருதத்தினூடாக வந்தவை வட சொற்கள். (ஆரியச் சொற்கள், வடசொற்களாய் வழங்கின. ஆரியச் சொல் — த்ருஷ்டி, வடசொல் — திருட்டி.)

---

[4] எழுத்து என்னும் சொல்லிற்கு 'ஒலியன்' என்பதுவே முதற் பொருள் மொழி மரபில்.''

(டாக்டர் வ.சுபமாணிக்கம் மாற்றொலியன் — சிந்தனைக்களங்கள் - 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு 'திரிசொற்கள்' என்பதொரு பாகுபாடும் உண்டு. ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகவும் வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் திரிசொற்கள் இருவகையின என்பர் தொல்காப்பியர்.[5] ஒரு பொருள் குறித்த பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் பொருளை அரிதாக உணர்த்துவனவே திரிசொற்கள் என்பர் நன்னூலார். [6]இவை பற்றிய விரிவினையும் பயன்பாட்டினையும் பொருத்தம் பொருத்தமின் மையையும் 'திரிசொற்கள்' என்ற இயலில் விரிவாக நோக்குவோம்.

இங்குத் திசைச் சொற்கள், வடசொற்கள் பற்றி விளக்குவதே முதன்மை இலக்காகும்.

''இயற்சொல், திரிசொல் உள்ளிட்ட நால்வகைச் சொற்களையும் செய்யுள்களிலே தொடுக்குங் காலத்தில், மெல்லெழுத்தை வல்லெழுத்தாக வும், வல்லெழுத்தை மெல்லெழுத்தாகவும், சில இடங்களிலே சில எழுத்துக்களைக் கூட்டியும், குறைத்தும் அமைத்துக்கொள்வதும் செய்யு ளின்பத்திற்கு வேண்டப்படும் என்று புலவர் உரைப்பர்.''[7] ஆனால் இவ்வாறு செய்வது ஒலிமரபினின்றும் மீறப்படாததாய் இருத்தல் வேண் டும் என்பதும் கவனிக்கத்தக்கதே. சிறப்பாக உரைநடையில் இத்தொடுப் புக்கள் வேண்டப்படாதன.

திசைச் சொற்களை உள்ளடக்கிய பிறமொழிச் சொற்களையும் வடசொற்களையும் மொழிபெயர்த்துக் கையாளலாம். இதற்குமுடியாத பொழுது மட்டுமே அவற்றைத் தமிழ் ஒலி மரபுக்கு மாறுபடாதனவாய்த் தமிழுக்குக் கொண்டு வரலாம்.

இம்முடிவுக்கு வித்திட்டவரும் தொல்காப்பியரே. வட சொற்களைத் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக் கொண்டே தமிழிற் கையாளலும், வடமொழிச் சிறப்பெழுத்துக்களுக்கு மாற்றீடுகளாகத் தமிழ் எழுத்துக்களைக் கையாளலும் (திரித்துத் தமிழ் ஒலி மரபுக்கேற்ப வழங்க லும்) முறைமை என்று அவர் குறித்தமை பிறமொழிச் சொற்களைக் கையாள்வதற்கும் பொருந்துவதே.[8]

ஐரோப்பியரின் வருகையிலிருந்து பிறமொழிச் சொற்கள் மேலுங் கூடுதலாகத் தமிழில் வந்து சேர்ந்தன. ஆங்கிலர் காலத்திலோ அவை

[5] தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல் 399

[6] நன்னூல், சொல்லதிகாரம், பெயரியல் 272

[7] தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல் 403

[8] — மேற்படி — 401, 402

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு கடந்து பெருகலாயின. நவீனகாலத்தின் அறிவியற்றுறைகள் பலவும் தமிழுக்கு அறிமுகமான பொழுது முன் எக்காலத்திலும் அறிமுக மில்லாத புதிய புதிய சொற்களை மொழிபெயர்த்தோ மொழிபெயர்க்க முடியாதபோது திரித்தோ, திரிக்காதோ கையாள வேண்டியதாயிற்று.

'புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதத்தின் நுட்பங்கள் கூறும்' பற்பலவாகிய அறிவியற்றுறைகள் மேலை நாடுகளில் மெத்த வளர்கை யில், 'எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்' தமிழ் எவ்வித மாற்றத்தினையும் உள் வாங்காது 'நிலைத்திருத்தல்' எங்ஙனம்? எனவே புதிய வரவுகளை 'விருந்து' என வரவேற்கும் பாங்கு தமிழின் அறிவுலகத்திலே இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முளை கொண் டதில் வியப்பில்லை.

ஆனால், தொடக்கத்திலே அறிமுகமான கலைச்சொற்கள் பெரும்பா லும் வடமொழியிலிருந்தே பெறப்பட்டன.

எ—டு:

| | | |
|---|---|---|
| அட்சரகணிதம் அல்லது பீஜகணிதம் | — | Algebra |
| இரசாயனம் | — | Chemistry |
| கேத்திரகணிதம் | — | Mathematics |
| சமாந்தரரேகை | — | Equator |
| பூமிசாத்திரம் | — | Geography |
| பிராண வாயு | — | Oxygen |
| பௌதிகம் | — | Physics |
| விஞ்ஞானம் | — | Science |

ஆங்கிலத்துக்கு ஈடான கலைச்சொற்களை வடமொழி யூடாகவே பெறமுடியும் என்றும் தமிழுக்கு அவற்றை ஈடுசெய்யும் திறன் இல்லை என்றும் கொண்ட தாழ்வுச் சிக்கல் நீண்ட நாளாய் இருந்து வந்தது. இன்னும் அது முற்றாய்த் தளர்ந்துவிட்டது என்றும் கூறல் இயலாது. எனினும் தமிழிலும் அறிவியற் கலைச் சொற்களை உருவாக்கலாம் என்ற தந்நம்பிக்கை கொண்டோர் சிலரின் முயற்சியால் இன்று தூய தனித் தமிழ்ச் சொற்களும் உருவாகிக் கொண்டுதான் இருக்கின்றன.

அட்சரகணிதம், எழுத்துக்கணியம் எனவும், இரசாயனம் வேதிநூல் எனவும், கேத்திரகணிதம் கணியம் எனவும், பிராணவாயு உயிர்வளி எனவும், சமாந்தரரேகை புவி நடுக்கோடு எனவும், விஞ்ஞானம் அறிவி யல் எனவும், பௌதிகம் இயற்பியல் எனவும் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன. (வேதி - வடசொல்) இம்முயற்சி தமிழின் வெளியீட்டாற்றலையும் ஒலிப்பேணுகையையும் சொற்களஞ்சியத்தையும் வளர்க்கும் என்பதற்கு ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஆங்கிலத்தின் வாயிலாய் அறிமுகமாகும் எல்லாச் சொற்க ளையும் தமிழுக்கேற்ற வகையில் அமைத்துக் கொள்வதிலும் இடர்ப்பாடு கள் பல உள்ளன என்பதும் உண்மையே. இவற்றைத் தவிர்த்து விடலாம் என்ற துணிவோடும் தமிழ் என்ற நினைப்போடும் வடசொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் இணைத்துக் கலைச்சொற்களை உருவாக்கியுள் ளமையும் இங்குக் குறித்துக் காட்டவேண்டிய ஒன்றாகும்.

காலனித்துவம் (Colonialism), சோஷலிச யதார்த்த வாதம் (Socialistic Realism), தேசிய காங்கிரஸ் (National Congress) என்பன இவ்வாறு அமைந்த சொற்றொடர்கள்.

இன்று நிலைமை ஓரளவு மாறி வருகின்றது. 'இஸம்' (Ism) 'இயம்' ஆகின்றது. (மார்க்சிஸம் — மார்க்சியம்) சாஸ்திரம் சாத்திரம் ஆகி 'நூல்' ஆகி இயலாக மாறியுள்ளது. (மானச சாஸ்திரம், உளநூல், உளவியல்). இவை வரவேற்கத்தக்கனவே.

அறிவியற்றுறையிலே மூலச் சொல் வடிவங்களை இனங் காணும் வகையிலும் அதே போது தமிழ் ஒலிப்புமுறைக்கு உகந்த வகையிலும் கலைச்சொற்களைக் கையாள்வதும் மொழிபெயர்க்கக் கூடியனவற்றை மொழிபெயர்ப்பதும் முதன்மையானவையாகவும் மொழி வளர்ச்சிக்கு உகந்தனவாகவும் கொள்ளப்படுகின்றன.

எ—டு:

1. வானொலி, தொலைக்காட்சி, வெப்பமானி

— மொழி பெயர்ப்புக்கள்

2. கேள்வி, நிரம்பல், தளம்பல், உயிரி

— பொருத்தமான தமிழ்ச்சொற்கள்

ஆனால், தாம் கையாளும் கதைமாந்தர், கதை நிகழ் களம் என்ப வற்றை உள்ளது உள்ளதுபோலவே யதார்த்தமாகக் — கொண்டுவரல் வேண்டும் என்ற முனைப்பினால் இலக்கியம் சமைப்போர் (எழுத்தாளர்), வரைகடந்து ஆங்கிலச் சொற்களையும் திசைச் சொற்களையும் வட சொற்களையும் கலந்து எழுதித் தமிழின் ஒலிமரபையும் வாக்கிய அமைதி யையும் சிதைப்பதையும், மக்களுக்காக இலக்கியம் சமைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு அவர்கள் அறியாத விளக்கிக்கொள்ளவியலாத சொற்களைக் கையாண்டு மயக்கம் ஏற்படுத்துவதையும் நோக்குகையில் மிகுந்த கவலை உண்டாகின்றது. புதினத்தாள்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பனவும் இவர்களின் அழிப்புக்குத் துணைபோவதும் கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு:

1) 1983 இல் மீரோ காலமானார். அவருடைய ஓவியக் கண்காட்சி நியூயோக்கிலுள்ள 'மியூசியம் ஆஃப் மாடர்'ன் ஆட்சில் நடத்தப்பட்டது. (கேட்லனியக்கலை - அநிருத்தன் - சுபமங்களா, ஆகஸ்ட் 1985 (4))

ஆங்கில மொழிபேசும் நகரான நியூயோக்கில் ஆங்கிலத்தில் நிறுவனப் பெயர் அமைவதில் தவறில்லை. ஆனால் தமிழ் வாசகருக்கு அதனை அறிமுகம் செய்கையில் 'புத்தோவியக் காட்சியகம்' என எழுதுவது பொருத்தமல்லவா?

2) ஹட்சன் நதிக்கரையை ஒட்டி, ரிவர்ஸைட் ட்றைவில் கொலம்பியா யூனிவர்ஸிடியைத் தொட்டுக் கொண்டிருந்த அபார்ட்மெண்டை விட்டு விட்டுப் புறநகரில் வசதியானவர்கள் வாழும் ஸ்பிரிங்டேலில் தனிவீட்டுக்கு மாறினார்கள்.

(சிவசங்கரி — இனி, பக்கம்.6)

கொலம்பியா, ஸ்பிரிங்டேல் என்பன இடப்பெயர்கள். அவற்றை அவ்வாறே எழுதுவதிலே தவறில்லை. யூனிவர்ஸிட்டி (பல்கலைக் கழகம்) ரிவர்ஸைட்றைவ் (ஆற்றங்கரைப் பகுதி), அபார்ட்மெண்ட் (வீட்டுத் தொகுதி) என்பனவும் தமிழ்ப்படுத்த இயலாதனவா?

3) ''சும்மா ஒரு ஸஸ்பிஷன் பேரில வாரண்ட்இல்லாது அரேஸ்ட் பண்றதுக்கு உங்களுக்கு செக்ஷன் இருக்குதே வி.ஆர்.பி.ஸி 54, 55, 51, 65, 15.

(சுஜாதா — வஸந்த் வஸந்த் பக். 124)

ஸஸ்பிஷன் (ஐயம்-ஐயத்தின் பேரில்), வாரண்ட் (அழைப்பாணை) செக்ஷன் (பிரிவு) என்பவற்றைத் தமிழ்ப்படுத்தல் முடியாதா?

இதே புதினத்தின் அடுத்த பக்கத்தில் வரும் வாக்கியமும் நோக்கத்தக்கதே.

''ராத்திரி நீ ஸ்டேஷன்ல இருந்தா ஸேஃப்னு தோணுது. இன்ஸ்பெக்டர் உங்களுக்கிஷ்டமில்லேன்னா கூட நியூஸன்ஸ் கேஸ்லயாவது இவனைப் பிடிச்சு உள்ளே தள்ளுங்க.''

(மேற்படி பக் 125)

எழுத்தாளரின் இப்போக்கிற்கான அடிப்படை உளவியல் ஆராயத்தக்கது. ஆங்கில எழுத்தாளர், மேல்தட்டு மக்கள் என்போர் பிரெஞ்சு மொழிச் சொற்களையும் சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் இடையிடையே கையாள்வது, தமது கல்வியறிவையும், மேட்டிமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் புலப்படுத்தும் என்று அவற்றைக் கையாண்டதாய் அறிகின்றோம். தமிழ் கற்ற அறிஞரும் இடையிடையே வடசொற்களைக் கையாள்வதன் மூலம் தமது மேல் தகைமையைப் புலப்படுத்துவதாய் நம்பினர். இன்று ஆங்கிலம் ஆட்சிமொழித் தகுதியை இழந்துவிட்டாலும் அதனைக் கஞ்சிக்குள்ளே பயறுபோலக் கையாள்வது பெருமையாகக் கொள்ளப்படுகின்றது போலும்! ஆங்கிலக் கல்வியும் அறிவும் இன்றியமையாதவை என்பதை இன்று எவரும் மறுக்கார். ஆனால் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாள நடை மூலம் அவற்றைச் சுட்டிக்காக்க வேண்டுமா, என்பதே கேள்வி.

இந்தக் குறைபாடு ஆங்கில மொழியை ஊடகமாகக் கொண்டு கற்றோரிடையில் மட்டுமன்றித் தமிழ் மூலம் கற்ற அறிஞரிடையேயும் நிலவுவதே செரித்துக்கொள்ள இயலாததாகின்றது.

''படைப்பிலக்கியத்தில் Creative Process க்கு நான் மிகுந்த அழுத்தம் தருகிறேன். Creative என்பது எனக்குப் பெரிய பிரச்சினையாகத் தோன்றுகிறது.''

(கோவை ஞானியை, சூத்ரதாரி, சிபிச்செல்வன், கோவிந்தராஜ் ஆகியோர் நேர்கண்ட பொழுது, கோவைஞானி (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் -கீழை நாட்டு மொழிப்பட்டம் B.O.L பெற்றவர். தமிழை முறையாகக் கற்றவர்.) கூறியது)

படைப்பிலக்கியம் என்றபின் படைப்புப் படிமுறை என்பதை மட்டும் ஆங்கிலத்திலே சொல்ல வேண்டிய இன்றியமையாமை ஏன்? (Creative ஆ Creativity யா? என்பனவும் ஐயங்கள்.)

இவற்றுக்கும் மேலாகச் சில சஞ்சிகைகள் தங்கள் தலைப்பையே (ஜூனியர் விகடன், இந்தியா டுடே, கூரியர்) ஆங்கிலச் சொற்கள் கொண்டு வழங்குவது ஏன் என்பதும் விளங்காத புதிராகவேயுள்ளது.

படைப்பிலக்கியத்தைப் பொறுத்தவரை பின்வரும் கூற்றுப் பெருமளவு பொருந்தாவிடினும், தமிழ் ஒலிப்பு முறைக்கு முரணான சொல்லாக்கம் அமைதல் கூடாது என்பதையும் கலைச் சொல்லாக்கத்திலே கடைப்பிடிக்க வேண்டிய முறைமை இது என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

''தமிழ் மொழியிலே ஆட்சியிலிருக்கும் சொற்களை ஆராய்ந்து கண்டறிதல், நாம் செய்தற்குரிய முதற்பணியாகும். ''வடமொழி, தமிழ் மொழியெனுமிரு மொழிக்கும் இலக்கணம் ஒன்றே யென்றே எண்ணுக'' என்னும் கூற்றினை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்ளாவிடினும் வடமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலிருந்தெடுத்துத் தமிழுருவாக்கி வழங்கப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்கள் என்று கடிந்தொதுக்குதல் மேற்கொள்ளாது. அவை தம்மை ஆக்கத் தமிழ்ச் சொற்களாகத் தழுவிக் கொள்வதே முறைமையாகும்.[9]

தமிழிலே சொற்களை ஆக்கும் வகை பற்றி, **'ஆக்கச் சொற்கள்'** என்ற இயலிற் காணலாம்.

1. **பின்வரும் வாக்கியங்களிலே பொருத்தமானவையாயும் பொருத்த மற்றவையாயும் உள்ள கருத்துக்கள் எவை என்பதை முறையே ✓ X என்று அவற்றிற்கு எதிரிலுள்ள அடைப்புக் கோட்டினுள்ளே இட்டுள்ளோம்.**

1) தமிழிலே பண்டுதொட்டுப் பிறமொழிச் சொற்கள் மிகக் குறைந்த அளவிலாயினும் கலந்தே வந்துள்ளன. (✓)

2) தொல்காப்பியர் குறித்த 'திசைச்சொற்கள்' பிறமொழிச் சொற்களையும் உள்ளடக்கின. (X)

3) ஒரு மொழிக்குரிய எழுத்துக்களின் ஒலி மரபு என்றும் பேணப்படல் இன்றியமையாததாகும். (✓)

4) கலைச்சொல்லாக்கத்தில் பிறமொழிச் சொற்களைத் தாராளமாகக் கையாளலாம். (X)

5) ஆக்க இலக்கியங்களில் உரையாடலை இயல்பானதாக அமைத்துக் கொள்ளப் பிறமொழிச் சொற்களை அளவு மீறிக் கையாள்வது தவறு (✓)

2. நடைமுறையிலே பொதுப்பொருளில் வழங்கும் சொற்கள், கலைச் சொற்களாகவும் பயில்வதற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

ஆளணி (Personnel), கேள்வி (Demand), நிரம்பல் (Supply, ஊக்கல் (Motivation), பரம்பல் (Distribution), பருமட்டம் (approximation, கரைசல் (Solution), அழுத்தம் (Pressure).

(இவை போன்ற பொதுப் பொருட் சொற்கள் கலைச் சொற்களாகப் பயன்படுவதனை நோக்கி அத்தகைய சொற்களைப் பட்டியலிடுவது, பயனுள்ள முயற்சி.)

3. **இடைநிலை மெய்ம்மயக்க விதிக்கேற்பப் பின்வரும் சொற்கள் மீளமைக்கப்படுகின்றன.**

---

[9] **விபுலாநந்த அடிகள் — 'கலைச் சொல்லாக்கம்', இலக்கியக் கட்டுரைகள், 154.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராப்தம் — பிராத்தம் (பிராரத்தம்), **வித்வான்** — வித்துவான், **சக்ரவாகம்** (சக்கரவாகம், சக்கிரவாகம்), **பிரச்னை** — பிரச்சினை, **ஆச்ரமம்** — ஆசிரமம், ஆச்சிரமம், **கலாச்சாரம்** — கலாசாரம், **சாத்விகம்** — சாத்துவிகம், **அக்ரகாரம்** — அக்கிரகாரம்,**ஆச்சர்யம்** — ஆச்சரியம், **சந்யாசம்** — சந்நியாசம், **ருத்ரன்** — உருத்திரன், **மான்யம்** — மானியம் **பிரக்யாதி** — பிரக்கியாதி,

(தமிழகத்து எழுத்தாளரின் வடசொல்லாட்சியில், தமிழ் ஒலிமரபு பேணப்படாமை மிகப்பரவலாகக் காணப்படுகின்றது. எம்மவர் இவ்விட யத்தில் அதிகம் பிழைவிடுவதில்லை; எனினும் முன்னவரை நம்மவரும் பின்பற்றும் நிலைமை ஏற்படாதிருக்கவே 'இடைநிலை மெய்ம்மயக்க மரபு' இங்கு அறிமுகமாகின்றது.)

4. **பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள வடசொற்கள் (இயன்ற அளவு). ஆங்கிலச் சொற்கள் என்பவற்றிற்கு மாற்றீடுகளாகத் தமிழ்ச்சொற்கள் வழங்கப்படுகின்றன.**

1. **சில பெண்களோட பார்வை அப்படித்தான். ஏ கைன்ட் அஃப் இன்விடேஷன் டு பெட் அன்ட் இட் மே மீன் நதிங்.** சில பெண்களோடே பார்வை அப்படித்தான். படுக்கைக்கு அழைக்கும் ஒரு வகையான அழைப்பு. இது தவிர வேறு பொருள் எதுவு மில்லை.

   (இவ்விடத்தில் ஆங்கில வாக்கியங்களை ஆசிரியர் கையாண்ட தன் நோக்கம் தாம் சொல்வது ஆபாசம் என்ற தற்கூச்சத்தினால் என்று கொண்டாலும், (ஆங்கிலம்) படித்தோரைப் பொறுத்தவரை அவர்களின் பண்பாடு இந்த ஆபாசத்தை எளிதாக ஏற்கும் என்பதா?)

2. **இன்டர்நெட் உலகின் லட்சக்கணக்கான கம்ப்யூட்டர்களை இணைக்கும் இந்த வலைப்பின்னலை இந்த சகாப்தத்தின் மகத்தான சாதனை என்று தாராளமாகச் சொல்லலாம்.**

   (உலகை இணைப்பதாகிய இந்தக் கணனி வலைப் பின்னலை இந்த நூற்றாண்டின் மாபெரும் சாதனை என்று தாராளமாகச் சொல்ல லாம்.)

   **சாதனை** — நிலைநிறுத்துகை. எனினும் சாதனைக்கு மாற்றுத் தமிழ்ச்சொல் வேண்டாத அளவிற்கு அது தமிழாகவே மாறிவிட்ட மையால் விலக்க வேண்டுவதில்லை.)

3. **ஒரு நல்ல கதை எனக்குள்ளே ஓடீட்டே இருந்தது. அதை டெவலப் பண்ண ஆரம்பிச்சேன் காலையிலே நியூஸ்பேப்பர் படிச்சாக்கூட அதுலே ஏதாவது கிடைக்குமானு தேடிப்பார்க்கிற அளவு தீவிரம். சட சடன்னு விவரங்களும் களமும்பிடிச்சு நான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ஜினியர்க்குக் கதை ரெடி பண்ணினேன். பாக்கட்லை ராக்கட் வைச்சிருக்கிற மாதிரி ஒரு கதை.**

ஒரு நல்ல கதை எனக்குள்ளே ஓடிட்டே இருந்தது. அதை வளர்க்க ஆரம்பிச்சேன். (தொடங்கினேன்) காலையிலே செய்தித்தாள் படிச்சாக்கூட அதுல ஏதாவது தேடிப்பார்க்கிற அளவு தீவிரம் (விரைவு, அவா) சடசடன்னு விபரமும் **(கதைக்கான விரிவான செய்தி)** 'களமும் பிடிச்சு எஞ்ஜினியர்க்கு (பொறியியலர்-ஆனால் கதைத் தலைப்பே 'எஞ்ஜினியர்' என்பதால் மாற்ற வேண்டியதில்லை) கதை ஆயத்தம் **(ஆயத்தம் -** ஹிந்திச் சொல், தமிழ் — **முன்னேற்பாடு)** செய்தேன். சட்டைப்பையில் ஏவுகணை வைச்சிருக்கிற மாதிரி ஒரு கதை.

4. **இது சத்தியத்தின் ஒலி. எந்த வாசகனாலும் இனங்காண முடியும். எனவே** There was something in common in the diversity of style which I employ.

(இது சத்தியத்தின் (உண்மையின்) ஒலி. எந்த வாசகனாலும் (படிப்பவனாலும்) இனங்காண முடியும். எனவே நான் உருவாக்கும் நடைப் பாணியில் (நடைப் பாங்கில்) வேற்றுமைக்கிடையே ஒற்றுமையாய் ஏதோ ஒன்று அமைந்து விடுகிறது.)

5. **சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எத்தனையோ சட்டங்கள், ஆயிரத் தெட்டு** Polution Control - board**கள் இருந்தும் இன்று இந்தியாவில்** Polution **குறைந்துள்ளது என்று யாராவது சொல்ல முடியுமா?**

சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்க (பேண) எத்தனையோ சட்டங்கள். ஆயிரத்தெட்டு சூழல் மாசுறலைக் கட்டுப்படுத்தும் அறிவுரைக் குழுக்கள் இருந்தும் சூழல் மாசுறுவது குறைந்துள்ளது என்று யாராவது சொல்ல முடியுமா?

இங்குத் தரப்பட்டுள்ள மாற்றீட்டு வாக்கியங்களிலே வடசொல், இந்திச்சொல் என்பவற்றின் தமிழ்ச்சொற்கள் அடைப்புக் குறியுள்ளே தரப்பட்டுள்ளன. ஏனெனில் குறித்த சொற்கள் தமிழாகவே ஆகிவிட்டன.

'எஞ்ஜினியர்' ஆங்கிலச் சொல்லாயினும் அது கதைத் தலைப்பு என்பதால் தவிர்க்கப்பட வேண்டியதில்லை. ஆனால் முழுமையான ஆங்கிலச் சொற்கள், வாக்கியங்கள் என்பன கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டியவை என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.

**நாம் எழுதுவனவற்றை ஆங்கிலம் கற்காதவர்களும் வாசிக்கிறார்கள் என்பதை மனங்கொள்வது நன்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. ஆக்கச் சொற்கள்

''பெயர்கள், இடுகுறி, காரணம் என்பவற்றோடு மரபும் ஆக்கமும் சேர்ந்து நான்கு வகையின. வினையாலணையும் பெயர் (வினைக்குரிய காலமும் காட்டிப் பெயர்க்குரிய வேற்றுமையும் ஏற்கும் பெயர்கள். எ—டு: வந்தவன், கரியான்) தவிர்ந்த மற்றைய பெயர்கள் காலங்காட்டா; வேற்றுமைக்கு இடம் அளிக்கும். (கந்தன், கந்தனை, கந்தனால்...) அவை, திணை, பால், இடம் என்பவற்றுள் ஒன்றினை ஏற்பனவும் அம்மூன்றுக்கும் பொதுவாய் வருவனவுமாம்.''[1]

மொழியின் தேவைகள் காலந்தோறும் விரிவடைகின்றன. இவ்விரி விற்கு அமைவாய்ப் புதிய சொற்கள் ஆக்கப்படுதலின் இன்றியமையா மையை இலக்கண ஆசிரியர் உணர்ந்துள்ளமை மேற்குறித்த கூற்றினால் நன்கு புலனாகின்றது. ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் திறனும் வளமும் அதன் சொற்களஞ்சிய அளவிலேயே தங்கியுள்ளன. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற மனப்பான்மை அறிவுத் தேட்டத்திற்கு எவ்வகையிலும் பொருந்தாது.

சொற்களை ஆக்குகையில், அவை குறிக்க வேண்டிய பொருளின் முழுக் கருத்துமோ, சாரமோ எப்பொழுதும் அமைந்துவிடும் என்று எதிர்பார்த்தல் இயலாது. எடுத்துக்காட்டாக, 'காகம்' என்ற சொல்லை நோக்குவோம். அது 'கா கா' என்று கரைவதைக் கண்டு அதற்கு அப்பெயர் வழங்குகின்றது. அதன் நிறம், இயல்பு, இனம் என்பன 'காகம்' என்ற சொல்லினுள் அடங்கவில்லை. இதுபோன்றே ஒவ்வொரு சொல் லையும் நுணுகி நோக்கினால் அது தன்னளவில் முழுமையானதாய் இல்லாமையைக் கண்டு கொள்ளலாம். பெரும்பாலும் பெயர்கள் பொருள் களை அடையாளங் காண்பதற்கு — மற்றைய பொருளிலிருந்து வேறுப டுத்தி அறிவதற்கு — உதவுகின்றனவேயன்றி அவற்றின் சாரம் யாவற்றை யும் உட்கொள்வனவல்ல. எனினும் சொற்பிரபஞ்சம் இன்றேல் பொருட் பிரபஞ்சமே இல்லை என்னும் அளவிற்குச் சொற்களும் சொற்கள் அமைந்த மொழியும் எம்மீது ஆட்சி செய்து வருகின்றன. ஆனால் சொற்களுக்கு நாம் அடிமையாகாது, அவற்றை நாம் ஆட்சிப்படுத்தி எமது உணர்ச்சி, அறிவுத் தேவைகளுக்குப் பயன் செய்வது எமது கடன். இவ்வியல், சொல்லாக்கத்தின் சில முதன்மையான கூறுகளை எடுத்துரைப் பதை நோக்கமாகக் கொண்டு எழுகின்றது.

---

[1] நன்னூல் — சொல்லதிகாரம், பெயரியல் 275.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச்சிறிய வேர்ச்சொற்களோடு இலக்கண உறுப்புக்களை இணைப்ப தனாற் புதிய சொற்கள் உருக்கொள்கின்றன.

எ—டு:- இணை இணைத்தல், இணைதல், இணைவு, இணைப்பு, இணையம், இணைகை, இணைந்தான், இணைந்தது, இணைந்த, இணைந்து

பண் — பண்பு, பண்பாடு, பண்(ணு), பண்ணுதல், பண்ணல், பண்ணு, பண்ணி, பண்ணிய, பண்ணினான்.

வடமொழியிலே வினையடிகளிலிருந்து பெயர், வினைச்சொற்கள் யாவும் பிறக்கின்றன. அவற்றைத் 'தாது' என்பர். வேர்ச்சொல் என்பதும் ஒன்று. தமிழின் வேர்ச்சொற்கள் பெயர், வினை இரண்டும் தோன்றுவ தற்கு ஓரளவே இடம் தருகின்றன. வடமொழிச் சார்புடைய இலக்கணிகள் தமிழ் வேர்ச் சொற்களைத் 'தாது' எனலாம் என்பர். மொழியியலார் இதனை ஏற்கார். உரிச்சொற்களைக் குறைச்சொற்கள் என்பதும் உண்டு. இவை எவ்வாறாயினும் சொல்லாக்கத்திற்கு மூலமான வேர்ச்சொற்கள் (பெயரடியானவையும், வினையடியானவையும்) தமிழில் உண்டென்ப தும் அவற்றின் விரிவாக்கமாகவே கருத்து வெளிப்பாட்டிற்கான சொற்கள் தோன்றுகின்றன என்பதும் உண்மைகளே.

இங்கு நாம் **'ஆக்கச் சொற்கள்'** என்று குறிக்கும் சொற்றொடரின் கருத்துப் பரப்பு சமய, சமூக, இலக்கிய, பண்பாட்டுத் தொடர்பிற் புதியனவாய் ஆக்கப்படும் சொற்களை மட்டுமே உள்ளடக்கியதாகும்.

ஆக்கச் சொற்களை இவ்வியலின் எல்லைக்குள் இரு பிரிவுகளாய் வகுத்துள்ளோம்.

1. பிறமொழிகளிலிருந்து பெற்றுத் தமிழ் மொழியின் ஒலியியல்புக்கு உகந்த முறையில் அமைத்துக் கொண்டவை. (ஒட்சிசன், ஐதரசன், இலத்திரன்)
2. பிறமொழிச் சொற்களையோ சொற்றொடர்களையோ மொழிபெயர்த்துக் கையாளப்படுபவை. (தனிமம், இயற்பியல், பொதுநலவாயம்)

வடசொற்களைத் தமிழில் அமைத்துக் கொள்ளும் முறைமையை முதலில் வகுத்துத் தந்தவர் தொல்காப்பியரே என முன்னைய இயலிலே எடுத்துக் காட்டினோம். வடசொற்களை மட்டுமன்றிப் பிறமொழிச் சொற்க ளையும் தமிழில் அமைத்துக் கொள்வதற்குத் தொல்காப்பியரின் விதி பொருந்துவதே. எனவே அதனை முதலில் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வடசொல்லுக்கும் தமிழ்ச் சொல்லுக்கும் பொதுவான எழுத்துக்களாலான சொற்களைக் கொள்ளல். (இதனைத் **'தற்சமம்'** என்பர்).

எ—டு: வாரி, மேரு, குங்குமம், மணி, சந்தனம், விமலம்.

2. வடசொல் சிதைந்து அதற்குரிய சிறப்பெழுத்துக்கு மாற்றீடுகளாய்த் தமிழ் எழுத்துக்களைப் பெற்றவற்றைக் கொள்ளல். இதனைத் தற்பவம் என்பர்.)

எ—டு: ரம்யம் - **அரமியம்,** ரங்கம் - **அரங்கம்,** விஷம் - **விடம்,** ஜலம் - **சலம்,** ஹரன் - அரன், **பங்கஜம்** - பங்கயம், **பக்ஷம்** - பட்சம், பக்கம், **ஸர்ப்பம்** - சர்ப்பம், **அஹங்காரம்** - அகங்காரம்.

3. பாகதமொழி (பிராகிருதம்)க்கூடாகத் திரிபடைந்து தமிழுக்கு வரல் (திரிபு)

**ஆக்ஞா** - ஆணை, **விருத்தம்** - வட்டம், **கிருஷ்ண** - கண்ணன், பிரதிமா - படிமம்.

இவற்றைவிட, தொல்காப்பியர் வடசொற்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் கையாண்டமைக்குப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை சில எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்.

எ—டு: **வைதிகப்பிரக்கிரியை** - செய்யுள்வழக்கு, **இலௌகிகப் பிரக்கிரியை** - உலகவழக்கு, **அஸப்யம்** - அவையல்கிளவி. (இடக்கரடக்கல்) **(தொல்காப்பியத்தின் காலம் - இலக்கணச் சிந்தனைகள்)**

தொல்காப்பியரின் வடசொல் அறிமுகம் நன்னூலாரால் மேலும் விரிவாக்கம் பெறுகின்றது.[2] மொழிக்கு முதலில்வராத ய,ர,ல,ட எழுத்துக்களுக்கு முறையே இ; அ,இ,உ;அ,உ; என்பவற்றைச் சொல்லின் முதலில் இடல் வேண்டும் என வழிகாட்டினார்.

எ—டு: 1. 'ய'' — **யமன்** — இயமன். (இன்று யேசு, இயேசு என்று இரு வகையிலும் எழுதப்படுகின்றது. ஒரு காலத்தில் யுத்தகாண்டம் உயுத்தகாண்டம் எனவும் வழங்கியதுண்டு.)

2. 'ர' — **ரங்கம்** — அரங்கம், **ராமன்** — இராமன், **ரோமம்** —உரோமம்.

---

[2] நன்னூல், எழுத்ததிகாரம், பதவியல் (146, 147, 148, 149, 150.) நன்னூலுக்கு முன்னரே வீரசோழியம் என்ற இலக்கண நூல் தோன்றி, வடமொழி இலக்கண மரபுகளை வரையறை கடந்து, தமிழிற் புகுத்தியது. ஆனால் நன்னூலோ வடமொழி மரபை அங்ஙனமே ஏற்காது தமிழ் மரபைப் பேணிய வகையிற் சிறப்புடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 'ல' — **லஞ்சம் —** இலஞ்சம், லோகம் — உலோகம் 'ட' — டம்பம் — இடம்பம்.

இடைநிலை மெய்ம்மயக்கத்துள் அடங்காத ஒற்றெழுத்துக்கள் வட சொற்களினிடையே வரின், அவை எவ்வாறு மாற்றீடு செய்யப்படல் வேண்டும் என்றும் நன்னூலார் வழிகாட்டினார்.

எ—டு:

| | | |
|---|---|---|
| காவ்ய(ம்) | — | காவியம், காப்பியம் |
| வக்ரம் | — | வக்கிரம் |
| சுக்லம் | — | சுக்கிலம் |
| பத்மம் | — | பதுமம் |
| பக்வம் | — | பக்குவம் |
| அர்த்தம் | — | அருத்தம் |

தமிழ் எழுத்துக்களின் ஒலியியல்பினைப் பேணுதலில் வடசொல் வரையறைகள் பிறமொழிச் சொற்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்வதற் கும் பொருந்துவனவே. ஆட்பெயர்களுக்கு இவ்விதிகளை வற்புறுத்தல் மயக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் (**கொட்றிங்ரன்** — கொடிறிங்குரன், **டட்லிஸ்டாம்ப்** — இடட்டிலித்தாம்பு, **ஹர்ஷன்** — அரிழன் போன்றவை) அவற்றை அவ்வாறே ஏற்பினும் பொதுச் சொல்லாக்கத்தில் ஒலிப்பு விதிகளைப் பேணுவதே நன்று. (ப்ரகாசம், புத்திஜீவி, வியாப்தி, விஷயம் போன்றவற்றைத் தமிழ் ஒலிப்பு முறைமைக்கேற்ப மாற்றுதலே தக்கது.)

இனி, தமிழிலே ஆக்கச் சொற்களை அமைக்க இ, உ, அம் ஆகிய மூன்று விகுதிகள் (பின்னொட்டுக்கள்) பயன்படுத்தப்படலாம் என்பதும், அவை தனித் தனியாய் வினைமுதல் (கருத்தா), கருவி, செயப்படுபொ ருள் என்ற மூவகைச் சொற்களையும் உருவாக்கப் பயன்படுத்தலாம் என்பதும் மனங்கொள்ளத்தக்கன.

| எ.டு: வினைமுதல் | கருவி | செயப்படுபொருள் |
|---|---|---|
| 'இ' காவி (நோய்க்காவி) | காட்டி | துலங்கி |
| உண்ணி (ஒட்டுண்ணி) | பேசி (தொலைபேசி) | உருளி |
| சுரப்பி | பெருக்கி (உருப்பெருக்கி) | ஊருணி |
| 'ஐ' நிலுவை | மடக்கை (Logarithm) | அறுவை |
| மிதவை | துலை (Balance) | கலவை |
| பரவை | பார்வை (எண்பார்வை) | தீர்வை |
| 'அம்' இழையம் | தொடரியம் (Sentence) | இணையம் |
| உரிமம் Licence | நோக்கம் | திட்டம் |
| கனியம் | நிதியம் | வீக்கம் (பண) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு, இலக்கணக் கூறுகளாய் அமையும் விகுதிகள் (பின்னொட்டுக்கள்) பலவும் ஆக்கச் சொற்களை அமைக்க உதவுகின்றன. அவற்றுட் சில வருமாறு:

1. **அன் ஆன்'** (ஆண்பால் விகுதிகளல்ல) ஒலியன், உருபன், அடைப்பான், (கவனம்) கலைப்பான்.

2. **தல், அல், கை, வை, பு, மதி, மானம், பாடு, மை, (தொழிற் பெயர் விகுதிகள்)**

   சீரணித்தல் (செரித்தல்), பரம்பல் (குடிசனப்பரம்பல்), பிரிகை (ஒளி), சேர்வை, கலவை, எடுப்பு (முன்னெடுப்பு) செல்மதி, வருமதி, வருமானம், கோட்பாடு, நிலைப்பாடு, செயற்பாடு, பண்பாடு, மேலாண்மை, இறைமை, வாண்மை **(Profession.)**

3. **மை, பு, சி, கு, ஐ, து** (பண்புப் பெயர் விகுதி)
   தண்மை, நட்பு (நாடுகள்), மாட்சி, நன்கு, தொல்லை, ஐது.

4. நர் .. ('ந்' + அர் - ந் - உடம்படு மெய்)
   பயிற்றுநர், பயிலுநர், தொடக்குநர், நிறுவுநர், வழங்குநர்.

5. **'ஆளர்'**

   பணிப்பாளர், பணியாளர், மேலாளர், பதிலாளர்.
   (Representative)

6. **நூல்**

   உளநூல் **(Psychology)**, மொழிநூல் **(Philology)** (முன்பு 'நூல்' என்பது இலக்கண நூலுக்கே சிறப்பாக வழங்கியது. அறிவியற்றுறைகள் அறிமுகமான பொழுது அவ்வத்துறைக்கு நூல் என்பது பின்னொட்டாயிற்று. இன்று யாவிற்கும் 'இயல்' என்ற பின்னொட்டு ஆட்சிப்பட்டுள்ளது.)

7. **'இயல்'**

   மொழியியல் **(Linguistics)**, அறிவியல், மானிடவியல், சமூகவியல்.

8. **'ஈடு'**

   பாதீடு, வகையீடு, மாற்றீடு.

9. **'களம்'**

   செருக்களம், திணைக்களம், பணிக்களம்.

10. **தளம்** (களத்திற்கு மாற்றீடெனலாம்)

    இயங்குதளம், அடித்தளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **துறை**

தமிழ்த்துறை, ஆய்வுத்துறை, கல்வியியற்றுறை, மெய்யியற்றுறை.

12. **அகம்**

தொழிலகம், கூட்டகம் (Company), தொல்பொருட் காட்சியகம்.

13. **'நிறுவனம்' (Institution)**

ஆய்வு நிறுவனம், சமூக நிறுவனம், கல்வி நிறுவனம். (முன்பு 'தாபனம்' என்ற வடசொல் வழங்கியது.)

14. **'அணி'**

ஆளணி (Personnel), அடுக்கணி, படையணி.

15. **பணி**

ஆசிரியப்பணி, நாட்டுப்பணி, கல்விப்பணி, அரசுப்பணி (சேவை என்ற வடசொல்லின் மாற்றீடு)

16. **வனவு (பின்னொட்டு)**

கொள்வனவு.

17. **'அனவு'**

கொடுப்பனவு இருப்பனவு (Stock)
(இருப்பு என்பதே பெருவழக்கு)

18. இவற்றோடு அம்சம் கரம், சீவி (ஜீவி), தனம், துவம், பூர்வம், பாவம், பாணி, வாதம், போகம் முதலாம் வடமொழிப் பின்னொட்டுக்களை (விசர்க்கங்களை) இணைத்தும் சொல்லாக்கங்கள் இடம் பெறுகின்றன. (தமிழ்ச் சொற்களோடு வடசொற் பின்னொட்டுக் களை இணைத்துக் கலப்புச்சொல் (Hybrid) உருவாக்குவது பரவலாகக் காணப்படுகின்றது.)

எ—டு: குணாம்சம் சீவனாம்சம், சாராம்சம், வெற்றிகரம், உணர்ச்சிகரம், புத்திஜீவி (சீவி என்றும் உண்டு), அறிவுஜீவி, அடிமைத்தனம், போலித்தனம், தனித்துவம், தலைமைத்துவம், ஆசிரியத்துவம், உத்தியோகப்பூர்வம், சிநேகபூர்வம், மகிழ்ச்சி பூர்வம், உணர்ச்சிபாவம், கட்டடப் பாணி, கர்நாடகபாணி, அபிநயபாவம், யதார்த்தவாதம், மீமெய்ம்மைவாதம், மார்க்சிய வாதம். (வாதத்திற்கு மாற்றீடாக 'இயம்' கையாளப்படுதலும் உண்டு. **எ—டு:** மார்க்சியம், மீமெய்ம்மியம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலச் சொற்கள், சொற்றொடர்களைத் தமிழாக்கம் செய்யவேண்டிய இன்றியமையாமை இன்று பெரிதும் உணரப்படுகின்றது.[3] புத்தாக்க முயற்சிகளும் பரவலாக நடந்தேறி வருகின்றன. பல துறைகளிலே விரிந்து செல்லும் அறிவுப் புலங்களிலே அவ்வவற்றில் வல்லாரே புத்தாக்கம் செய்யும் உரிமையும் கடப்பாடும் உள்ளவர் என்பதனை நாம் அறிவோம். அவர்கள் தத்தம் துறைகளிலே பெற்றுள்ள அறிவிற்கு இணையாகத் தமிழிலும் அறிவு பெற்றிருப்பின் 'பொன்மலர் நாற்றம் (நறுமணம்) உடைத்தாங்குப்' பெரும்பயன் விளையும் என்பதற்கு ஐயம் இல்லை. அந்த வாய்ப்பில்லாத போது தமிழறிந்தாரின் துணையோடு புத்தாக்கத்தில் ஈடுபடலாம். கருதியும் லயமும் ஒன்றிணைந்தெழும் இன்னிசைக்கு இஃது ஒப்பாகும்.

---

[3] மொழிபெயர்க்கையிலும், புதியனவாய்ச் சொற்களை அறிமுகம் செய்கையிலும் 'புத்தாக்கம்' நிகழ்கின்றதா என்ற வினாவிற்கு விடையாகப் பின்வரும் கூற்றுக்கள் அமைகின்றன.

*"புதிய 'சொற்களைப் படைத்தல்' என்பது ஒரு மாயையே. மொழியியற் கூர்ப்புக் **(Evolution)** கோட்பாட்டின் தொகுப்பாய்வின்படி, மொழிகள் தம்மிடத்தே வாழ்ந்துகொண்டிருக்கும் மூலகங்களிலிருந்து மேற்கொள்ளும் மாற்றங்களுக்கமைவாய்ச் சொல்லாக்கம் செய்யலாமேயன்றிப் புதியனவாய்ப் படைத்துக் கொள்வதில்லை."*

Vindreys என்ற மொழியியலாளரின் இக்கூற்றினை, டாக்டர் ரா.சீனிவாசன், தமது 'மொழியியல்' நூலிலே தந்துள்ளதன் (ஆங்கிலம்) மொழிபெயர்ப்பு. (பக்.300)

இக்கூற்று இக்காலத்துக்குப் பொருத்தமா என்பது ஆராயத்தக்கது.

*"ஒரு மொழிக்கு உரித்தான சொற்களஞ்சியத்தோடு அயல் நாடகளின் தொல்லிலக்கியங்களிலிருந்தும், இறந்த மொழிகளிலிருந்தும் வேண்டிய சொற்களை எடுத்தாளலாம். அவை சொற்களஞ்சியப் பேணகங்களாயுள்ளன."*

*(மேற்படிநூல் — 301)*

*"மொழிக்குச் சொற்கள் தேவையாக இருந்தால் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்கின்றனர்; அவ்வாறு கொள்ளாமல் மொழியின் இலக்கியங்களில் வழங்கிய பழைய சொற்களை அப்படியே ஆண்டும், பொருள் நுட்பத்திற்கு ஏற்றவாறு திரித்தும் கொள்வர்; பயை சொற்களின் கூறுகளைக் கொண்டு புதுச் சொற்களையும் படைப்பர்.*

*மேற்படி நூல் — டாக்டர் ரா.சீனிவாசன், பக்.300*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு எமது அறிவுக்கு எட்டியவரை, மொழிபெயர்ப்புச் சொல்லாக் கங்களிலே காணத்தகும் சில குழப்பங்களை முன் வைக்கின்றோம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்பது வள்ளுவம்.

இலங்கை பிரித்தானியப் பேரரசில் அடங்கியிருந்த காலத்தில் (1796—1948) அரச பணிகளுக்காய் அனுப்பப்பட்ட கடித உறைத் தலைப்புக்களிலே 'மேன்மை தங்கிய அரசர் அரசிப் பணி' (On His / Her Majesty's Service) எனக்குறித்தல் வழக்கமாயிருந்தது. இதன் இதன் சுருக்கம் On. H.M.S. என இடப்பட்டது. இன்று அரசரோ அரசியோ நம்மை ஆளவில்லை. இன்று நடப்பது அரசு, (State) எனவே அரசின் கடித உறையில்

'அரசுப்பணி' (On State's Service) என இடலே சரியானது[3] O.S.S. என்பது சுருக்கம்) அரசர்+பணி= அரசபணி[4] இதேபோன்று, அரச அதிபர் என்பதும் அரசர்+அதிபர் என்றே பிரித்துப் பொருள் கொள்ள இடம் தருவதால், அதனை விடுத்து அரசதிபர் (அரச+அதிபர்) என எழுதுவதே முறை[5]

அரசதிபரை ஆங்கிலத்தில் 'Government Agent' என்றே இன்றும் வழங்குவர். (G.A.) Agent என்பதற்கு முகவர் என்றும் Agency என்பதற்கு முகவம் என்றும் வழங்குகின்றோம். ஆனால் (Government Agent) ஐ மட்டும் அதிபர் என அழைப்பதேன்? மேலும் அதிபர் என்ற சொல் கல்லூரி முதல்வருக்கும் (Principal), கடை உரிமையாளர், அச்சக உரிமை யாளர் ஆகியோருக்கும் வழங்குவதொரு நெகிழ்ச்சிச் சொல்லாய் விட்ட தும் இங்குக் கவனிக்கத்தக்கது.

'ஆசிரியர்' என்ற சொல் கற்பித்தலுக்குப் பொறுப்பானவரையும் நூலாக்குவோரையுமே பண்டுதொட்டு அழைக்கப் பயன்பட்டு வருகின் றது. இன்று பத்திரிகை, சஞ்சிகைகளின் வெளியீட்டிற்குப் பொறுப்

---

[3] அரசு+பணி, அரசுப்+பணி = நிலைமொழி ஈற்றுக்குற்றியலுகரத்தின் முன்பு வல்லினம் (ப்) வரின் அவ்வெழுத்து இரட்டிப்பது விதி. இதற்கமைவாய் 'அரசுப்பணி' ஆயிற்று.

[4] அரசர்+பணி = 'ர்' தொக்கு அரச பணியாயிற்று, ஆசிரிய கலாசாலை என்பது போல,

[5] அரசு+அதிபர், அரசதிபர். அரசர்+அதிபர் = அரசவதிபர், அரச அதிபர். அரச அதிபர் என்பது தவறு. அரசதிபரே சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளராய் உள்ளவரையும், நூல்களின் தொகுப்பாளரையும் ஆசிரியர் என்றே வழங்குகின்றோம். Editor என்ற ஆங்கில பதத்தின் பொருளை 'ஆசிரியர்' என்ற சொல் தருகின்றதா? திரைப்படத் தொகுப்பாளரும் Editor தாம். Editing என்பதற்குத் திரைப்படத்துறையினர் 'படத்தொகுப்பு' என்றே கையாள்கின்றனர். பத்திரிகை சஞ்சிகை ஆசிரியர்களும் தாம் வெளியிட வேண்டியவற்றை வகுத்தும், தொகுத்தும் நிரற்படுத்தியும், தம் கருத்துக்களைக் கட்டுரைகளாய் வெளியிட்டும் பணிசெய்பவர்கள்தாமே? அவர்களைத் தொகுப்பர்' என்பது கண்ணியக் குறைவா?

Imperialism என்ற ஆங்கிலப்பதம் ஏகாதிபத்தியம் என (தன் னாண்மை) மொழிபெயர்க்கப்பட்டது. அந்தப் பதம் எமது அடிமைத்தனத் துக்கும் அந்நியரின் வரையறையற்ற அதிகாரத்துக்கும் குறியீடாய் விடு தலை வேட்கை கொண்டோரால் வெறுக்கப்பட்டது. மக்களால், மக்களுக் காக, மக்களின் ஆட்சி என்பதைக் கருப்பொருளாய்க் கொண்ட மக்களாட் சிக்காலத்தில், மக்களால் தெரியப்படும் தலைவரை **'ஜனாதிபதி'** என லாமா? அவரை **'மக்கள் தலைவர்'** என அழைப்பது கூடிய பொருத்தம் போன்று தெரிகின்றது. (இதனிலும் சிறந்த சொல் ஆக்கப்படலாம்.)

'Office' என்பது 'காரியாலயம்' ஆயிருந்து இன்று 'அலுவலகம்' என்பதே பெருவழக்காய் விட்டது. அலுவலகப் பணிபுரிவோர் **'அலுவ லர்'** (Officer), இன்றும் அவரை 'அதிகாரி' என்றே பெரும்பாலும் வழங்குவது, உளவியற் பாங்கில் அவருக்கு ஒரு 'கடினத்தன்மை'யை வழங்குகின்றது; அவர்தம் செயற்பாட்டிலும் 'அதிகாரம்' மேலோங்கி அலுவல் பின் தள்ளப்படவும் நேர்கின்றது. அதிபர் என்பதும் ஓரளவு கடினமான பதந்தான்' மேலாளர், முதல்வர் என்பவற்றில் இக்கடினத் தன்மை இல்லை. (அலுவலகம் = பணிமனை, பணியகம்)

மாணி என்ற சொல்லின் பொருள் மணமாகாதவர் (பிரமசாரி) என்பது.[6] கலை, விஞ்ஞானம் வாணிபம் முதலிய துறைகளிலே பல்கலைக் கழகமுதற்பட்டம் பெற்றோர்க்கு, கலைமாணி, விஞ்ஞானமாணி, வாணிப மாணி முதலிய பட்டப் பெயர்கள் வழங்குகின்றன. (Bachelor - மாணி. Bachelor of arts, Bachelor of Science, Bachelor of Commerce........). ஆனால் மேற்பட்டங்களான Master of Arts, Master of Science.......

---

[6] 'மாணி'யை மானி என்றும் சிலர் கையாள்வர். மானி என்பது மான உணர்வினர் எனவும், மான் போன்ற விழியுள்ளவர் எனவும் பொருள்படும். 'வரிவளைக் கைம்மட **மானி'** - திருஞான சம்பந்தர். **(மானி** மான்போன்ற கண்ணினள், மங்கையர்க்கரசி) - மானி - அளக்கும் கருவியைக் குறிக்கவும் வரும் (வெப்ப மானி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றிற்கும் முறையே முதுகலைமாணி, முதுவிஞ்ஞானமாணி என 'மாணி' மீளவும் கையாளப்படுவது பொருத்தமா? Master என்பதற்குத் தலைவர், ஒரு துறையில் திறன் மிக்கவர் என்பன பொருள்களாய் உள்ளன. கலைவல்லார், கலாவித்தகர், விஞ்ஞான வித்தகர், என்பன பொருத்தம் போலத் தோன்றுகின்றன. தமிழகத்தில் 'Arts' என்ற பதம் 'B.A.க்கு வருகையில் இளங்கலை எனவும், M.Aக்கு வருகையில் முதுக லை' எனவும் கையாளப்படுகின்றது. முது(மை) கலையிலும் முதிர்(ந்த, கின்ற, உம்) கலை என்பதே கூடிய பொருத்தம்.

கலை, விஞ்ஞானம் முதலிய துறைகளிலே 'Doctor' என்னும் உயர்பட்டத்திற்கு இலங்கையிலே, 'கலாநிதி' எனவும், தமிழகத்தில் (ஒரு காலத்தில் 'டாக்டர்' என்றே இட்டனர்.) முனைவர், கண்காணியார் (தேவநேயப்பாவாணர்) எனவும் வழங்கும் வழக்குள்ளது. Doctor of Philosophy கலாநிதி என்றால், Master of Philosophy 'முது தத்துவ மாணி' எனல் பொருந்துமோ என்பதும் ஆராயத்தக்கது. 'முனைவன்' என்ற தகுதிக்குரியவன் முதல் நூல் செய்தோன். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' (நன்னூல்), முனைவன் என்ற சொல்லுக்குக் கழகத் தமிழகராதி தரும் பொருள்கள் — அருகன், கடவுள், பகைவன் புத்தன் என்பன. முனைவர் — பகைவர், D.Litt (Doctor of Letters, Dr. of Literature) என்பது இலக்கிய கலாநிதி எனப்படுகின்றது. கலாநிதி — Ph.D என்றால் 'இலக்கிய கலாநிதி Ph.D. in Literature) என்ற பொருளைத் தருவது ஏற்புடையதா? நாடாளுமன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குபவர் சபாநாயகர். ஆங்கிலத்தில் இவர் Speaker எனப்படுவார். Speaker பேச்சாளரையும் குறிக்கும். அரசினதோ பிற நிறுவனங்களினதோ முடிபு களையும் நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மக்கள் தொடர்புச் சாதனங்களுக்கு எடுத்துரைப்பவரை 'Spokesman' என்பர். பத்திரிகைகள் இப்பதத்தையும் பேச்சாளர் என்றே மொழிபெயர்க்கக் காண்கின்றோம். இவரைத் 'தெரிவிப்பாளர்' (Announcer ஐ அறிவிப்பாளர் என்றாற்போல) என அழைத்தல் சாலப் பொருந்தும்.

முன்பு காரியதரிசி (Secretary) என்று கையாண்ட பதம் இன்று செயலாளர், செயலர் என்ற சொற்களால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. அரசின் அமைச்சுக்களுக்கு நியமனமாகும் உயர் அலுவலர் 'செயலாளர்' எனப்படுகின்றார். மாவட்டங்களின் உயர் அலுவலர் 'பிரதேசச்செயலர்' எனப்படுகின்றார். ஒருமைப்பாட்டினைக் கருதி இருவரையும் செயலாளர் என்றோ செயலர் என்றோ அழைப்பது பொருத்தமாகும்.

பிரதேசம் என்பது (Region) நெகிழ்ச்சியானதொரு சொல் 'இதுதான் அளவுஎன்று வரையறுக்கப்படாத நிலப்பரப்பு' என்று Region உக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில அகராதி வரையறை செய்கின்றது. (Territory of indefinite extent.) (Region ஐ District எனவும் அது கூறுகின்றது.) District என்பதற்குத் தமிழ்ப்பதம் மாவட்டம். District உக்கு ஆங்கில அகராதி தரும் பொருள் அரசினால் இணைத்து என்று வரையறை செய்யப்பட்ட நிருவாக நிலப்பரப்பு, (An administrative division of a country) அதே அகராதி a region எனவும் குறிக்கின்றது. இந்த மயக்கத்தினின்றும் விடுபட்டு, இன்று 'பிரதேசம்' எனக் குறிப்பதை மாவட்டம் எனலாம். (பிரதேசம் என்பதைப் 'பெருநிலம்' என்று கையாள்வது கூடிய பொருட்பேறு உடையதாகும்.) அவ்வாறாயின், 'பிரதேசசபை' என்பதை மாவட்ட சபை என்றும் பிரதேச செயலரை மாவட்டச் செயலர் (செயலாளர்) என்றும் வழங்கலாமா?

Deputy என்பதற்குப் 'பிரதி என்றும் Assistant என்பதற்கு உதவி, உப என்றும் கையாள்கின்றோம். Deputy என்பதற்கு ஒருவரின் கடமை களை மற்றொருவர் மேற்கொள்ளவென நியமிக்கப்படுதல் என்றும் மற்றொருவரின் கடமைகளைச் செய்தற்கான ஆணையை மேற்கொண்டு செல்லல் என்றும் ஆங்கில அகராதி பொருள் உரைக்கின்றது. (To deligate duties to another, To Send with Commission to act for another) இதற்குப் 'பிரதி' என்ற சொல் பொருந்துவதே. ஆனால் 'பிரதிக் கல்விப் பணிப்பா ளர்' என்றாங்கு வட சொல்லும் (பிரதி) தமிழ்ச் சொல்லும் கலக்காமல், அதேபோது மயக்கமும் நேராமல் 'கல்விப் பதிற் பணிப்பாளர்' என வழங்குதல் சிறந்தது.[6]

Intellectuals என்ற ஆங்கில பதத்திற்குப் புத்திஜீவிகள் அறிவுஜீவிகள் என்ற மொழிபெயர்ப்புக்கள் பரவலாகக் கையாளப்படுகின்றன. மிக்கு யர்ந்த மதிவல்லார், விளக்கத்திறன் படைத்தோர் (Of high mental capacity; having the power of understanding) என்பன Intellectuals என்பதற்குத் தரப்படும் அகராதி விளக்கமாகும். புத்தியாலும் அறிவாலும் வாழ்வது பகுத்தறிவுடையவர் யாவர்க்கும் பொதுவானது. மதிநுட்பமும், எதனை யும் விளங்கும் ஆற்றலும் சிலர்க்கே வாய்ப்பவை. எனவே புத்தி, அறிவு என்ற பொதுச் சொற்களைக் கையாளாது, நுண்மதியினர் அறிதிறலர் (அறிவர் என்பது பழந்தமிழ் வழக்கு) என்பவற்றைக் கையாள்வதே கூடிய பொருத்தமாகும். இதேபோன்று 'Elite' (The pick or best part of society — சமூகத்தில் மிக்குயர்ந்தோர்) என்பதற்கு மேலோர் என்ற சொல்லைக் கையாளலாம்.

அரசு நிருவாகத் துறையிலே பல்வேறு பணிகளுக்கும் உகந்தனவான சொற்கள், சொற்றொடர்கள் வேண்டப்படுகின்றன. அத்துறைக்கான

---

[6] முன்னியலிலே 'உப பிரதேச செயலர்' என்ற சொற்றொடர் ஒழுங்கின் பொருள் மயக்கத்துக்குக் காட்டிய விளக்கம் இச் சொற்றொடருக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாக்கங்கள் குழுநிலையில் ஆராயப்பட்டு ஆக்கவும் படுகின்றன. தமிழகம் இப்பணியிலே பெரும் ஈடுபாடு காட்டி வருகின்றது. நிருவாகத் தமிழின் இன்றியமையாமையை நாம் இப்பொழுதுதான் உணர்கின்றோம், என்பதற்கு அண்மையிலே வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்ட லுவல், விளையாட்டுத்துறை அமைச்சு எடுத்த இலக்கிய விழாவில் இடம் பெற்ற நிருவாகச் சொல்லாக்கக் கருத்தரங்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இங்கு நிருவாகத் தொடர்பான இரு சொல்லாக்கங்கள் தருகின் றோம். பொருத்தமோ என ஆராய்வது தக்கார் கடன்.

1. Secondment - ஒரு பணியில் அமர்த்தப்படுபவர், தற்காலிகமாக வேறு பணியில் இணைந்து கொண்டாலும் அவரின் பணியும், ஊதியமும் கணிக்கப்படுவதும் வழங்கப்படுவதும் முன்னைய நிறுவனத்தினாலேயே என்ற நிலையில் அவரது நியமனம் Secondment எனப்படுகின்றது. இதற்கு **'இடை மாற்றுப்பணி'** என்ற சொல் பொருந்தும்.

2. ஒரு பணியிலிருந்தோ, அலுவலகத்திலிருந்தோ மாற்றம் பெற்று, மீண்டும் அந்தப் பணிக்கோ அலுவலகத்திற்கோ திரும்புதல் Reversion எனப்படும். **'பணித்திரும்புகை'** என்பது பொருத்தம் போலத் தெரிகின் றது.

பள்ளிகள், தொழில் நிறுவனங்களிலே முறையே கற்போர், கற்பிப் போர், பணியாளர் என்போர் நாள்தோறும் தமது வரவைப் பதித்தற்குப் பயன்படும் புத்தகம் Attendance Register. பள்ளிகளில் இது தின வரவு இடாப்பு எனப்படுகிறது. இதனை **'வரவுப் பதிவேடு'** எனலாம்.

பிறருக்குப் பணமாகவோ பொருளாகவோ கொடைகள் வழங்கப்ப டுகின்றன. நிலையான பணி (சேவை)க்குக் குறிப்பிட்ட காலவரையறை யிற் குறித்ததொரு தொகையை வழங்குவது (Salary) ஊதியம், சம்பளம், வேதனம் என்ற சொற்களால் வழங்குகின்றது. பணியிலிருந்து ஓய்வு பெற்ற காலத்தில் வழங்குவது (Pension) ஓய்வூதியம், ஒருவரின் பணி முடிவில் வழங்குவது (Gratuity) பணிக்கொடை, பொதுப்பணிகள், அறப்பணிகளுக்கு வழங்குவது (Donation) அறக்கொடை, ஒருவரின் அடைவினை (Achievement) மதிப்பீடு செய்து வழங்குவது (Award) கணிப்புப் பரிசில், போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு வழங்குவது (Prize) பரிசு, பரிசில், முன்னுரிமை வழங்கி, அலுவலர் ஒருவர் செய்து முடிக்கும் பணிக்கு வழங்கும் கொடை (Gratification) மகிழ்கொடை அல்லது நன்றிக் கொடை, (இதனை 'அன்பளிப்பு' என்பது பரவலான வழக்கு). மெய்வன்மைப் போட்டியில் வழங்குவது (Trophy) திறன் கொடை கூட்டகங்கள், தொழிலகங்களின் பணியாளருக்கு ஆண்டிறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலோ, இடையிலோ நிகரலாபத்தின் ஒரு பகுதியினைப் பகிர்ந்து அவர் ஊதிய அடிப்படையில் வழங்குவது (Bonus) மிகையூதியம், ஒருவரின் பணியினை மதித்து வழங்குவது (Honorarium) மதிப்பூதியம், அவரின் மேலதிக நேரப் பணிக்கு வழங்குவது (Overtime) மிகைநேரப்படி.

ஒரு செயலினைச் செய்ய முற்படும்பொழுது அதனால் ஏற்படக்கூடிய தடைகள், இடர்களை முன்கூட்டியே அறிந்து கொண்டும் அதனை மேற்கொள்கையில் (எதிர்பார்க்கப்படும்) இடர் (Risk) எனப்படும். இதனை எதிர்நோக்கிடர், எதிர்பார்ப்பிடர் என்ற சொற்களால் வழங்கலாம். எதிர்பாராது நிகழ்வது (Accident) இதனை விபத்து என்பர். இடர், இடையூறு என்ற சொற்களால் இதனை அழைக்கலாமா? (விபத்து -வடசொல் எனினும் வழக்கில் ஆட்சி பெற்றுள்ளது.)

ஆக்கம் வேண்டிநிற்கும் பதங்களை ஆங்கில மொழியிலிருந்து பெறும் பொழுது சொல்லுக்குச் சொல் பொருளை அமைப்பது எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தாது என்பதனையும் மனங்கொள்ளல் வேண்டும். எடுத்துக்காட்டாக Civil என்ற சொல்லையே நோக்குவோம். இது ஆங்கிலத்திலே பல பொருள் ஒரு சொல் (Homonym) லாகப் பயன்படுவதாகும். அச்சொல் தரும் சில பொருள்கள் இங்குத் தரப்படுகின்றன.

Civil-குடிமகன் (Citizen), இராணுவத்தினுள் வராதது (Not of the armed forces.). Civilian இராணுவம் சாராப் பதவிநிலையினன் (One whose employment is non military) Civil Law - ஒரு பிரிவுச்சட்டத்தைக் குறிக்கும். Civil என்பதுடன் Service என்பதை இணைக்கக் குடியாட்சிப் பணி எனப் பொருள்படும்.

Civil Law, Civil case என்பவற்றைக் குடியோடோ நாட்டோடோ இணைக்காது அவற்றை உரிமைச்சட்டம், உரிமை வழக்கு என மொழிபெயர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இம் மொழி பெயர்ப்பினைச் செய்தவர் தரும் விளக்கம் பின்வருமாறு:

''நமக்கு வரவேண்டிய கடனைப் பெறுவது நம் உரிமை (Right). அதுபோல நமது நிலத்தை ஆக்கிரமித்தவரை நமது நிலத்திலிருந்து அகற்றும் உரிமையும் நமக்குண்டு. இதுபோன்ற நம் உரிமைகளை நிலைநாட்டும் வகையில் எழும் வழக்குகளை ''உரிமை வழக்குகள்'' (Civil case) என்கிறோம்.''[7]

---

[7] மா. சண்முக சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்.,
'குறள் கூறும் சட்டநெறி'. பக்.146.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலச் சொல் ஒன்று இருவேறு துறைகளிலே வெவ்வேறு பொருள்களைத் தரும் பொழுது துறைசார் அறிஞர் தத்தம் துறைக்கேற்பப் பொருளமைத்து வேறுவேறு சொற்களைக் கையாளவும் நேரலாம்.

எ—டு:

Motivation — ஊக்கல், உளவியல் (Phychology) அறிஞர் கையாண்டது.

Motive — இச்சொல்லுக்குச் சட்டத்துறை அறிஞர் 'நோக்கம்' என்கின்றார்.[8]

இதிலிருந்து பெறப்படுவது யாதெனில், உண்மையான பொருளுணர்வை வெறும் மொழிபெயர்ப்பினால் ஆக்கிவிடல் இயலாது என்பதே, துறைசார் திறனும் மொழியாற்றலும் இணையும் பொழுதுதான் பொருத்தமான ஆக்கச்சொற்கள் உருவாகும் என்பதே.

Supply Distribution என்ற ஆங்கிலச் சொற்களுக்குப் பொதுப் பொருளாக நாம், வழங்கல், விநியோகித்தல் என்ற சொற்களைக் கையாள்கின்றோம். அவை பொருளியலிலும் புவியியலிலும் முறையே நிரம்பல், பரம்பல் (குடிசனப் பரம்பல் — Distribution of Population) எனக் கையாளப்படுகின்றன. பொருட்பேறு முன்னவற்றிலும் வேறுபடுகின்றது.

ஆக, மொழிபெயர்ப்பினாலும் புத்தாக்கத்தினாலும் தமிழுக்கு அறிவு வளத்தினைச் சேர்ப்போரும், சேர்க்க விழைவோரும் மிகவும் விழிப்புடன் செயற்படுதல் இன்றியமையாததாகும்.

கருத்துச் செறிவோடு ஆக்கச் சொற்களை உருவாக்கும் முயற்சி ஒரு புறமாக, உணர்ச்சிக் கிளர்வுகளுக்கேற்ற ஆக்கச் சொற்களைப் படைக்கும் எழுத்தாளர்களின் பங்களிப்புப் பற்றி அடுத்து வரும் 'திரிசொற்கள்' என்ற இயலில் நோக்குவோம்.

---

[8] மேற்படி நூல் — பக்.77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாக்கொத்து

1. ஒரு மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கச் சொற்களின் பங்களிப்பு எத்தகையதாய் இருத்தல் வேண்டும்?

(அ) மிகவும் இன்றியமையாததாக, (ஆ தேவையான அளவு இருப்பதால் புதியவற்றை ஏற்காததாக, (இ) சொற்களஞ்சியப் பெருக்கத்தால் சிக்கல்கள் ஏற்படும் என்பதால் இன்றியமையாது தேவைப்படுவனவற்றை மட்டும் ஏற்பதாக.

2. பிறமொழிச் சொற்களை எவ்வாறு கையாள வேண்டும்?

(அ) பிறமொழிக்குரிய ஒலியமைப்பை அப்படியே ஏற்று
(ஆ) தமிழ் மொழியின் ஒலியமைப்பிற்கு ஏற்ப
(இ) தமிழ் ஒலிமரபிற்கு ஒவ்வாத - தமிழாக்குகையில் மயக்கம் ஏற்படுத்தக்கூடியவற்றை எவ்வித மாற்றமும் இன்றி.

3. பிறமொழித் தனியாட் சொற்களை (Proper nouns) எம்முறையிற் கையாளலாம்?

(அ) தமிழ் ஒலிமரபிற்கு மாற்றி (ஆ) ஒலிப்பெயர்ப்பை (Transliteration)க் கையாண்டு மூலமொழிப் பெயரில் எவ்வித மாற்றமும் செய்யாது. (இ) பொருத்தமானவற்றை ஒலிப்பெயர்ப்புச் செய்யாது தமிழ் ஒலி மரபிற்கேற்பவும், பொருந்தாதவற்றை மூல மொழி ஒலிக்கேற்பவும்,

4. இடைநிலை மெய்ம்மயக்கம் சொல்லாக்கத்தில் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமா?

(அ) ஆம்(ஆ) இல்லை (இ) பொருத்தம் நோக்கிக் கடைப்பிடித்தலும், கடைப்பிடிக்காமையும்.

5. வடசொற்கள் தமிழிலே பெருவரவினவாய் வருவதை ஏற்கலாமா?

(அ) ஏற்கலாம் (ஆ) ஏற்றல் கூடாது (இ) (தமிழில்) இணைச் சொல்லாக்க முடியாதவிடத்து ஏற்று அவற்றிற்கு இணையானவை இருப்பின் தவிர்த்து விடலாம்.

6. வெவ்வேறு சூழலிலும் வெவ்வேறு பொருளிலும் கையாளப்படும். ஆக்கச் சொற்களைப் பொதுமைப்படுத்தினால் எற்படக்கூடிய விளைவு யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கருத்துப்பிழைபாடு (ஆ) சொற்களஞ்சியத்தை வரையறை செய்து பெருகாது காத்தல் (இ) எவ்வித தீய விளைவும் ஏற்படாது.

7. கலைச் சொற்கள் ஆளுக்கு ஆள் இடத்துக்கு இடம் வேறு வேறாக இருக்கலாமா?

(அ) கூடாது (ஆ) இருக்கலாம் (இ) வேறுபடாது ஒன்றிணைக்கக்கூடிய நிறுவன அமைப்பு இல்லை.

8. கலைச் சொல்லாக்கத்தில் துறைத்திறன் உடையோருக்குத் தமிழறிந்தார் உதவி வேண்டுமா?

(அ) வேண்டியதில்லை (ஆ) வேண்டும் (இ) துறை அறிஞர் தமிழறிந்தாரோடு உரையாடிச் சொல்லாக்கம் செய்தல் நன்று.

9. துறை அறிவோடு அகராதிகளையும் சொல்விளக்கத்திற்குப் பயன்படுத்துவது பற்றிய உமது கருத்து யாது?

(அ) மிகவும் பயன் தரும் (ஆ) துறைக்குரிய சிறப்பகராதியை மட்டுமே பயன் செய்யலாம். (இ) பயன் செய்ய வேண்டியதில்லை.

(மேலே தரப்பட்டுள்ள வினாக்களையும் அவற்றின் வேறு வேறான மும்மூன்று விடைகளையும் பொறுமையாக நோக்கி உமது கருத்தினை வகுத்துக் கொள்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. திரிசொற்கள்

ஒரு காலத்தில் தமிழ்க் கல்வியின் தொடக்கம், நிகண்டு என்னும் சொற்களஞ்சிய நூலினைப் பாடம் பண்ணுவதாகவே இருந்து வந்தது. நிகண்டு செய்யுள் வடிவிலே ஆக்கப்பட்டமை அதனை மனனஞ் செய்தல் வேண்டும் என்ற நோக்கினாலேயே எனலாம். ஒரு பொருள் குறித்த பல சொற்களையும் பலபொருள் குறித்த ஒரு சொல்லையும் அறிவதற்கு 'அருகனே தேவன் மாயோன்' எனத் தொடங்கி இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை நிகண்டு மனனம் நடந்து வந்ததைத் தமிழ் கற்ற முதியோர் வாயிலாக அறிந்துள்ளோம்.

''.......... மூன்று பெரும் பிரிவுகளும் உட்பொருள்களும் கொண்ட ஒரு நூதன அகராதி நிகண்டு இப்படிப்பட்ட நிகண்டு, பள்ளியிலே தலையிலிருந்து கால்வரை காலிலிருந்து தலைவரை மனனஞ் செய்யப்படுகின்றது. நிகண்டுக்கு மேலே திரிபு யமக அந்தாதிகள், சிலேடைகள், மடக்குகள், பல்வேறு சொற்சித்திரங்கள் பாடம் நடக்கும். சொற்கள், சொற்றொடர்களின் முட்டறுக்க இவை கருவிகள். இவற்றுக்கு மேலே நல்ல பாட்டுக்கள், வசனங்கள் மனனஞ் செய்யப்படும். அப்பால் இலக்கண பாடம் இலக்கண வினா விடையிலிருந்து நடக்கும். நன்னூற் காண்டிகையிலுள்ள வினாக்களுக்கு விடையிறுக்கப்படும். இறுத்தபின் விடை எழுதப்படும். அவ்வளவிலும் அமையாமற் படித்த இலக்கியங்களில் அப்பியசிக்கவும் படும். இவ்வாறு கருவி நூலுணர்ச்சியை திண்ணைப் பள்ளிகள் வருவிக்கும்.''[1]

''கருவிநூலுணர்ச்சி கைவந்த மாணவர்களின் கைகளிலே எத்தகைய கடினமான நூலை அளிப்பினும் அந்த மாணவர்கள் பொருளுணர்ந்து, வாசிக்க வல்லவர்கள் ஆவார்ககள்'' எனத் தொடரும் மேற்குறித்த கூற்றின் இறுதி வாக்கியம் பின்வருமாறு:

''அன்றி எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, வாக்கியப் பிழை, பொருட் பிழை, மரபுப்பிழை இன்றி எழுதவும் பேசவும் வல்லவர்களுமாவார்கள்.''[3]

---

[1] பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை-தமிழ்மரபு — அணிந்துரை

[2] மேற்படி

[3] மேற்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று கொண்டு அவற்றுள்ளும் எழுத்தே சிறப்புக் கண்ணெனக் கருதி. அக்காலத் தமிழறிஞர் பலரும் தம் வாழ்நாள் முழுவதும் அதனையே - எழுத்தென்பதனுள் அடங்கும் இலக்கிய இலக்கண நூல்களையே கற்றலை மேற்கொண்டனர்.

இன்று திண்ணைப் பள்ளிகள் மறைந்து விட்டன. பாடங்கள் பல்கிப் பெருகி விட்டன. அகராதிகள் தோன்றி நிகண்டுகளைப் புறந்தள்ளி விட்டன. 'மனனம்' பண்ணுதல் பெருஞ்சுமை எனக் கருதி வரும் காலம் இது. குறித்ததொரு பாடத் திட்டத்தினை அதற்கென வகுத்த காலத்திலே கற்பித்தும் கற்றும் முடித்துவிட வேண்டிய அவசர காலம் இது. ஒன்றிலேயே ஆழச் சென்று பிறவற்றைப் புறக்கணித்து விட முடியாத அளவிற்குக் கல்வி, விரிந்து பரந்து பல அறிவுத் துறைகளையும் தன்னுள் அடக்கி வளர்கின்ற ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். எனவே போனதை நினைத்துப் புலம்பிப் பயனில்லை. 'சென்றன சென்றன; வாரா'.

ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப்பட்டு அதன் பயன்களை முழுமையாக உள்வாங்கத் தொடங்கிய பின்பு, படிப்படியாக மரபு முறைக் கல்வி மறையலாயிற்று. தமிழ் மொழியினுள்ளும் ஆங்கிலக் கல்வி முறை புகுந்தது. எழுத்து, சொல் என்பவற்றிற்கு முதன்மையளித்த தமிழிலக்கண முறை அருகி, வாக்கிய அமைப்பு, அதன் வகைகள், மரபுச் சொற்றொடர்கள் (Idioms), பழமொழிகள் (Proverbs), ஒத்த கருத்துச் சொற்கள் (Synonyms), எதிர்க் கருத்துச் சொற்கள் (Autonyms), கிரகித்தல் (Comprehension), சுருக்கம் (Precis), கட்டுரை, கதை, கடிதம், அறிக்கை, நயத்தல், திறனாய்வு, ஆய்வு (Research) முதலிய படிக் கிரமத்திலே தமிழ்க்கல்வி இன்று சென்று கொண்டிருக்கின்றது. செய்யுளின் மேலாண்மை குன்றி, உரைநடையின் மேலாண்மை தலை தூக்கியுள்ளது. காலத்தோடும் உலகத்தோடும் ஒட்டி ஒழுக இன்றுள்ள மொழிக்கல்வி பெரிதும் உதவுகின்றதெனலாம். இந்த அடிப்படையிலே திரிசொற்கள் பற்றி நோக்குவோம்.

சொல் வறுமை மொழியாட்சியைத் திறம்படச் செயற்படுத்தத் தடையாகும் என்பது எக்காலத்திற்கும் பொருந்தும் உண்மை. தொல்காப்பியத்தில் அமைந்தது உரியியல். (உரிச்சொற்கள் இவை என்பதும் அவற்றின் பொருள் இன்னவென்பதும் உரியியலின் உள்ளடக்கங்கள், (ஒருவகையில் நோக்கினால் பிற்கால நிகண்டுகளுக்கு உரியியல் முன்னோடியோ என்று எண்ணத் தோன்றுகின்றது) உரியியல் தொடக்கம், திரிசொற்கள் வரையுள்ள இலக்கணப் பாகுபாடுகள், எம்முன்னோர் சொற்களஞ்சியத் தேட்டத்துக்கு இட்ட அடித்தளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள்ளே, திரிசொற்கள் சொற்களின் விரிவாக்கத்தையும் அவற்றின் தேவையையும் நன்கு புலப்படுத்துகின்றன. இவைபற்றி **'எழுத்துக்களுக்கு ஒலியே அடிப்படை'** என்ற இயலில் தொட்டுக் காட்டினோம்; இங்குச் சற்று விரிவாக நோக்குவோம்.

''திரிசொற்கள் என்பன, ஒரு பொருள் குறித்து வரும் சொற்கள் தமது உறுப்புத் திரிவதனாலும் முழுதும் திரிவதனாலும் உண்டாகின்றன'' என்று,

**ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்**
**வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்**
**இருபாற் றென்ப திரிசொற் கிளவி**

என்னும் தொல்காப்பிய நூற்பாவு (399)க்கு உரைவகுக்கையிலே சேனாவரையர் குறிப்பிடுகின்றார்.

''திரிசொல்லது திரிபாவது உறுப்புத் திரிதலும், முழுவதும் திரிதலும் என இருவகைத்து'', என்பது அவர் கூற்று.

உறுப்புத் திரிவதற்கு அவர் எடுத்துக்காட்டியவை கிள்ளை, மஞ்ஞை என்பன. 'கிளி' என்ற சொல் 'ளி' யை இழந்து 'ள்ளை'ப் பெற்றது. மயில் 'யில்' ஐ இழந்து 'ஞ்ஞை'ப் பெற்றது.

முழுவதும் திரிதல் என்பது ஒரு சொல்லுக்கு முற்றிலும் வேறான மாற்றீட்டுச்சொல்.

இதற்கு அவர் காட்டியவை, விலங்கல், விண்டு என்பன. (விண்டுவும் விலங்கலும் ஒரு பொருள் குறித்த இரு சொற்கள். மலையைக் குறித்தன.)

ஆக, 'முழுவதும் திரிதல்' என்பதற்கு (வேறு பொருள் குறித்த ஒரு சொல்) பல சொல் ஒரு பொருள் குறிப்பதைச் சேனாவரையார் கருதினார் என்பது புலனாகின்றது.

பின்வந்த நன்னூலார் 'திரிசொல்' என்பதற்கு,

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்

என வரையறை செய்கின்றார். தொல்காப்பியர் கூறாதனவாய் நன்னூலார் மேலதிகமாகக் கூறியவை இரண்டு. அவையாவன:

1) பல பொருள் குறித்த ஒரு சொல்.

(மா — இலக்குமி, மாமரம், பெரிய, வண்டு, (கூலம் இடித்த)மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) திரிசொற்களின் பொருள் கடினமானது.

திரிசொற்கள் பற்றித் தொல்காப்பியர் கொண்ட கருத்தைப் பின்வந்தோர் விளங்கிக் கொள்ளவில்லை என்பதும் அதனால் அது இன்றும் விளங்காத தாகவே உள்ளது என்பதும் செய்யுளில் வருவதனைச் சொல்லிலக்கணத் துள் வருவித்தது பொருத்தமில்லை என்பதும் மொழியியலாளரின் முடிபுகள்.[4]

ஆனால் ஒரு பொருள் குறித்த பல சொற்களும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் தமிழில் மிகுதியாய் உள்ளன என்பதும் சொற்க ளஞ்சிய வளர்ச்சிக்குத் துணையாகின்றன என்பதும் மறுக்கவியலாதவை. செய்யுளுக்குரிய இலக்கணம் சொல்லிலக்கணத்துள் வந்தது தவறு என் றால், இத்தவறு தொல்காப்பியருக்கும் பொருந்தும் என்ற திரிபுமுடிவுக்கு உள்ளாதல் நேரிடும். எழுத்தும் சொல்லும் நாடி அறிவது பொருளுக்காக — பொருளின் கொள்கலமான செய்யுளுக்காக என்பதே பழந்தமிழ் இலக்கண நூலாரின் கோட்பாடு (செய்யுள் வழக்கோடு உலக வழக்கையும் தழுவியபோதும் பழைய இலக்கண நூல்கள் செய்யுள் வழக்கிற்கே முதன்மை வழங்கின.[5]

இன்று இடைநிலை வகுப்பு மாணவருக்கு ஒத்த கருத்துச் சொல், எதிர்க் கருத்துச் சொல் எனபன அறிமுகமாகியுள்ளன. இவற்றுள் 'ஒத்த கருத்துச் சொல்' என்பது ஒரு வகையிலே திரிசொற்களுக்கும் பொருந்தும். ஆனால் முழுமையும் பொருந்தும் எனல் இயலாது. **'குறித்த'** என்பதும் **'ஒத்த'** என்பதும் பொருளிலே பெரும் வேறுபாடுடையவை. ஒரு பொருளைக் குறிப்பது வேறு, ஒத்திருப்பது வேறு.

ஒரு பொருளைக் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களை நாம் கையாளலாம். அவ்வாறு கையாளப்படும் சொற்களும் அப்பொருளை அடையாளம் காண உதவலாம். ஆனால் அவை யாவும் ஒத்த கருத்தைத் தரமாட்டா. 'காகம்' என்ற சொல்லுக்கு முன்பு தந்த விளக்கத்தின் அடிப்படையில் நோக்கினால், ஒரு சொல் ஒரு பொருளுக்கு அமையும் போது, அதன் ஏதோ ஒர் இயல்பையே குறிக்கும். பிறிதொரு சொல் புதிதாய் அமைகையில், அது வேறோர் இயல்பைக் கொண்டு அமைவதா யும் அதே போது இரண்டு சொற் பொருள்களையும் இனங்காணத்தக்க பொதுத் தன்மை பொருந்தியதாயுமே அமையும். ஒரு தாய் வயிற்றில்

---

[4] டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை - தமிழ் வரலாற்றிலக்கணம் - பக். 111-112

[5] இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை வழக்கா றல்லச் **செய்யு ளாறே.** தொல்காப்பியம் — சொல். கிளவியாக்கம் - 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த இரட்டையர் கூட எல்லா வகையிலும் ஒத்த இயல்பினராய் இருப்பதில்லை. ஒத்த கருத்துச் சொற்களும் அத்தகையனவே. அஃதாவது ஒத்த கருத்துச் சொல் என்பது தனக்கெனச், சிறப்பியல்பினையும், பிற சொல்லோடு இனங் காணத்தக்க பொது இயல்பினையும் பெற்றிருத்தலே உண்மை. எமது கூற்றினை நிறுவுமுகமாக 'ஒத்த கருத்துச் சொற்கள்' என இன்று அழைக்கப்படும் சொற்கள் சிலவற்றை நோக்குவோம்.

1. **நோய்:** இந்தச் சொல்லுக்குத் துன்பம், வருத்தம், வியாதி (வட சொல்), குற்றம், அச்சம், துக்கம் (வடசொல்), நோவு முதலாகப் பல பொருள்களை அகராதி தருகின்றது. எனினும்'நோய்' என்பது உடலுக்கு உண்டாகும் நலக்குறைவையே — நோவையே — குறிக்கின்றது. இதனை அதற்குரிய சிறப்புப் பொருள் எனலாம். இதற்கு 'ஒத்த கருத்துச் சொல்' என்று பிணி கொள்ளப்படுகின்றது.

1. **பிணி:** இச்சொல்லுக்குச் சிறப்புப் பொருள் 'கட்டுவது' (பிணிப்பது) என்பதாகும். உடலினைப் பிணித்து வருத்துவது பிணி. நோ தருவது நோய் இவ்விரண்டினதும் பொது இயல்பு நலக்குறைவு ஒன்றே. முன்பு செய்த வினையால் வந்து பிணிப்பது பிணி என்ற கருத்தையும், நோவைத் தருவது நோய் என்ற கருத்தையும் முறையே பிணி, நோய் ஆகிய சொற்களால் திருஞானசம்பந்தர் புலப்படுத்தியுள்ள வகை இது.

'நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி'

**(திருகோணமலைப் பதிகம் - 1)**

2. **ஓசை:** மணி ஓசை, கடலோசை முதலாகப் பொருட் புலப்பாடின்றி எழுவது.[6] **(முழவரோதை, மதகோதை உடை நீரோதை** — கானல்வரி, சிலம்பு, ஓசை ஓதையானது மொழியிறுதிப் போலி).

2. **ஒலி:** மொழிக்கு முதற்காரணமான பொருளுடைய ஒலி.

அ) 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்' — திருக்குறள்

ஆ) 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' — திருவையாற்றுத் திருத்தாண்டகம்

இ) மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி — நன்னூல்

ஆக, பொருளற்ற சத்தம்[6] ஓசை[7] பொருளுடையது ஒலி.

3. கதிரவன் — (கதிர் அவன்) — கதிர்கள் உள்ளவன்.

| | | |
|---|---|---|
| வெய்யோன் | — | வெம்மை தருபவன். |
| சேயோன் | — | சேய்மையில் உள்ளவன். சிவந்த நிறத்தினன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை 'சூரியன்' என்ற பொதுப் பொருளையும், தத்தமக்குரிய சிறப்புப் பொருள்களையும் தந்தன. பரிதி, ஆதவன், தினகரன் என்பன வடசொற்கள்.

4. கணவன் — (மனைவிக்குக்) கண் போன்றவன்.
கொழுநன் — (கொழு+ந்+அன் கொழு என்பதற்குக் கோள் எனவும் பொருள் கொள்வர்.) மனைவியாகக் கொள்பவன் என்பது பொருள்.

(தற்கொண்டான் — திருக்குறள்.)
கேள்வன் — கேள் — உறவு. (கணவன் என்னும்) உறவினன்

தலைவன் — (மனைவிக்குத்) தலைவனானவன். பதி, பர்த்தா என்பன வடசொற்கள். பர்த்தாவின் பெண்பால் பார்யா, பாரியார் (Spouse) என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமானது.)

கிழவன் (கிழமை — உடைமை) — மனைவியைத் தனது உடைமையாகக் கொள்பவன்.

5. அ. நட்பு — நண்+பு (நண்ணுதல் — அருகு சார்தல்)
ஒருவரின் உள்ளத்துக்கு நெருக்கமான தொடர்புடைமை.

ஆ. கேண்மை — கேள் - உறவு. நட்பாகிய உறவு.

இ. தோழமை — தொழு என்ற சொல்லடியாகப் பிறந்தது. தொழு-கட்டு, தொழுவம், தோழம். என்பன ஆநிரையைக் கட்டி வைக்கும் குடிலைக் குறிக்கும். (அன்பினால்) கட்டுண்டுள்ளமை.

6. அ. பழம் — பழமை. பழ்-அடிச்சொல், பழமை, பாழ் என்பன அதிலிருந்து தோன்றுவன என்பர் 'மொழியியல்' என்ற நூலிலே டாக்டர் ரா.சீனிவாசன்

ஆ. கனி — சுவை தரும் கனிவுடைமையைக் குறிக்கும்.

7. உரைத்தல் — விரித்துப் பேசுதல்.

''ஒருவன் விளக்கமாக விரித்துப் பேசினால் உரைத்தான் என்போம். பல்லோரும் அறியப் பரக்கப் பேசினால் அறைந்தான் என்போம். பல

---

[6] 'சப்தம்' என்பது வடசொல். (சத்தம் - தமிழ்த்திரிபு) 'ஆகாசம் என்னும் பூதம் தோன்றுதற்குக் காரணமான சப்ததன் மாத்திரை ஓசை' கழகத் தமிழகராதி.

[7] பின்னாளில் ஓசை, ஒலி இரண்டும் ஒரு பொருளில் வந்தமைக்கு, திருஞானசம்பந்தரின், 'பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழவையும்' என்பதும், பாரதியின், 'தேமதுரத் தமிழோசை' என்பதும் எடுத்துக்காட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகளாகப் பிரித்து வகைப்படுத்திப் பேசினால் கூறினான் என்போம். தெளிவாகவும் உறுதியாகவும் பேசினால் செப்பினான் என்போம்.

(ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழ்விருந்து பக் 91)

இன்னும் பகர்தல் (வெளிப்படப் பேசல்), சாற்றுதல் (சான்றுடன் கூறல்), பேசுதல், நவில்தல், எனப் பல சொற்கள் ஒரு பொருள் குறித்து வழங்கல் காணலாம். பேச்சு வழக்கிலே பறைதல் (பறை அடிப்பது போன்று உரத்துக் கூறல், அல்லது உரையாடல்) என்ற சொல்லும் கையாளப்படும்.

7. அ. நன்றி — நன்மை (நல்+தி = நன்றி என அமைந்த பண்புப் பெயர்) 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' என்னும் குறளில் 'நன்றி' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் 'நன்மை' என்றே பொருள் தந்துள்ளார்.

ஆ. உதவி — இதற்குக் (''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி') கைம்மாறு என்பது பரிமேலழகர் கொண்ட பொருள். ஆனால் நன்றியும் உதவியும் ஒரே பொருளில் வழங்கும் இடங்களும் உள்ளன.

''உதவி கொன்றோர்க்கு என்றேனும் ஒழிக்கலாம்
உபாயம் உண்டோ?''

(கம்பராமாயணம்)

இவ்வாறு ஒரு பொருளுக்குள் அடங்காது பல பொருள்களைத் தரும் திரிசொற்கள், பொதுப் பொருள், சிறப்புப் பொருள் என்னும் இரண்டையும் உள்ளடக்கியன என்பது, மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளாற் பெறப் படுகின்றது. இவை தவிர ஒரே சொல் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு பொருளுணர்ச்சியை வழங்குவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

1. எ—டு:

| | | |
|---|---|---|
| 1. | நல்ல மனிதர் | நற்பண்புடையவர் |
| 2. | நல்ல மழை | பெருமழை |
| 3. | நல்ல பாம்பு | கொடிய நாகபாம்பு |
| 4. | நல்ல கேள்வி | (பொருத்தமான, பொருத்தமற்ற) கேள்வி |
| 5. | நல்லாய்ச் சாப்பிட்டேன் | போதிய அளவு, அதிக அளவு சாப் பிட்டேன் |
| 6. | நல்ல அடி | கடுமையான தாக்குதல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 7. (திருவிழாவுக்கு) நல்ல சனம் | பெரும் எண்ணிக்கையான மக்கள் |

2. எ—டு:

| | |
|---|---|
| 1. பச்சைக் குருத்து | கள்ளங்கபடமற்ற சிறுகுழந்தை. |
| 2. பச்சைபச்சையாய்ப் பேசினான் | ஆபாசமாகப் பேசினான் |
| 3. பச்சைக் கள்ளன் | கபடம் நிறைந்த கள்வன் |
| 4. பச்சைக்கொடி காட்டப்பட்டது | இசைவு அளிக்கப்பட்டது |
| 5. பச்சை இரத்தம் | மிகுதியான இரத்தம் |
| 6. பயிர் பச்சை | பசுமையான பயிர்வகை |
| 7. பச்சைத்தண்ணி (தண்ணீர்) | கடுமையில்லாதவன், அப்பாவி |
| 8. உந்தப் பச்சைமண்ணுக்கா அடித்தான்? | விபரம் அறியாத சிறு குழந்தை |

3. எ—டு:

| | |
|---|---|
| 1. பெரியவர் | வயதால் முதிர்ந்தவர் |
| 2. பெரியார் | அறிவு, பண்புகளால் உயர்ந்தவர் |
| 3. பெரிய ஆள் | அற்பன், ஏமாற்றுவோன் |
| 4. பெரிய எண்ணம் | தன்னைப்பற்றித் தானே பெருமை கொள்ளல் |
| 5. பெரிய சண்டை | கடுமையான சண்டை |

4. எ—டு:

1. தம்பி தனது பாடத்தைப் படித்துவிட்டான்.
   — தனக்குரிய பள்ளிப் பாடத்தைப் படித்து விட்டான்.
2. நான் அவனிடம் நல்ல பாடம் படித்துவிட்டேன். — அவனுடைய தண்டனைக்கே ஏமாற்றிற்கோ இடமானேன்.
3. படித்துப் படித்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை — திரும்பத் திரும்ப வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை.

5. எ—டு:

1. வாழைக் குலையை வெட்டிக் கொண்டு வா'
   — அறுத்துக் கொண்டுவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உனது வெட்டிப் பேச்சைக் கேட்க எனக்கு நேரம் இல்லை. — வீண் பேச்சைக் கேட்க நேரமில்லை.

3. என் கருத்தை அவன் வெட்டிப் பேசினான், — மறுத்துப் பேசினான்.

4. அவனுடைய தொடர்பை என்றோ வெட்டி விட்டேன். — விட்டுவிட்டேன்.

ஆக, கருத்தினை ஆற்றலுடன் வெளிப்படுத்த ஒருபொருள் குறித்த பல சொற்களும் (திரிசொற்கள்) உணர்ச்சிப் புலப்பாட்டை வெளிப்படுத்த ஒரே சொல்லிற்குப் பொருத்தமான வேறு சொற்களும் கையாளுதல் சிறப்பு என்பதற்கு, இவ்வியலிலே சில எடுத்துக்காட்டுகள் தரப்பட்டன. கருத்தினைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வெளிப்படுத்தும் கடமை யுடைய கட்டுரையாளரும், உணர்ச்சித் திறனுடன் தமது ஆக்கங்களை வெளியிடும் தேவையை மிகுதியும் கொண்ட எழுத்தாளர்களும் இவ்வ கையிலே தமது கவனத்தைச் செலுத்துவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. வேர்ச்சொற்கள்

எழுத்துக்களின் பிறப்பினை விளக்குவது பிறப்பியல் (Phonology) சொற்களின் பிறப்பினை விளக்குவது சொற் பிறப்பியல் (Etymology). மொழியியலாளர் எழுத்துப் பிறப்பியலுக்குக் கொடுக்கும் முதன்மையை, இன்று சொற்பிறப்பியலுக்கு வழங்குவதில்லை. நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் (1875—1947), தமிழகத்துத் தேவநேயப் பாவாணர் முதலியோர் சொற்பிறப்பியலிலே மிகுந்த ஈடுபாடு கொண்டோர். உண்மையில், தமிழில் உள்ள எல்லாச் சொற்களினதும் பிறப்பு மூலத்தைத் தேடிக்காண்பது அரிதிலும் அரிதாகும். தமிழிலக்கண ஆசிரியர் சொற்பிறப்பிலும் ஓரளவு ஈடுபட்டமைக்கு அவர்கள் வகை செய்துள்ள'உரிச்சொல்'லே சான்றாகும். இதனை வடமொழியாளரின் 'தாது'வோடு ஒப்பிட்டு அதுவும் உரிச்சொல்லும் வேறு என்பாரும் ஒன்றென்பாருமாய் முரணுவார் உளர் என்று முன்னரே கூறியுள்ளோம். இவை பற்றிய விரிவான, விளக்கம் வேண்டுவோர், டாக்டர் ரா.சீனிவாசனின் 'மொழியியல்' என்ற நூலிலும், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் 'வரலாற்றுத் தமிழிலக்கணம்' என்ற நூலிலும் காணலாம்.

எனினும் கணிசமான சொற்களைக் கூர்ந்து நோக்கின் அவற்றின் வேர்ச்சொற்கள் (Root-Morpheme) இவை என்பதைக் கண்டறிவது அரிய செயலாகாது. சால, உறு, தவ, நனி, கழி, கூர் என ஒரு பொருளைக் குறித்து வந்துள்ள உரிச்சொற்கள். சால், உற், தவ், நன், கழ் (கூர் வேர்ச்சொல்லே) என்ற வேர்ச்சொற்களோடு பெயரெச்ச, வினையெச்ச விகுதிகளாகிய அ, உ, இ என்பன ஒட்டப்பட்டு உருவானவையே எனச் சொற்பிறப்பாய்வாளர் கொள்வர். பழம் என்ற சொல்லின் அடிச்சொல் 'பழ்' என டாக்டர் சீனிவாசன் காட்டுவர். அவர் காட்டியுள்ள வேர்ச்சொற்கள் சில எவ்வாறு பொருளுணர்வுடன் சொற்களாயின என்பதையும் நோக்குவது பயனுடையதாகும். (பின்னொட்டுக்களாய் - விகுதிகளாய் - வருவனவற்றை அவர் ஆக்க உருபுகள் என்பர்.)

1. **அடிச்சொல்லோடு ஆக்க உருபு சேரல்:**

மல்+அர் — மலர்
அள்+இ — அளி
மல்+ஐ — மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கு, து, பு சேர்ந்து அமைதல்.

பீர்+கு = பீர்க்கு
பல்+கு = பங்கு
குருள்+து = குருத்து
இருள்+து = இருட்டு
சுருள்+து = சுருட்டு

த—ச புகழ்+து+இ = புகழ்ச்சி
புலை+து+இ = புலைச்சி
எழு+து+இ = எழுச்சி

த—ட கால்+து = காற்று
சொல்+து = சோறு
(சொல்-நெல்)

பு— உக+பு = உகப்பு
உவ+பு = உவப்பு

இவற்றைத் தொடர்ந்து அம், அல், அர், அன், இ, ஐ, இல், இர், வு, என்ற ஆக்க உருபுகளும் டாக்டர் ரா.சீனிவாசனால் எடுத்துக்காட்டுக ளோடு தரப்பட்டுள்ளன. (பக்.115-117) (புகழ், புலை, எழு என்பன மேலும் பிரிக்கப்பட்டு அவற்றின் அடிச்சொற்களைக் காணலாமோ என்று தோன்றுகின்றது. (புக். புல் எழ்)

இவ்வியல் அடிச்சொல் பற்றிய ஆய்வன்று என்பதையும் இவ்விடத் திற் குறித்தாக வேண்டும். (நாம் மொழியியல் அறிஞர் அல்ல.) இன்று சொற்களில் இடம் பெறுகின்ற எழுத்துப் பிழைகளைக் களைவதற்கு அவற்றின் (ஒரு சிலவிற்காவது) வேர்ச்சொற்கள் (வினையடி, பெயரடிக ளாய் ஆக்க உருபுகள் பெற்றமைந்தவை) உதவும் என்ற ஆசை பற்றியே இவ்வியலை எழுதுகின்றோம். தமிழ்ப்பாட நூல்களிலே ணகர, னகர; ழகர, ளகர, லகர; றகர, ரகர பேத சொற்களும் அவற்றிற்கான பொருள்க ளும் தரப்பட்டுள்ள போதும் அச்சொற்களைப் பொருள் வேறுபடுத்தி அறியுந்திறனின்றி மீண்டும் மீண்டும் பிழைகளுடன் மாணாக்கர் எழுதுவ தற்கான காரணத்தை ஆராய்ந்ததன் பெறுபேறே இங்கு வேர்ச்சொற்கள் பற்றிய சிறு விளக்கமாக உருக்கொண்டது. இவ்விளக்கத்தின் மூலம் ஓரளவாவது பிழைகளைத் தவிர்க்கலாம். என்பதே எமது முடிபு. ஒரு சொல்லின் பல வடிவங்களை மட்டுமே இங்குத் தருகின்றோம். அதன் பல்வேறு பொருள்களையும் தரவில்லை.

(ஒன்றோ இரண்டோ இதற்கு விதிவிலக்காகலாம்) என்பது கவனித்தற்குரி யது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆழ்+இ | = | ஆழி (ஆழம் ஆழ்ந்த, ஆழ்ந்து, ஆழ்த்து, ஆழ்த்த) |
| | ஆள்+இ | = | ஆளி ஆள்பவன், ஆட்சி (ஆள்+சி) ஆளுகை (ஆள்+உ+கை) |
| 2. | வற்+ற்+அல் | = | வற்றல், வறட்சி (வற்+அ) வறுத்தல், வறுவல், வறுகல் ('வரட்சி' என்பதும் அகராதியில் தரப்பட்டுள்ளது. அது பொருந்தாது) |
| 3. | கோ+வை | = | கோவை, கோத்தல், கோப்பு, (கோர்வை அன்று) |
| | ஈர்+கு (க்) | = | ஈர்க்கு, ஈர்ப்பு, ஈர்த்தல், ஈர்த்து, ஈர்த்த |
| 4. | கொள்+உ | = | கொளு, கொளுவு, கொளுத்து, கொளுவி, கொள்கை, கொள்ளல், கோளி (கொள்வது) |
| | கொழ்+உ | = | கொழு, கொழுப்பு, கொழுத்த, கொழுத்து, (தடிப்பு, பருமன்) |
| 5. | கள்+இ | = | களி, களிப்பு, களியாட்டம், களித்தல், (மகிழ்வுடன் தொடர்பானது) |
| | கழ்+இ | = | கழி, கழிவு, கழிப்பு, கழிதல், (நீக்குதல், நீங்குதல்) |
| 6. | தண்+நீர் | = | தண்ணீர், தணிவு, தணிப்பு, தணிதல், தணிகை, தணிவு |
| 7. | ஏழ்+மை | = | ஏழ்மை (ஏழு-ஏழாகுந்தன்மை) |
| | ஏழ்+ஐ+மை | = | ஏழைமை (ஏழையாதல், வறுமை) ஏழை, ஏழையேன் |
| 8. | தன்+நலம் | = | தன்னலம்-தன்னுடைய நலம் |
| | தம்+நலம் | = | தந்நலம்-தம்முடைய நலம் |
| 9. | தல்+இ (த்) | = | தறி-தறித்தல், தறிப்பு, தறிக்கை (வெட்டுதல்) |
| | தர்+இ | = | தரி-தரிப்பு, தரித்தல் (நிறுத்தல், நிலைத்தல், சூடுதல்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. த்
துல்+அ+உ = துறவு, துறத்தல், துறவி (நீங்குதல்), துறந்து, துறந்த

ற்
திவ்+அ+உ = திறவு, திறப்பு, திறத்தல், திறக்கை, திறந்து, திறந்த

11. மு+நூறு = முந்நூறு (மூன்று+நூறு)
முன்+நூறு = முன்னூறு (முன்பு நூறு)
நால்+நூறு = நானூறு (நான்கு+நூறு= நால் 'நான்' ஆகத்திரிந்து நூறுடன் புணர்கையில் 'ல்' ன்' ஆகி, 'ந்' உடன்சேர 'னூ' ஆகின்றது.

12. காய்+ச்+அல் = காய்ச்சல் காய்தல், காய்வு, காய்ச்சு, காய்ச்சி, காய்கை, காய்வு, காயம்
பாய்+ச்+அல் = பாய்ச்சல், பாய்தல், பாய்கை, பாய்வு, பாயம் (கலைச்சொல்)

13. தேர்+த்+அல் = தேர்தல், தெரிதல், தேர்கை (தெரிதல்)

14. இழ்+இ+உ = இழிவு, இழிப்பு, இழிதல், இழிகை (இறங்கல், நிலையில் தாழ்தல்)
இள்+இ+உ = இளிவு, இளிப்பு, இளித்தல் (ஏளனத் துக்கு உள்ளாதல்)

15. கர்+அ+பு = கரப்பு, கரத்தல், கரவு, (மறைப்பு), கரந்த, கரந்து

த்
கற்+அ+பு = கறப்பு, கறத்தல், கறவை (பால் கறத் தல்) கறந்த, கறந்து

16. பர்+அ+வை = பரவை, பரத்தல், பரப்பு - (கடல், பரந்திருத்தல், பரப்பளவு) பரந்த, பரந்து
பற்+அ+வை = பறவை, பறத்தல், பறப்பு — (பறக் கும் பிராணி, பறத்தல்) பறந்த, பறந்து

17. கொல்+ஐ = கொலை, கொல்லுதல், கொல்லுகை, கொன்ற, கொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | கொள்+கை | = | கொள்கை, கொள்ளுதல், கொள், கொள்ள, கொண்ட, கொண்டு |
| 18. | தொழ்(தோழ்)இ | = | தோழி, தோழமை, தோழன் தோளி தோளுள்ளவள் — (வேய்உறு தோளி) |
| 19. | ஐ+நூறு | = | ஐந்நூறு (ஐந்து+நூறு) |
| 20. | கா+பு | = | காப்பு, காத்தல், காப்பாற்றல், காவல், காத்து, காத்த |
| | காய்+பு | = | காய்ப்பு, காய்த்தல், காய்கை, காய்ச்சல், காய்ந்த, காய்ந்து |
| | கார்+பு | = | கார்ப்பு (காரச்சுவை) |
| 21. | பா+வை | = | பாவை (பாவுதல் - மண்ணை உருட்டி உருவாக்குவது.) |
| | பார்+வை | = | பார்வை, பார்த்தல், பார்ப்பது, பார்த்து, பார்த்த, ..... |
| 22. | (ட்) மண்+அம் | = | மடம், மடமை, மடப்பம், (பெண்ணுக்குரிய நாற்குணங்களுள் ஒன்று, மடப்பம்-செழிப்பு, வனப்பு.) |
| | மட்+ஐ+மை | = | மடைமை, மடையன், மடைச்சி, (பேதைமை, அதுஉடைய பெண், ஆண்) |
| 23. | பொர்+இ | = | பொரி, பொரியல், பொரித்தல், பொரிகை, பொரிப்பு, பொரித்த, பொரித்து, ...... |
| | த் பொல்+இ | = | பொறி, பொறிப்பு, பொறித்தல், பொறிக்கை, பொறித்த, பொறிப்பு, |
| 24. | கொள்+ஐ | = | கொள்ளை, கொள்ளல், கொள்ளுதல், கொள்ளுகை, கொள்ள, கொண்டு. |
| | கொல்+ஐ | = | கொலை, கொல்லை (வளவு-பயிரைக் கொல்லுமிடம் என்பதாற் கொல்லை என வந்தது என்பர்.). |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | | கொல்லன் (இரும்பை அடித்துக் கொல்வதால் 'கொல்லன்' என அமைந்ததென்பர்.) |
| 25. | துண்+இ | = | துணி, துணித்தல், துணிப்பு, துணித்த, துணித்து, துணிப்ப |
| | துன்+இ | = | துனி (துன்பம்), துனித்தல் (துன்புறல்), துனித்த, துனித்து, துனிப்பு, |
| 26. | கல்+அம் | = | கலம் (பாத்திரம்) (பண்டைக் காலத்திலே கல்லிலே செய்த பாத்திரத்தில் உண்டமையால் அது கலம் எனப்பட்டது என்பர் சேதுப்பிள்ளை.) |
| | கள்+அம் | = | களம் (இடம், போர்க்களம்), களத்தை, களத்தில், களத்துக்கு, |
| 27. | விழ்+இ | = | விழி, விழிப்பு, விழித்தல், விழித்து, விழித்த |
| | விள்+இ | = | விளி, விள்ளல், விளம்பல் (விள்ளல்- கூறுதல், அது அழைத்தல் என்னும் பொருளைப் பெற்றது. விளிவேற்றுமை — விளி-அழை.) |
| 28. | குர்+ஐ | = | குரை, குரைப்பு, குரைத்தல், குரைத்த, குரைத்து (நாய்), ....... |
| | த் | | |
| | குல்+ஐ | = | குறை, குறைப்பு, குறைவு, குறைத்தல், குறைத்த, குறைத்து (குறைபாடு) |
| | குல்+ஐ | = | குலை, குலைவு, குலைப்பு, குலைத்த, குலைத்து (ஒழுங்கில்லாது செய்தல்) |
| 29. | உண்+அல் | = | உண்ணல் உணவு, உணணுகை, உண்ண, உண்ட, உண்டு. |
| | உன்+அல் | = | உன்னல், உன்னுகை, உன்ன, உன்னும், உன்னி (நினை, நினைத்து) |
| 30. | கோல்+இ | = | கோலி, கோலுதல், கோலிய, கோலும் (எல்லை வகுத்தல், (வரம்பு கோலுதல் எல்லை கோலுதல்) முற் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் நிலத்தை (அளவு) கோல் கொண்டு அளந்தமையால் கோல் என்ற சொல்லை வினையடியாகக் கொண்டு கோலினான் முதலிய வினைச் சொற்களும், கோலுதல் என்ற தொழிற் பெயரும் தோன்றியிருக்கலாம்.)

| | | |
|---|---|---|
| கோழ்+இ | = | கோழி (பறவை) |
| கோள்+இ | = | கோளி (கொள்பவன்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவகைச் சொன்னிலை

(சொல்+நிலை = சொன்னிலை)

தமிழ்ச்சொற்கள் ஐந்து படிநிலைகளில் வளர்ச்சி பெற்று வந்தவகையினைத் தேவநேயப்பாவாணர் தமது 'தமிழ்வரலாறு' என்ற நூலில் **'உரிச்சொல்'** என்ற பிரிவினுள் எடுத்துக் காட்டியுள்ளார். அவை வருமாறு.

**க. அசைநிலை:-** (Isolating or Monosyllable Stage)
எ—டு: இல், ஆள், (2 அசைகள் தனித்தனியாய் நிற்கின்றன)

**உ.புணர்நிலை:-** (Compounding Stage)
இல்-ஆள்: (புணர்ச்சிக்கு உள்ளாகும் நிலை)

**ங. பகுசொன்னிலை** அல்லது ஈறுபேற்றுநிலை
(Inflexional Stage)
இல்லாள்- (ஆள் என்னும் ஈற்றசையைப் பெற்று ஒரு சொல்லாகும் நிலை

**க-ச. கொளுவுநிலை** (Agglutinative Stage)
செய்விப்பி; ('விப்பி' என்ற பிறவினை விகுதியொடு கொளுவும் (ஒட்டு நிலை)

**ரு. தொகைநிலை** (Synthetic Stage)
மக+கள் = மக்கள், தம்+ஆய் = தாய், ஆதன்+தந்தை = ஆந்தை
(புணர்ச்சித்திரிபுகள் பெற்றுத் தொக்குநிற்கும் நிலை)

**தமிழ் வரலாறு-பக். 233.**

**இதனைப் படிப்போர் கவனத்திற்கு**

ணகர, னகர, ழகர, ளகர, லகர, றகர, ரகர வேறுபாட்டுச் சொற்களிலேயே பெரும்பாலும் எழுத்துப் பிழைகள் நேர்கின்றன. 'தமிழ்'ப் பாடநூல்களிலே இச்சொற்கள் அகரவரிசைப்படுத்தப்பட்டு அவ்வவற்றுக்கான பொருள்களும் தரப்பட்டுள்ளமை ஆராய்ந்தால், பெரும்பாலும் அவற்றிடையே பொருள் வேறுபாட்டினை அறிந்து கொள்ளலாம்.

மொழியறிவிலே நன்கு தேர்ந்தவர்களுக்கும் சில போது ஐயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வேளைகளில் வேர்ச்சொற் பாகுபாட்டின் மூலம் பெரும்பாலும் பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

''சில தினங்களுக்கு முன் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு சந்தேகம் குடிகொண்டது. தகழியா் தகளியா என்பது அந்தச் சந்தேகம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை, (அணிந் துரை) தமிழ் மரபு - வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி.ஓ.எல்)

ஆங்கிலத்தில் U, W என்ற இரண்டு எழுத்துக்கள் உள்ளன. U என்ற எழுத்தின் இரு மடங்கான ஒலிப்பேறு 'W' இற்கு உண்டு போலும். இருமடங்கு என்பதை உறுதி செய்ய 'W' என்ற வரி வடிவமும் உதவுகின்றது.

தமிழிலே 'ன', 'ண'விலும் இருமடங்கு ஒலிப்பேறு உடையது என்பதை அதனை ஒலிப்பதன் மூலமும், வரிவடிவ அமைப்பு மூலமும் அறிந்து கொள்ளலாம். 'ர', 'ற' எழுத்துக்களும் முன்னவையை ஒத்த னவே. 'ல', 'ள', 'ழ' என்பன வரிவடிவ ஒப்புமை பெறாவிடினும் அவை ஒன்றிலிருந்து மற்றது முறையே இரு மடங்கு ஒலியழுத்தம் பெறுவதை உணரலாம். நாம் இந்த எழுத்துக்களை ஒலிப்பதிற் போதிய கவனம் செலுத்தாமையே எழுத்துப்பிழைககள் ஏற்பட வைக்கின்றது. நம்மவர் ஆங்கில ஒலிப்பிற்குக் கொடுக்கும் முதன்மையைத் தமிழுக்கு வழங்காமை கவலைக்குரியதாகும்.

தொல்காப்பியர், பவணந்தி முனிவர் ஆகியோர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றி எடுத்துக்காட்டியுள்ளனர். இவர்களுள்ளே தொல்காப்பியர் கூறும் 'பிறப்பியல்' பெரும்பாலும் மொழியியலாளருக்கு உடம்பாடே,

1. 'ட'வும் 'ண'வும் நாவினது நுனியும். மேல்வாயும் (அண்ணமும்) ஒன்றை ஒன்று பொருந்தி (உற்று)ப் பிறப்பன.
2. 'ற'வும் 'ன'வும் நுனிநா மெல்நாவினைச் சென்று ஒற்றுவதால் பிறப்பன.
3. 'ர'வும் 'ழ'வும் நுனிநா மேல்வாயைத் தடவுவதாற் பிறப்பன.
4. 'ல'வும் 'ள'வும் நாவிளிம்பு வீங்கிப் பல், மேல்வாய் என்பன ஒற்றவும் ('ல'வும்), தடவவும் ('ள'வும்) பிறப்பன.

(தொல், எழுத்து, பிறப்பியல் 9, 12, 13, 14)

மேற்குறித்தவாறு ஒலித்துப் பார்த்து அவ்வவ்வெழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை உணர்ந்து கையாள்வதும் எழுத்துப் பிழைகள் நேராத வாறு துணைபுரியும்.

ஆங்கிலத்திலே பேணப்படும் ஒலியிலக்கணம் போன்று தமிழின் ஒலியிலக்கணத்தையும் பயின்று கையாளுவது, பொதுவான பிழைகள் ஏற்படாது தடுப்பதோடு, சொற்பொழிவாற்றுவோர், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களைப் பயன்படுத்தும் அறிவிப்பாளர் ஆகியோ ருக்கும் பெரும் பயன்தரும் என்பதற்கு ஐயம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. சொற்கள் சொற்றொடர்களின் அமைப்பில் புணர்ச்சி பெறும் இடம்

இரண்டு சொற்களோ இரண்டுக்கு மேற்பட்ட சொற்களோ ஒன்றை யொன்று தொடர்வது சொற்றொடர் எனப்படும். இரண்டு சொற்கள் தொடரும் சொற்றொடரின் முதலாவது சொல்லை 'நிறுத்த சொல்' எனத் தொல்காப்பியரும் 'நிலைமொழி' என நன்னூலாரும் வழங்குவர். சொற்றொடரின் இரண்டாவது சொல் இவர்களால் முறையே 'குறித்து வருகிளவி' எனவும் 'வருமொழி' எனவும் அழைக்கப்படும். இவ்விரு சொற்களும் ஒன்றுடன் மற்றது இணையும் முறைமையே 'புணர்ச்சி' எனப்படும்.

நிலை மொழியின் இறுதியிலும் வருமொழித் தொடக்கத்திலும் உயிரெழுத்துக்கள் வருகையிலும் நிலைமொழியின் இறுதியில் உயிரெழுத்தும் வருமொழித் தொடக்கத்தில் மெய்யெழுத்தும் வருகையிலும் நிலைமொழியின் இறுதியில் மெய்யெழுத்தும் வருமொழித் தொடக்கத்தில் உயிரெழுத்தும் வருகையிலும் நிலைமொழியீற்றிலும் வருமொழித் தொடக்கத்திலும் மெய்யெழுத்துக்கள் வருகையிலும் 'புணர்ச்சி' இடம்பெறுவதுண்டு.

புணர்ச்சி, இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைத்து மெய்யெழுத்தோடு உயிரெழுத்துப் புணர்வதும் இருசொற்கள் எவ்வித விகாரமுமின்றிப் புணர்வதும் இயல்பு புணர்ச்சி எனப்படும்.

எ—டு:

கால்+உறை = **காலுறை**
பழம்+பழுத்தது = **பழம் பழுத்தது.**

விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும் என்று நன்னூலார் உரைப்பர்.[1]

நிலைமொழி, வருமொழி ஆகியன ஒன்றுடன் மற்றது புணர்கையில் அவற்றின் தொடக்கம், இடை, முடிவு ஆகிய மூன்று இடங்களிலும் தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய விகாரங்கள் இடம் பெறும் என்பது அந்த நூற்பாவின் பொருள்.

---

[1] **தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்றும் மொழிமூ விடத்து மாகும்**
**(நன்னூல் எழுத்ததிகாரம், உயிரீற்றுப்புணர்ச்சி-154)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு:

| | | |
|---|---|---|
| ப் வாழை+பழம் | = | வாழைப்பழம் — தோன்றல் |
| ஃற் அல்+திணை | = | அஃறிணை 'ல்' ஃ ஆகவும் த்(இ)ற் ஆகவும் திரிந்தன. |
| நிலம்+வலயம் | = | நிலவலயம் - ஈற்றுமெய் கெட்டது |
| ஆறு+பத்து | = | அறுபது='ஆ', 'அ' ஆயிற்று பத்து=பது ஆயிற்று - திரிதல்+கெடுதல். |
| அம் பனை+காய் | = | பனங்காய், ஈற்று 'ஐ' கெட்டு 'அம்' (சாரியை) தோன்றி, ஈற்று 'ம்', 'ங்' ஆகத் திரிந்தது. |
| ஒன்பது+பத்து (ஒன்பது = தொண்நூறு = ணூறு) | = | தொண்ணூறு = நிலைமொழி, வருமொழி என்பன முதல், இடை, கடை ஆகிய மூவி டங்களிலும் விகாரம் பெற்றன. |

சொற்றொடர்களில் மட்டுமன்றித் தனிச் சொற்களின் முதல், இடைக ளிலும் புணர்ச்சி இடம்பெறுவதுண்டு.

எ—டு:

| | | |
|---|---|---|
| ப் நிலை+பாடு | = | நிலைப்பாடு - தோன்றல் |
| வா+த்+த்+ஏன் | = | வந்தேன் = 'வா' 'வ' ஆகக் குறுகிற்று. 'த்', 'ந்' ஆக விகாரம் பெற்றது திரிதல் |
| கடன்+மை | = | கடமை - 'ன்' கெட்டது. |

தமிழிலக்கண நூல்கள் புணர்ச்சிக்கு முதன்மை இடத்தினை வழங்கி யுள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலுள்ள ஒன்பது இயல்களில் ஆறு இயல்கள் (புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்) புணர்ச்சி பற்றியே பேசும். நன்னூல் எழுத்ததிகாரத்தின் ஐந்து இயல்களில் மூன்று இயல்கள் (உயிரீற் றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல்) புணர்ச்சிக் கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால், இன்றுள்ள மொழியியலார், சில புணர்ச்சிகளை ஏற்றுப் பலவற்றையும் கைவிடலாம் என்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கருத்துத் தெளிவே முக்கியம், கருத்தைப் புலப்படுத்த மொழி ஒரு கருவியே என்ற கருத்து நிலவுவதால், இன்றைய தமிழ் நடையில் சந்தி விகாரங்கள் பெரும்பாலும் அவசியமான இடங்களிலேயே இடம்பெறுகின்றன."

*சந்தி* — புணர்ச்சி (வடசொல்)

என்று பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை தமது 'வரலாற்றுத் தமிழிலக்கணம்' என்னும் நூலிலே கூறியுள்ளமை சிந்தனைக்குரியது.

தமிழிலே புணர்ச்சிகள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றமைக்குச் செய்யுள் யாப்பின் ஒலி முதன்மையே முக்கியமான காரணம் என்பது சிலர் கருத்து. "ஏட்டில் எழுத்தாணியாலும் கல்லில் உளியாலும் எழுத்துக்களை எழுதியும் செதுக்கியும் வந்த ஒரு காலகட்டத்தில் இன்று போலச் சொற்களுக்கிடையே இடைவெளி விடும் வழக்கு நிலவாமையால், சொற்களைப் புணர்த்தி, இறுக்கமாகவும் சிக்கனமாகவும் கையாள நேரிட்டது. "இதனால், புணர்ச்சிகளின் எண்ணிக்கை அளவு கடந்து பெருகிற்று" என்பது மற்றுஞ் சிலரின் கருத்து.

"சொற்களுக்கிடையே இடைவெளிகள் விடுவதோடு, ஆங்கிலக் கல்வியின் பயனாய்த் தமிழுக்குப் புதுவரவாகக் கிடைத்துள்ள குறியீடுகளும் **(Puncuation)** புணர்ச்சிகள் சிலவற்றைத் தேவையற்றனவாக்கி விட்டன", என்றும் சிலர் கருதுகின்றனர். இவர்களின் முடிபுகள் ஏற்கத்தக்கவையே

செய்யுள்களைச் சந்தி பிரிக்காது எழுதும் முறைமையும் அச்சிடும் முறைமையும் இந்த நூற்றாண்டிலும் நிலவி வந்தமைக்கு ஓர் எடுத்துக்காட்டுப் பின்வருவது.

*தூமருமாளிகைமாடநீடுதோணிபுரத்திறையை*
*மாமறைநான்கினொடங்கமாறும்வல்லவன்வாய்மையினா*
*ணாமருகேள்விநலந்திகழுஞானசம்பந்தன்சொன்ன*
*பாமருபாடல்கள்பத்தும்வல்லார்பார்முழுதாள்பவரே.*

*(தேவாரம், அடங்கன்முறை, திருப்பிரமபுரம், பக்.119)*

இன்று செய்யுள்களைச் சந்திபிரித்து, ஓசையிலும் பொருட்பேற்றுக்கே முதன்மையளித்து எழுதியும் அச்சிட்டும் வருவதற்குக் கீழ்வரும் பாடல் சான்றாகும்.

*தேர்அனைய அல்குல் செறிதிசை கதலி செய்யும்*
*ஊருவினோடு ஒப்புஉற ஒடுங்கி உற ஒல்கும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தேர்குடை சலிப்ப அற நிறுத்தி நிமிர் கொங்கைப்*
*பாரம் உள் ஒடுக்குற உயிர்ப்பு இடை பரப்ப.*

*(கம்பராமாயணம் - இராமாவதாரம் (கம்பன்கழகம், சென்னை, பக்.715)*

(இப்பாடலில் 'ஒப்பு உற', உயிர்ப்பு இடை எனச் சந்தி பிரித்தவர்கள் 'ஒடுக்கு உற' எனப் பிரிக்காது ஒடுக்குற எனப் புணர்த்தியுள்ளமையை நோக்குக. மூன்றாவது அடியின் இறுதிச்சீர் கொங்கை, (ப்), பாரம் என்பதனோடு புணர்ந்து தோன்றல் விகாரம் ஏற்பட்டுள்ளது. (கொங்கைப் பாரம், கொங்கையது பாரம் எனப் பொருள்தரும் கொங்கை பாரம் என இயல்பாக நின்றால், கொங்கையும் பாரமும் எனப் பொருள் தந்து விடும் என்பதாலேயே இப்புணர்ச்சி தவிர்க்கவியலாததாய் அமைந்தது போலும்.)

முதற்பாட்டு, செய்யுளோசைக் காப்பினை உட்கொண்டதாய்ப் புணர்ச்சி இறுக்கத்தைப் பேணுவதையும் இரண்டாவது பாட்டு, பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை கூறியாங்கு, கருத்துத் தெளிவை முக்கியப்படுத்திப் புணர்ச்சியில் நெகிழ்ச்சியைக் கையாண்டதையும் காணலாம். கடறாவு படலம், என்றாயே என்றாயே என்றோழன்றன்றாயே, சொற்றானிரண்டு வகைப்படும் போன்ற புணர்ச்சிக் கட்டிறுக்கம் கடுமையானது மட்டுமன்றி நகை விளைப்பதுமாகும்.

ஆனால், புணர்ச்சி இன்றியமையாது வேண்டப்படும் இடங்களில் அதனைக் கைவிடுதல், தெளிவின்மைக்கும் பிழைபாட்டிற்கும் இடமளிக்கும் என்பதையும் நாம் கருத்திற்கொள்ளல் வேண்டும். மொழியியலார் (Linguists), வழக்கிலுள்ள மொழிகளை மூன்று வகைமைகளுள் அடக்குவர்.[2] தனிமொழி (Isolating Language) ஒட்டுமொழி (Agglutinative Language) விகுதி மொழி (Inflexible Language) என்பனவே அந்த மூன்று வகைமைகள். இவற்றுள்ளே தமிழ்மொழி, 'ஒட்டுமொழி' என்ற வகைமைக்குள் அடங்கும். 'வேர்ச்சொல்லையும் அதனுள்ளே ஒட்டப்பட்ட இலக்கண உறுப்புக்களையும் இலகுவாகப் பிரித்துக் காணலாம்' என்று பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஒட்டுமொழியின் இயல்பினை விளக்குவர்.[3]

எ—டு:

1. உண் — வேர்ச்சொல் (வினையடி)
   ட் — இலக்கண உறுப்பு (காலம்) உண்டான்
   ஆன் — இலக்கண உறுப்பு (பால்)

[2] பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் தமிழ்மொழி இலக்கண இயல்புகள், பக் 2-3.

[3] மேற்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாண் — வேர்ச்சொல் (உரிச்சொல்)

பு — இலக்கண உறுப்பு (பண்புப்பெயர் விகுதி) மாண்பு

இவ்வாறு சொற்களை ஒட்டும் பொழுது ஒலிப்பெளிமைக்கும் பொருட்பேற்றுக்கும் ஏற்பச் சொற்களினுள்ளேயே இயற்கையான மாற்றங்கள் சில (விகாரங்கள்) நிகழ்வது தவிர்க்க முடியாததாகும்.

பகுதி, இடைநிலை, சந்தி, விகுதி

எ—டு: வந்தான் — வா+த்+த்+ஆன்

இந்தச்சொல்லில் 'வா', 'வ' ஆகக்குறுகுகிறது. 'த்',ந் ஆகின்றது. 'த்' 'ஆன்' ஒடு சேர்ந்து தான் ஆகின்றது.

இவ்வாறு புணராதவிடத்து வாதான் (த்+ஆ = தா ஆவது இயல்பு புணர்ச்சி) என்றே சொல் அமைந்திருக்கும். அடி+த்+ஆன் 'அடிதான்' ஆகும். (அது நல்ல அடிதான் என்று பொருள்படும்.)

இலக்கண வழக்கிலே புணர்ச்சி சார்ந்த கட்டிறுக்கமான சொற்கள், எளிமை வேண்டும் இடங்களிலும் சில புணர்ச்சிகளை ஏற்றல் காணலாம்.

எ—டு: என்+கு 'எற்கு' என்று அமைவதே முறை. ஆனால், 'ற்' மறைந்து 'அ' என்ற சாரியையும் 'க்' என்ற எழுத்தும் இடைப்புகுந்து **எனக்கு** என்ற சொல்லாக்கத்திற்கு இடம் அளிக்கின்றன. அவற்கு, அவட்கு என்பனவும் அவனுக்கு, அவளுக்கு என்று மாற்றம் அடைகின்றன.

புத்தகம்+ஐ — 'புத்தகமை' ஆகாது 'அத்து' சாரியை பெற்றுப் **புத்தகத்தை** என மாறுகின்றது. அவை+கு அவற்றுக்கு என்று அற்றுச் சாரியை பெற்று மாற்றம் அடைகின்றது. வீடு+ஐ+கட்டு 'வீட்டைக் கட்டு' என்று பகுதி இரட்டித்துச் சொற்களுக்கு இடையில் வல்லின மெய் பெறுகின்றது. பேச்சிலும் எழுத்திலும் எம்மை அறியாமலே எத்தனையோ புணர்ச்சிகள் நிகழ்கின்றன.

''நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்தும் வருமொழித் தொடக்கத்தில் உயிரெழுத்தும் வரின் இரண்டு உயிர்களையும் இணைப்பதற்கு இடையிலே உடம்படுமெய் வருதலைத் தவிர்க்கார்'' என்பது தொல்காப்பியர் கூற்று.[4] நன்னூலார் இ,ஈ நிலைமொழி ஈற்றில் வரின் 'ப்' உம் ஏனைய

---

[4] தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உருபு புணர்ச்சி 140

தொல்காப்பியர் உடம்படு மெய்கள் எவை என்று கூறவில்லை. உரையாசிரியர்களே 'உரையிற் கோடல்' என்னும் உத்தியினைக் கையாண்டு, 'ய்', 'வ்' என்பன உடம்படுமெய்கள் என்பர். 'உடம்படுமெய்யின் உருபு கொளல் வரையார்' என்று தொல்காப்பியர் கூறியது கொண்டு, அவர் உடம்படுமெய் வரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் வரின் 'வ்' உம், 'ஏ' வரின் 'ய்' உம் 'வ்' உம் உடம்படுமெய்க ளாய்த் தோன்றும் என்பர்.[2]

பேச்சு வழக்கில் உடம்படுமெய் ஆட்சி செலுத்தும் இடங்கள் பல உள்ளன. பலாவிலை, மாவிலை, புளியடி, சீனியம்மா, குஞ்சியப்பு, விளையாட்டு, தினையளவு, தாவெண்டால் தா, பசையுள்ளவன், சுகவீனம் (சுக+ஹீனம் இவையிரண்டும் வடசொற்கள். 'ஹீ'க்கு மாற்றீடாக ஈ' இனைக் கையாண்டு சுக+ஈனம் எனக்கொண்டு 'வ்' தோற்றுவிக்கப் பட்டு 'சுகவீனம்' உருவாயிற்று. 'சுகயீனம்' என்பது பேச்சு வழக்கு)

எழுத்து வழக்கிலே உடம்படுமெய்ப் புணர்ச்சி படிப்படியாக நெகிழ்ச்சி அடைந்து வரக் காண்கின்றோம்.

எ—டு: *பல இன மக்களைக் கொண்ட இந்தியாவில் இன்று இனக்கல வரங்கள் பெரிய அளவில் இடம் பெறுவதை அறிந்து உள்ளங்குமுறுகின்ற அறிஞர், "இனி என்ன செய்ய இயலும்?" என்ற மன இடிவினை உடையவராய் மாறிவருகின் றனர். அரசியலிலே ஈடுபட்டுள்ள அரசியல் வாதிகளிற் சிலரோ குறுகிய உள்ளத்துடன் "எரிகிற தீயிலே எமக்கு இலாபம் அடைய ஏதேனும் வழி உண்டா என்ற அவாவோடு அலைகின்றார்கள். இவற்றை எல்லாம் பார்க்கையில் இந்தியா வின் எதிர்காலம் ஒளி இழந்ததாக அமைந்து விடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.*

**(வேண்டியுள்ளது = உடம்படுமெய் தோன்றியது இந்த ஓர் இடத்திலேதான்)**

மேற்குறித்த பந்தியிலிருந்தே (பலவினம், கொண்டவிந்தியாவில், பெரியவளவில், செய்யவியலும், மனவிடிவு அற்றவராகவெரிகிற) கருத்து முரணான பொருட்பேறுகளுக்குச் சான்றுகள் காட்டலாம். இவற் றோடு,

---

வேண்டும் என்று வலியுறுத்தவில்லை எனத் தெரிகின்றது. நச்சினார்க்கினியர் உயிர்களிடையில் மட்டுமன்றி மெய்களிடையேயும் உடம்படுமெய் தோன்றலாம் என்று கொண்டு

வ்

விண்வத்துக் கொட்கும் (விண்+அத்து = விண்வத்து) என எடுத்துக் காட்டுவர். ந், ம், ன் என்பனவும் உடம்படுமெய்களாய் வரலாம் என மொழியியலார். கொள்வர் (உதவுநர் — உதவு(ம்) ந் + , அர், என்னமோ? (என்ன+ம்+ஓ), வருகின்றன. (வருகின்ற ன் + அ — 'அன் சாரியை எனக் கொள்ளாது 'ன்' உடம்படு மெய்யாகத் தோன்றியது என்பர். பேராசிரியர், கலாநிதி அ.சண்முக தாஸ் — 'தமிழ்மொழி இலக்கண இயல்புகள்' 11

[2] நன்னூல் — எழுத்ததிகாரம், உயிரீற்றுப் புணரியல் 162.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பல+இடம் | = | பலவிடம் |
| இலக்கிய+அறிஞர் | = | இலக்கியவறிஞர் |
| பல+அறை | = | பலவறை |
| தறித்த+ஆல் (மரம்) | = | தறித்தவால் |
| நல்ல+அப்பர் | = | நல்லவப்பர் |
| வெட்டிய+ஆள் | = | வெட்டியவாள் |
| முறிந்த+ஆணி | = | முறிந்தவாணி |

முதலிய நகைவிளைக்கக் கூடிய சொற்றொடர்களை உடம்படு மெய்ப்புணர்ச்சி தரல் காணலாம். தொல்காப்பியர் இப்புணர்ச்சியை வற்புறுத்தாமைக்குக் காரணம். பொருள் மயக்கத்திற்கு இது (இஃது) இடமளிக்கும் என்று உணர்ந்தமையே எனலாம்.

மொழியீற்றுக் குற்றியலுகரத்தின் **(பட்டு, சங்கு, எப்து,** எஃகு, **நாடு, வரகு,)** முன்பு உயிர்வரின் குற்றியலுகரம் கெடுவதும் வருமொழி முதலில் வல்லின மெய்வரின் மிகுவதும் இலக்கண விதி. இந்த விதி, சில சூழல்களில் முற்றியலுகரத்திற்கும் **(கதவு, அது)** பொருந்தும்.

எ—டு: பட்டு+உடை பட்ட்(+) உடை = பட்டுடை
விட்டு+சென்றான் = விட்டுச் சென்றான்.
கதவு+ஓசை = கதவோசை.
அது+எப்படி = அதெப்படி? (அஃதெப்படி?)

குற்றியலுகரப் புணர்ச்சி, செய்யுளுக்கே உரியது என்றும் உரைநடைக்கு அஃது அவசியமில்லை என்றும் சிலர் கருதுகின்றனர்.[5]

எ+டு: 'நேற்று எனது வீட்டுக்கு அருகில் குண்டு ஒன்று விழுந்து அதன் ஓசை எல்லோரையும் கலக்கியது'' என்று என் நண்பன் எனக்கு உரைத்தான். அந்தச் செய்தி எனக்கு இடி ஓசை போல மலைப்பு ஏற்படுத்தியது.

ஆனால், குற்றியலுகரத்துக்கு முன் வல்லின மெய் வரின் அந்த மெய் மிகுவது இன்றும் பேணப்பட வேண்டிய ஒன்றே (இதற்கு மென்றொடர்க் குற்றியலுகரமும், இடைத்தொடர்க் குற்றியலுகரமும் விலக்கு, (கண்டு சென்றான், செய்து காட்டு))

கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வெளியிடங்களுக்குப் பயணம் மேற்கொள்வது அக்காலத்தில், பலருக்குப் பழகிப் போன ஒன்று.

---

[5] பேச்சு வழக்கிலே குற்றியலுகரப் புணர்ச்சி மிக அதிகமாக இடம்பெறுவதற்குச் சான்றுகள் உண்டு. ஓட்டாண்டி, விட்டிட்டான், கூட்டாளி, குத்தூசி, சித்தாள் (சிற்றாள்). மன்றாட்டம், பந்தடிப்போம், இருந்திட்டுப் போகட்டும் என்பவை இக்கூற்றுக்குச் சில சான்றுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு(ப்) போனான், பட்டு(த்)துணி, கூட்டுறவு(ச்) சங்கம். குறித்து(க்) குடாநாட்டில் (ஆய்வு செய்யப்படும்) முதலாக, ஒற்று மிகாமல் எழுதுவது இன்று பெரும்பாலும் கையாளப்படுகின்றது. பத்திரிகைத் தலையங்கங்களில் இப்பிழை பெருமளவு இடம்பெறுவதைக் காணலாம்.

இது போன்றே வல்லொற்று மிகவேண்டிய இடங்கள் பலவும் இன்று தவிர்க்கப்படுவது சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றே.

எ—டு: 1. சுமுகமாக (த்) தீர்க்கவும் — 'த்' மிகவில்லை.
2. பல்கலைக் கழக (ப்) புதிய கற்கை நெறி — 'ப்' மிகவில்லை
3. சங்க (ப்) பொது முகாமையாளர் — 'ப்' மிகவில்லை.
4. தலைவராக (ச்) செல்வரத்தினம் தெரியப்பட்டார். 'ச்' மிகவில்லை.
5. மேசையில் வைத்துவிட்டு (க்) காலையில் — 'க்' மிகவில்லை.

வல்லினனங்கள் மிகவேண்டிய இடங்களிற் சில வேளைகளில் அவற்றுக்கு மாற்றீடாக, காற்புள்ளி (,) இடுவதுண்டு.

எ—டு: 1. மக்களின் ஒருமுகப்பட்ட வேண்டுகோளுக்கு, பல தலைவர்கள் செவிசாய்ப்பதில்லை.
2. எம்முடைய இனத்தினர் அகதிகளாக்கப்பட்டு, பல அவலங்களுக்கு உள்ளாகி, செல்லும் இடம் இன்றி, சிலவேளைகளில் மரணத்தையும் தழுவுகின்றனர்.

எழுத்து வடிவிலே இம்முறை வேண்டிய இடங்களிலே கையாளப்படினும் பேச்சு வழக்கிலே எப்போதும் வல்லொற்று மிகுதலே வழக்கமாயுள்ளது.[6] எவரும் 'விட்டுவிட்டு போ' என்றோ 'வீட்டை கட்டி பார்' என்றோ, 'எனக்கு சாப்பாடு தா' என்றோ கூறுவதில்லை. அவ்வாறு கூறுபவர் தமிழியல்பு அறியாத பிறமொழியாளராகவே இருப்பர்.

வல்லினம் மிகுதல் வேண்டும் இடங்களில் மிகாமை ஒரு சாராக, மிகுதல் வேண்டாத இடங்களில் மிகுதலும் தவறாகும்.

**எ+டு: நலன்புரிச் சங்கம்.**

'நலன் புரியும் சங்கம்' என்ற தொகாநிலைத் தொடரில், 'புரியும்' என்ற பெயரெச்சம் தனது காலம் காட்டும் விகுதியை 'உம்' இழந்து வினைத்தொகை ஆகும் பொழுது, 'ச்' என்னும் வல்லொற்று மிகுவதில்லை.

[6] ''மொழி, பொதுமக்களால் ஆக்கப்பட்டதாதலின் அதன் புணர்ச்சியும் அவரது அமைப்பே.'' — ஞா. தேவநேயன் - தமிழ் வரலாறு 95.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நலன் புரி சங்கம்'

என எழுதுவதும் சொல்வதுமே சரியான வழக்குக்கள். இது போன்றே 'ஊர் அடங்கும் சட்டம்', காலம் காட்டும் 'உம்' விகுதியை இழந்து (தொக்கு) 'ஊர் அடங்கு சட்டம்' ஆகுமேயன்றி (ஊரடங்குஞ் சட்டம்' எனவும் கையாளலாம்.)ஊர் அடங்குச் சட்டம் ஆகாது.

தமிழில் வழங்கும் வட சொற்கள் நிலைமொழி ஈற்றில் வல்லொற்றும் வருமொழித் தொடக்கத்தில் வல்லொற்றும் பெற்று வரினும் பெரும்பாலும் மிகாமையே இயல்பாகும்.

பாட+சாலை = பாடசாலை.

எனவே பாடப்புத்தகம், தேசப்பக்தி, சமூகச்சேவை, விஷப்பரீட்சை, பக்திப்பரவசம், சமயத்தத்துவம், துயரச்சம்பவம் என்றெல்லாம் எழுதாது பாட புத்தகம், தேசபக்தி, சமூக சேவை, விஷ பரீட்சை, பக்தி பரவசம், சமய தத்துவம், துயர சம்பவம் என்று எழுதுவதே சரியானது.

வல்லினம் மிகும் இடங்கள் சில கீழே தரப்படுகின்றன.

வேற்றுமைப் புணர்ச்சி

2 ஆம் வேற்று உருபு ஐ

1. கோயிலை+கட்டினான் = கோயிலைக் கட்டினான்
2. வீட்டை+காட்டினான் = வீட்டைக் காட்டினான்
3. பாட்டு+பாடினேன் = பாட்டுப் பாடினேன்

4 ஆம் வேற்றுமை — உருபு கு

1. புலவருக்கு+கொடுத்தான் = புலவருக்குக் கொடுத்தான்
2. கீரிக்கு + பாம்பு பகை = கீரிக்குப் பாம்பு பகை

'இ' விகுதிபெறும் வினையெச்சம்

1. பாடி+காட்டினான் = பாடிக் காட்டினான்.
2. ஓடி+போனான் = ஓடிப் போனான்.

மெல்ல, மெதுவாய், ஒழுங்காய் என்னும் குறிப்பு வினையெச்சங்கள்.

1. மெல்ல+சென்றான் = மெல்லச் சென்றான்
2. மெதுவாய்+போனான் = மெதுவாய்ப் போனான்
3. ஒழுங்காய்+படித்தனர் = ஒழுங்காய்ப் படித்தனர்

(மெதுவாக, ஒழுங்காக, படிப்படியாக என அகர ஈறு பெறுவனவும் வல்லொற்று மிகப்பெறும். எ—டு மெதுவாகப் போ, ஒழுங்காகப் படி, படிப்படியாகப் புகுத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர, வர, நடக்க என்னும் 'செய'வென் வினையெச்சங்கள்

1. தர+போகிறாயா? = தரப் போகிறாயா?
2. வர+கண்டேன் = வரக் கண்டேன்
3. நடக்க+போகின்றது = நடக்கப் போகின்றது.

அ,இ,உ ஆகிய சுட்டெழுத்துக்கள், 'எ' என்னும் வினா எழுத்து

1. அ+குதிரை — அக்குதிரை
2. இ+குதிரை — இக்குதிரை
3. உ+குதிரை — உக்குதிரை
4. எ+குதிரை — எக்குதிரை

('அ' சுட்டு ஒருமைக்கும், 'அவ்' பன்மைக்கும் உரியன என்பர். 'அவ் இளம் பெண்' என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை 'அவ்' இனை ஒருமைக்கும் பயன்படுத்தினார். (இலக்கியச் சிந்தனைக் களம் - பக்.7) 'அவ்'வுக்கு மாற்றாக அந்த என்ற சொல்லைப் பயன்படுத்தலாம்.)

அந்த, இந்த, உந்த என்னும் சுட்டுத் திரிபுகள்

1. அந்த+பெரியவர் — அந்தப் பெரியவர்
2. இந்த+பெரியவர் — இந்தப் பெரியவர்
3. உந்த+பெரியவர் உந்தப் பெரியவர்

**அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு ஆகிய சொற்கள்**

| | | |
|---|---|---|
| அப்படி+சொல்லலாம் | — | அப்படிச் சொல்லலாம் |
| எப்படி+படிக்கிறாய் | — | எப்படிப் படிக்கிறாய் |
| இப்படி+செய்யலாம் | — | இப்படிச் செய்யலாம் |
| அங்கு+செல் | — | அங்குச்செல் |
| இங்கு+செல் | — | இங்குச்செல் |
| எங்கு+போனாய் | — | எங்குப் போனாய் |

(அங்கு, இங்கு, எங்கு என்னும் மென்றொடர்க் குற்றியலுகர ஈறுகள், வருமொழி வல்லினங்களோடு புணர்கையில் வல்லினங்கள் மிகுவது இலக்கண விதி, இன்று இவ்விதி கவனிக்கப் படுவதில்லை. அங்கே, இங்கே எங்கே என்று ஏகாரச் சாரியையைக் கூட்டி, வல்லினம் மிகாது கையாள்வதும் உண்டு.

அங்கே போனான், இங்கே கண்டான், எங்கே போனாய்?

**இனி, மற்று, மற்ற, முதலாம் இடைச் சொற்கள்.**

| | | |
|---|---|---|
| இனி+படிப்போம் | — | இனிப் படிப்போம் |
| மற்று+பற்று | — | மற்றுப் பற்று |
| மற்ற+புத்தகம் | — | மற்றப் புத்தகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டு, இன்று, நேற்று — குற்றியலுகரவீறுகள் ('ஐ' காரச் சாரியை பெறல்.)

| | | |
|---|---|---|
| பண்டு+காலம் | — | பண்டைக் காலம் |
| இன்று+பொழுது | — | இற்றைப் பொழுது |
| நேற்று+பகல் | — | நேற்றைப் பகல் |

இன்று, நேற்று என்பன இன்றைய, நேற்றைய எனத் திரிபடைகையில் ஒற்று மிகவேண்டியதில்லை.

நேற்றைய பழைமை
இன்றைய புதுமை

நெடிற்றொடர்க் குற்றியலுகர ஈறுகள், (சில) உயிர்த் தொடர்க் குற்றியலுகர ஈறுகள், (சில) உயிர்த் தொடர்க் குற்றியலுகர ஈறுகள்.

| | | |
|---|---|---|
| வீடு+பற்று | — | வீட்டுப் பற்று (பகுதி இரட்டித்தது) |
| ஆறு+கரை | — | ஆற்றங் கரை - (பகுதி இரட்டித்து அம்முச் சாரியையும் பெற்றது) |
| எருது+அடி | — | எருத்தடி (பகுதி இரட்டித்தது) |
| வயிறு+பாடு | — | வயிற்றுப்பாடு (பகுதி இரட்டித்தது) |
| ஆடு+கால் | — | ஆட்டுக்கால் (பகுதி இரட்டித்தது) |

(ஆடும்+கால் — 'உம்' விகுதி தொகப்பெற்று ஆடுகால் என வரும். ஆறு என்ற எண்ணுப் பெயர் (6) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் பெறினும் வேற்றுமையுருபு பெறுகையில் **'ஆறை' 'ஆறால்', 'ஆறுக்கு'** எனப் பகுதி இரட்டிக்காது வரும். பொருளுணர்ச்சிக்கு ஏற்பப் புணர்ச்சிகளுக்கு வேறுபடும் என்ற உண்மை இதனாற் பெறப்படுகின்றது.)

**'ஒரு' என்ற சொல்லின் முன் வல்லினம்**

| | | |
|---|---|---|
| ஒரு+படல் | = | ஒருப்படல் |
| ஒரு+தி | = | ஒருத்தி |

**வல்லின ஒற்றுக்கள் மிகாத இடங்கள்**

**வேற்றுமைப் புணர்ச்சி**

**முதலாம் வேற்றுமை — உருபு இல்லை.**

**(ஆனவன், ஆனது, என்பது, என்பவன் முதலியன சொல்லுருபுகள்)**

**சிவசம்பு+படிக்கிறார் — சிவசம்பு படிக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாம் வேற்றுமை — ஆல், ஆன், ஒடு, ஓடு.**

கந்தனால் கட்டப்பட்ட வீடு

(இலக்கண விதிப்படி 'ல்', வருமொழி வல்லின ஒற்றுக்கமைவாய் 'ற்' எனத் திரிதல் வேண்டும். 'கந்தனாற் கட்டப்பட்ட வீடு' ஆனால் இன்று இயல்பாக நிற்றல் பிழையாகக் கொள்ளப்படுவதில்லை. 'ஏ' காரச் சாரியை அளித்துக் கந்தனாலே கட்டப்பட்ட வீடு என எழுதுவது இலக்கணம் உணர்ந்தோர் வழக்கம்.)

கந்தனோடு சென்றேன்.

**ஐந்தாம் வேற்றுமை — இல், இன்.**

பாலில் சிறந்த பானம் வேறு இல்லை.

(இங்கும் பாலிற் சிறந்த என்று எழுதுவதே இலக்கண முறைமை. ஆனால் இன்று அவ்வாறு புணர்த்தாது இயல்பாய் எழுதுவதே பெருவழக்கு.)

**ஆறாம் வேற்றுமை — அது (ஆது, 'அ' என்பன வழக்கிழந்தன)**

எனது புத்தகம்
எனது கால்

**எட்டாம் வேற்றுமை**

அக்கா, கேள்
அப்பா, கூறுங்கள்

**தெரிநிலை வினைப் பெயரெச்சங்கள்**

வந்த தம்பி, ஓடிய குதிரை, ஓடுகின்ற கழுதை.
தந்த காசு,

மென்றொடர்க் குற்றியலுகரம் பெற்று 'து' ஈற்றுடன் முடியும் தெரிநிலை வினையெச்சங்கள்.

வந்து போனான், கண்டு சென்றேன்,
சென்று படித்தாள்.

இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்

1. காடு சென்றடைந்தான்
2. புளி தின்றான்

தரும், வரும், எழுதும், சொல்லும் முதலியவற்றோடு படி என்ற இடைச் சொல்லை இணைத்து வரும் வினையெச்சங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தரும்படி வேண்டினார்
2. வரும்படி சொன்னார்
3. எழுதும்படி பணித்தார்
4. சொல்லும்படி கேட்டார்.

**வியங்கோள் வினைமுற்றுக்களைத் தொடர்ந்து வரும் எழுவாய்கள்**

வாழ்க புலவர், எழுக தமிழினம், பொலிக நெல். (வாழிய, வாழியர் முதலிய வியங்கோள் வினைமுற்று வடிவங்கள் இன்று வழக்கிழந்தன.)

**அ, ஓ, ஏ ஆகிய வினாவிடைச் சொற்கள் ஈற்றில் அமையும் பெயர்கள்.**

1. அவனா தந்தான்?
2. நீயோ கேட்டாய்?
3. அவனே பாடினான்?

**அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்றொடர்கள்**

அவ்வளவு கொழுப்பு!
இவ்வளவு துன்பம்!
எவ்வளவு படித்தாய்?

**ஒன்று முதலாகிய எண்ணுப் பெயர்கள்**

ஒன்று கொடு, இரண்டு புலிகள், மூன்று படிகள்.
(எட்டு இதற்கு விதிவிலக்கு, எட்டுப் போ், எட்டுப் புத்தகங்கள்)

**ஒரு என்ற சொல்லின் வருமொழி முதலில் வல்லினம்.**

| | | |
|---|---|---|
| ஒரு+கால் | = | ஒருகால் ( ஒருக்கால் என வராது) |
| ஒரு+தடவை | = | ஒரு தடவை |
| ஒரு+பெரியவர் | = | ஒரு பெரியவர் |
| ஒரு+பெறுமானம் | = | ஒரு பெறுமானம் |

(மேலே தரப்பட்ட பட்டியலை அமைக்க The Lifco Tamil-English Dictionary, உதவிற்று. நன்றி)

**ல், ஈற்று வருமொழிக்கு முன்னால் வல்லினம் வரின் ல், ற் ஆக மாறும் என்பது விதி.**

| | | |
|---|---|---|
| 1. கல்+பாறை | = | கற்பாறை = கல்லாலான பாறை |
| 2. நெல்+பதர் | = | நெற்பதர் = நெல்லிலுள்ள பதர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் கல் பாறை நெல் பதர் என எழுதினால், கல்லும் பாறையும் நெல்லும் பதரும் என நாம் கருதாத பொருள் அமைந்துவிடும். கல்ப்பாறை, நெல்ப்பதர் என்று எழுதினால் வழுவாகும். (இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் இவ்வாறு புணர்த்தினார்) 'ல்', ள் மொழியீற்றில் வந்து வருமொழித் தொடக்கத்தில் 'த்'வரின் ல்,ற் ஆகவும், ள்,ட் ஆகவும் மாறும்.

| | | |
|---|---|---|
| கல்+தரை | = | கற்றரை |
| முள்+தாள் | = | முட்டாள் |

இவற்றில் பின்னையது கடினமானது. இன்று வழக்கிலும் இல்லை. இவற்றில் முன்னையதில் 'ல்' ற் ஆக மாறி, 'த்' மாற்றமின்றி நிற்பின் (கற்தரை) ஒலிப்பு விட்டிசைக்கும். **விட்டிசைத்தல்** — சொற்றொடரை விரைந்தோ இயல்பாகவோ ஒலிக்க ஏற்படும் தடை.. இதனை இலக்கண ஆசிரியர்கள் **'பக்கிசைத்தல்'** எனவும் குறிப்பர். இக்காரணத்தாலேயே, ஒரு, அது ஆகிய சொற்களின் முன்பு உயிரெழுத்து வரின் அவை முறையே ஓர் அஃது என ஆகின்றன. ஓர் ஊர், அஃதென்ன?

ஆகவே ஊர்காவல்+துறை ஊர்காவற்துறை என்றோ, செயல்+திட்டம், செயற்திட்டம் என்றோ தமிழியல்+துறை தமிழியற்துறை என்றோ, புணர்த்துவதைத் தவிர்த்து,

ஊர்காவற்றுறை, தமிழியற்றுறை, செயற்றிட்டம் என்று புணர்த்தி வழங்குதலே பொருத்தமானது.

ய்,ர்,ழ் என்ற மூன்று ஒற்றுக்களும் வருமிடங்களில் அவற்றை அடுத்து வரும் மெய்யெழுத்து இரட்டிப்பதோ, அதன் இன எழுத்து மேலதிகமாக வருவதோ இடைநிலை மெய்ம்மயக்கத்திலே பெரும்பாலும் இடம்பெறுவனவாம்.

பாய்ச்சல்
பாய்ந்த
வேர்த்த
ஆர்ந்த
காழ்ப்பு
வாழ்ந்து

பொய்ம்மை, மெய்ம்மை, வேய்ங்குழல், யாழ்ப்பாணம், வாய்த்துடுக்கு, சாய்ந்து போதல், பாழ்ங்கிணறு (பாண்கிணறு அன்று) முதலியனவும் மேற்குறித்த ஈரொற்றுக்கள் பெற்று வந்தமைக்குச் சான்றுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த மூன்றெழுத்துக்கள் தவிர்ந்த எழுத்துக்கள் (ஒற்றுக்கள்) சொற்களினிடையில் இரட்டித்தலோ இனம்பெறுதலோ இல்லை.

கற்க்குவியல் என்றோ பாற்ச்சோறு என்றோ, வழங்கற்ப்பிரிவு என்றோ எழுதுவது தவறு.

'ள்', ஈற்றில் வரும் 'செய்யுள்', 'நாள்' ஆகிய பெயர்கள், பன்மைக்கு ரிய 'கள்' விகுதி பெறுகையில், செய்யுட்கள், நாட்கள் எனப் புணர்வதே முறை. ஆனால் அவ்வாறு புணர்வதால், செய்யுளாகிய கள், அன்று (புதிதாக) இறக்கிய கள்(ளு) என்று முரண் பொருள் தரும் என்பதால்,

நாள்கள், செய்யுள்கள்

என்று எழுதுவது பொருத்தமானது.

புணர்ச்சிக்கு நேரான வடசொல் 'சந்தி' எனப்படும். வடசொல் (நிலைமொழி) ஈற்றிலே 'அ', 'ஆ' என்னும் எழுத்துக்கள் (வடவெழுத்து) வந்து, அவற்றைத் தொடர்கின்ற சொல்லின் (வருமொழி) தொடக்கத்தி லும் 'அ', 'ஆ' என்ற எழுத்துக்களில் ஒன்று வரின், 'ஆ' ஆதலே முறை. இதனைத் 'தீர்க்க சந்தி' என்பதனுள் வடநூலார் அடக்குவர்.

சிவ+அர்ச்சனை — சிவார்ச்சனை
சிவ+ஆலயம் — சிவாலயம்

இம்முறையைப் பின்பற்றித் தமிழ்ச் சொல்லையும் வடசொல்லையும் இணைத்து,

**'நினைவாஞ்சலி'** = (நினைவு+அஞ்சலி) எனக் கையாளுதல் தவறு. நினைவஞ்சலி என்று எழுதலாம்.

அரச+அங்கம் அரசாங்கம். **'ராஜா'** என்ற வடசொல் திரிந்து 'அரசு' ஆனதென்பர். இராசாங்கம் என்ற வழக்கும் உண்டு.

நாள் என்ற தமிழ்ச் சொல்லுடன் அந்தம் என்ற வடசொல்லை இணைத்து, நாளாந்தம் எனக் கையாள்வதும் பெருவழக்காயுள்ளது.

நாள்+அந்தம் = நாளந்தம் என்று தமிழுக்கு உரிய இயல்பு புணர்ச்சி யைக் கையாள்வதே முறை.

'எமது கடமைகளை நாளாந்தம் தவறாது செய்தல் வேண்டும்' என எழுதுவது, நாள்தோறும் (ஒவ்வொருநாளும்) செய்யும் கடமைகளைக் குறிக்கின்றதா, நாளின் இறுதியிலே செய்யுங் கடமைகளைக் குறிக்கின்றதா என்பதும் கருதத்தக்கது.'

மன+பாவம் — மனோபாவம். ('மனோலயம்' என்பதும் இத்தகை யதே.) இது வடமொழிப் புணர்ச்சி பெற்ற வடசொற்றொடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்+நிலை, **மனோநிலை** ஆகாது. இதனை மனநிலை என்றோ, உள்ளநிலை என்றோ தமிழில் வழங்குவது நன்று.

அண்மையிலே கோயிலொன்றின் தேர்த் திருவிழா பற்றிய விளம்பரத்தில், **தேரோற்சவம்'** என்று தலையங்கம் இடப்பட்டிருந்தது.

இரத+உற்சவம் — இரதோற்சவம் என அமைதல் வடமொழி வழக்கு. (விருத்திசந்தி என்பர் வடநூலார்)

வெவ்வேறு மொழிகளுக்குரிய சொற்களின் கூறுகளை இணைத்துச் சொல்லாக்ககம் செய்வது எந்த அளவிற்குப் பொருத்தமானது என்பதும் சிந்திக்க வேண்டியதாகும். 'திரு', தமிழ்ச்சொல், 'மதி' வடசொற்கூறு (விசர்க்கம்), இரண்டையும் இணைத்துத் **'திருமதி'** என வழங்குகின்றோம். (திரு+ஆட்டி = திருவாட்டி) தனவந்தன் என்ற வடசொல்லின் முதற்கூறை நீக்கிச் 'செல்வம்' என்ற தமிழ்ச் சொல்லை இணைத்துச் **'செல்வந்தன்'** ஆக்குகின்றோம். இவை போன்றே, தனித்துவம், தலைமைத்துவம், புலமைத்துவம், வெற்றிகரம், மகிழ்ச்சிகரம், துன்பகரம், சித்திரித்தல், பொருளாதாரம், அரசாங்கம், இணைகரம், மரணித்தல், பாவித்தல், பயன் பாட்டுரீதி, காலனித்துவம் (இரண்டும் பிறமொழிக்கூறுகள்) முதலாகக் கலப்புச் சொற்கள் (Hybrid Words) தமிழிலே பெருவரவினவாயுள்ளன. இந்நிலையில்,

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே

(தொல், சொல், எச்சவியல். 452)

என்ற தொல்காப்பிய இலக்கணங் கொண்டு அமைதி காண்பதுதான் ஒரேவழி, (காலப்போக்கிலே பலராலும் கையாளப்பட்டு, மொழியில் இடம் பெற்ற சொற்கள் நீக்கப்பட (கடிய) வேண்டியனவல்ல என்பது மேற்குறித்த நூற்பாவின் பொருள்.)

'இத்தாற் சகலரும் அறிய' என்ற சொற்றொடர், காணி உறுதி முதலாம் ஆவணங்களிலே நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு சொற்றொடர்.

இது+ஆல் = இ(த்)து+ஆல் எனப் பகுதி இரட்டித்தல் பொருத்தம் அற்றது. இது+அன் (சாரியை) + ஆல். எனப் பிரித்து 'இதனால்' எனச் சொல்லாக்கம் செய்தலே பொருந்தும்.

இதனாற் சகலரும் அறிய. என எழுதுவது நன்று.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்' என்பது குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிப் புணர்ச்சிகளிலேயே புதுமையானதும் கடினமானது மான புணர்ச்சி, ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் (தொளாயிரம்), ஒன்பதினாயிரம் ஆகிய எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியே எனலாம்.[1]

1. எட்டுக்குப் பிறகு ஒன்+ப(த்)து வருவது ஏன்? (9)
2. தொண்ணூறு ஒன்பது+பத்து எனப் புணருகையில் ஒன்பது 'தொண்' ஆகத் திரிந்து, 'பத்து' நூறாகத் திரியும் அவலம் ஏன்?
3. ஒன்பது+நூறு தொள்ளாயிரம் ஆவது எவ்வாறு?

இவற்றிற்கெல்லாம் விடை தேடுகையில் 'ஒன்பது' என்ற எண்ணிற்கு முன்பு வேறொரு சொல் வழங்கியிருத்தல் வேண்டும் என்ற முடிவே ஏற்படுகிறது. அந்தச் சொல் என்ன?

**'தொண்டு'** என்பதே அது. இச்சொல் சங்க நூலாகிய 'மலைபடுக டாம்' (அடி-21) இல் வருகின்றது.

''தொடி திரிவு அன்ன தொண்டு படுதிவவின்.'' (வளையலைத் திரித்து விட்டது போன்ற முறுக்கினையுடைய ஒன்பது என்னும் எண்ணி னையுடைய வார்க்கட்டு)

தொல்காப்பியத்தின் நூற்பாவில் 'தொண்டு' 'ஒன்பது' என்ற இரண் டும் வந்துள்ளன.

........................
........................
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்(று)
ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே.

(தொல். பொருள்-413)

எனவே,

| பொருத்தமானவை | பொருத்தமற்றவை |
|---|---|
| தொண்டு | ஒன்பது (9) |
| தொண்பது | தொண்ணூறு (90) |
| தொண்ணூறு | தொள்ளாயிரம் (900) |
| தொண்பதினாயிரம் | தொண்ணூறாயிரம் (90,000) |

எனப் புதியனவாக அமைத்துக் கொள்வதே பொருத்தம் போலத் தோன்றுகின்றது.

[7] நன்னூல் உயிரீற்றுப் புணரியல், 194.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுப் பெயர்களில், இருபது, முப்பது, நாற்பது முதலியவற்றோடு ஒன்று, இரண்டு, மூன்று முதலியன புணர்கையில், இருபத்தியொன்று, இருபத்தியிரண்டு, இருபத்திமூன்று என்று புணரமாட்டா.

இருபத்தொன்று, நாற்பத்திரண்டு, இருபத்துமூன்று முதலாகப் புணர்த்தி எழுதுவதே சரியானது.

(இருபது+இரண்டு, இருப(த்)து+இரண்டு = இருபத்திரண்டு (குற்றியலுகரம் கெட்டு வருமொழித் தொடக்க உயிரோடு புணர்ந்தது.) முப்பது+மூன்று = முப்ப(த்)து+மூன்று = முப்பத்து மூன்று.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்கொத்து

பின்வரும் கருத்துக்களில் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறான மும்மூன்று முடிபுகள் தரப்படுகின்றன. அவற்றில் உங்கள் கருத்திற்கு உகந்த முடிபினைத் தெரிவு செய்துகொள்க.

1. தமிழ் மொழியானது வேர்ச்சொற்கள், இலக்கண உறுப்புக்கள் கொண்டு ஒட்டப்பட்டதோர் ஒட்டுமொழி, எனவே,
   1. புணர்ச்சி இன்றியமையாதது.
   2. புணர்ச்சி வேண்டியதில்லை.
   3. புணர்ச்சி விதிகளில் நெகிழ்ச்சி வேண்டப்படும்.

2. தமிழிலே கலப்புச் சொற்கள் பல பயின்று வருகின்றன. அவை,
   1. தமிழின் இயல்புக்கமைய மாற்றப்பட வேண்டியவை
   2. மாற்ற வேண்டாதவை.
   3. அவற்றைப் பொருத்தம் நோக்கிக் கையாளலாம்.

3. தமிழ்மொழி, வளர்ந்துவரும் அறிவியற்றேவைகளை நிறைவு செய்ய வேண்டுமானால், புதிய ஆக்கச் சொற்களை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்குகையில்,
   1. புணர்ச்சி விதிகளைப் பேணுவது இன்றியமையாதது.
   2. பேண வேண்டியதில்லை.
   3. தேவையையும், சூழலையும் கருத்திற்கொண்டு புணர்ச்சி விதிகளைக் கையாளலாம் முடியாத இடத்திற் கைவிடலாம்.

4. உடம்படுமெய்ப் புணர்ச்சி தமிழிலக்கணத்தில் இடம்பெறுவது,
   1. வேண்டப்படுவதே, 2) வேண்டப்படாதது,
   3. வேண்டிய இடத்திற் பேணப்படலாம்

5. சொற்களின் ஓசைப்பண்பு செய்யுளுக்கே உரித்தானது - ஆதலால்,
   1. குற்றியலுகரப் புணர்ச்சி அவசியமற்றது.
   2. உரை நடையிலும் ஓரளவு ஓசைப்பண்பு வேண்டப்படுவதால், அப்புணர்ச்சியை முற்றாகக் கைவிட வேண்டுவதில்லை
   3. பேச்சு வழக்கிலே, அது பெருமளவு கையாளப்படுவதாற் கைவிட வேண்டியதில்லை.

6. வல்லொற்று மிகும் இடங்கள் தமிழிற் பல உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை,

1. வேண்டியவை, 2) வேண்டப்படாதவை.

3. அந்த இடங்களிலே குறியீடுகளை மாற்றீடுகளாகக் கையாளலாம்.

7. வல்லொற்றுக்கள் மிகவேண்டாத இடங்கள் பல புணர்ச்சியில் உள்ளன. அவ்வாறெனில்

1. அவை பேணப்படல் வேண்டும்

2. பேணப்பட வேண்டியதில்லை.

3. பொருத்தப்பாடு நோக்கிக் கையாளலாம், விடலாம்.

8. பொருள் மயக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கடினமான புணர்ச்சிகள் சில தமிழ்ப்புணர்ச்சியில் இடம்பெறுகின்றன.

அவை,

1. முற்றாகக் கைவிடப்பட வேண்டியன.

2. பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்கும் தேவையை மனங் கொள்கையில், அவை தவிர்க்க வேண்டாதவை.

3. செறிவான கலைச் சொல்லாக்கத்திற்குக் கடினமான புணர்ச்சிகளும் வேண்டப்படும். (எற்சேய்மை, தற்சார்பு, ஆளுமை)

9) சொற்களிடையே இடைவெளி விடுதல், குறியீடுகளைக் கையாளல் வழக்கத்திற்கு வந்துவிட்டன. எனவே

1. புணர்ச்சிகள் தேவைப்படா.

2. அவை எல்லாச் சூழல்களிலும் எல்லா இடங்களிலும் பயன் படுவன அல்ல, என்பதால் வேண்டும் இடங்களில் புணர்ச்சிகள் வேண்டப்படும்.

3. இயல்பு புணர்ச்சியை மட்டும் கையாண்டு, விகாரப் புணர்ச்சிகளைத் தவிர்க்கலாம்.

10. இடைநிலை மெய்ம்மயக்க விதிகள் இன்று புறக்கணிக்கப்படுகின்றன.

1. இதனால் தமிழின் தனித்தன்மையான ஒலிப்பண்பு இழக்கப்படும்

2. இழக்கப்படாது.

3. இழப்பதனால் பெரும் நட்டம் ஏற்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சொற்களில் இடைவெளி விடலும் குறியீடுகளும்

ஏடுகள், கற்கள், செப்புப் பட்டயங்கள் பயன்படுத்தப்பட்ட காலங்களிற் போலவன்றி, கடதாசி பயன்படுத்தப்படும் இந்தக் காலத்திலே பாடல்களைச் சீர் பிரித்தும் வாக்கியங்களைச் சொல் பிரித்தும் இடைவெளி விட்டு எழுதும் வழக்கம் நிலவுகின்றது. ஐரோப்பியரின் வருகையினாலே ஏற்பட்ட நற்பயன்கள் இவை, சொற்களை இடைவெளி விட்டும், இடைச்சொற்கள் சிலவற்றிற்கு மாற்றீடுகளாகக் குறியீடுகளைக் கையாண்டும் வழிகாட்டியவர் இத்தாலியரும் கத்தோலிக்க பாதிரியுமான கொனஸ் கொன்ஷியஸ் ஜோசவ் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் (1680-1747) ஆவார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822-1879, குறியீடுகளுக்குப் பொருத்தமான சொற்றொடர்கள் சிலவற்றை (8)த் தமிழில் அமைத்துத் தந்தார். இவற்றோடு மேலதிகமாக இன்று கையாளப்படும் குறியீடுகள் சிலவற்றிற்கு நாமே பெயர் வழங்கி, அவற்றையும் இங்கு விளக்குவோம். குறியீடுகளின் பெயர்கள் பின்வருவன:

| | |
|---|---|
| i. முடிப்பிசைக்குறி:- | (Full stop) |
| iii. தொடரிசைக்குறி:- | (Semicolon) |
| iii. உறுப்பிசைக்குறி:- | (Comma) |
| iv. வினாவிசைக்குறி:- | (Question mark) |
| v. அநுவாதக்குறி:- | i ii "—"'—' (Quotation mark or Inverted Comma) |
| vi. மெய்ப்பாட்டுக்குறி:- | ! (Exclamation mark) |
| vii. விளக்கிசைக்குறி:- | (Colon) |
| viii. இயைபிலிசைக்குறி:- | [ ] (Bracket) |
| ix. 'ப' வடிவக்குறி:- | [ ] |
| x. இரட்டை இயைபிலிசைக்குறி:- | (Double Bracket) |
| xi. சிறுகோட்டுக்குறி:- | — (Dash) |
| xii. அடிக்கோட்டுக்குறி:- | ... (Underline) |
| xiii. உடுக்குறி:- | * (Asterisk) (O++L) |
| xiv. முடிப்பிசைக்குறி தொடர் உறுப்பிசைக்குறி:- | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடுகளைப் பற்றி நோக்குவதன் முன் சொற்களினிடையே இடைவெளி விடுதல் எவ்வாறு என்பது பற்றியும் சிறிது காண்போம். ஏனெனில், அதற்கான முறைமையும் இன்று சரிவரக் கவனிக்கப்படுவதில்லை. சொல், சொற்றொடர், இணைப்புச் சொற்கள் அவை ஒன்றுடன் ஒன்று புணர்ந்தும் தனித்தும் நிற்கும் நிலைகள் என்பவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளிற் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

1. சொல்:- சொல்லாக்கத்துக்கு அடிப்படையான அலகு எழுத்து, கருத்தாக்கத்தின் அடிப்படை அலகு சொல். ஓர் எழுத்து, தனித்தும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தும் அமைந்து கருத்தமைதி கொண்ட சொற்கள் ஆகின்றன. இரண்டோ, மூன்றோ சொற்கள் தொடர்கையில் அவற்றிற் சில எழுத்துக்களோ விகுதி முதலான உறுப்புக்களோ மறைந்தும் (தொக்கும்) திரிபடைந்தும் வருவனவும் ஒரே சொல் போலக் கணிக்கப்பட வேண்டுவனவே.

எ—டு: கிளி, ஒரு, கந்தன், யாழ்ப்பாணன், செந்தாமரை, சேரசோழ பாண்டியர், காலாதிகாலமாக, போய்விட்டான்

i. இவற்றைப் பிரித்து இடைவெளி விட்டு எழுத வேண்டியதில்லை.

எ—டு:- சேரசோழபாண்டியர் தமிழ் நாட்டின் முடியுடை மூவேந்தராகக் கொள்ளப்பட்டனர்.

ii. மேற்குறித்த வாக்கியத்தில் சேரசோழபாண்டியர், கொள்ளப் பட்டனர், (படு — செயப்பாட்டுவினை விகுதி) என்பன ஒரு சொல் போலக் கணிக்கப்பட்டன. முடியுடை மூவேந்தர் என்று இரண்டு சொற் றொடர்களும் தனித்தனி இரு சொற்களாகக் கொள்ளப்பட்டன. சேரன், சோழன், பாண்டியன் எனத் தனித்தனி கூற வேண்டுமானால் முன்னுள்ள இரு பெயர்களுக்கும் இடையே உறுப்பிசைக்குறி இடப்படல் வேண்டும்.

iii. பெயரடைகளாகவோ வினையடைகளாகவோ வருவனவும் தனிச் சொற்களாகக் கணிக்கப்பட வேண்டுவனவாகும்.

எ—டு: அழகனாகிய இராமன், ஆளுநர் காமினி பொன்சேகர, பல நூற்றாண்டுகளாய், சிவந்த விழிகள், சரணாகதித் தத்துவம், விழுந்து கிடந்தது.

iv. புணர்ச்சியினால் இணைந்து விட்ட சொற்களைப் பிரிப்பின்றி ஒரே சொல்லாகக் கையாளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடைய, வழக்கிலுள்ள, கரியனவான, நூற்றைம்பது, தராத ரம், சுருங்குமென்பது (சுருங்கும் என்பது' எனப் பிரித்தும் எழுதலாம்), அழித்தொழித்து, விருந்துயர்தல்.

v. தனியாட் பெயர்கள் (Proper nouns) எவ்வளவு நீண்டனவாயினும் ஒரே சொல்லாகக் கணிக்கப்பட வேண்டுவனவாகும்; பிரித்தெழுத வேண் டியதில்லை.

எ—டு:- சிவஞானசுந்தரம், வடிவேற்குமரன், வள்ளிநாயகி, வசந்த ராணி, சாமண்டேஸ்வரி, வித்தியானந்தன்.

vi. பட்டங்கள் பின்னிணைப்புக்களாய் வந்தால் அவற்றைப் பிரித்து எழுதல் வேண்டும்.

எ—டு: சோமசுந்தரப் புலவர், சுப்பிரமணிய பாரதி, தேவ நேயப் பாவாணர், படிக்காசுப் புலவர், காளமேகப் புலவர்.

vii. இவ்வாறே இடப் பெயர்களும் பட்டப் பெயர்களும் பின்னொட் டுக்களாய் வரினும், பிரித்து எழுதல் வேண்டும்.

எ—டு: நல்லைநகர் ஆறுமுக நாவலர், கன்னைக் குமாரசுவாமிப் புலவர்.

viii. இணைப்புச் சொற்களான (Conjunctions) ஆயின், ஏனெனில், எனினும், ஏதாவது, ஆதலால், ஆனால், ஆகையால், என்றால், முதலிய னவும், ஆனது, என்பது, என்பவன், முதலான முதலாம் வேற்றுமைச் சொல்லுருபுகளும் புணர்ச்சி நிலையில் ஒரே சொற்களாகவும் புணராத நிலையிலே தனிச் சொற்களாகவும் கொள்ளப்பட வேண்டியன.

எ—டு: 1. அவன் நல்லவன்தான்; ஆயின் சடுதியிலே உணர்ச்சி வசப்படுவதேன்?

2. எனக்குப் படிப்பைத் தொடர வாய்ப்பில்லை; எனினும் முயன்று பார்ப்பேன்.

(இவை போலவே மற்றைய இணைப்புச் சொற்களையும் பயன் செய்க.)

ix. ஏனென்றால், இருப்பினும் முதலியன தனிச் சொற்களாகவே கொள்ளப்படுவதும் இடைவெளிவிட்டு எழுதப்படுவதும் இன்றியமையா தன.

1. நாளை விடுமுறை. ஆகையால் நாம் நாளை விட்டு மறுநாள் சந்திப்போம்.

2. அவன் என்னுடன் சேர்வதில்லை, ஏனென்றால் 'நான் கெட்டவன்' என்று யாரோ அவன் மனத்தைத் திரித்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்துக் குறியீடுகளை நோக்குவோம்.

1. முடிப்பிசைக்குறி:

எழுவாய், பயனிலை அமைந்த வாக்கியத்தின் இறுதியிலே முடிப்பிசைக்குறி இடப்படல் வேண்டும் என்பதை யாவரும் அறிவர்.

எ—டு: தமிழரசியும் கலைச்செல்வியும் நேற்று வந்தனர்.

2. தொடரிசைக்குறி: ;

ஓர் எழுவாய், ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகள் கொண்டு அமைக்கப்படும் வாக்கியங்களுக்கு, ஒவ்வொரு துணை வாக்கியத்தினதும் முடிவில் - இறுதித் துணை வாக்கியம் தவிர்ந்தவற்றில் தொடரிசைக் குறி இடுதல் வேண்டும்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகா'தவர் பலகற்றும் பயன் பெறாதவர்; எவராலும் வெறுக்கத்தக்கவர்; கற்றறி மூடர்; தமக்குத் தாமே பகைவர்; இவர்களால் உலகுக்குச் சுமையேயன்றி வேறு தன்மையில்லை.

3. உறுப்பிசைக்குறி: ,

அ. உம்மை இடைச்சொல் (பிரதமரும் அமைச்சர்களும்) பெறாத செவ்வெண் வரும் இடங்களில் உறுப்பிசைக்குறி இடப் பெறுகின்றது. (செவ்வெண் - உம்மை இடைச்சொல் பெறாது எண்ணுப் பொருள் தருவது.)

எ—டு: அடக்கு முறைகள், லஞ்ச ஊழல்கள், சட்ட வரம்புகளை மீறல்கள் முதலான பல தீமைகள் இன்றுதலை விரித்தாடுகின்றன.

ஆ. வல்லொற்றுக்கள் புணரவேண்டிய இடங்களில் புணர்ச்சிக்கு மாற்றீடாகவும் உறுப்பிசைக்குறி கையாளப்படும்.

எ—டு: தங்களைப் பிணித்துள்ள தளைகளை உடைப்பதற்கு, பல வழிகளிலும் பெண்கள் போராடி வருகிறார்கள்.

இ) வாக்கியத்திலே குறிப்பிட்ட ஓர் இடத்திலே சிறிது தரித்துப் பின் தொடர வேண்டிய இடங்கள் உள்ளன. அவ்விடங்களிலும் உறுப்பிசைக்குறி வேண்டப்படும்.

எ—டு: அஃது எவ்வாறெனினும், எழுத்தாளர் சிலர் தெளிவிற்குப் பதில், கருத்துமயக்கம் ஏற்படுமாறு சுற்றி வளைத்து எழுதுவதிற் கூடிய விருப்பம் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) கடிதத்தைப் பெறுவோரை விளிக்கும் பொழுதும் உறுப்பிசைக்குறி இடப்படும்.

எ—டு: அன்பார்ந்த நண்ப, அன்பு அண்ணா, பிரியமுள்ள கைலாசபதி, ஐய,

உ) தன்கூற்றுவாக்கியங்களிற் கூறுபவரின் பெயரை அடுத்தும் உறுப்பிசைக்குறி இடப்படும்.

எ—டு: கண்ணபிரான், ''இன்று மழைக்கான அறிகுறிகள் தோன்றுகின்றன'' என்று அசுவத்தாமனுக்குக கூறினார்.

4. **வினாவிசைக்குறி: ?**

அ. வினா வாக்கியங்களின் இறுதியிலே வினாவிசைக்குறி இடப்படும்.

எ—டு உள்நாட்டுப் போரிலே ஏதிலியானவர்களுக்கு விடிவே இல்லையா?

ஆ. வாக்கியம் குறிக்கும் விடயம் நடக்கலாம், நடக்காதும் விடலாம் என்ற ஐயநிலையிலும் விசைக்குறி இடலாம்.

எ—டு: மிக விரைவில் மாகாணசபைத் தேர்தல்களை அரசு நடத்தும்(?)

இ) உரையாடல்களில் - சிறப்பாக நாடக, திரைப்பட உரையாடல்களில் - வினாவிற்கு உரிய ஆ,ஓ இடைச்சொற்கள் இடம்பெறாமலே வினாவிசைக்குறி இடப்படுவதுண்டு.

எ—டு: அப்படியானால் நாளை நிகழவிருக்கும் கூட்டத்திற்கு நீ வரப் போவதில்லை? (அப்படித்தானே? என்று ''ஏ'' கார வினா இடைச்சொல் பெற்ற வினாவாக்கியம் தொடர்வதும் உண்டு.

5. **அநுவாதக்குறி: 1(" ")**

அ. அநுவாதம் என்பதன் பொருள் (பிறர் கூற்றினை) ஏற்றுக் கொள்ளல். ''நான் (பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.) அநுவதிக்கிறேன். பிரேரித்தல் - முன் மொழிதல், அநுவதித்தல் - வழிமொழிதல்.) கூற்று — மேற்கோள். உரையாடலின்போது ஒருவர் கூறுவதனைத் தனித்துக் காட்ட அநுவாதக்குறி பயன்படும்.

எ—டு:- ஆசிரியர், ''நாளை முதல் எமது பாடசாலை காலை எட்டு மணிக்கு தொடங்கும்'' என்று மாணவர்க்குக் கூறினார்.

ஆ. பெரியோரின் கூற்றுக்கள், பாடல் அடிகளை மேற்கோள்களாகக் காட்டுகையிலும் அநுவாதக்குறி இடல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ''இந்தச் சரீரத்தை இறைவன் நமக்கு அருளியது தன்னை வணங்கி முத்தியின்பம் பெறற்பொருட்டேயாம்'' என்பது நாவலர் பெருமானின் அறிவுரையாகும்.

2. ''பெற்றதாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே'' என்று எமக்குப்
பாரதியார் அறிவுரை வழங்கியுள்ளார்.

இ. எழுத்தாளர் தமது புனைபெயர்களையும் அநுவாதக்குறி மூலம் வேறுபடுத்திக் காட்டுவதுண்டு.

1. ''மஹாகவி'' இன்று இவ்வழக்கு அருகி வருகின்றது.

எ—டு: நந்தி, சொக்கன், அகிலன் இன்னபிற.

அநுவாதக்குறி II (' ')

அ. பழமொழிகளைச் சிறப்பித்துக் காட்டுகையில் அநுவாதக்குறியினைப் பயன்படுத்தலாம்.

எ—டு:- 'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.'

ஆ. வாக்கியத்தின் தொடக்கத்திலோ, நடுவிலோ, இறுதியிலோ ஒரு சொல்லை அல்லது சொற்றொடரை முதன்மைப் படுத்திக் காட்ட வேண்டிய இடங்களில், அநுவாதக்குறி பயன்படும்.

எ—டு: 1. 'பொருள் முதல் வாதம்' என்ற கோட்பாடு 'கருத்து முதல்வாதம்' என்ற கோட்பாட்டினை ஏற்பதில்லை.

எ—டு: 2 உறவினர் நண்பர்கள் முதலியோருக்குத் தனது செல்வாக்குக் கொண்டு — அவர்களின் தகுதியை ஆராயாமலே — பதவி வழங்குவது 'நெப்போட்டிசம்'

இ. ஆங்கிலச்சொல், தமிழ் வாக்கியத்தினிடையே பயன்படுத்தப்படும் இடங்களில் அச்சொல்லினைத் தனித்துக் காட்டவும் அநுவாதக்குறி பயனாகும்.

'Surrealism' என்ற ஆங்கில பதத்திற்கு நேர்ப்பொருள் தரும். தமிழ்ப் பதமாக 'மீமெய்ம்மை வாதம்' என்பதை எழுத்தாளர் சி.சு. செல்லப்பா வழங்கினார்.

ஈ. ஏளனமாகவோ நேர் எதிர்ப்பொருள் தருவதாகவோ ஒரு சொல்லை அல்லது சொற்றொடரைக் கையாள வேண்டிய நிலையிலும் அநுவாதக்குறியினைப் பயன் செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மூன்று முறைகள் முடியினை வழங்கியபோதும் அதனை ஏற்றுத் தரித்திட மறுத்தார் யூலியசீசர். பறூட்டஸ் அவரைப் ''பேராசைக்காரர்'' என்றார். ஆனால் புறூட்டசோ (உண்மையே உரைக்கும்) 'நேர்மையாளர்'. (Honourable man)

6. மெய்ப்பாட்டிசைக் குறி: !

அ. வியப்பு, மகிழ்ச்சி, அவலம் முதலிய மெய்ப்பாடுகளை (உணர்ச்சி வெளிப்பாடுகளை)ப் புலப்படுத்த மெய்ப்பாட்டிசைக்குறி கையாளப்படுகின்றது.

1. ஆஹா! அவளின் அழகினை எடுத்துரைக்கத் தமிழிலே சொற்க ளின்றித் தடுமாறுகின்றேன்.
2. ஆ! எத்தகைய அற்புதமான மனிதர் அவர்!
3. ஐயோ! செல்ல இடமின்றி அலைகடலில் அகப்பட்ட துரும்புக ளாய் எம் மக்கள் அடையும் அவலங்களை என்ன என்பேன்!

ஆ. நடக்கக்கூடாத செயல் ஒன்று நடந்துவிட்டது என்பதையோ, இப்படியும் நடக்குமா என்ற ஐய எதிர்பார்ப்பதையோ, உள்ளத்தில் அடங்கிக் கிடக்கும் வெறுப்பு, அருவருப்பு, சீற்றம் முதலியவற்றை வெளிப்படுத்துவதையோ மெய்ப்பாட்டிசைக்குறி கொண்டு விளக்கலாம்.

1. செல்வி ஜெயலலிதாவின் கட்சிக்கு அமோகமான வெற்றி!
2. ''கனவான் ஒப்பந்தம்'' மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயலும் வாஜ்பாய்!
3. கடத்தப்பட்ட கப்பல் குண்டு வீசி அழிப்பு! அரசுப் பேச்சாளர் இப்படிக் கூறுகிறார்!

7. விளக்கிசைக்குறி:

அ. ஒரு பந்தியிலோ, ஒன்றுக்கு மேற்பட்ட பந்திகளிலோ விளக்கப் பட வேண்டிய ஒரு பொருளுக்கு இடப்படும் தலையங்கச் சொற்றொடர், அல்லது வாக்கியத்தின் இறுதியில் இடப்படுவது.

எ—டு: 1. இக்கட்டுரையின் துணைத் தலையங்கங்களை நோக்குக.

2. நாம் எமது வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய உடல் நலப் பழக்கங்கள் சில வருமாறு:

ஆ. விளக்கிசைக்குறி:2 :-

துணைத் தலையங்கங்களுக்கு (அவற்றின் விளக்கம் ஒரே நேர்வரி யிலே தொடங்குமாயின்) இறுதியில் இடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் கற்புப்பற்றிய கோட்பாடு:- ஆண் பெண் இருவருக்கும் கற்பு உரியது. பெண்ணை அவள் விருப்பத்தினை அறியாது வற்புறுத்தித் திருமணம் செய்வது மாபெருங் கொடுமை. இவை தாம் பாரதியின் கற்புப்பற்றிய கோட்பாடுகள்.

8. இயைபிலிசைக்குறி: ( )

1. ஒரு பொருளைப் பற்றிய மேலதிகமான விளக்கம் அல்லது பொருத்தமான விளக்கத்தினை இயைபிலிசைக் குறிக்குள் இடுவது வழக்கம்.

அ. அறிவு, திறன், மனப்பாங்கு (மாணவருடைய விருப்பு, வெறுப்பு, ஏற்பு, ஏற்பின்மை என்பவற்றை மனப்பாங்கு என்பதனுள் அடக்கலாம்) இம்மூன்றையும் வெளிக்கொணரும் வகையிலே கல்வியும் கற்பித்தலும் அமைதல் வேண்டும்.

ஆ. ஆங்கிலத்திலே தேவையான விளக்கம் வேண்டும் இடங்களிலும் தனிச்சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பன, இயைபிலிசைக் குறிக்குள் அடக்கப்படும்.

1. ஆளுமை (Personality) என்பது ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கேற்ப அமைவதோர் இயல்பாயினும் ஆசிரியர் அதனை வெளிக்கொணர உதவுவது அவரின் இன்றியமையாக் கடனாகும்.
2. ''இருப்பதா? இறப்பதா? அதுவே கேள்வி'' (To be or not to be, That is the Question) என்று ஷேக்ஸ்பியரின் ஹம்லெற் பாத்திரத்தின் தனிநிலைப் பேச்சு அதன் மனப் போராட்டத்தினை நன்கு புலப்படுத்துகின்றது.
3. ''உனது உதடுகள் தட்டுத் தடங்கலின்றித் தடுமாறாது இயங்க வேண்டுமானால், நீ ஐந்து விடயங்களைக் கவனமாகக் கருத்திற் கொள். அவையாவன. நீ யாருடன் பேசுகிறாய், எவரைப் பற்றிப் பேசுகிறாய், ஏது பற்றி, எப்பொழுது, எங்கே பேசுகிறாய் என்பனவே அந்த ஐந்துமாம்.'' என்பது டபிள்யூ. ஈ, நொறிஸ் என்ற அறிஞரின் கூற்று. (''If your lips would keep from slips, five things observe with care: To whom you speak, of whom you speak, and where'' - W.E. Norris)

9. 'ப' வடிவக் குறி: [

ஒரு கட்டுரைக்கோ கதைக்கோ அறிமுகவுரையாக அதன் ஆசிரியர், அல்லது அதனை வெளியிடும் பத்திரிகாசிரியர் எழுதுவது, [ வடிவக் குறிக்குள் அடைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு: [மனித வாழ்வின் பல்வேறு வளர்ச்சிநிலைப் பருவத்திலும் மனிதப் பண்பியல்புகளை—நல்லது கெட்டதை—தமக்கே உரிய பாணியில் இக்கட்டுரையாளர் தொடர்ந்து விளக்கி வருகிறார். அத்தொடரில் ஐந்தாவது கட்டுரை இது. — ஆசிரியர்.]

[பத்திரிகைகளிலே கட்டுரை நடுவிற் பெட்டியிட்டு (Box) இவ்வறிமுகம் வெளியாவதும் உண்டு.]

**10. இரட்டை இயைபிலிசைக்குறி:**

எடுத்துக்கொண்ட விடயத்தின் கூறுகளை வரிசைப்படுத்தித் தருவதற்கு இந்தக்குறி பயன்படும்.

கல்வி வளர்ச்சிக்கு மாணவரின் மூவகைத் திறன்கள் வெளிக்கொணரப்படல் வேண்டும்.

அவையாவன:
1. அறிவு
2. திறன்
3. மனப்பாங்கு

**11. சிறுகோட்டுக்குறி: — (Dash)**

வாக்கியத்தின் ஒரு கூறு தொடர்கையில் அந்தக் கூற்றின் இடையிலே மேலதிக விளக்கம் தரவேண்டியதாயின் சிறுகோடு இடப்படலாம்.

எ—டு:- நாம் ஒரு செயலை மேற்கொள்ளும் பொழுது, இடை நடுவிலே ஏற்படும் தடைகளை — அவை எவ்வளவு பாரதூரமானவையாயினும் சரி — நிதானமாக ஆராய்ந்து நீக்க முற்படல் வேண்டும். (சிறு கோட்டுக்கு மாற்றீடாக இயைபிலிசைக் குறியினை'யும் கையாளலாம்.)

**12. அடிக்கோட்டுக்குறி:- ........... (Under line)**

ஒரு பந்தியிலே, குறிப்பிடத்தக்க முதன்மையான விடயத்தினைத் தனித்துப் பிரித்துக் காட்ட அடிக்கோடிடுவது வழக்கம்.

எ—டு:- ''..... இதுவே விளையாட்டு முறையின் தத்துவமாகும். இம் முறை மூலம் கற்பித்தலுக்கு வழிகாட்டிய கால்டுவெல் குக் (Caldwell Cook) என்பவர், அதனை விளக்கும்போது ''விளையாட்டுமுறை ஒரு விளையாட்டல்ல, அது சிரமமான வேலைகளையும் மகிழ்ச்சியுடன் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வழியாகும்'' என்றார்.

(பேராசிரியர் வ. ஆறுமுகம் - வகுப்பறைக் கற்பித்தல் பக்.31)
(அடிக்கோடு நாம் இட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உடுக்குறி:-

கட்டுரையின் இடையில் வாக்கியத்தின் ஒரு சொல்லையோ சொற்றொடரையோ விளக்க நேரின் அச்சொல்லின் வலப்பக்கத்தின் மேலாக உடுக்குறியை இட்டு அடிக்குறிப்பில் விளககம் தரலாம். மேற்கோள் பெறப்பட்ட நூல், ஆசிரியர் விபரமும் (அடிக்குறிப்பில்) வருவதுண்டு.

எ—டு: 1. பொருள்முதல் வாதிகள் எந்தப் பொருளும் எக்காலமும் இயங்கிக் கொண்டே இருக்குமன்றி, நிலை பேறுடைமை* அதற்கில்லை என்கிறார்கள்.

14. முடிப்பிசைக்குறி+தொடரிசைக்குறி:-

ஒருவரின் பட்டம் பின்னடையாய் வருகையில்
இக்குறிகள் இடப்படும்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் M.A., Ph.D., இவற்றோடு குறைவாக்கியங்கள் முடிவில் மூன்று புள்ளிகள் (...) ஒரு தொகுப்பாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்புக்களாகவே இடுவர்.

1. எழுத்தாளர், .வாசகரின் ஊகத்திற்கு விடும் சொற்கள் அல்லது சொற்றொடர்கள் உள்ளன, என்பதை இப்புள்ளிகள் காட்டும்.

எ—டு: அவனுடைய திருட்டு வெளியானதும் அவன் முகத்தில் ... (அசடு வழிந்தது)

2. கட்டுரையாளர், வாக்கியத்தில் தொடர்வதை வாசகர் அறிவர் என்ற நிலையிலும் முப்புள்ளிகள் இடப்படலாம்.

எ—டு: இலங்கையானது வடமாகாணம், மேல்மாகாணம், ... ... ... ... ... என ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

---

*நிலைபேறுடைமை (Eternity) :- மாற்றம் எதுவுமின்றி எக்காலத்தும் ஒரே நிலையில் இருத்தல்.

1) அடிக்குறிப்பு விளக்கம் ஒன்றுக்கு மேல் வருமாயின் O,+, ,S முதலாகப் பல குறியீடுகளைக் கையாளும் வழக்கம் இன்று அருகி வருகின்றது. மாற்றீடாக 1,2,3,4 முதலாம் எண்களைக் கையாள்வதே இன்று பெருவழக்கு. ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகளில் அடிக்குறிப்புக்கள் (Foot notes) கட்டுரையின் ஈற்றிலே தரப்படுகின்றன.

**2) [1] மரபுகள் பற்றிய வரையறைகளைத் தொல்காப்பியம் மிக விரிவாகத் தருகின்றது.**

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் (9ஆம் இயல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வியலைப் படிப்போர் கவனத்திற்கு:

1. குறியீடுகள் பற்றிய விளக்கம் தரும் ஆங்கில இலக்கண ஆசிரியர்களும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும், அவை எழுத்து வடிவிலே இடம் பெறுவதை மட்டுமே வரையறை செய்யவில்லை. வாசிப்பின் பொழுதும் குறியீடுகளுக்கு அமைவாய் நிறுத்தி வாசிப்பதையும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக நாவலர்,

   1. , இக்குறியுள்ளவிடத்தே ஒரு மாத்திரை நிறுத்து.
   2. ; இக்குறியிலுள்ளவிடத்தே இரண்டு மாத்திரை நிறுத்து.
   3. : இக்குகுறியுள்ளவிடத்தே மூன்று மாத்திரை நிறுத்து
   4. . இக்குறியுள்ளவிடத்தே நான்கு மாத்திரை நிறுத்து என்பர். (நான்காம் பாலபாடம் பக்.169)

2. உம்மையிடைச்சொல் எண்ணுப் பொருளிலே கையாளப்படும் இடங்களிலே உறுப்பிசைக்குறி வேண்டப்படாது.

   (நானும், X அவனும், X நீயும், X நண்பனும்)

3. மெய்ப்பாட்டிசைக் குறியை அடுத்தடுத்து ஒன்று, இரண்டு, மூன்று என அடுக்கியிடுதல் அழகில்லை.
   (சீதை கதறினாள்! ஓலமிட்டாள்!! மயங்கி விழுந்தாள்!!! 'ஐயகோ! என்கணவா என்று அரற்றினாள்!!!! இவ்வாறு இடுதலைத் தவிர்க்கவும்.)

4. ஒரு வரியின் இறுதியிலே சொல்லானது குறைநிலையில் ஒற்றுப் பெற அவாவி நிற்க, அடுத்த வரியில் அந்த ஒற்றையிட்டுச் சொல்லை முழுமை பெறச் செய்தல் தவறாகும். ஆங்கிலத்திலே சிறு கோடிட்டுச் சொற் குறைவை இரண்டாவது வரியிலே முடிப்பர். அவ்வழியினை நாம் பின்பற்றலாம். அல்லது சொற்குறை வருமிடங்களைத் தவிர்த்து, அடுத்த வரியிலே முழுச் சொல்லினை எழுதுவது நன்று.

   1. ஆங்கிலத்தில் ............................................................Scic-
-nce எனக் கையாள்வர்.

   2. ................................................................................ வீட்டை
-க் கட்டினான் என்றோ ........................................................ வீட்டைக் கட்டினான் என்றோ கையாள்வதே பெரும்பாலும் வழக்காயுள்ளது. ......................................................தனது வீட்டை-
-க் கட்டினான் என்றோ,

........................................................................தனது வீட்டைக் கட்டினான் என்றோ (அடுத்த வரியில்) எழுதுவதேசாலச் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. வழுவமைதி எனப்படும் மயக்கம்

தமிழிலக்கணம், வழாநிலை, வழு, வழுவமைதி என்னும் மூன்று நிலைகளிலே மொழியினைப் பேண முற்படுகின்றது;

எ—டு:-

| | |
|---|---|
| இவள் எனக்கு மகள் | வழாநிலை |
| இவள் எனது மகள் | வழு |
| இவள் எனக்கு உயிர் | வழுவமைதி. |

1. முதல் வாக்கியம், நான்காம் வேற்றுமைக்குரிய 'கு' உருபு பெற்று உறவுப் பொருளைத் தந்தமையால் வழா நிலை (குற்றம் அற்றது) யாகும்.

2. இரண்டாவது வாக்கியம் ஆறாம் வேற்றுமைக்குரிய 'அது' உருபு பெற்று (உறவுப் பொருள் தராது) உடைமைப் பொருள் தந்தது. உடைமை (Poession) ஆக அஃறிணைப் பொருளையே கொள்ளலாம். ஆகவே உறவுப் பொருள் குறிக்காமை. மகளை (உயர்திணை) அஃறிணையாக்கி யமை (அது) என்பவற்றால் இவ்வாக்கியம் வழுவானது **(இன்று இவ்வாக்கியம் வழுவாகக் கொள்ளப்படுவதில்லை. கொள்ளப்பட வேண்டியதுமில்லை என்பதை அறிவோம். ('நண்ணும் நினது அடியார்' — மணிவாசகர்.) உறவு, நட்பு, பன்மைப் பொருள்கள் யாவும் 'அது' உருபு கொண்டு புலப்படுத்தப்படுவது, 'புதியன புகுதல்' என்னும் இலக்கணக் கோட்பாட்டினுள் அடங்குகின்றது என்பதற்கு ஐயம் இல்லை. எனினும் இலக்கணக் கட்டிறுக்கம் கருதி, மேற்குறித்த வாக்கியம் 'வழு'வுக்கு எடுத்துக்காட்டாய்ச் சுட்டப்பட்டது)**

3. மூன்றாவது வாக்கியம், 'இவள்' என்ற உயர்திணையை எழுவா யாகக் கொண்டு 'உயிர்' என்ற அஃறிணையைப் பயனிலையாகக் கொண்டது வழுவே; ஆனால்உயிர் போன்றவள் எனப் பொருள் தருகிறது. (உவமானம் உவமேயத்திற்கு ஆகி வந்த ஆகுபெயர்) என்ற வகையில், வழுவமைதியாயிற்று. **வழுவமைதி** வழுவாயினும், தவிர்க்க முடியாதவாறு போதிய காரணத்தோடு வழக்கில் நிலவுவது. **(Exception)**

ஆனால் **'வழுவமைதி'** என்ற சொல்லாட்சி பொருந்துமா? இது மொழிவல்லுநரான பேராசிரியர் வ. சுப.மாணிக்கம் கிளர்த்தியுள்ள கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலங்கள் தம்முள் ஒரு பொருளைக் கூடுதலாகக் காட்டுவது பால்கள் வேறு பால்களையும் காட்டப் பயன்படுத்துவது என்பது இன மயக்கம், இனக்கலப்பு, இனப்புணர்ச்சி எனப்படுமன்றி வழுவெனப்ப டாது. திணையும் பாலும் இடமும் காலமும் பிறவும் தம்முட் சேர்ந்தால், அஃதாவது திணையோடு காலமும் காலத்தோடு திணையும் சேர்ந்தாற் றான் வழுவாகும். இரு திணை தம்முள்ளும். முக்காலம் தம்முள்ளும் செப்புக்கள் (விடைகள்) தம்முள்ளும் கொடுத்து வாங்கிக் கொள்ளுதல் ஒரு மொழிக் குடும்பத்துள் வழுவில்லை. போக்கின்று, புகரின்று, வரைநிலையின்று, கடிநிலையின்று, ஒல்வழியறிதல், நோக்கோரனைய, சிறப்புத் தோன்றும் மயங்கு மொழிக் கிளவி என்று நூல் முழுதும் வரும் தொல்காப்பியத் தொடர்களால் இவ்வுறவு மொழிக்குள் இயல்பானது என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.''

(சுப.மாணிக்கனார் சிந்தனைக் களங்கள், வழுவமைதியா, மயக்கமா? பக் 70)

ஆக, சுப. மாணிக்கனாரின் கருத்துப்படி,

1. இவள் எனக்கு உயிர் — என்ற வாக்கியத்தில் இவள் என்ற உயர்திணை, உயிர் என்ற அஃறிணையோடு மயங்கிற்று. மேலும் நோக்கினால் இவள் — பெண்பால், உயிர் — ஒன்றன்பால். ஆகவே பால் பாலோடு மயங்கிற்று. அவ்வாறாயின் இவை மயக்கம் (மயக்கம் — கூட்டம்) என்று கொள்ளவேண்டியனவேயல்லாமல் வழுவமைதி எனக் கொள்ளத் தக்கனவல்ல.

2. சற்றுப் பொறு, இதோ வந்துவிட்டேன்' என்ற வாக்கியத்தில் வந்துவிட்டேன் என்னும் இறந்தகால வினைமுற்று விரைவு காரணமாக, வருவேன் என்னும் எதிர்கால வினைமுற்றோடு மயங்கியது இதுவும் மயக்கம் எனவே கொள்ளத் தகும்.

இவ்வாறு வழங்கி வருவனவற்றை வழுவமைதி என்று கொண்டால் இவற்றுக்கு வழாநிலை காட்டல் வேண்டும். திணை, பால், காலம் என்பன ஒத்து வருதல் வழாநிலைகக்குள் அடக்கப்படுமாயின், அன்பு, விரைவு என்பனவற்றைப் புலப்படுத்த வேண்டிய இடங்களுக்கு அவை போதியன வாகா. இந்நிலையில் வழுவமைதிக்கு உகந்த வழாநிலை என்பது சாத்தியமற்றதே. இதனாலேயே,

'' வழுவமைதி என்றால் வழா நிலையைக் கூற வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். வழுப்படாத தூய்மையான ஒரு தொடரைச் சொல்லுங்கள்'' என்று சுப. மாணிக்கனார் கேட்கின்றார்.

(மேற்படி நூல் - பக்.67, 68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் நின்று நிலவக்கூடிய ஒரு பொருளை நிகழ்காலத்திற் குறிப்பது வழுவமை தியாகக் கொள்ளப்படும் என்பர்.

*எ—டு:* *மலை நிற்கும், மலை நிற்கின்றது. இவ்வெடுத்துக்காட்டுகள் இரண்டிலும் வரும் வினைமுற்றுக்கள் முறையே தொல்காப்பியர் காலத்திலும், நன்னூலார் காலத்திலும் வழங்கிய நிகழ்கால வடிவங்களைக் காட்டுவன (தொல்காப்பியர் காலத்தில் ஆ நின்று, கின்று, கிறு இடைநிலைகள் (நிகழ்காலம் காட்டுவன) இல்லை)*

**''மலை நின்றது என இறந்த காலத்திற் கூறினாலும் வழு, மலை நிற்பது என நிகழ்காலத்திற் கூறினாலும் வழு, மலை நிற்கும் என எதிர்காலத்திற் கூறினாலும் வழு என்று சொல்லிவிட்டு, வழாநிலையா கக் கூறுதற்கு வேறு வழியும் இல்லை என்று சொன்னால் முன்கூறியபடி மொழிக்குற்றமாக அன்றோ முடியும்?''** **(மேற்படி பக். 69)**

***''தமிழ் மொழியின் (உலக) வழக்கு செய்யுளும் நாடி இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். அவர் வழுவமைதி என்ற சொல்லை எவ்விடத்திலும் கையாளவில்லை. அவர் 'மயக்கம்' எனக் குறித்தவற் றில் மட்டும் அன்றி பிற இடங்களிலும் தங்கள் திறமையைப் புலப்படுத் தக் கருதிய தொல்காப்பிய உரையாசிரியர்கள் பெரும் எண்ணிக்கை யிலே வழுவமைதிகள் கண்டு புலப்படுத்த முயன்றுள்ளார்கள். அவை தொல்காப்பியர் கருத்துக்கு முரணானவை''***

***(மேற்படி பக் 67)***

***''பல இலக்கணக் கொள்கை குறித்த இடைக்கால உரையாசிரியர்க ளைத் தழுவுவோமேயாயின், அவனும் அவளும் வந்தனர். யானையும் குதிரையும் வந்தன. யானும் நீயும் செல்வோம் என்ற தொடர்களும் ஆகுபெயர். அன்மொழித் தொடர்களும் குறிப்பிற் பெறப்படும் தொடர்க ளும் தமிழ்த்தாயின் சுண்டு விரல் நகம் தவிர, எல்லாம் வழுவமைதிக ளாய் தொல்காப்பிய நூல் வழுவாய் மருங்கிற் கழுவாய் கூறும் பொத்து நூலாய் முடியும். அவன் வந்தான் வழாநிலை; அது வந்தது வழா நிலை, யான் வந்தேன் வழாநிலை, நேற்று வந்தாய் வழாநிலை சாத்தா உண்டியோ வழாநிலை, உண்பேன் வழாநிலை என்ற சில தொடர்களே தமிழின் மிச்சங்கள் ஆகும்.''***

***(மேற்படி பக். 73)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே,

திணையே, பால், இடம், வினா, விடை
மரபாம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே

(நன், பொதுவியல், 375)

என்று ஏழுவகை மயக்கங்களைத் தந்து அவற்றினின்றும் வழுவினால் வழுவென்றும், அவற்றிற்கு விதிவிலக்குக்களாய் வருவன வழுவமைதி கள் என்றும் நன்னூலார் குறித்துள்ளமை மீளாய்வுக்குரியதாகும்.

இன்று திணை, பால், இடம் முதலியன மயங்கிவரும் சில எடுத்துக் காட்டுக்கள் தந்து அவற்றின் பொருத்தப்பாடுகளைச் சிறிது நோக்குவோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு க.பொ.த. (சா/த)ப் பரீட்சைக்கான, 'தமிழ் மொழி' வினாத் தாள்களில் 'பிழை திருத்துக' என்று சில வாக்கியங்கள் கொடுக்கப்படுவது வழக்காய் இருந்தது. அவை பின்வரு மாறு:

1. நீ நல்லன் அல்லன்
2. நான் நல்லன் அல்லன்.

மேலேயுள்ள வாக்கியங்களில் நீ என்பது முன்னிலை 'நான்' என்பது தன்மை. எனவே முன்னைய வாக்கியத்தில் படர்க்கையில் இடம்பெறும் (அவன் நல்லன், அல்லன்) ஆண்பாற் படர்க்கைச் சொல், வினைச்சொல் என்பன பிழையான பிரயோகங்கள். பின்னைய வாக்கியத்திலும் தன்மை எழுவாய்க்குப் படர்க்கைக்குரிய பெயர். வினைச்சொற்களைப் பயனிலை யாகக் கையாண்டது பிழை. இவை பின்வருமாறு திருத்தப்படல் வேண் டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

1. நீ நல்லை அல்லை.
2. நான் நல்லேன் அல்லேன்.

1. அவன் நல்லவன் அன்று
2. அவர்கள் நல்லவர்கள் அல்லர்.

முதலாவது வாக்கியத்தின் பயனிலையாய் வந்துள்ள 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று அஃறிணை ஒருமைக்கு உரியது. உயர்திணையில் அமைந்த அவன் என்னும் எழுவாய், அன்று என்னும் பயனிலையைப் பெறுவது வழு. இரண்டாவது வாக்கியத்தின் எழுவாய் பலர்பாற் படர்க்கைப் பெயர். அது பலவின்பாற் படர்க்கை வினையாகிய அல்ல என்ற பயனிலை கொள்வது வழு. எனவே இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு திருத்தப்படுவது இன்றியமையாதது எனக் கொள்ளப்பட்டது.

1. அவன் நல்லவன் அல்லன்.
2. அவர்கள் நல்லவர்(கள்) அல்லர்.
அல்லன் (ஆண்பால்), அல்லர் (பலர்பால்)

குற்றியோ மகனோ அங்குத் தோன்றுபவன்?
ஆணோ பெண்ணோ அங்குத் தோன்றுபவள்?

முன்னைய வாக்கியம் 'உரு' என்ற திணைப் பொதுச் சொல்லாலும், பின்னைய வாக்கியம் தோன்றுபவர்' என்னும் ஆண் பெண் பொதுச் சொல்லாலும் வழங்குதல் வேண்டும் என்றனர்.

1. குற்றியோ மகனோ அங்குத் தோன்றும் உரு?
2. ஆணோ பெண்ணோ அங்குத் தோன்றுபவர்?

இவ்வினாக்களுக்கு அளிக்கக்கூடிய (தேர்வாளர் எதிர்பார்த்த) விடைகளும், பிழை (எனக் கருதப்பட்ட) வாக்கியங்களும் வருமாறு:

1. மகன் அல்லன் குற்றி. (குற்றி அன்று மகன்)
2. பெண் அல்லள் மகன். (ஆண்)

**திருத்தம்:**

1. மகன் அன்று குற்றி. குற்றி அல்லன் மகன்.
2. பெண் அல்லன் மகன்.

மேற்குறித்த வாக்கியங்கள் இன்று மொழிப்பிரயோகத்திலே இடம் பெறுவனவல்ல. திணை, இடம், பால் மயக்கங்கள் (வழுவமைதிகள் என்று இலகக்கண ஆசிரியர்கள் குறித்தவை) பெருமளவு கையாளப்படுவதால் அவை காலத்துக் கேற்பப் பொருளுணர்வைத் தருவது இயல்பாக உள்ளது.

நீ நல்லவன், (நல்லவள்) இல்லை (அல்ல)
நான் நல்லவன் இல்லை (அல்ல)

முதல் வாக்கியத்தில் முன்னிலை, படர்க்கையோடு மயங்கி இல்லை என்று (இருதிணை, ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான) குறிப்பு வினைமுற்றைப் பெற்றது.

இரண்டாவது வாக்கியத்தில் 'அன்' என்பது தன்மைக்கும் உரிய விகுதியாதலால் (அல், அன், என், ஏன் — தன்மை விகுதிகள்) அது மயங்கவில்லை. (சரியான பிரயோகம்) இல்லை என்பது பொது வினை முற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லன், அல்லேன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்ற வினைமுற்றுக்களுக்கு மாற்றீடாக 'அல்ல' என்பது பொதுவினைமுற்றாகக் கையாளப்படுவதே இன்றுள்ள வழக்கு அல்ல. வேறு, இல்லை, உண்டு, எனக் கொள்ளலாம்; தமிழ் அறிஞர்கள் பலரும் அவ்வாறே பயன்படுத்து கின்றனர். எனவே நான்காம் வாக்கியங்களின் சரியான விடைகளுக்கு, இல்லை, அல்ல என்பவற்றில் ஒன்றைக் கையாளலாம். 'அன்று' என்ற வினைமுற்று, இன்று அருகி வரும் ஒன்று.

குற்றியோ மகனோ அங்குத் தோன்றும் உரு, ஆணோ, பெண்ணோ அங்குத் தோன்றுகின்றவர் என்பன போன்ற வினாக்கள் இன்று வேண்டப் படாதவை. சாமானியமக்களே தமது பகுத்தறிவு கொண்டு மயக்கமின்றி வினாவுவதும் விடையிறுப்பதும் இயல்பாக நடக்கின்றன. எனவே இத்தகைய மயக்கங்கள் பற்றிப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை.

மிக அருமையாக ஒருமை, பன்மை ஒன்றோடு ஒன்று மயங்குவதும் எடுத்துப் பிடித்துப் பாராட்ட வேண்டுவதில்லை என்பதற்கு,

'மின்னுவது எல்லாம் பொன்னல்ல'

என்ற பழமொழி நல்ல எடுத்துக்காட்டு. ஆங்கிலத்தில்

All that glitters is not gold

என்றே ஒருமை பன்மை மயக்கம் நிலவுகின்றது. ('நான்' என ஒருமையிற் சுட்டவேண்டியவர் (பத்திரிகாசிரியர் அரசர், ஆட்சியாளர் முதலியோர்) நாம் எனப் பன்மையில் தம்மைத் தாமே அழைப்பதும் உண்டு) முக்காலங்களும் ஒன்றுடன் ஒன்று மயங்குவது, துணிவு, விரைவு, தெளிவு, காரணமாக இடம் பெறுவதாகும்.

எ—டு:

1. காலமயக்கம் - சற்றுப் பொறு இதோ வந்துவிட்டேன். விரைவு பற்றி எதிர்காலம் இறந்த காலத்தோடு மயங்கியது. (இவ்வெடுகோள் முன்னரும் காட்டப்பட்டது)
2. ,, ,, நீ கவனமாகப் படிக்காவிட்டால், இம்முறை பரீட்சையில் தோற்றாய் (என்று வைத்துக்கொள் - துணிவு காரணமாக எதிர்காலம் இறந்த காலத்தோடு மயங்கியது.)
3. ,, ,, இராமன் கைகேயியின் அந்தப்புரம் நோக்கிச் செல்கின்றான் - இறந்த கால நிகழ்வினைக் கண்முன் நிகழ்வது போலக் காட்டுவதற்கு இறந்த காலத்தினை நிகழ்காலத்தோடு மயங்கக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ,, ,, நாங்கள் முன்பு இந்த மைதானத்திலேதான் விளையாடு வோம் - மேலேயுள்ள எடு கோளிற் கூறியது இதற்கும் பொருந்தும். இறந்த காலத்தோடு எதிர்காலம் மயங்கியது.

திணை, பால், இடம் என்பனவும் போதிய காரண அடிப்படையில் மயங்குவது வழக்காயுள்ளது.

திணைமயக்கம் - அஃறிணையோடு உயர்திணையும், உயர்திணை யோடு அஃறிணையும் உவப்பு, வெறுப்பு, வெகுளி என்பவை காரணமாக மயங்கும்.

எ—டு: 1

கிளியார் பேசுகிறார் - 'கிளி' என்னும் அஃறிணைப் பெயர் அன்பு காரணமாக உயர்திணையாய் மயங்கிற்று.

எ—டு: 2

அந்த நாய் வந்து விட்டதோ? - வெகுளியால் உயர்திணை அஃறிணை (இங்கு நாய் என்பது மகனை (மக ளை)க் குறித்து) யாய் மயங்கியது.

3) 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.'

இவ்வாக்கியத்தில் உயர்திணையும் (மூர்க்கன்) அஃறிணையும் (முதலை) வெறுப்புக்காரணமாக அஃறிணை முடிவு பெற்றன. **(விடா)**

**2. பால் மயக்கம்:**

1. ''இராசாத்தி இங்கே வாடி'' என்று தாய் மகனை அழைத்தார். அன்பினால், பெண்பால் ஆண்பாலோடு மயங்கியது.
2. ''அப்பன், ஓடிவாடா'' என்று தந்தை மகளை அழைத்தார். அன்பினால், ஆண்பால் பெண்பாலோடு மயங்கியது.
3. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறன்இல் புகல் (திருக்குறள்)
   பிறன் மனைவியை விரும்புபவர் எனப் பலர் பாலில் அமைந்த சொற்றொடர் தேரானாய் (ஆராயாதவனாய்) என ஒருமை எண்ணாய் (ஆண்பாலாய்) வந்தமை பால் மயக்கமாகும்.

**3 இடமயக்கம:**

1. மரியாதை கருதி, ஒருவரை நீங்கள் என்றோ, நீர் என்றோ முன்னிலைப் பன்மையில் அழைக்காது, **தாங்கள், தாம்** எனப் படர்க்கைப் பன்மையில் அழைப்பது இட மயக்கமாகும்.
2. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களும் மயங்குத லும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ—டு: தமிழராகிய நாம் எமது தன்மானத்தை எந்தச் சூழ்நிலையிலும் கைவிடலாகாது. இதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்பர். (தன்மை (நான்), முன்னிலை (நீங்கள்), படர்க்கை (முன்னிலையில் இல்லாத பிறர் - தமிழர்) ஆகிய மூவிடத்தினரையும் உள்ளடக்கியது)

மயக்கங்கள் யாவும் **போதிய காரணத்தோடு** அமைதல் வேண்டும் என்று மீளவும் வலியுறுத்துகின்றோம்.

அவர், **தனது** கொள்கையைக் கைவிட்டார்.
இவற்றுக்கெல்லாம அவன்தான் காரணம்.
அவர்**தான்** என் அண்ணர்.

என்று காரணம் கருதாவிடங்களிலே ஒருமை, பன்மை மயக்கங்கள், பால்மயக்கம் முதலியன ஏற்படாது தவிர்த்தலே விரும்பத் தக்கது.

அவர், **தமது** கொள்கையைக் கைவிட்டார்
இவற்றுக்கெல்லாம் அவன்தான் **காரணன்**
**அவர்தாம் என் அண்ணர்.**

என்று எழுதுவதே பொருத்தம். ஏனெனில் முதலிலே இலக்கண வழக்குக்கு முதன்மை அளித்த பின்னரே தொல்காப்பியர், மயக்கத்தை (வழாநிலையைச் சார்ந்து வருவதாக)க் குறிப்பிடுகின்றார்.

**கீழேயுள்ள வாக்கியங்களில் வழுக்கள் (திணை, பால், எண், இட), மயக்கங்கள் என்பனவற்றை அடையாளம் காணுங்கள். அவற்றின் சரியான வடிவங்கள் ஒவ்வொரு வாக்கியத்தின் கீழும் அடைப்புக் குறியினுள்ளே தரப்படுகின்றன.**

1. பெரியவர்களும் சிறியவர்களும் என்னைக் காணும் பொழுதெல்லாம் தன் முகங்களைத் திருப்பிக் கொள்கிறார்கள். ( ..... தங்கள் முகங்களை ..... பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பலர்பாற் பெயர்கள், **தன்** என்ற (படர்க்கை) ஒருமையுடன் மயங்கியது வழு, பொழுது எல்லாம் - ஒருமை, பன்மையோடு மயங்கியது எண் மயக்கம்.)
2. நீ சிறியவன் என்று நினைத்து உன்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள். (நீ என்ற முன்னிலைப் பெயர் சிறியவன் என்ற படர்க்கைப் பெயரோடு மயங்கியது இடமயக்கம்.)
3. கோபத்தால் அவனுடைய இரு கண்களும் சிவந்தது. (இரு கண்களும் பன்மை என்று தெளிவு பெற்றபின், சிவந்தது என்று ஒருமையில் முடிப்பது வழு. அவனுடைய கண் சிவந்தது, சிவந்தன என்ற வினைமுற்றுக்களில் ஒன்றைப் பயன்படுத்துவது வழாநிலையாகும். எவ்வாறெனில் 'கண்' என்ற சொல் ஒன்றன் பாலுக்கும் பலவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்கும் பொதுவான - பகுக்கப்படாத - பெயர். இதனை இலக்கண ஆசிரியர் **'பால் பகா அஃறிணைப் பெயர்'** என்பர்.)

4. உலகின் படைப்புக்கள் யாவிற்கும் இறைவனே பொறுப்பு. (இறைவன் - உயர்திணை, பொறுப்பு - அஃறிணை, வழு - பொறுப்பு உடையவர் - வழாநிலை. ஆனால் இன்று இம்மயக்கமும் கைவிடப் பட்டு, **பொறுப்பு** என்றே கையாள்வது பெரு வழக்கு.) எனவே இவ்வாக்கியம் இக்கால வழக்கில். திணை மயக்கமே.

5. நீங்கள் என்ன சொன்னாலும் ''அவள் நல்லவள் அன்று'' எனவே நான் உறுதியாகக் கூறுவேன்.
(அவள் - உயர்திணை அன்று - அஃறிணை, வழு அல்லள் என்றோ இல்லை, அல்ல என்றோ குறிப்பு வினைகளில் ஒன்றைப் பயன்படுத்த லாம்.)

6. அவனும் இவளும் குணத்தில் ஒன்றுதான்.
(அவன் - உயர்திணை. ஒன்று - அஃறிணை. வழு. ஒருவர்தாம்.)

7. மலர்மிசை **ஏகினான்** மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். — குறள்
(தன்னை வழிபடும்) அடியார்களின் இருதயங்களாகிய மலரிலே ஏகுவான் எனக் கூறவேண்டியதைத் துணிவு பற்றி **ஏகினான்** என்றது காலமயக்கம். காலவழுவமைதி என்பர் பரிமேலழகர்.)

8. இவர்கள்தான் எப்பொழுதும் தொல்லை தருபவர்கள்.
('இவர்கள்தான்' என்ற சொல்லிலே 'தான்' என்னும் இடைச்சொல் ஒருமையில் வந்தது எண்மயக்கம். எனினும் இவர்கள்தாம் என்று வழங்குவது சிறப்பு)

9. இந்தச் சாதனை ஒரு இராமனாலேயே நிகழ்த்தமுடியும்.
(வருமொழித் தொடக்கத்தில் உயிர் வந்துள்ளமையால் ஒர் இராமன் என்று எழுதுவது சிறப்பானது.)

10. ''இது செய்வதெல்லாம் மோட்டு வேலைதான்'' என்று ஆசிரியர் மாணவனை ஏசினார்.
(வெகுளிகாரணமாக 'இவன்' என்னும் உயர்திணைப் பெயர், 'இது' என்ற அஃறிணைப் பெயருடன் மயங்கிற்று. 'செய்வது' என்பது ஒருமையாகவும் 'எல்லாம்' என்பது பன்மையாகவும் மயங்கியது எண்மயக்கம்)

11. மதுரைக் கணக்காயன் மகனார் நக்கீரனார்.
(இந்தச் சொற்றொடரில் 'கணக்காயன்' என்பது ஆண் பாலுக்கு உரிய 'அன்' விகுதி பெற்றுள்ளது. 'நக்கீரன்' - அன் விகுதியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர்பாலுக்குரிய 'ஆர்' விகுதியையும் பெற்றுள்ளது. ஆண்பாலைக் குறிக்க 'அன்' விகுதியும் அதன் மேல் அடுக்கி மதிப்புப் பன்மையாக ஆர் விகுதியும் வந்துள்ளமை பால் மயக்கமாகும்.) இந்தப் பயன் பாட்டின் விரிவான விளக்கத்தினைப் பேராசிரியர் மு.வரதராசனின் 'கள் பெற்ற பெருவாழ்வு என்ற கட்டுரையிலே (தமிழ் 11ஆம் ஆண்டு நூலிலே அநுவதிக்கப்பட்டுள்ளது) காணலாம்.

12. ''நாம் இதுபற்றி இப்பத்தியிலே பலமுறை எடுத்துக்காட்டியுள் ளோம்.''
(இதனை எழுதியுள்ள பத்திரிகாசிரியர் 'நான்' எனத் தன்மையிற் குறியாது 'நாம்' எனப் பன்மையிற் கூறியது எண் மயக்கம்.)

13. அவன் எப்பொழுதும் நல்லனவே செய்யும். செய்யும் என்ற வினைமுற்று, முற்காலத்தில் படர்க்கை ஆண்பால் (அவன்) படர்க் கைப் பெண்பால் (அவள்) அஃறிணை ஒன்றன்பால் (அது), அஃறிணைப் பலவின்பால் (அவை) என்ற நான்கிற்கும் பொதுவா னதாய்க் கொள்ளப்பட்டது. இவ்வினைமுற்றே தமிழின் தொடக்க வடிவம் என்றும் ஒரு காலத்தில் வினை முற்றுக்கள் பால் திணை என்பவற்றை வேறுபடுத்தி உணரும் வகையிற் கையாளப்பட வில்லை என்றும், இன்றும், தமிழின் இனமொழியாகிய மலையாளத் தில் இந்நிலை பெருவரவிற்று என்றும் (அவன் செஞ்நு (அவன் செய்தது) மொழியியலாளர் சான்று காட்டுவர்.) இன்று செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பாற் படர்க்கைக்கும், பெண்பாற் படர்க்கைக்கும் பயன்படுத்தப் படுவதில்லை. பழைமை யான வழக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டு பின்வருவது:

இருளூறு சிந்தை யேற்கும் இன்னருள் சுரந்தவீரன்
அருளும் நீசேரின் .....

(கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - கும்பகருணன் வதைப்படலம் 139

14. நயினார், நாம் வர - (நாம் என்னும் தன்மைப் பெயர், கூறுபவரைக் குறிக்காது முன்னிலையாரை மட்டும் குறித்ததால், இடமயக்கம் நேர்ந்தது. சாதிக்கட்டிறுக்கம் நிலவிய காலத்தில் நிலவுடைமையா ளனை அவன் கீழ் அடங்கி வாழ்ந்தவன். நாம் என அழைப்பது மிகுந்த மதிப்பைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. நயினார் - நாயன் (ஆர்) என்ற சொல்லின் திரிபு. நாயன் - வழிநடத்துபவன், தலைவன் என்னும் பொருள்களைத் தந்தது.)

15. நம்பி பொன் பெரியன். இவ்வாக்கியத்தைத் திணைவழுவமைதியா கக் கொள்வது இலக்கண ஆசிரியர் **(உரையாசிரியர்)** வழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கே உயர்திணையெழுவாயின் (நம்பி) பயனிலையோடு (பெரியன்) அஃறிணை எழுவாய் (பொன்) முடிந்தமை காண்க'' (நன்னூற்காண்டிகையுரை. - இராமானுஜாச்சாரியார் உரை - பொது வியல் - பக் 245) நம்பி பொன்னாற் பெரியன் என்று 'பொன்' னோடு மூன்றாம் வேற்றுமையுருபைக் கூட்டிக் கருவிப்பொருள் பெறவைப்பது பொருத்தம் போலத் தோன்றுகின்றது. பொன்னிற் பெரியன் என்று ஐந்தாம் வேற்றுமை 'இன்' உருபைக் கூட்டி ஏதுப் பொருள் பெற வைப்பதும் ஒன்று.

16. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கடவுளுக்கு அஞ்சி மனிதர்களுக்கு அஞ்சாத வீரம் பொருந்தியவர்கள். இவ்வாக்கியத்தில் அவர்கள், மனிதர்கள், பொருந்தியவர்கள் என்ற பெயர்களிலே 'ஆர்' என்ற உயர்திணைப் பலர்பாலும், 'கள்' என்ற அஃறிணைப் பலவின்பாலும் மயங்கின.
**(தொல்காப்பியர்'கள்' அஃறிணைக்கு உரியது என்பர். நன்னூலார் அஃது உயர்திணைக்கும் உரியது என்பர். இன்று 'கள்' இருதிணைக்கும் பயன்படுகின்றது.)**

17. நேற்று உங்களைத் தேடிவந்தது என் மகன்தான். இவ்வாக்கியத்தில் வந்தது அஃறிணை. மகன் உயர்திணை. எனவே திணை மயக்கம் இவ்வாக்கியத்தில் அமைந்தது. எனினும் 'வந்தவன்' என உயர்திணையிற் கொள்வது கூடிய பொருத்தம் எனத் தோன்றுகிறது. வந்தது — காலம் காட்டிய தொழிற் பெயராகக் கொள்ளின் வழுவில்லை.)

18. இப்பெரியாரின் துணையினாலே நன்மை பெற்றவர்களில் நானும் ஒருத்தி. (தன்மையோடு படர்க்கை மயங்கியது இடமயக்கம், தொல்காப்பியர் காலத்தில் 'யான்' (நான் நன்னூலார் கால வழக்கு) உயர்திணையாகக் கொள்ளப்பட்டது. அஃறிணைக்குரிய விலங்குகள், பறவைகள் முதலானவை பேசுவதுபோலக் கதையமைத்தல் அவர் காலத்தில் இல்லை என்று பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை கருதுகின்றார். இக்காரணத்தினாலேயே தொல்காப்பியர் தன்மைப் பெயர்களை (யான், யாம்) உயர்திணையாகக் கொண்டார் என்பது பேராசிரியர் முடிபு.

19. உலகிலுள்ள உயிர்கள் யாவிற்கும் இறைவனே துணை. (இறைவன் என்ற உயர்திணை, துணை என்ற அஃறிணையோடு மயங்கிற்று.)

20. நேற்று வாங்கி வந்த ஒரு கிலோ சீனியெல்லாம் கரைத்தாயிற்று. ('எல்லாம் என்ற பன்மை 'கரைத்தாயிற்று' என்ற ஒருமையுடன் மயங்கியது எண்மயக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மரபு பேணுதல்

*'மரபு என்பது தேங்கி நிற்கும் குட்டை அல்ல'*
***பேராசிரியர் கா. சிவத்தம்பி***

தமிழ் மொழியின் நடைமுறையினைக் காலந்தோறும் கூர்ந்து நோக்கி அதன் செல்நெறியினையும் வழக்கினையும் விளக்கிய இலக்கண ஆசிரியர்களின் பணிகள் போற்றத்தக்கனவே. இறந்தகாலத்து இலக்கிய வழக்கோடும், உலக வழக்கோடும் தம்காலத்து மொழிவழக்கோடும், உலக வழக்கோடும் உறவுகொள்ள அவர்கள் எமக்கு வழிவகுத்தார்கள். இவர்களின் நூல்களுக்கு உரை வழங்கிய உரையாசிரியர்களும் முன்னவர்களைத் தொடர்ந்து தத்தங்காலத்து மொழி வழக்குக்களையும் எமக்கு அறிமுகம் செய்வதாகிய அரும்பணியினை மேற்கொண்டார்கள் என்பதையும் மறுத்தல் இயலாது.

ஆனால் அவர்களின் காலத்தின் பின்னரும் மொழியிலே புதியன புகாமல் அது தேங்கிவிட்டதா?

*காலம் என்பது கறங்குபோற் சுழன்று*
*கீழது மேலாய் மேலது கீழாய்*
*மாறிடுந் தோற்றம் என்பது மறந்தனை*

என்னும் கூற்றினை (மனோன்மணீயம் - பொ.சுந்தரம்பிள்ளை) நாம் மறந்து விடலாமா?

இந்தக் கேள்விகள் எழும்போதுதான் 'மரபு' என்பது பற்றி மீளாய்வு செய்யவேண்டிய நிலை தோன்றுகின்றது.

'மரபு' என்றால் என்ன?

தொல்காப்பியர் இச்சொல்லினை இலக்கண முறைமைகளுக்கும் கையாள் கின்றார். (**நூன்** மரபு, மொழி மரபு - தொல், எழுத்ததிகாரத்தின் முதல் இரண்டு இயல்கள்.)

**வினையில் தோன்றும் பாலறி கிளவியும்**
**பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்**
**மயங்கல் கூடா தம்மரபினவே**

(தொல். சொல்11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், மரபேதானும் நாற்சொல் .....

(தொல், சொல். 392)

என்றும் ஆங்காங்கு இலக்கணத்துக்கு மாற்றீடாக 'மரபு, என்ற சொல் அவராற் கையாளப்படுதல் காணலாம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகார இறுதி இயலான 'மரபியல்' மரபு என்பதை வேறொரு நோக்கில் விளக்குகின்றது.

1. மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வனவற்றின் ஆண்பால், பெண்பால், என்பவற்றை இவ்வாறு தான் வழங்கல் வேண்டும் என்றும் அவற்றின் மகவுகளை (பிள்ளைகளை) இவ்வாறுதான் அழைத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார். விதிபெறக் கூறியவற்றிலும் விதிவிலக்குகளாக - புறனடைகளாக - இவர் கூறியனவே பெரும் எண்ணிக்கையில் உள்ளன.

எ—டு:

1. ஒரு சாதிக் கீரியும் ஒரு சாதிப் பூனையும் எலியும் அணிலும் ஆகிய நான்கு பிராணிகளினதும் இளையவற்றை (மகவுகளை)க் 'குட்டி' என்ற பெயரால் வழங்கலாம்.

(தொல், பொருள், மரபியல், 561)

2. மேற்குறித்த நான்கையும் பறழ் எனவும் அழைக்கலாம். (மேற்படி-562)

நாய், பன்றி, புலி, முயல் என்ற நான்கினதும் இளையவற்றைக் குருளை என வழங்குக. (மேற்படி - 562)

நரியும் குருளை எனப்படும்.

(மேற்படி 564)

மேற்குறித்த ஐந்தையும் குட்டி, பறழ் என அழைப்பினும் தவறில்லை.

(மேற்படி - 565)

2. ஓரறிவுயிர்கள் தொடக்கம் ஆறறிவு உயிர்கள் வரைவுள்ள உயிரினங்கள் இவை. இவை என்று பாகுபடுத்துகின்றார்; அவற்றுக்கு இனமான பிறவற்றையும் (கிளை) குறிப்பிடுகின்றார்.

3. மரங்கள் என்று குறிக்கப்படுவனவும், 'புற்கள்' என்று குறிக்கப்படுவனவும் இவை இவை அவற்றின் சினைகள் (ஓலை, பாளை, தோடு, மடல், ஏடு, இதழ், ஈர்க்கு, குலை என்பன புல்லினத்துக்கானவை. புறத்தே வைரமும் உள்ளே சோத்தியுமான தென்னை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை, கமுகு என்பன மரஇனத்துக்கானவை) இவை இவை என்கிறார். மரஇனத்துக்கான (உள்ளே வைரமும் வெளியே சோத்தியுமான பலா, மா, வேம்பு முதலியன) சினைகளைக் குறிக்கும் பெயர்கள் இவை இவை என்கிறார். (இலை, தளிர் முறி, தோடு, சினை, குழை, பூ, அரும்பு, தழை முதலியன.)

(மேற்படி 641-642)

இவற்றிற் பல (புல், மரம் என்பவற்றின் சினைப்பெயர்கள் (முறி, நனை தவிர்ந்தவை) இன்றும் கையாளப்படினும், புல், மரம் என்பவற்றைத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ள மரபு இன்று பேணப்படுவதில்லை என்பது தெளிவு.

'புல் — புற்சாதியினிலையைப் புல் என்னும் வழக்கு மரங்களுக்குக் காணப்படவில்லை.'

(மகாவித்துவான் சி.கணேசையர் — மேற்படி விளக்கவுரை)

3. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைச் சாதியார்க்கும் உரியனவாகிய சிறப்படையாளப் பொருள்கள் (எ—டு: அந்தணர் - பூணூல், குண்டிகை, ஆமை வடிவாகச் செய்த இருக்கை, அரசர் - படை, கொடி, குடை, முரசு, யானை, குதிரை, தேர்ப்படை, மாலை.....) அவர்களுக்கு உரிமையற்ற பொருள்கள், அவர்களை அழைக்கக் கையாளும் சிறப்புப் பெயர்கள், அவர்களின் தொழில்கள், அவர்களைப் பாடுதற்குக் கையாளும் சிற்றிலக்கிய வகைகள் என்பவற்றைக் கூறுகின்றார்.

4. முதல்நூல், வழிநூல் என்பவற்றின் பாகுபாடுகளை உரைக்கின்றார்; நூற்பா என்னும் சூத்திரத்திற்கு வரைவிலக்கணம் உரைக்கின்றார்; உரைவகைகளை விளக்குகின்றார்; நூல்களில் அமையவேண்டிய குணங்கள், விலக்கவேண்டிய குற்றங்கள், கையாளவேண்டிய உத்திகள் என்பவற்றையும் கூறுகின்றார்.

இவற்றையெல்லாம் கூறி இவை மரபுகள் என்று வலியுறுத்திய அவர், இடையிலே

*வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான*

*(தொல், பொருள், மரபியல் 647)*

*என்றும்,*

*மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்*

*(மேற்படி 646)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்றும்,*

*மரபுநிலை திரியா மாட்சிய வாகி*
*உரைபடு நூல்தாம் இருவகை இயல*
*முதலும் வழியுமென நுதலிய நெறியின*

*(மேற்படி 648)*

என்றும் மரபினை வழக்கின் அடிப்படையிலும் (மரபு, வழக்கு என்பன ஒரு பொருள் குறித்த சொற்களாய்க் கையாளப்படுகின்றன. (மரபு — Tradition, வழக்கு Custom) சமூக (சாதி) அடிப்படையிலும், இலக்கிய அடிப்படையிலும் பேணுகின்றார்.

தொல்காப்பியத்தின் வழிநூலாகப் பவணந்தி முனிவர் ஆக்கிய நன்னூல், தொல்காப்பிய மரபுக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஒரே நூற்பாவில் 'மரபு' என்பதற்கு விளக்கம் தருகின்றது.

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

(நன். சொல் பொதுவியல் 388)

தொல்காப்பியரும் நன்னூலாரும் வரையறுத்த மரபுகளிற் பலவும் காலம் என்ற நீரோட்டத்தில் அகப்பட்டு மறைந்தொழிந்தன. அவர்களின் காலச் சமுதாயம் போன்று இன்றுள்ள சமுதாயம் அமைதியாக ஓடும் சிற்றாறல்ல; காட்டாறு. மன்னராட்சி வேர்பாறி வீழ்ந்துவிட்டது. சாதிய மைப்பு விரைவாகத் தகர்ந்து கொண்டிருக்கின்றது. இன்று 'மரபு' எனப் பேணப்படும் ஒன்று நாளையே மாறிப் புதிய மரபு தோன்றுகின்ற காலம் இந்தக் காலம்; காலத்துக்கு உகந்தவையான சமூக அமைப்பு, இலக்கிய நோக்கு. இலக்கிய வடிவம், இலக்கிய உள்ளடக்கம் என்பன உருவாகி வருகின்றன. ஒரு சிலரால் மட்டுமே மரபுஉருவாவதில்லை என்பதும் சமூக நிறுவனங்கள் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிடுவ தில்லை என்பதும் மாற்ற முடியாத உண்மைகளாய் உள்ளன. செய்யுளின் இடத்தைப் புதுக் கவிதையும், பழைமையான இலக்கண, இலக்கிய உரைநடையின் (உரையாசிரியர்களின் உரைநடை) இடத்தினை நெகிழ்ச்சி யோடு கூடிய நவீன உரைநடையும் பெற்று வருகின்ற காலத்திலே, 'மரபு' பற்றிய எண்ணக்கரு மீளாய்வுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

எனினும் சில சொல்லாட்சி மரபுகள் காலங்கடந்தும் நிலைத்துள்ள மையையும் நாம் மறந்துவிடல் கூடாது. கோழியின் இளையதைக் குட்டி என்றோ, பசுவின் இளையதைக் குட்டி என்றோ, ஓலையை இலை என்றோ, (இவ்வாறு பல எடுத்துக்காட்டுக்கள் காட்டலாம்.) அழைக்காத மரபுக் கட்டிறுக்கத்தையும் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராற்றல் மிக்க பெரும்புலவர்கள்; தங்களின் உணர்ச்சி வேகத்திலே சில வேளைகளில் மரபினை மீறிய போதும், மீறும் உரிமை உடையவராய் இருந்த போதும் (Poeticlicence) அவர்களின் வழிப்பட்டு மரபுமீறல் மேற்கொள்ளப் படுவதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே'

என்றாள் புறநானூற்றுத் தாய். (என்று கூறியதாய்ப் புலவர் பாட்டு அமைத்தார்.)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

என்றும்,

ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

என்றும் ஆறறிவு படைத்த தாய் கருவுயிர்த்தலை 'ஈன்ற' என்றும் அவளை 'ஈன்றாள்' என்றும் வழங்கினார் திருவள்ளுவர். (அக்காலத்தில் (மகப்) பெறுதல் 'ஈனுதல்' என வழங்கியதோ?)

சுருக்கவிழ்ந்த முன்குடுமிகச் சோழியப் பிராமணனை 'உனையொருத்தி போட்டாளே வேலையற்றுப் போய்' என்று சீற்றமிகுதியினால் மரபை மீறினார் காளமேகம்.

ஆனால்,

தாய், பிள்ளை ஈன்றாள் என்றோ,
தாய், பிள்ளை போட்டாள் என்றோ
மகப்பேற்றில்லத்தை மகவீனும் இல்லம் என்றோ
மகப் போடும் இல்லம் என்றோ
நாம் மாற்றிக்கொள்ளவில்லை.

இவற்றிலிருந்து தெரிவது என்னவெனில் போதிய காரணம் கூற முடியாத இடங்களிலே, 'மரபு' தனது கால்களை மொழி நிலத்தில் உறுதியாக ஊன்றி நிலைத்து நிற்கும் என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நடையியல்

பழைமையான இலக்கண, இலக்கிய, சமய, தத்துவ நூல்கள் யாவும் செய்யுள் யாப்பிலேயே அமைந்திருந்தன. அவற்றை மாணாக்கருக்கும் மற்றும் அந்நூல்களைப் படித்தறிய விரும்பியவருக்கும் விளக்கமளிக்க எண்ணிய அறிஞர், தம்முடைய ஆசிரியர்கள் வாயிலாகக் கேட்டறிந்த மரபுவழி நின்றும் தாமே கற்றுணர்ந்த நெறிநின்றும் உரைகளை ஆக்கித் தமிழ் உரைநடைக்கு வழி சமைத்தனர். தொல்காப்பியர் உரை வகைகளை நான்காய் வகுத்த போதிலும்[1] இன்று எமக்குக் கிடைப்பன மேற்குறித்த உரைகளும் சிலப்பதிகாரத்தின் இடை இடையே வரும் உரைகளுமே. இவற்றினை நுண்ணிய நோக்கில் ஆராய்ந்தோர், உரையாசிரியர் ஒவ் வொருவரினதும் நடையிலே காணப்படும் தனித்தன்மையான இயல்பு களை எடுத்துக் காட்டியுள்ளனர்.[2] இவை பற்றி விரிவாய் அறிய விரும்புவோர், வை.மு. அரவிந்தன் எம்.ஓ எல்., எழுதிய **'உரையாசிரியர் கள்'** என்ற நூலிற் கண்டுகொள்ளலாம்.

யாப்பிலக்கணத்தினை நன்கு கற்று, போதிய சொற்களஞ்சியமும் கைவரப் பெற்றோர் ஓசை ஒழுங்கமைந்த செய்யுள்களைக் கட்டுதல் எளிது. ஆனால் அவர்களாலே உணர்ச்சி நலம், கற்பனைத் திறன், பொருத்தமான சொற்களைப் பொருத்தமான இடந்தெரிந்து கையாளும் வல்லமை, படிப்போர்க்கு இன்பம் பயக்க வைக்கும் ஆற்றல் என்பன நன்கு அமைந்த கவிதைகளைப் படைத்தலோ அரிது. இது போன்றே தமிழிலக்கண அறிவும் சொற்களஞ்சியத் தேட்டமும் வாய்த்தோர் பிழை யற்ற உரைநடையைக் கையாளலாம். ஆனால் தமக்கெனத் தனித்தன்மை வாய்ந்த உரைநடையைப் படைத்துக் கொள்ள அவர்கள் முயலவேண்டிய தாய் இருக்கும். ஆனால் இலக்கியச் சுவை வாய்ந்ததும் கூர்மையானதும், படிப்போரின் நெஞ்சங்களைப் பிணிப்பதுமாகிய உரைநடை, படைப்பா ளர்களான இலக்கியவாதிகளுக்கும் திறனாய்வாளருக்குமே எளிதாகும். இத்தகையோர் தமக்கென ஒரு நடையினை ஆக்க வல்லவர் என்பதால், இவர்களின் நடை பற்றி ஆராய்தல் 'நடையியல் (Stylistic) என்பதன் பாற்படும்.

---

[1] தொல்காப்பியம் - பொருளதிகாரம், செய்யுளியல் 485.

[2] 'உரையாசிரியர்கள்' - மணிவாசகர் பதிப்பகம், சென்னை (திருத்திய பதிப்பு) 1983.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையியல் பற்றிய சிந்தனையும் திறனாய்வும் அண்மைக் காலத்தன. ஐரோப்பியரின் வருகையோடு தமிழ் உரைநடை புதியதொரு திசை நோக்கித் திரும்பலாயிற்று. ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரிமார் தமது சமயப் பிரசாரத்திற்கு உகந்த வகையிலே பொது மக்களைக் கவர்வதற் காய், - அவர்கள் எளிதிலே விளங்கிக் கொள்வதற்கு - எளிய உரைநடையிலே நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் தமிழில் எழுதி அச்சிற் பதித்து வெளியிடலாயினர். அது நாள் வரை அறிவுசார் கருத்துக்களின் ஊர்தியாய் விளங்கிய உரைநடை, உணர்சிப் பொலிவுடன் கூடிய இலக்கிய ஆக்கங்களையும் வெளியிட உகந்த ஒன்றாக மாறியது. இந்த மாற்றத்திற்கு முன்னோடியாய் அமைந்தவர் வீரமாமுனிவர். கதை வடிவில் அவர் எழுதிய **'பரமார்த்த குரு கதை'** என்னும் 'அவிவேக பூரண குருகதை', உரைநடைக்கு இலக்கிய மெருகூட்டிப் புதுவழி சமைத்த தெனலாம். சிவஞானமுனிவர் காலம் வரை (- 1785) பழைய உரையாசிரி யர்களின் தடத்திலே சென்ற உரைநடையானது, இலக்கண வரம்போடு ஓரளவு எளிமையும் வாய்ந்ததொன்றாய் மாறத் தொடங்கியது; ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822—1879) காலத்திலிருந்தே என ஆய்வாளர் கொள்வர். 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று 'பரிதிமாற் கலைஞர்' (வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்.) நாவலரைப் புகழ்வது குறிப்பிடத் தக்கதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே 'நவீனம்' (Novel) என்ற புத்திலக்கிய வடிவமும் இருபதாம் நூற்றாண்டின் முதற் காலிலே 'சிறுக தை' இலக்கிய வடிவமும் ஆங்கில மொழியின் தாக்குறவினால் தமிழுக்கு அறிமுகமாயின. மாயூரம் வேதநாயகம்பிள்ளை (1826—1889) எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரமே' தமிழின் முதல் நவீனமாகும். இது வெளியான ஆண்டு 1879. ராஜமையரின் 'கமலாம்பாள் சரித்திரம்' மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' என்பன அடுத்துத் தோன்றிய குறிப்பிடத்தக்க நவீனங்கள். 'சிறுகதையின் முதல்வர்' என்று போற்றப்ப டும் வ.வே. சுப்பிரமணிய ஐயரின் (வ. வே. சு. ஐயர்) 'குளத்தங்கரை அரச மரம்' அல்லது 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற சிறுகதைத் தொகுதி 1927 இல் வெளியாயிற்று. வருணனைகள், நீண்ட உரையாடல் கள், கிளைக் கதைகள், பெருமளவு வடசொற்கள் விரவிய உரைநடை என்பவற்றை அக்கால நவீனங்களிலும், இவ்வமிசங்களிலே சில குறைந்த னவாய்ச் சிறுகதைகளிலும் காணலாமெனினும், இவற்றில், தனித்தன்மை யான நடை கையாளப்பட்டது என்று கூறல் இயலாது. பாட்டிற் புரட்சி செய்த பாவலன் பாரதியே, இருபதாம் நூற்றாண்டு உரைநடையின் செல்நெறிக்கு வித்திட்டு (வடசொற்கள் பல விரவிய நடையாயினும்) 'நடையியல்' என்ற கருவுக்கு உருவளித்தவன் என்று கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையியல் (Stylistics)

அறிவியல் சார்ந்தனவும் புற அலங்காரங்கள் எவையுமின்றி எடுத்துக் கொண்ட பொருளினைத் தெளிவாகவும் நேராகவும் எடுத்துரைக்க வேண்டுவனவுமான கட்டுரைகள் ஒரு சீர்மையானவாய் இருத்தல் தவிர்க் கவியலாததாகும். காரணகாரியத் தொடர்பும், தருக்கவியல் கடவாமையும் இவற்றின் சிறப்பியல்புகள். இவற்றின் மூலம் ஒருவரின் தனித்தன்மை யான நடையினை அளந்தறிதல் பயனற்ற முயற்சியே. ஆனால் உணர்ச்சிக ளோடும், உணர்வுகளோடும் தொடர்புடைய படைப்பிலக்கியங்களை உருவாக்குவோர், தாம் எடுத்துக்கொண்ட பொருளோடு அதனைக் கையாளும் வடிவத்திலும் கூடிய கருத்துச் செலுத்துவது இன்றியமையா தது.[5] இதனையே உருவம் (Form) உள்ளடக்கம் (Content) என வகைப்ப டுத்துவதுண்டு. இந்நிலையிலேதான் நடையியல் பற்றி நோக்கவேண்டிய தேவை உண்டாகின்றது.

தனித்தன்மையான நடை என்று ஒருவரின் ஆக்கங்களிலிருந்து முடிவுக்கு வருதல் அரிது என்றும் எனவே நடையியல் என்பது ஒரு மாயை என்றும் சிலர் கொள்கின்றனர். ஆனால் உரிய நோக்குநிலை நின்று, அவரின் ஆக்கங்களைப் படித்தவர், முன்னவரின் ஆக்கம் ஒன்று அவரால் ஆக்கப்பட்டது என்று பெயர்சுட்டி அறியாதபோதும் ''இது இன்னவருடைய படைப்பு'' என்று கூறக்கூடியதாய் இருக்குமானால் அதனைப் படைப்பாளிகள் தனித்தன்மையான நடை என்று கொள்ளலாம். இவ்வாறு படைப்பாளர் பலரினதும் ஆக்கங்களைத் தனித்தனி படிப்பதன் மூலம் அவ்வவரின் தடையினைத் தொகுத்தும் வகுத்தும் நோக்கி முடிவு செய்வதே நடையியலாகும்.

நடையியலுக்கு அடிப்படைகளாய் அமையவேண்டுவன பற்றி வெளியாகியுள்ள சில கருத்துக்களைக் காண்போம்.

முதலிலேயே கூறியாங்கு, தொல்காப்பியர் நான்கு வகையான உரைநடைகள் பற்றிக் குறிப்பிட்ட போதிலும் அவரும் அவர் பின்வந்த உரையாசிரியர்கள். இலக்கண ஆசிரியர்கள், கவிஞர்கள் என்போரும் கவிதையின் நடைப்பாங்கு பற்றித் தாந்தாம் உணர்ந்தபடி விளக்கம்

[5] சிலப்பதிகாரத்தின் இடையிடையே வரும் உரைகள், இறையனார் களவியல் உரை. நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலாம் உரையாசிரியர்களின் உரைகள் என்பவற்றில் ஆங்காங்கே கவிதைப்பாங்கும் வெளியாவது விதிவிலக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்தனரேயன்றி, உரைநடைக்கான சிறப்பியல்புகள் பற்றி ஆராய்ந்த மைக்குப் போதிய சான்றுகள் இல்லை. நன்னூலின் பொதுப்பாயிரத்திலே, நூலினதும், உரையினதும் (Commentary) பத்து நல்லியல்புகள் (அழகு கள்), பத்து இழிவியல்புகள் (குற்றங்கள்) கூறப்படுவது ஒருவகையில் உரைநடை (Prose) பற்றிய சிந்தனையின் வெளிப்பாடு எனவும் கொள்ள லாம்.[4] அவையாவன:

1. நல்லியல்புகள் (அழகுகள்)

சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு (படிப்பவ ருக்கு) இனிமை, நன்மொழி (நல்ல சொல்) புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைத்தல், உலகம் மலையாமை (விளக்க மன்றி மயங்க வைக்காமை), விழுமியது (சிறந்த பொருள்) பயத்தல் (தரல்.)

2. இழிவியல்புகள் (குற்றங்கள்)

குன்றக் கூறல் (கூறவேண்டிய அளவிலும் குறைவாகக் கூறுதல், மிகைபடக் கூறல் (சொல்ல வேண்டியதிலும் மிகுதியாகச் சொல்லல்) கூறியது கூறல், மாறுகொளக் கூறல் (முரண்படச் சொல்லல்), வழூஉச் சொற் புணர்த்தல் (வழூஉ(வழு)- பிழை, குற்றம், மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல் (பயனில்லாதவற்றைக் கூறல்) மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்து இறுதல் (போகப்போக நலிவடைந்து முடிதல்), நின்று பயனின்மை (சொற்கள் தொடர்ந்து நின்றும் பயன்படாமை)

இன்று நடையியல் பற்றி ஆராய்வோர், எடுத்துக்காட்டும் பலவற்றை யும் வியக்கத்தக்கவகையில் மேற்குறித்தவை உள்ளடக்கியுள்ளன என லாம்.

சிறந்த உரைநடை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதற்கு, பெறாபேட் லூயிஸ் ஸ்ரிவின்சன் (Robert Louis Stevenson) என்ற ஆங்கிலக் கதாசிரியர் கூறியதாய், வை. ம அரவிந்தன் (உரையாசிரியர்கள் பக். 67) எடுத்துக்காட்டியுள்ள மேற்கோளின் மொழிபெயர்ப்பு இது;

*''சொற்றொடர்களில் முதன்மையாக ஒத்திசைவும் செவிக்கினிமை யும் அமைதல் வேண்டும். இரண்டாவதாக அவற்றைப் படிக்கும்*

---

[4] இலக்கண நூற்பாக்களுக்கும், அவற்றைப் பொருள் புலப்படுமாறு எடுத்து விரித்து உரைகூறும் உரையாசிரியர்களுக்கு -மென வகுத்தவையாயினும் இன்று உரைந டையினை ஆற்றலோடு கையாள்பவர்க்கும் இவை ஒரு வகையில் வழிகாட்டக் கூடியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்களுக்கு இசையின் இன்பத்தினை வழங்கல் வேண்டும். மூன்றாவதாக எழுதுவோன் தன்னுடைய வாதங்களை அழகுடனும் தருக்கநெறியுடனும் கையாளல் வேண்டும். அவன் இவற்றுக்குப் பொருத்தமானவையும், தெளிவானவையும், தொடர்பொழுங்கானவையுமான சொற்களைத் தெரிந்து கையாளல் வேண்டும்.''

நன்னூல் பொதுப்பாயிரத்தில் கூறப்பட்ட நவின்றோர்க்கு இனிமை, ஓசையுடைமை என்பன மேலே காட்டிய கூற்றிலே செவிக்கினிமை, இசையின்பம் என்பவற்றோடு ஒப்பிடத்தக்கன. ரா.பி.சேதுப்பிள்ளை, விபுலாநந்த அடிகள், அறிஞர் அண்ணா ஆகியோரின் உரைநடைகளிலே இவை, மித அளவிலும், இவர்களைப் பின்பற்றி எழுதுவோரில் மிகையளவிலும் காணப்படுகின்றன. இன்று புதுக்கவிதை மேலாண்மை பெற்றுக் கவிதைக்கு ஓசைப் பண்பு வேண்டியதில்லை என்ற நிலை தோன்றியதன் பின்பும், உரைநடையில் அது தவிர்க்கப்பட வேண்டியதே என்பதற்கு ஐயமில்லை. ஆனால் பொருத்தமான சொற்றெரிவு (Diction) என்பது எக்காலத்திலும் புறக்கணிக்கக் கூடியதன்று. சொல்லாகிய உடலுக்கு உயிர் அளிக்கும் கடப்பாடுடைய படைப்பாளி, சொற்பொருத்தப்பாட்டிலே கவனத்தை ஊன்றுவது மிக மிக இன்றியமையாததே.

(இது பற்றித் 'திரிசொற்கள்' என்ற இயலிலே கூறப்பட்ட தாயினும் அதனை மேலும் வலியுறுத்த ஒரு மேற்கோளினைத் தருகின்றோம்.)

*''நல்ல சொற்றெரிவு என்பது சரியான சொற்களைத் தெரிதலே, கருத்தைச் சரியாகவும், ஆற்றலுடையதாகவும் வெளிப்படுத்தும் சொற்களைக் கையாளுந் திறமே சொற்றெரிவாகும். அத்தகைய சொற்ககள் அண்ணளவினவல்லாது மிகச சரியானவையாக இருக்கின்றனவா என்பதே முதன்மையானது. இது மிக எளிமையான விதிதான். ஆனால் கையாளும் பொழுதுதான் அதன் கடினம் தெரியவரும்.''*

*நடையியலின் முதன்மையான நான்கு கூறுகளாக இதே நூலிலே பின்வருவன கூறப்படுகின்றன.*

1. வாக்கியக் கட்டமைப்பு (Sentence Structure)
2. சொற்றெரிவு (Diction)
3. அணிநலம் (Rhetoric)
4. ஒத்திசைவு (Rhythm)

இவற்றுள் முதலாவது கூறின் இன்றியமையாமை பற்றியும் அதனைக் கை நெகிழ்ப்பதால் விளையும் முரணிலைகள் பற்றியும் இந்நூலின் முதல் இயலான 'வாக்கியத்திலே சொல்லொழுங்கு' என்பதிலே பல எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கியுள்ளோம். சொற்றெரிவு பற்றி இதற்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள்ள பந்திகளிலே விளக்கம் தரப்பட்டன. உவமை, உருவகம் என்பவற்றோடு இன்று படிமங்ககள். குறியீடுகள் என்பனவும் இலக்கிய ஆக்கங்களில் இடம்பெற்று அழகு செய்கின்றன. (இந்நூலின் பிற்சேர்க்கையிலே இன்று கையாளப்படும் சிறந்த உவமைகள் உருவகங்கள் என்பவற்றிலிருந்து சில எடுத்துக்காட்டுக்கள் தரப்படும்.)

[1] ஒத்திசைவு (Rhythm) என்பது எதுகை மோனைகள் கொண்டு செயற்கையாக அமைக்கப்படும் வாக்கிய அமைப்பன்று என்பதை இவ்விடத்திலே கூறியாக வேண்டும். ஒரு படைப்பினை வாசிக்கையில் அது உள்ளத்திலே ஏற்படுத்தும் அதிர்வுகள், உணர்ச்சிக் கிளர்வுகளால் உண்டாகும் ஒருவகை ஒத்திசைவே - மனத்தால் உணர்ந்து அநுபவித்தற்கான வாய்ப்பினை வழங்கும் ஒத்திசையே - நாம் கருத்திற்கொள்ள வேண்டுவதாகும். முற்கால யாப்புக் கவிதைகளிலே சிறந்தவை, கம்பன் கூறியாங்கு, செவிநுகர் கனிகள், இன்று நவீனங்கள், சிறுகதைகள், நாடகங்கள் என்பன 'உளம் நுகர்கனிகளாக அமையவேண்டும், என்பதே தரமான வாசகர்களின் எதிர்பார்ப்பு.[6]

பழைமை யாவும் கைவிடப்படவேண்டியன எனவும் புதுமை யாவும் கொள்ளப்பட வேண்டியன எனவும் பலரிடையே ஒரு கருத்து நிலவுகின்றது. இது முழு உண்மை அன்று. பழைமையிலும் கொள்ளத் தக்கன உள்ளன. புதுமையிலும் தள்ளத் தக்கன உள. கவிதை, கலைத்திறனாய்வு எவ்வகையில் நிகழ்தல் வேண்டும் என்று பெருங்கவிஞரும் திறனாய்வாளருமான ரி.எஸ்.எலியற் (T.S.Eliot) கூறியன, உரைநடையில் அமைக்கப்படும் ஆக்க இலக்கியங்களுக்கும் பொருந்துவனவே.

*''எந்த ஒரு கவிஞனோ, எந்த ஒரு கலைஞனோ தன்னளவிலே மட்டும் பொருளைப் புலப்படுத்துபவனல்லன். அவனது சிறப்பியல்பு அவன் இறந்த காலத்துக் கவிஞனோடும், கலைஞனோடும் அவர்களின் ஆக்கங்களோடும் தொடர்புற்று நயந்த அளவினைக் கொண்டே*

---

Brooks & Warren - Modern Rhetoric - Djction P.247 Harcourt Brace & Wored Inc, Newyork 196

[6] சொற்களின் தொடுப்பு அல்லது நடை, அந்த நடையினால் தொடுக்கப்படும் கட்டுரை என்பது ஒருவகைச் சொல் இசையாகும். அந்த இசை இன்பம் மனிதன் நாவில் சுழன்று, செவிகள் மட்டும் எட்டி மறைந்துவிடுவது அன்று. அவனுடைய உள்ளத்தையே தொட்டு அங்கே பலப்பல உணர்ச்சிகள், எண்ணங்கள், கருத்துக்கள், பொருள்கள் ஆகியவற்றைக் கிளறிவிடும் விந்தை அது.'' (இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்கிய இலக்கிய விமர்சகர் லான்ஜைனஸ் கூறியது. (மொழிபெயர்ப்பு: பி.எஸ்.ராமையா, மணிக்கொடிகாலம், பக். 36.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாவதாகும். நிகழ்காலக் கவிஞனை அல்லது கலைஞனை அவன் ஆக்கங்கள் கொண்டு மட்டும் மதிப்பிடலாகாது. அவனை இறந்த காலத்தவரான கலைஞர் கவிஞர்களோடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியுமே மதிப்பீடு செய்தல் வேண்டும். இம் மதிப்பீடு அழகியற்கலையை அடிப்ப டையாகக் கொண்டு அமைவதன்றி வரலாற்றுத் திறனாய்வாக அமைதல் வேண்டும் என்பது எனது கருத்தன்று''

நடையியல் பற்றி மேலே கூறப்பட்டுள்ள யாவற்றையும் தொகுத்து நோக்குகையில், அது நாம் நினைப்பது போல் எளிதான ஒன்றல்ல என்ற உண்மை புலனாகும். நடையியல் பற்றி ஆய்வு மேற்கொள்வோரும் இதனை உணர்ந்தேயுள்ளனர் என்பதற்குப் பின்வரும் பந்தி சான்றாகும்.

*''நடையியல் பற்றிய உண்மையான சிக்கல் அதுபற்றிக் கலந்தாராய் கையிலேதான் ஏற்படுகின்றது. அதன் பண்பு அதன் முழுமையான பெறுபேற்றைக் கொண்டு அறிய வேண்டுவதாகும். ...... வாக்கிய அமைப்பு, சொற்களஞ்சியம், அணிநலம், ஒத்திசைவு* **(Rhythm)** *என்பன வும் இவை போன்ற பலவும் திரட்டப்பட்டு ஆய்வுக்குள்ளாகும்போது தான் நடையின் பெறுபேறு உறுதிப்படுத்தப்படும். எந்தக் கூறு முக்கியமா னதாக அல்லது பெருமளவு முக்கியமானதாக அமைந்து எழுதியவரின் சிறப்புப் பண்பைப் புலப்படுத்துகின்றது என்று தேர்ந்தெடுப்பது வாசக ரைப் பொறுத்தவரை எப்பொழுதுமே எளிதாக இருக்கும் என்று கூறவிய லாது. எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்ட அடிப்படையிலே பொறியியக்கச் செயலாகத் தமக்கே உரித்தானது என்று ஒரு நடையை அமைத்துக் கொள்வது என்பது முற்றிலும் இயலாத ஒன்றேயாகும். நடை என்பது எழுத்தாக்கத்திலிருந்து தனித்துப் பிரித்துக் காண முடியாதது. ஏனெனில் எழுத்தாக்கம் முழுவதிலுமே நடை செறிந்துள்ளமையே'' (Brooks and Warren—249.)*

மேற்குறித்த கூற்றுக்களிலிருந்து நடையியல் பற்றிப் பகுத்து நோக்கு வது மிகக் கடினமானது என்ற உண்மை நன்கு புலனாகும். எனினும் எழுத்தாளர், கட்டுரையாளர் ஆகியோர் தமது வாசிப்பு விரிவுகொண்டும், தனித்திறன் கொண்டும் தமக்கென ஓர் உரை நடையினை அமைப்பதற்கு முயலல் வேண்டும். *'முயற்சி திருவினை ஆக்கும்.'*

---

[7] *T.S. Eliot - selected Essays - Tradition & Individual Harcourt Brace & World Inco - Newyorle 1964*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடையியல் சார்ந்த மேலும் சில கருத்துக்கள்[8]

1. எந்த இலக்கியமாயினும் அதன் நடைபற்றி ஆராய்வது எளிதன்று.

*மு.வரதராசன்*

2. நடை என்பது ஓர் ஆசிரியரின் மேற்சட்டை போன்றதன்று என்றும் உடலின் தோல் போன்றது என்றும் கூறுவர்.

*கார்லைல்*

3. நல்ல நடை என்பது படிப்பவர்களைக் கடைசி வரையில் சலிப்பூட்டாமல் தன்னோடு இழுத்துச் செல்ல வேண்டும். நடை என்பது கவிதையைப் போல் ஒலி நயமும் அறிவியல் போல் திட்ப நுட்பமும் யாழ் ஒலிபோல் இனிமையும் தீயின் கொழுந்து போல எழுச்சியும் வீழச்சியும் மிக்கதாய் இருக்க வேண்டும்.

*பிளாபாட்*

4. நடை என்பது கேவலம் தூயசொற்களாலே மட்டும் உண்டாவதன்று. அது சொற்களின் சேர்க்கையாலும் அச்சேர்க்கையிலும் கலப்பிலும் பிறக்கும் வேகத்தினாலும் உண்டாவதாகும்.

*க. கைலாசபதி*

5. நடை என்பது கருத்துக்களைப் பொறுத்து மட்டும் இருப்பதில்லை. வார்த்தைகளைக் 'கீத்து' (கிடுகு) முடைவதுமல்ல. சலியாத ஓட்டத்தை ஊட்டுவதை ஊட்டுகின்ற ஜீவதாது வைத்தான் நடைஎன்று சொல்லவேண்டுமே.

*சங்கு சுப்பிரமணியன்*

6. எந்த நடையில் சொற்றொடர்கள் மிதமிஞ்சிய வர்ணப்பூச்சுக்கள் பெறுவதில்லையோ, மன உணர்ச்சிக்கேற்பக் கட்டு மீறிப் போவதில்லையோ, அழகானது செட்டாக உபயோகப்படுகிறதோ, சொற்கள் சாமானியமானவையாயினும் சரியானவையாக உள்ளனவோ அந்த நடையையே அனைவரும் அங்கீகரிப்பர்.

*ப. கோதண்டராமன்*

**தனித்தன்மை வாய்ந்த உரைநடைகளுக்குச் சில எடுத்துக்காட்டுக்கள்!**

பழைய உரையாசிரியர்கள் கையாண்ட நடை இன்று எவராலும் பின்பற்றப்படுவதில்லை. அவற்றின் நீட்சி இலக்கண கட்டிறுக்கம்,

---

[8] தா. எ. பியூலா மேர்சி எம்.ஏ., எழுதிய 'இருபதில் சிறுகதைகள்,' என்ற ஆய்வுநூலிலே தரப்பட்ட மேற்கோள்கள்.
தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிழந்த சொற்களினது வெளிப்பாடு என்பன அவ்வகை நடையி னைத் தொடராமைக்கு வலுவான காரணங்களாகும்.

எனவே, இக்கால உரைநடைக்கான முன்னோடித் தன்மை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் நடையிலேயே காணப்படுகின்றது என்பதால், அவரின் உரைநடையிலிருந்து தெரிந்தெடுத்த ஒரு பந்தியோடு தொடங்கி மேலும் சிலரின் உரைநடை வகைமாதிரிகள் தரப்படுகின்றன.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 - 1879)

நாவலர் உரையாசிரியர்; **(திருமுருகாற்றுப்படை, சிவதரு மொத்தரம், கோயிற்புராணம், சைவசமயநெறி முதலாம் நூல்க ளுக்கு உரைகண்டவர்)** கண்டன காரர்; (சைவசமய நெறிக்கு முரணான செயற்பாடுகளுக்கு எதிரான கண்டனங்கள் **(நாவலர் பிரபந்தத் திரட்டு)**, புராணநூல்கள் சிலவற்றை வசன வடிவிலே தந்தவர்; **(பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்த புராண வசனம் (அசுரகாண்டம்வரை)** மாணாக்கருக் கான தமிழ்ப்பாட நூல்களின் ஆசிரியர் **(2ஆம் 4ஆம் பாலபாடங் கள்)** தாம் எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமான வெவ்வேறு நடைகளை அவர் கையாண்டமை குறிப்பிடத்தக்கதா கும். இவற்றுள்ளே, புராணவசன நூல்களும், பாலபாட நூல்களுமே இருபதாம் நூற்றாண்டுக்கான உரைநடையின் முன்னோடிகளாய்க் கொள்ளத்தக்கன. சந்தி பிரித்தல், புணர்ச்சி விதிகளை மீறாமலே புணர்ச்சிகள் வரவேண்டிய இடங்களிலே, சாரியைகளைக் கையா ளல், (எ—டு இடத்தில் கண்டேன் - புணர்ச்சி விதிப்படி இடத்திற் கண்டேன் என வரல் வேண்டும். ஆனால் 'ஏ' காரச் சாரியை சேர்த்து இடத்திலே கண்டேன் என்றாங்கு எழுத வழிகாட்டியவர்.) சிறுச்சிறு வாக்கிய அமைப்பு, இயற்சொற்களையே பெரும்பாலும் கையாளல், குறியீடுகளைப் பயன் செய்தல் என்பனவே இந்நூல்களிலே (புராண வசனங்கள், பாடநூல்கள்) நாவலர் கடைப்பிடித்த தனித்தன்மைகள் எனலாம்.

*''சில நாள் கழிந்தபின், சோழராசன், வரகுண பாண்டியனோடு போர்செய்யக் கருதித் தன் சேனையோடு வந்து மதுரையை அணுகினான். வரகுணபாண்டியன் அஃதறிந்து தன் சேனை யோடு எதிர்ந்து பொருதான். போரிலே சோழன் சேனை பாண்டியன் சேனைக்குத தோற்றோடிற்று. சோழனும நாணிப் புறங்காட்டி ஓடினான். வரகுணபாண்டியன், சோழனைப் பிடிக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கும் பொருட்டுத் துரத்திக் கொண்டோடும் பொழுது காவேரி நதியை அடைந்தான். அடைந்து, பூசத்துறையிலே ஸ்நானஞ் செய்து, அக்காவிரிக்குத் தென்பக்கத்துள்ள திருவிடைமருதூரிற் சென்று, திருக்கோயிலினது கீழை வாயிலைக் கடந்து சென்றான்.*

*(திருவிளையாடற் புராண வசனம், வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்.)*

## 2. சுப்பிரமணிய பாரதியார் (1882 - 1921)

சுப்பிரமணிய பாரதியார் 'பேசுவது போலவே எழுத வேண்டும்' என்ற கொள்கையுடையவர். இதழியற்றுறையிலே (Journalism) ஈடுபட்டு உழைத்தவராதலால், பல துறைகளையும் சார்ந்த கட்டுரைகளை எழுதிய தோடு, புதினம் (மஞ்சரியின் கதை), சிறுகதை (ஆறில் ஒரு பங்கு, டிண்டிம சாஸ்திரி முதலியன) என்ற புதிய வரவுகளிலும் அவருடைய கைவண்ணம் வெளிப்பட்டது. படிப்பவர் உள்ளத்தை உறுத்தவும் சிந்திக்க வும் தூண்டுவதாய் மட்டுமன்றி ஒருவகை மிடுக்கும் அங்கதமும் (Satire), ஒளிவுமறைவற்ற நேரிய போக்கும், படிப்பவனோடு இழைந்து அவ னோடு நேருக்குநேர் பேசுவது போன்ற பிரமையை ஏற்படுத்தும் பாங்கும் பாரதியாரின் உரைநடையின் தனித்தன்மைகளாகும்.

*''நெல் எப்படி விளைகிறது என்பதைக் கற்றுக் கொடுக்காமல், 'அன்மொழித் தொகையாவது யாது?' என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும்போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன் மொழித்தொகை சிலரைக் காப்பாற்றும்; ஊர் முழுவதையும் காப்பாற் றாது. அன்மொழித் தொகையைத் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர்செய்து, நெல்லை மறந்துவிடுவது சரியான படிப்பில்லை என்று சொல்லுகி றேன். அவ்வளவுதான்.''*

*(பேராசிரியர் க.கைலாசபதியின் 'பாரதி ஆய்வுகள்' நூலில் வந் துள்ள எடுத்துக்காட்டு பக்.213)*

## 3. மறைமலை அடிகள் (1876-1950)

பாரதியார் உட்பட அவரின் சமகாலத்தவரான பலரும் வடமொழிச் சொற்களைப் பெருமளவிலே கையாண்டதால், தமிழின் தூய்மை கெடுவ தாயும் அதன் வெளிப்பாட்டுத் திறன் மழுங்கடிக்கப்படுவதாயும், சொற்க ளஞ்சியம் படிப்படியாகப் பயன்பாட்டிற் குறைந்து இறந்து போவதாயும் உணர்ந்தவர்களுள் முதல்வர், சுவாமி வேதாசலம் என்ற மறைமலையடி கள், தனித் தமிழிலேயே எந்தக் கருத்தையும் புலப்படுத்தலாம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளராத நம்பிக்கையும் துணிவும் இவருக்கிருந்தன. தமிழ்ச் சொற்களின் இழுமென்னோசையும், பழைய உரையாசிரியர்களின் உரைச்சாயலும், வேண்டும் பொழுது வடமொழி உட்படப் பிறமொழிச் சொற்பொருளுக்கு அமைவான புதுச் சொற்களின் அறிமுகமும் மறைமலை அடிகளின் உரைநடையிற் காணத்தகும் சிறப்பியல்புகளாகும்.

*''இன்னும் இங்ஙனமே மின்னின் ஆற்றலையும் ஒலியின் இயக்கங்களையும் ஒலியின் பதிவுகளையும் ஒளியின் விரைவு ஒளியின் பதிவுகளையும் இரவும் பகலும் உற்றுநோக்கி ஆராய்ந்து அவற்றைப் பேருழைப்பினாலும் பெருமுயற்சியினாலும் பயன்படுத்திவரும் மேல்நாட்டாசிரியரின் கைம்மாறு கருதா உதவியினாலன்றோ கம்பிச் செய்தியும் கம்பியில்லாச் செய்தியும் நிழலுருவும் ஒலியெழுதியும் வானவூர்தியும் பிறவும் பெற்று அளவிறந்த நலங்களை அடைந்து வருகின்றோம். இன்னும் எவ்வளவோ நலங்களை அடையப் போகின்றோம். ஆகவே இவ்வுலகுடனும் இவ்வுடம்புடனும் உயிர் கட்குண்டான சேர்க்கை, அவ்வுயிர்கட்கு—அறிவையும் இன்பத்தையும் மேன்மேற் பெருகச் செய்தற் பொருட்டே வந்ததா மென்பதூஉம், அதுபற்றியே மக்களும் மற்றையுயிர்களும் இவ்வுலக வாழ்வினைத் துறந்துபோக விரும்பாமல் அதன் கண் நிலைபெற்றிருப்பதற்கே விழைகின்றரென்பதும் நினைவிற் பதிக்கற்பாலன்வாகும்.''*

*(தமிழர் கொள்கை - பண்டிதர் சு.வேலுப்பிள்ளை தொகுத்த கட்டுரைக் கோவை, பக்.34)*

### 4. திரு.வி. கலியாணசுந்தர முதலியார் (திரு. வி. க. 1883-1953)

மறைமலையடிகளின் தனித்தமிழ் உரைநடை சிலகாலம் மேலாண்மை பெற்று விளங்கியது. அவரின் மாணாக்கரும் (நாவலர் சோமசுந்தர பாரதியார், பாலசுந்தரனார் (இளவழகனார்) முதலியோர்) தனித்தமிழ் ஆர்வலரும் (தேவநேயப் பாவாணர் முதலியோரும்) தனித்தமிழ் நடைக்கு முதன்மை வழங்கிக் கையாண்டனர். ஈழத்தில், இளமுருகனார் (நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் மகன்). வேந்தனார் முதலியோரும் இவர்களின் வழியைப் பின்பற்றினர். எனினும் தனித் தமிழ் நீண்டநாள் வாழவில்லை. இயன்ற அளவு தமிழ்ச் சொற்களையே கையாண்டு, தமக்கென ஒரு நடையினை அமைத்துக் கொண்ட தமிழறிஞருள் முதல்வராய்க் கொள்ளத்தக்கவர் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் ஆவர் மரபுமுறைக் கல்வியோடு ஆங்கில அறிவும் கணிசமான அளவு பெற்றிருந்த இவர், **'நவசக்தி'** திங்கள் இதழின் ஆசிரியராயும், சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவாளராயும், தொழிற்சங்க வாதியாயும் விளங்கியவர். வட மொழி ஆங்கிலச் சொற்களைப் பெருமளவு கையாண்டு இலக்கண வரம்பை மீறிச் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் தமிழுக்கு ஊறு செய்துவந்த ஒரு காலகட்டத்தில், செவ்விய செந்தமிழ் உரைநடைக்கு உயிரளித்து அதனைத் திறம்படக் கையாண்ட சிறப்பு திரு.வி.க. அவர்களுக்கே உரியது. ஆற்றொழுக்குப் போன்ற தெளிவும் ஓசைநயமும், வினாக்களை வினாவி, விடையறுப்பதாகிய உத்தியை இடையிடையே கையாண்டு, தாம் வலியுறுத்த விரும்பிய கருத்தினைப் படிப்போருள்ளங்களிலே பதித்தலுமான சிறப்புப் பணபுகள் இவரின் உரைநடையிலே காணத்தக்கன.

*''அழகு எதன் வாயிலாக உணரக் கிடக்கிறது? அழகு தன்னையுடைய இயற்கை வாயிலாக உணரக் கிடக்கிறது. அதற்கும் இதற்குமுள்ள தொடர்பென்ன? அழகுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பை என்னவென்று கூறுவது? (அழகின் உடல் இயற்கை) இயற்கையினூடே அழகு நீக்கமின்றி விராவி நிற்கிறது. இயற்கையை விடுத்து அழகை ஆராய்ந்துணரல் அரிது. அழகின் இருப்புணர்தற்குக் கருவியாயுள்ள இயற்கையும் அழகைப் போல உள் பொருளேயாம். இயற்கை, பலப்பல வடிவங்களாகத் தோன்றித் தோன்றி மறையினும் அதன் முதல் கேடுறுவதில்லை...*

*(அழகின் இயலும் கூறும் - முருகன் அல்லது அழகு பக்கம் 15)*

### 5. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (1899-1986)

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நாவலரின் மாணாக்கர் பரம்பரையில் வந்தவர். இலங்கைப் பல்கலைக்கழகம், இவருடைய ஆழ்ந்த தமிழ்ப் புலமையைக் கணித்து இவருக்கு இலக்கியப் பேரறிஞர் (Doctor of literature என்ற பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தது. நாவலரின் மருகரும் தமிழிலக்கிய இரசனையிலே தோய்ந்தெழுந்தவருமான வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளையின் நேர்மாணாக்கரல்லராயினும் அவரின் நயப்பு முறை பற்றித் தம் ஆசிரியரும் வழிகாட்டியுமான ஸ்ரீமத் த. கைலாசம்பிள்ளை மூலம் நன்கு செவியுற்றும் அவரது கம்பராமாயணத்துக்கு எழுதிய கலைக் குறிப்புக்களைப் படித்தும் இவர் அவற்றைத் தம்முள்ளே செறியச் செய்து கொண்டார். தங்காலத்திலே தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே ஒப்பற்ற அறிஞராய் மிளிர்ந்த சுன்னைக் குமார சுவாமிப் புலவரிடம் ஆறாண்டுகள் கற்கும் பெருவாய்ப்பும் இவருக்குக் கிட்டிற்று. திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையிலே தமிழ் விரிவுரையாளராய் முப்பதாண்டுகள் கற்பித்த பட்டறிவு, தமிழோடு ஆங்கிலத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் திறன் படைத்த அறிஞர்கள் வாயிலாய்ப் பெற்ற கேள்வி ஞானம். சமகாலத்துத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை வாசித்து நவீன இலக்கியப் போக்குப் பற்றித் தெரிந்துகொண்ட அறிவு. இவை யாவிற்கும் மேலாய் இவர் பெற்றிருந்த இலக்கிய நுனித்துணர்வு என்பன கூடி இவருக்குத் தனித்தன்மையானதோர் உரைநடையை வகுத்துக் கொள்ள உதவின. பழைமையான தமிழ், சைவ, மரபுகளிலே அழுத்தமாகக் காலூன்றி நின்றபோதிலும், அவற்றை எடுத்துச் சொல்லும் - எழுதும் - வகையிலே புதுமையைக் கையாளும் துணிவும் திறமையும் பண்டிதம ணிக்குக் கைவந்திருந்தன.

சிறுச்சிறு வாக்கியங்களிலே (எழுவாய், பயனிலை குன்றியதுண்டு துண்டான சொற்றொடர்களை வாக்கியப் பொருளமைதி குன்றாது கையாண்டதும் உண்டு) இலக்கியச் சுவையோடு அங்கதச்சுவையும் ஆங்காங்கே தலையெடுக்கும் வகையிலே அழுத்தந் திருத்தமாகத் தம் கருத்துக்களைப் புலப்படுத்தல், வேண்டுமிடங்களிலே இலக்கிய சமயநூற் கூற்றுக்களை வாக்கிய உருவிலே தரல் என்பன பண்டிதமணியின் உரைநடையிலே காணத்தகும் சிறப்புக்கள்.

> *வீரன் இராமன்; இளைஞர் தம்பிமார். அவர்களுடைய பள்ளிக்கூடம் காட்டுப்பள்ளிக்கூடம். தகரத்தைச் சூழ்ந்திருக்கிறதுநாடு. காடுகளுக் குள்ளே நல்ல மரச்சோலைகளுக்குக் கீழே தான் பள்ளிக்கூடம் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் "ஈரமொடுரைதரு மாமுனிவரர்." நெஞ்சில் ஈரமுள்ள அன்பு கசிந்து ஒழுகுகின்ற - வசிட்டர் முதலிய முனிசிரேஷ்டர்கள்தாம் இராமன் போன்றவர்களைப் படிப்பிக்கின்ற வர்கள். இராமனும் தம்பிமாரும் நகரைக் கடந்து போய்க் காட்டுப் பள்ளியிற் படித்துவிட்டு மாலை நேரத்தில் நகரை நோக்கி வருகிறார் கள். வழியிலே நாட்டிலுள்ள குடியானசனங்கள் எதிர்வர். இந்தக் குழந்தைகளாகிய பச்சைப் பாலகர்களை எதிர்கொள்ளுபவர் போல எதிரே வருவார்கள் வேறு வழியிற் செல்லுபவர்கூட - வேறு அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர் கூட - அந்தப் பரிசுத்த பாத்திரங்க ளான பாலர்களைக் கண்டதும் கன்றுகளை நோக்கி வரும் பசுக்கள் போல அக்குழந்தைகளை எதிர்வர். அந்தக்குழந்தைகளை நோக்கிக் கொண்டு எதிர் வருவதில் அவர்களுக்குப் பெரிய ஆசை.*
>
> *(இலக்கிய வழி - கம்பரிற் பாலர் பாடசாலை, பக்.54)*

### *6. அறிஞர் அண்ணாதுரை (1909-1969)*

*இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளிலிலிருந்து இலக்கியம், சமயம், அரசியல், சமூகச் சீர்திருத்தம் சார்ந்த சொற்பொழிவுகள் முதன்மை பெறத்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கின. இக்காலகட்டத்திலே, எழுத்தாற்றல் பெற்ற அறிஞர் சிலர், சொற்பொழி வாற்றுவதிலும் சிறந்து விளங்கினர். சொற்பொழிவைச் சுவை யுடையதாக்குவதற்கு ஓசைநயம் இன்றியமையாதது என இவர்கள் உணர்ந்தமையால் எதுகை, மோனை அமைந்த வாக்கியங்களையும் இழுமென்னோசையோடு கூடிய சொற்கள் சொற்றொடர்களையும் பெரும ளவு கையாளலாயினர். விபுலாநந்த அடிகள், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோர் இத்துறையின் முன்னோடிகள் எனலாம். செய்யுள் நடையிலிருந்து உரைநடைக்குத் தமிழ்மொழி, தன்னை ஆயத் தஞ் செய்த பொழுது, செய்யுளின் தரக்குறைவு உரையாசிரியர்களில் மேலோங்கியிருந்தது. மீண்டும் அக்காலத்தை நோக்கி நவீன உரைநடை செல்வது போன்றதொரு மயக்கத்தினை இவர்களின் உரைநடை ஏற்படுத் திய போதிலும், அதன் உள்ளடக்கம் சுவையும் ஆழமும் குன்றாது விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கிய சமயத் துறைகளிலே மேலாண்மை பெற்றிருந்த அடுக்கு மொழியை அரசியல், சமூக எழுச்சிக்கான கொள்கை பரப்புக் கருவியாய் மாற்றிய முதல்வர், அறிஞர் சி.என். அண்ணாதுரையேயாவர். 'சொல் வல்ல'ரான அவர் கேலி, கிண்டல், கண்டனம், நகைச்சுவை என்பவற் றோடு கருத்துச் செறிவும் இணையுமாறு தமது உரை நடையினை ஆக்கிக் கொண்டார். பேச்சுத் திறத்தாலும் பேச்சுப் (கொச்சைப் பேச்சன்று) போலவே எழுதும் திறத்தாலும் அறிஞர் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தினை ஆளும்கட்சியாய் வளர்த்தெடுத்தமை வரலாற்று முதன்மை வாய்ந்ததாகும். (இவரின் வழியைப் பின்பற்றிய கலைஞர் மு. கருணாநிதி முதலாம் ஒரு சிலர் தவிர்ந்த பிறர் அண்ணாவின் உரைநடையை மலினப் படுத்தியதால் அஃது இன்று தனது தரக்குறைவினை இழந்து விட்டது. கவிதைக்கே ஓசைநயம் வேண்டப்படாத காலம் இது!)

வகையற்றோரே! வாழவழி அறியாதோரே! வறட்டுத் தத்துவம் பேசுவோரே! பட்டமும் பதவியும் பவிசும் தரக் காங்கிரஸ், கிட்டே வருவோரை எல்லாம் அழைக்கிறது. குட்டம் கொண்டோனாயினும் பனிநீர் தெளித்து, பரிமள கந்தம் பூசிப் படுக்கையறை அழைத்தே கும், பசிகொண்ட பாதகிபோல், கொள்ளை இலாபக் காரராயினும், கள்ள மார்க்கட்டுக்காரராயினும், மக்கட்கு மாபெரும் துரோகமிழைந் தோராயினும் ஊரை அடித்து உலைவாயிற் போடுவோராயினும் அனைவரையும் வரவேற்று உபசரித்து, உயர்வளிக்கக் காங்கிரஸ் சித்தமாக இருக்கும்போது, அதன் நிழலில் குளிர்ச்சியும், அதன் நேசத்தில் மலர்ச்சியும் கண்டு சுவைத்திடாமல், கொள்கை என்றும் குறிக்கோள் என்றும் தாய்நாடு என்றும், தன்னரசு என்றும், தன்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*னம் என்றும், திராவிடம் என்றும் ஒலி கிளப்பிக் கொண்டு ஒய்யார வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிறீர்களே! ஒட்டாண்டி ஆகாதீர். பதவி பெறும் பாதையை விட்டு விட்டு, சிறைக்கும் சித்திரவதைக்கும் அழைத்துச் செல்லும் பாதையில் ஏன் செல்லுகிறீர்கள்? எம்மைப் பார்த்துப் பிழைக்கும் வழி அறிமின்!-என்று கூவிக்கூவி அழைக்கின் றனர்-கொள்கையை இழந்து, கோல் கொண்டோரின் கொடியைத் தூக்கிக் கொண்டு கூத்தடிக்கும் கோணங்கிகள்.*

*(அண்ணாவின் - தம்பிக்குக் கடிதங்கள் - பக் 238)*

### 7. பேராசிரியர் வி.செல்வநாயகம் (1906 - 1973)

தமிழிலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு ஆகிய துறைகளிலே அறிவியற் பார்வையைப் புகுத்தி, அவை அதுகால வரை சென்று கொண்டிருந்த, 'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்ற உணர்ச்சி நெறியினைப் பின்தள்ளிய முதல்வருள் ஒருவராய்ப் பேராசிரியர் வி.செல் வநாயகம் கொள்ளப்படுகின்றார். 'தமிழ் இலக்கிய வரலாறு (சுருக்கம்)', 'தமிழ் உரைநடை வரலாறு' என்னும் இருநூல்களும் இன்றுவரை தமிழை உயர் வகுப்பிற் கற்கும் மாணாக்கருக்கு நல்வழிகாட்டிகளாயுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியங்களைக் கி.பி.இரண்டு நூற்றாண் டைச் சேர்ந்தவை என்று பலரும் முடிவு செய்திருந்ததை மறுத்துத் தக்க சான்றுகளுடன் அவற்றின் காலம் ஐந்தாம் நூற்றாண்டு என நிறுவியவர் பேராசிரியர் செல்வநாயகம். இலக்கிய வரலாறு, திறனாய்வுத் துறைக ளிலே சமூகநெறிப் பட்ட புதிய பார்வைகளைப் புகுத்தியவர்கள் என்று போற்றப்படும் பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோ ரின் செல்நெறிக்கு வித்திட்ட முன்னோடிகளுள், இவரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

செறிவு, சிந்தனைவீச்சு, தருக்கவியல் கடவாத கட்டொழுங்கு என்பன அமைந்த இவரது உரைநடை, இலக்கண விதிகளுக்கு அமைவா னதாயும் விளங்கவேண்டும் என்பதில் இவர் கொண்டிருந்த கரிசனையை நன்கு புலப்படுத்துவதாகும். (தாம் எழுதிய நூல்களைத் தமிழிலக்கணப் பேரறிஞர்களான மகாவித்துவான் சி. கணேசையர், பண்டிதமணி ந. சுப்பையா பிள்ளை ஆகியோரின் பார்வைக்களித்து அவர்களின் திருத்தங் களோடு வெளியிட்டமை, இவரின் 'செய்வன திருந்தச் செய்யும்' குறிக்கோளுக்கு நல்ல எடுத்துக்காட்டெனலாம்)

*கி.பி. 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17 ஆம் நூற்றாண்டு வரையும் அதாவது இளம்பூரணர் காலந் தொடக்கம் நச்சினார்க்கினியர் காலம் வரையும் உள்ள காலப்பகுதி தமிழ் உரைநடை வரலாற்றில் ''உரையாசிரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்கள் காலம்'' எனப்படுகிறது. தமிழ் உரைநடை மிகச் சிறப்பாக வளர்ச்சியுற்ற காலம் அதுவாகும். அக்காலப்பகுதியில் உரைநடை விரைவாக வளர்வதற்கான ஏதுக்கள் பல இருந்தன. உரைநடை தெளிவாகவும் சிறப்பாகவும் தருக்க முறையாகவும் அமைய வேண்டியதற்கான தேவைகள் அக்காலத்திற் காணப்பட்டன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து 14 ஆம் நூற்றாண்டில் முடிவடைந்ததாகக் கொள்ளப்படும் சோழப் பெருமன்னர் ஆட்சிக்காலத்திலே தமிழருடைய பண்பாடு மட்டுமன்றி அவர்களுடைய வாணிகம், அரசியல், தத்துவ ஆராய்ச்சி, நூலாராய்ச்சிகள் முதலியனவும் மிக விரைவாக முன்னேறின. அம்மன்னர்களுடைய ஆணை தமிழ்நாட்டில் மட்டுமன்றி இமயம் முதற் கிழக்கிந்திய நாடுகள் வரையும் சென்றது. இங்ஙனம் தமிழ் நாடு பல துறைகளிலும் வளர்ச்சி பெற்றுவந்த காலத்தில் தமிழ்மொழியும் தமிழிலக்கியமும் பலவகையிலும் வளர்ச்சி பெறலாயின. (தமிழ் உரைநடை வரலாறு பக். 140)

8. பேராசிரியர் மு.வரதராசன் (1912-1974)

மரபுவழித் தமிழ்க் கல்வியோடு ஆங்கில மொழியின் செல் நெறியினையும் உள்வாங்கித் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய பேராசிரியர் மு. வரதராசன், பழந்தமிழிலக்கியங்களினை நயந்தெழுதிய நூல்களும், நவீனத்திறனாய்வு நெறி நின்று எழுதிய நூல்களும், இலக்கிய வரலாறு மொழியியல் ஆய்வு, இலக்கிய ஆய்வு சார்ந்த நூல்களும், சிறுகதை, புதின நூல்களும், சிந்தனைக் கட்டுரை நூல்களுமாய் எண்பத்தைந்து நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஆற்றொழுக்காய்ச் செல்வதும், நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தூய தமிழ்ச் சொற்கள் அமைந்ததும் எளிமையானதும், இனிமையானதும், சிறுச்சிறு வாக்கிய அமைப்புள்ளதுமான இவரின் உரை நடை, கற்றோர்க்கும் மற்றோர்க்கும் விரும்பிப் படிக்கத் தூண்டும் சிறப்புப் பொருந்தியதுமாகும்.

வாழ்க்கைச் சுமையாலும் பழக்கத்தின் காரணத்தாலும் அழகின்பம் நுகரும் ஆற்றல் மழுங்கி விடுதல் கண்டோம். பழகப் பழகப்பாலும் புளிக்கும். 'ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும். (குறுந்தொகை 354) படைப்பில் உள்ள, அழகிய பொருள்கள் எல்லாம் பழக்கத்தின் காரணமாகக் கவர்ச்சி இழந்து போகின்றன. அதனால் எத்தனையோ அழகுகளைப் பெற்றிருந்தும் நுகர முடியாதவர்களாக இருக்கிறோம். அறிவியல் கருவிகள் பெருகிய பிறகு, வாழ்கையில் வேகம் மிகுந்த காரணத்தால், பரபரப்பும் ஆரவாரமும் பெருகிவிடவே, அழகுணர்ச்சியைப் பற்றிக் கவலை இல்லாமல் போய்விட்டது. புலன்களின் அழகுணர்ச்சி மிக மழுங்கி விட்டது. இந்தக் குறையெல்லாம் தீர்த்து அழகுணர்ச்சியை வளர்த்துப் பண்படுத்திக் காக்க வல்லனவாக இருப்பவை கலைகளே ஆகும். (இலக்கியத்திறன் — கலைகள் - பக். 47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. புதுமைப் பித்தன் (1906—1948)

இருபதாம் நூற்றாண்டின் முதற்கால் வரை தமிழிலே வெளிவந்த படைப்பிலக்கியங்கள் பெரும்பாலும் பொது வாசகரின் சுவைக்கே முதலிடமளித்தன. 'கல்கி' முதலாம் எழுத்தாளர், தங்காலத் தேசிய, சமூக நிலைகளை மேலோட்டமாகக் கண்டு 'நற்போக்கு' இலக்கியங்களைப் படைத்தனர். ஆனால் அவை சமூகம் பற்றிய காரசாரமான திறனாய்வு வெளிப்பாடாகவோ, உலக இலகக்கிய தரத்திற்குச் சமமான தரத்தைத் தமிழ் இலக்கியமும் அடைய வேண்டுமென்ற வேட்கையின் வெளிப்பாடாகவோ அமையவில்லை. 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்' எனப் பாரதி கண்ட கனவினை நனவாக்கிவல்ல உயிர்த்துடிப்புள்ள உரைநடையையும் இவர்கள் உருவாக்கவில்லை இந்நிலையில், தமிழ் இலக்கியச் செல்நெறியைப் பிறமொழி இலக்கியங்களின் - சிறப்பாக ஆங்கில இலக்கியங்களின் - வழியிலே திருப்பிப் புதுவழி சமைக்க முற்பட்ட எழுத்தாளர் பரம்பரை ஒன்று வீறுகொண்டெழுந்தது. இலக்கியம் என்பது அறப்போதனைக்கு களஞ்சியமாகவோ, மண்ணிலே கால் பதியாத கற்பனைத் தந்தக் கோபுரமாகவோ, பொழுதுபோக்குக்கு மட்டுமே உரிய கருவியாகவோ இருத்தலாகாது என்ற கோட்பாட்டை இப்புதுமை வேட்கையினர் சிக்கெனப் பிடித்த வண்ணம் அதனைச் செயற்படுத்த 'மணிக்கொடி' என்ற இதழினைத் (1933) தொடங்கினர். சிறுகதை, நவீனம், கவிதை, இலக்கிய, கலைத்திறனாய்வு என்ற துறைகளிலே 'மணிக்கொடி' எழுத்தாளர் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியமை, இன்றும் விதந்து பேசப்படுகின்றது.[9] கே.சீனிவாசன், பி.எஸ்.ராமையா வ.ராமசாமி ஐயங்கார் (வ.ரா). கு.ப.ராஜகோபாலன் (கு.ப.ரா. மௌனி, (எஸ்.மணி) புதுமைப்பித்தன் (சொ.விருத்தாசலம்), கி.ராஜகோபாலன் (கி ரா) ந.பிச்சமூர்த்தி முதலாம் ஆற்றல் நிறைந்த எழுத்தாளர்கள் 'மணிக்கொடி' வரலாற்றிலே முதன்மையிடம் வகித்தனர். இவர்களுள்ளே, கவிதை, கட்டுரை, குறுநவீனம், நாடகம் ஆகிய துறைகளிலும் தமது கைவண்ணத்தினைப் புலப்படுத்திய போதிலும் 'சிறுகதை' யைப் பொறுத்த வரை அதன் உச்சத்தைத் தொட்டவர் என்ற

---

9 'மணிக்கொடி' (1933-38) முதலில் வாரம் ஒரு முறையும் பின்பு வாரமிருமுறையும் (கதைகள், திறனாய்வுகளை மட்டும் தாங்கி வெளிவந்து மறைந்தது. 1950இல் மீண்டும் அதன் ஐந்து இதழ்கள் வெளியாயின லா.ச. ராமாமிருதரம் தி. ஜானகிராமன் இவ்விதழ்களில் எழுதினர்.

மணிக்கொடி காலம். (பி.எஸ்.ராமையா இந்நூலிலே அதன் வரலாறு விரிவாகத் தந்துள்ளார்) மாணிக்கவாசகர் நூலகம், மதுரை, 1980.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குப் 'புதுமைப்பித்தனே' உரித்துடையவரானார். தமிழரின் பாரம்பரிய விழுமியங்கள் மீது கேள்விக்குறி எழுப்பியது, சமூகத்தாலே புறக்கணிக்கப்பட்டுத் தாழ்வுற்ற மாந்தரைப் பாத்திரங்களாக்கி அதுநாள் வரை 'தீட்டுப்பட்டவை' என்று புறந்தள்ளப்பட்டு வந்த கதைக் கருக்கக ளுக்கு உருக்கொடுத்தது. தாமே தீர்வைக் கூறாது அதனை வாசகரின் சிந்தனைக்கும் முடிவுக்கும் விட்டது ஆகிய புதுமைகள், புதுமைப்பித்தன், புதுமை இலக்கியத்திற்கு வழங்கிய அருங்கொடைகள்.

புதுப்புதுச் சொல்லாட்சி, படிப்போரின் நெஞ்சங்களை ஊசியாற் குத்துவது போன்று நோவையும் உறுத்தலையும் உள்ளடக்கிய நகைச்சுவை நையாண்டி, ஆங்கிலப் புத்திலக்கியங்களைப் படித்த அருட்டுணர்வை வெளிப்படுத்தும் வீறு மிக்க வாக்கிய அமைப்பு என்பவற்றோடு கூடிய — அவரே தமது உரைநடை பற்றிக்கூறிய 'தவளைப் பாய்ச்சல் நடை' - புதுமைப் பித்தனின் தனித்தன்மைகள் எனலாம். இவற்றோடு திருநெல் வேலிச் சீமைக்கேயுரிய மண்வாசனையும் அவரின் நடையிலே இணைந் துள்ளமை சிறப்பித்துக் கூறவேண்டுவதாகும்.

''ஓ கூத்தனாரே உம்கூத்தைக் கொஞ்சம் நிறுத்தும்'' ''சட்! வெறும் தெருக்கூத்தாக இருக்கு என்னங்காணும் போர்னியோ காட்டுமிராண்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு'' என்று அதட்டினார் திவான் பகதூர்.

> *ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்திச், சூலத்தில் சாய்ந்தபடி பார்த்துக்கொண்டே இருந்தார். ''ஓய்கலைன்னா என்னன்னு தெரியு மாங் காணும்? புலித் தோலைத் தான் கட்டிக் கொண்டீரே, பாம்புன்னா பாம்பையா பிடிச்சுக்கொண்டு வருவா? பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக்கொள்ள வேணும். புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக்கொள்ள வேணும். கலைக்கு முதலம்சம் கண்ணுக்கு அழகுகா ணும். வாஸ்தவமாகப் பார்வதி பரமேசுவராளே இப்படி ஆடினாலும் அது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதிலே இப்படிச் சொல்லலே.''*

*(புதுமைப்பித்தன் கதைகள்—கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் பக். 128)*

**10. நந்தி (பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் 1928 ...)**

இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளிலே புத்திலக்கியப் படைப்பிலே ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சிலர் ஈடுபட்டு கொண்டனர். தொடக்கத்திலே தமிழக எழுத்தாளர்களின் ஆக்கங்களே இவர்களுக்கு வழிகாட்டிகளாய் அமைந்தன. ஆனால் பட்டறிவும் படிப்பறிவும் சமூகப்பார்வையும் விரிவ டைந்து, மிக விரைவில் தமிழகத்தவரின் தரத்துக்குச் சமமும் சமாந்தரமு மான வளர்ச்சி இங்கும் ஏற்பட்டது. இன்று ஈழத்துத் தமிழிலக்கியமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கெனத் தனித்ததோர் இடத்தினை வசிக்கின்றது எனத் தயங்காது கூறலாம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கைப் பிரதேசம் எங்கணும் தமிழ் பேசும் இனத்தவரிடையே பெரும் எண்ணிக்கையில் எழுத்தாளர்கள் உள்ளனர் என்பதும் அவர்களிற் பலரும் தமது படைப்புக்களின் உள்ளடக்கத்தில் மட்டுமின்றி உருவத்தி லும் கவனம் செலுத்துவதால், தமக்கென ஒரு நடையினை அமைப்பதில் வெற்றிகண்டு வருகின்றனர் என்பதும் சிறப்பித்துக் கூற வேண்டுவனவே.

நடையியல் பற்றித் தனித்ததொரு நூலினை மிக விரிவாகக எழுதும் நோக்கம் எமக்கு உண்டு என்பதாலும், ஈழத்து எழுத்தாளர் பலரின் நடைபற்றி அந்நூலிலே எடுத்துக்காட்ட நேரிடும் என்பதாலும் இங்கு 'நந்தி'யின் நடைக்கு எடுத்துக்காட்டு ஒன்றினைத் தருவதோடு அமைகின் றோம் (இதனைத் தொடர்ந்து, தமிழக, இலங்கை எழுத்தாளர் சிலரின் சிறந்த (எமக்குச் சிறந்தன என்று தோற்றிய) உவமை உருவகங்கள் சில தரப்படும்.)

'நந்தி' என்ற பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் சமூக மருத்துவத்து றையிலே உலகறிந்த நிபுணர்; மக்களைப் பீடிக்கும் உடற்பிணிகளோடு சமூகப்பிணிகளையும் இனங்காணும் ஆற்றல் கைவரப் பெற்றவர்; பல இனத்தினர், பல மொழியினர், சமூகத்தின் பல மட்டத்தினர் ஆகியோ ரோடு நெருக்கமாகப் பழகும் வாப்புடையவர். எனவே பெரும்பாலாரான தமிழ் எழுத்தாளருக்கும் கிட்டாத பரந்த களமும் அதனால் விரிந்த பாவையும் அவருக்குக் கிடைத்ததில் வியப்பில்லை.

இத்தகுதிகளோடு தாம் கையாளும் உரைநடைக்கெனச் சில மேலதிக தகுதிகளையும் இவர் தமது சிந்தனைத்திறத்தினாற் சேர்த்துக் கொண்டுள் ளார் எனலாம். அத்தகுதிகளாக நாம் அவதானித்து அறிந்தவை பின்வரு வன;

1. தாம் கையாளும் ஒவ்வொரு சொல்லையும், வாக்கியத்தையும் நன்கு ஆராய்ந்து அவற்றைப் பட்டைதீட்டிய வைரங்களாய்த் தமது ஆக்கங்களிற் பதித்திடல்

2. பேச்சுத் தமிழினை நிதானமாகவும் அருந்தலாகவுமே கையாளல் (பிரதேச வழக்கு என்பதில் இவருக்கு நம்பிக்கை இல்லை. மக்கள் தொடர்புக் கருவியுமான மொழி, ஒரு பிரதேசத்துள்ளே கட்டுண்டு கிடப்பதால் அதற்கு அந்நியரான பிரதேசத்தினர் விளங்கிக்கொள் ளாத இடத்து, பயன்பாட்டில் முழுமை பெறாது என்பது இவரின் முடிபு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சூழலுக்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான உவமை உருவகங்க ளைக் கையாளுதல்.

பிள்ளைக் காம்பராவில் நடக்கக்கூடிய பிள்ளைகள் எழுந்து கம்பி வலைகளுக்கூடாகப் பார்த்தனர். தவழுகிற குழந்தைகள் அங்கமிங் குமாகத் தவழ்ந்து கையில் அகப்பட்டதை வாயில் வைத்தனர். சிறுகுழந்தைகள் தரையில் படுத்து, புரண்டு, உருண்டு பெரும்பா லும் அழுதுகொண்டிருந்தனர். டாக்டர்கள் இராசாத்தம்பியும் சிறி சேனாவும் அந்தக் காம்பராவின் கம்பி எல்லைக்கு வெளிப்பக்கத் தில் நின்று குழந்தைகளுடன் சிநேகிதம் கொண்டாடினர். மகாரா ஜன் தூரத்தில் நின்றான். அவன் கேட்டான்.

*''உங்களுக்கு இந்த மணத்தை அநுபவித்தபின் உணவு அருந்த முடிகிறதா?'' அவனே ஒருவித நையாண்டிப் பதிலும் தந்தான்.*

*''ஓ, நீங்கள் டாக்டர்கள் அல்லவா? மலருக்கும் மலத்திற்குமி டையே உள்ள வித்தியாசம் உங்கள் மூக்குகளுக்கு எப்படித் தெரியப்போகிறது?''*

*டாக்டர் சிறிசேனா கேட்டான்.*

*''மிஸ்டர் மகாராஜன்! தோட்டத்துப் பிள்றைளகள் சாகுமுன் அவர்களை இந்த அறையில்தான் அடைப்பீர்களோ?''*

*எல்லோரும் சிரித்துவிட்டு, தோட்டப் பாதை வழியாக நடந்தார்கள். நின்ற இடத்திலிருந்தே அக்கம் பக்கம் சுற்றிப் பார்த்தார்கள். பச்சை மலைகள், தேயிலைச் செடிகள், வாகை, சவுக்கு, கறுவா மரம், முருங்கை மரம் முதலிய மரங்கள் எல்லாம் கண்களுக்கு இதமாக இருந்தன. பச்சைக் குளிர கண்ணாடியைப் போட்டுப் பார்த்ததுபோல் பார்வைக்கு உலகம் குளிர்ந்தது. அவ்வப்போது சீளக் காற்று, கண்களைத் தடவியது.*

*(மலைக்கொழுந்து — பக். 108 - 109)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 1

## எழுத்தாளர்கள் உருவாக்கிய சில உவமை உருவகங்கள்

உவமைகள், உருவகங்கள் என்பன இலக்கியப் படைப்பாளிகளுக்கு மட்டும் உரியனவல்ல. அறிந்த பொருள் கொண்டு அறியாத பொருளை ஒருவருக்கு விளக்க 'இது போன்றது அது' என்று எவரும் எளிதிற் கூறிவிடுவர். அன்பு, வெகுளி, வெறுப்பு முதலாம் உணர்ச்சிகள் கிளர்ந்தெழும் பொழுதும் உவமைகள், உருவகங்கள் பரவலாகக் கையாளப்படுகின்றன.

எ—டு: 1 எண்ணெய் தண்ணீர் காணாததால் அவனுடைய தலைமயிர் பறட்டைக்காடு போல இருக்கிறது.

| உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| காடு | தலைமயிர் | பறட்டை (அடர்த்தி) |

**உருவகம்**

2. **உவன் ஒரு குரங்கு:** குரங்கும் உவனும் குணத்தாற் சமமானவர்.

வேறுவேறான பொருள்களிடையே ஏதோ ஒரு வகையிலோ, சில வகைகளிலோ ஒற்றுமை காண்பது உவமை. இரண்டு பொருள்களிடையே வேறுபாடு காணாது முற்றிலும் ஒத்த இயல்புடையனவாகக் காண்பது **உருவகம்.**

பொதுவான உவமை உருவகங்கள் போலவன்றி இலக்கியங்களில் வரும் உவமைகளும் உருவகங்களும் அவற்றைக் கையாள்பவரின் கற்பனை. கலைத்திறன், உணர்வநுபவம் என்பவற்றிற்கேற்ப அழகாலும் சுவையாலும் மேம்பட்டு நிற்பன. கலைஞனின் அவதானத் திறத்திற்கும் அவை எடுத்துக் காட்டுக்களாய் விளங்கும்.

தமிழ் மாணாக்கருக்கு உவமைச் சொற்றொடர், இலக்கணை என்பன நன்கு அறிமுகமானவை. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து வாய்பாடுகள் போல இச்சொற்றொடர்கள் நெடுங்காலமாய்ப் பயிலப்பட்டு வருகின்றன. இவற்றால் ஓரளவு நன்மை உண்டு என்பதை மறுத்தல் இயலாது. ஆனால் பொறிச் செயலாக இவற்றையே நாமும் திரும்பத் திரும்பக் கையாள்வதாலே புதிய கற்பனைகளுக்கும் தற்சிந்தனைக்கும் தடை ஏற்படுகின்றது. அரைத்த மாவையே அரைப்பதால் ஆகும் பயன் என்ன? இத்தகையனவற்றை தேய்மானமான சொற்றொடர் (Cliche) எனக் குறிப்பிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த எழுத்தாளர்கள் தமது படைப்புக்களிலே கையாளும் புதுமை யான உவமை உருவகங்களைத் தெரிந்து கொள்வது, அவற்றையே நாமும் கையாள வேண்டும் என்பதற்காக அல்ல. நாமும் எமது கற்பனை, அவதானிப்பு, உணர்திறன்களின் வாயிலாகப் புதிய உவமை, உருவகங்க ளைப் படைத்துக்கொள்ள அவை ஊக்கிகளாகவும் உந்து சக்திகளாகவும் அமைதல் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இதற்காகவே, எமக்குச் சிறந்தவை என்று தோற்றிய சில உவமைக ளும் உருவகங்களும் இங்குத் தரப்படுகின்றன.

1. அந்த வார்த்தைகளைச் சொல்ல முடியும் என்று எனக்குத் தோன்ற வில்லை..... ஏதோ செடியைப் பிடுங்கி வெளியே போடுவதுபோல இருக்கிறது எனக்கு,

(தி. ஜானகிராமன் - மலர் மஞ்சம்)

மாலிக்கு அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. கசப்பும் புண்ணுமாக வெதும்பி வந்த அந்தப் புன்னகையில் உயிர் விழுந்து துடித்தது. (மேலது)

தேய்ப்பிறைச் சந்திரனின் பித்தளை வெளிச்சம் கொட்டகைக்குள் கொசுறு விழுந்திருந்தது (மேலது)

கடலில் கருநீலமாகப் பளீர் என்று ஒளியில் மின்னிய அலையின் வெள்ளி ஊசிகள். (மேலது)

நூற்றுக்கணக்கில் குழந்தைகள் ஒண்டிக் கிடப்பது போலப் பூக்கள் கூடையில் நெருங்கியிருந்தன. (மேலது)

2. காற்றின் மெல்லிய மூச்சு..... உடலை ஊசியாய்க் குத்தும் குளிர், முடிவற்ற நீடித்த துயரத்தின் குறியீடாய்..... (கே. சட்டநாதன் - அவர்களது துயரம், மல்லிகை - 30ஆவது ஆண்டு மலர்.)

பனந்தோட்டத்தினூடாக வகிடிட்ட ஒற்றையடிப் பாதையில் இறங்கி அவரும் சிவராசாவும் நடந்தனர். காற்று எல்லாவற்றிலும் ஈரமாக உட்கார்ந்திருந்தது.

(மேலது)

3. அது நாழிகை நெஞ்சுள் உயரமாய் ஆட்டம் போட்ட நீருற்று ஒன்று. தங்கத் தாம்பாளமாய் ஜொலித்த முழுநிலவைக் கருமேகம் ஒன்று மறைத்துவிட்ட மாதிரி, வர்ணஜாலங்களோடு காட்சியளித்த வான வில் சடீரென்று மறைந்து விட்ட மாதிரி, மனசு குலுங்கி இருண்டுபோ னது.

(சிவசங்கரி - நான் நானாக.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத்திரி நேரத்துல பொறப்ப மாடு, ஆடு, நாய்மேலே லைட் பட்டதும் கண்ணுமட்டும் பளபளப்பாய் மின்னுமே? கவனிச்சிருக் கயா? அந்தமாதிரி தான் உங்கம்மா கண்ணும்.

**(மேலது)**

முதலில் அம்மாவிடமும் பின்னர் அப்பாவிடமும் பேசிய பேச்சுக்கள் நினைவுப் பெட்டகத்திலிருந்து யாரோ தூசுபோகத்தட்டி அனுப்பிய மாதிரித் துல்யமாய் ஞாபகத்தில் வந்தன.

**(மேலது)**

4. மொட்டு மலர்வதைப் போலவும், செடி மரமாக வளர்வதைப் போலவும், இளந்தளிர் இலையாக மாறுவதைப் போலவும், காய் கனியாக மாறி ருசிப்பதைப் போலவும், தென்றல் காற்றினால் ஒருவித அலுப்புத் தீர்வும் உற்சாகமும் ஏற்படுவதைப் போலவும், கலை என்பது மனித வளர்ச்சியைக் காண்பிக்கிறது.

**(வ. ராமசாமிஐயங்கார் —** (வ. ரா.) வ.ரா. வாசகம்)

5. ....... பனங்காயைப்போல் திரண்டமுகம், மோதகத்தைப் போன்ற மூக்கு ..... நரிவால் நரை ..... அம்பெனப் பாய்ந்து தைக்கும் பார்வை ..... வெண்கலச் சிரிப்பு.

**(கு. ஸ்ரீநிவாசன் —** சொல்லேர் உழவன் — வ.ரா. வாசகம்)

6. இதய மண்ணை உழுது, பதமாக்கி, உரமிட்டு உனக்காக மலர்த்திய தோட்டத்தில்,புஷ்பங்கள் மலர்ந்த ஒரு கணத்தில், தோட்டத்தின் விளைச்சலில் ஒரு கணம் மயங்கித் தடுமாறினேன். அந்தத் தடுமாற் றம் என் தோட்டத்தையே குலைத்துவிட்டதே!

**(செம்பியன் செல்வன் — நாணலின் கீதை)**

நள்ளிரவில் நம்பிக்கைப் பூக்களாக என்னுடன் கண் விழித்துத் துணையிருந்த நட்சத்திரப் பொட்டுக்களும் மறைந்துவிட்டன.

(மேலது)

7. அதே நேரம் எந்தவித செழிப்புமற்று இருள் கவிந்திருந்த எங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையின் ஒளிக்கதிர்கள், அதன் மூலமே பரவலா யிற்று.

**(செ. கதிர்காமநாதன் —** ஒரே குடிசைகளைச் சேர்ந்தவர்கள் மூவர்க தைகள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை நிலப்பரப்பில் தேங்கிக்கிடந்த அழுக்குநீர், பலவகை வர்ணங்கள் கொண்டதாக, சோடா நுரையுடன் ஒரு குட்டைபோலக் கிடக்கிறது.

(மேலது)

இருபத்தாறு வருடங்கள் இளமையின் கீதமாய், இந்த வீட்டில் என்றுங் கலகலப்பின் ஒளியாய், சிரிப்பாயும் அழகாயும் பேச்சாயுமிருந்த சாந்தகுமாரி நேற்றிரவு யாரோ ஒருவனோடு ஒடிப்போய்விட்டாள்.

**(செ. யோகநாதன் — மூடுதிரை — மூவர்கதைகள்)**

இது அழுகிப்போன முதலாளித்துவ சமுதாயத்தின் விதி.

(மேலது)

வெளியே நிலவு மங்கிக்கிடந்தது. முனையுடைந்த கடற் சிப்பி போல நிலவும் பிய்ந்ததுபோல வடிவமற்ற பாதியாய் மங்கிச் சோம்பலான பிரகாசத்தை வீசிக்கொண்டிருந்தது.

(திருச்சிற்றம்பலம்—மேலது (நூல்)

8. ..... வெளிமாவட்டச் சேவை என்ற சட்டத்தோடு 'வாரோட்டம்' நடாத்தி எப்படியோ சட்டத்தை வென்று ஊர்ப்பாடசாலை ஒன்றைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருந்துவிட்டேன்.

(கே.ஆர்.டேவிட் - சமுதாயச் சுருக்கங்கள்...

(தகவம் பரிசுக்கதைகள்)

எனக்குள் ஒரு உணர்வுக்குமிழ் வெடிக்கிறது.

(மேலது)

9. திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்கள் அமுதகலசம் பெற்றார்களாம். நீ மதுக்கலசத்தைக் கடைந்து உடரட்டவின் சிம்மாசனத்தைப் பெற்று விடலாம் என்று பார்க்கிறாயா?

**(எஸ். பொன்னுத்துரை — ஆகுதி = அவா)**

பூவினைத் துளைத்து வண்டு கலவியின்பம் நுகர்வது தர்மமானது என்றால், நான் உன்னைத் தழுவி நுகர்வதும் தர்மத்தின்பாற்பட்டதுதானே?

(சுவடு—மேலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அரசியற் சதுரங்கத்தில் பாச்சிகையை உருட்டுகிறேன். யோகத்திற்கு ஏற்பக் காய்களை நகர்த்துகிறேன்; வெட்டுகிறேன்.

**(ஆகுதி - மேலது)**

பலாப்பால் நூலாக என் உள்ளுணர்வு உன்னைப் பின் தொடர்ந்ததை நீ அறிவாயா?

**(அவா - மேலது)**

முழுமூச்சுடன், குஞ்சினைப் பருந்திடமிருந்து காப்பாற்றும் பேடையின் ராங்கியுடன் உன்னைத் திமிறி எறிந்து...

**(அவா - மேலது)**

10. அவர் கண்ணீர் நின்றுவிட்டாலும் மனதுமட்டும் உள்ளே உருகிக் கொண்டிருந்தது.

(**மௌனி** - குடும்பத்தேர் - மௌனிகதைகள்.)

அந்த ஆழ்ந்த மௌன இருள் ஒளி அமைதியின் அரு உரு என எட்டிய லிங்கம் சோபையில் புலனாகத் தெரிந்தது

(உறவு, பந்தம், பாசம் - மேலது)

ஞாபகம் காண, மறதியைத் தேடுவதில் ஜடமென அவ்விடத்திலேயே அவன் வீற்றிருந்தான்.

**(மேலது)**

இரண்டொரு முன் பின் குலுக்கலில் திடீரென வண்டி வேகங் கொண்டு ஓட ஆரம்பித்தது. உதறி விழுந்த அநேகர் அதில் தொற்றிக்கொள்ள முடியாமல் அதனுடன் ஓட ஆரம்பித்தது.

**(தவறு-மேலது)**

11. பூவின் பாஷை அதன் மணந்தான் மணக்காத பூக்கள் இருக்கே? மணக்காத பூக்களின் பாஷை அவைகளின் அழகு தான்.

**(லா.ச. ராமாமிருதம் - இதழ்கள்)**

சட்டென ஒரு ஊமைத்தனம் அவர்களிடையே தேங்கிற்று.

(மேலது)

பட்டாசுகடை பற்றிக் கொண்டதுபோல; 'பட்பட் படார்' சத்தம் கேட்டு எல்லோரும் வாசலுக்கு ஓடினர்... மாமியின் தம்பி மோட்டார் சைகிளின் மேல் வீற்றிருந்தான்.

(**லா.ச.ரா** — அபிதா)

உயிர், தன் ஆச்சர்யத்தில் விரிந்த கண்கள் ...

(மேலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகளினிடையே வாய்க்கால் வளைந்து, தன் தலையைத் தேடும் பாம்புபோல ஓடிற்று. கரை மேட்டுக்கப்பால், வயல்களில், கதிர்களிடையே காற்று சலசலத்து பாம்பின் சீறல்போல் ஓசை என்மேல் இறங்கிற்று.

(மேலது)

12. ஆசிரியர் சுந்தரத்தின் மனப்பாம்பு, இறந்தகாலச் சருகுகளில் சரசர வென்று ஊரத் தொடங்கியது.

(வ அ. இராசரத்தினம் - தெய்வம் ஆசி வழங்குகிறது - தகவம் பரிசுக் கதைகள்)

மலைச்சுவடுகளில் வீசி எறியப்பட்ட சாம்பலின் மூட்டமாக மேகம் படர்ந்து கொண்டிருந்தது.

((மேலது)

13. கார்த்திகேசன் மாடுகள் காற்கட்டைதூரம் நடந்துவந்து விட்டன என்று இப்பொழுது தெரிந்தது. காரியத்தில் கட்டையான மனிதன் வாய்ப்பேச்சில் அட்டகாசம் பாடுவதுபோல.

அ. செ. முருகானந்தன் (அ. செ. மு.)
பழையதும் புதியதும்—மறுமலர்ச்சிக் கதைகள்)

காவோலைகள் விழுந்த பிற்பாடும் அவை இருந்த அடையான மாக வரைகள் இருக்கோ, இல்லையோ?அது போலக் காலம் எப்படி எப்படி மாறிவிட்ட போதிலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் அவன் மனத்தை விட்டு மறைந்து போகிறதில்லை.

(மேலது)

14. வாழ்க்கை என்னும் முள் நிறைந்த பாதையிலே காலமெல்லாம் நடந்ததில் சலிப்படைந்த அவனுக்கு அவள் ஒரு மருந்தாகவே விளங்கினாள்.

(சம்பந்தன் — இரண்டு ஊர்வலங்கள் — மறுமலர்ச்சிக் கதைகள்)

இயற்கையிலே துள்ளி விளையாடும் சிறுவர்கள் போன்ற அவளுடைய சுபாவம் நாளடைவில் அடங்கிவிட, ஒருவித அமைதி யான நிலை தானாகவே தோன்றி நிலைத்து விட்டது.

(மேலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இன்பமா? தூய்மையே நிறைய வேண்டிய அவர்கள் உள்ளத்தில், சுயநலமென்ற கள்வன் கோட்டைகட்டி ஆளுகிறான். இதயபீடத்திலே அன்பரசன் ஆட்சி புரிய வேண்டும்?

'**சு. வேலுப்பிள்ளை (சு வே.)** - பரோபகாரம் - மறுமலர்ச்சிக் கதைகள்.'

அதோ விளங்கும் தாமரைத் தடாகம். ஆழ்ந்த தபஸ்வியின் ஞான விளக்கம் போலத் தெளிந்திருந்தது அதன் ஜலம்.

**(சு வே. - நிலைகேடு - மேலது)**

16. பகாசுரப் பசிகொண்ட யுத்ததேவதைக்கு மில் துணிமட்டும் போதவில்லை. (**சிதம்பரரகுநாதன்** - பஞ்சும் பசியும்)

நிலப்பிரபுத்துவச் சீரழிவுகளுக்கும், முதலாளித்துவ வளர்ச்சிக்குமான சரித்திர கதியின் பிரசவ காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இன்றைய இந்தியாவின் ஒரு பகுதியான அம்பா சமுத்திரம். (மேலது

வெளிநாட்டு ஏற்றுமதிக்கு 'அட்டமத்துச் சனி' பிடித்தது.

(மேலது)

17. அவளைப் பார்க்கிற யாருக்கும், எளிமையாக அரும்பி உலகின் விலை உயர்ந்த எத்தனையோ பொருள்களுக்கு இல்லாத எழிலோடு, புதியதாய் மலர்ந்துள்ள ஒரு புஷ்பத்தின் நினைவே வரும்.

(**ஜெயகாந்தன்** - சில நேரங்களில் சில மனிதர்கள்)

அந்த வெளிறிய நீலநிறச் சூழல் கனவுமாதிரி மயக்குகிறது.

அவன் நிழல்லே வளர்ந்த செடிமாதிரி வெளுத்துச் சாம்பிப் போயிருப்பா. **(மேலது)**

..... **ஆர். கே. வி** எழுதிய அந்தக் கதையைக் கிழி கிழி என்று எவ்வளவு கிழித்தாலும் அது மறுபடியும் மறுபடியும் ஒட்டிக் கொண்டு அவர் மனசில் வந்து நிற்கிறது. ஜராசந்தன் வதம் மாதிரி.

**(மேலது)**

18. குண்டுங் குழியுமான அந்தக் கிரவல் வீதியின் அந்தத்தில் அலைகடல் தோணியாக பஸ் வந்துகொண்டிருந்தது.

(**செங்கை ஆழியான்** - மண்ணின் தாகம்)

மனதில் ஏக்கம் கவ்வியது. (மேலது)

அந்தச் சிரிப்பில் ஜயசேகரா கரைந்தார். (மேலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலட்சியத்தை அடைய முன் நடக்கின்ற எங்களுக்கு நீங்கள் பாலமாக இருக்க வேண்டும். (மேலது)

19. ஊரில் பெண்கள் கூட்டத்திற்கு அவன் ஒரு கண்ணன்.
(கே. டானியல் — முருங்கையிலைக்கஞ்சி,
கே. டானியல் குறுநாவல்கள்.)

என் ஆத்மாவிற்கு என் உடல் பாரமாகி விட்டதைப் போல எனது அம்மாவிற்கும் நான் பாரமாகவே இருந்தேன்.

(இருளின் கதிர்கள்—மேலது)

மதிய வேளையிலிருந்து பொழுதே மூ(ட்)டத்துள் புதைந்து விட்டது.

(மையக்குறி—மேலது)

20. பூம்புகார்த் துறைமுகத்தின் கரையிலே பண்டங்கள் இறக்கப்படும் பொழுது கப்பல்கள் சுமை குறைந்து கடலலைகளில் ஆடுவது போல, அசைவதுபோலக் கோவலனின் உள்ளத்தரங்கிலே மாதவி யின் எண்ணக் கப்பல்கள் அசைந்து ஆடி ..... கண்ணகியின் மீது கொண்ட காதலும் கவர்ச்சியும் கடல் நுரைக் குமிழிகளாக அழிந்து போயின; அழிந்தே போயின.

(சொக்கன்-சலதி)

நீ என் உள்ளக் கருவறையின் தெய்வமாக வீற்றிருக்க வேண் டும் என்பதே என் வேணவா. உன்னை எழுந்தருளியாக்கி அடியார் கள் வழிபடுவதையே நான் பொறுக்க முடியாமல் தவிக்கிறேன்.

(மேலது)

21. எந்த வருத்தத்துக்கும் அவரால் கொடுக்கக்கூடிய மருந்துகள் அத்தனையும் அந்தப்பைக்குள் அடக்கம். அட்சய பாத்திரம் மாதிரித் தான்.

காவலூர் எஸ். ஜெகந்நாதன் — சீதேவிகள் — தகவம் பரிசுக் கதைகள் 92)

தங்கத்தின் வார்த்தைத் துண்டுகள் மட்டும் நாராசமாகக் கிழவி யின் உணர்வுப் பொறிக்குள் இடிமேல் இடியாக.....

(மேலது)

22. நேற்றிலிருந்து இன்றையையும், இன்றிலிருந்து நாளையையும் பிரித் துணர்ந்து வித்தியாசம் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு ஒரேமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியாக ஜனித்து, ஒரேவழியில் பயணித்து இரவின் இருட்டில் சுவடுகளின்றி மரணித்து விடுகின்றன.

**எம்.எல்.எம். மன்சூர்**—முக்காடுகள் மீட்டும் முகாரி ராகங்கள், தகவம் பரிசுக் கதைகள் (2)

மேடையிலிருந்து பார்த்த போது பல்புகளின் மெல்லிய ஒளியில் ஜனங்கள் நிரம்பி வழிந்து உயிர்ப்புடன் காணப்பட்ட அந்த மண்டபம் ஒரு கனவுலகம் போல் எனக்குத் தோன்றியது. (மேலது)

23. மழை பெய்தால் ரப்பர் மரங்கள் அழுதுகொண்டே இருக்கும். **மாத்தளை சோமு** - இனி ஒரு துன்பமில்லை, தகவம் பரிசுக் கதைகள் (2)

'.....' என்று தன் சேலை முந்தானையைக் காட்டினாள்.அதில் பல நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன அத்தனை சிறிய ஓட்டைகள்.

(மேலது)

24. காற்றோடு சேர்ந்து பறப்பது போன்ற மெல்லிய உருவந் தான் அவனுக்கு,

(**திக்குவல்லை கமால்** அவனும் மனிதன்தான் - மல்லிகை பிப்ரவரி - 1984)

'நானும் ஒரு மனிதன்தான்' என்ற உணர்வு அப்பொழுதுதான் அவனுக்குள்ளிருந்து கிளர்ந்து பொலிந்தது.

(மேலது)

25. கதை உருவாகும்போது, கண்டது மட்டுமன்றிக் காணாததும் தங்கத்துடன் செப்புச் சேருவது போல் சேருகின்றன. அந்த அநுபவமும் காந்தத் தூள்களைப் போல, தான் இழுக்கக்கூடிய பல சிறு இரும்புத் தூள்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் ஆகர்ஷித்துக் கொள்கிறது. தத்துவங்கள் ஆசிரியனுடைய அநுபவம் என்ற நிலையில் அடிபட்டுப் பல்வேறு உருக்களில் கதைகளாக மாறுகின்றன.

(**கு.ப.ராஜகோபாலன்** - (கு.ப.ரா.)- கதையின் கதை, கலைமகளில் வெளியாகி, 'வைகை' சஞ்சிகையில் மறு பிரசுரமானது)

26. என்னதான் பேசுவதோ என்று அந்த ஒருகணச் சிலிர்ப்பில் வார்த்தைகள் சிறைப்பட்டு விளைந்த மௌனத்தின் இதமான ஒரு தவிப்பில்

(தெணியான் - வடுக்கள் அழிய - மல்லிகை, ஏப்ரல் 1987)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசிக் கொழுந்தின் கீழ் இன்னும் மீசைக் கறுப்பு அரும் பாத தங்க முகம். (மேலது)

27. உடையாருக்கும் பென்சனியருக்குமிடையேயான புதிய உறவு அதற்குள் கை, கால், செட்டை வைத்து ஊருக்குள் என்னென்ன விதமாகவோ சிறகடிக்கத் தொடங்கிவிட்டது.

**ஏகலைவன் — ஆக்கிரமிப்பு — உதயம்**
(சித்திரை, வைகாசி, ஆனி-94.)

நரியின் தந்திரமறியாத வெள்ளாட்டுத் தனமாக, பசுபதி மனதுக்குள் பொருமிக் கொண்டான்.

(மேலது)

28. இங்கே கோப்பாய்க் கடற்கரைக் கைதடிப் பாலத்தில் நான், பாலன், குவி, ஜோக்கர் எல்லோரும் வரிசையாய் இருந்து கொண்டு, மினுக்கி விட்ட தங்கத் தாம்பாளம் போல் கடல் நீரில் பிரதிபலிக்கும் சந்திர பிம்பத்தைப் பார்த்து -

(**வடகோவை வரதராஜன்** — நிலவு குளிர்ச்சியாய் இல்லை, தகவம் பரிசுக்கதைகள் (2)

ஏக்கங்கள் கிளறப்படுகையில், என் அடிமனத்தில் கனன்று கொண்டிருக்கும் நாட்டுப் பற்றின்மேல் படிந்திருக்கும் சாம்பல் விலக, விலக அந்த அடிமனதின் கனல் மிகச் செம்மையாகவே கனன்று என்னை ஏங்க வைக்கும்.

(மேலது)

29. ஒரு பெண்ணின் மார்புகளைப் போன்று இனிப்புடன் வளைந்தபடி ஏறி இறங்கும் றோட்டு பளபளவென்று திடுமென முன்னே விரியும்

(**ரஞ்சகுமார்** — கபரக்கொய்யான் — மோகவாசல்)

கொடியிலுள்ள துணிகள் காற்றுடன் கலந்துறவாடி இன்பப் பெருக்கால் கனகசிங்கத்தின் முகத்தில் மெல்ல விசுறுகின்றன. ஒரொரு சமயம் அவரின் முகத்திலேயே செல்லக் குழந்தையின் விளையாட்டு அடிகள் போலப் பட்டு விலகுகின்றன.

(**சுருக்கும் ஊஞ்சலும்** — மேலது)

30. 'அதுதானே!' அவன் இவளைக் கூட்டி வந்த இந்த மூண்டு வருசத்திலயும் இவளைப் போட்டு வறுத்தெடுத்தவை யல்லே.

(**ரதி கந்தசாமி** — ஓர் உயிரின் விலை - தகவம் பரிசுக்கதைகள் (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் மயமான எதிர்காலம் வாயைப் பிளந்துகொண்டு பயங்கரமாகக் காட்சி அளித்தது. (மேலது)

31. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறி விட்டது போன்ற அந்த அகன்ற வெண்பரப்பில் கன்னித் தாயின் உள்ளத்தில் அன்பு வெள்ளம் பாய்வதுபோல நிலவுவெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச் சந்திரனின் கீழ் இரண்டொரு இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற் காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்த மனிதர் கள் நிரம்பியிருந்தனர்.

(**'இலங்கையர்கோன்'** - வெள்ளிப்பாதசரம் - வெள்ளிப் பாதசரம்)

அவனுடைய மனம் வல்லை வெளிபோல் விரிந்தது.

(மேலது)

32. உள்ளுக்குள்ளை ஒரு பூச்சி இருந்து அரிக்க அரிக்க நெஞ்சுச் சுவர் பிளக்கிறமாதிரி ஒரு வலி.

(**கோகிலா 'மகேந்திரன்** - காற்றுக்கு மூச்சு நிண்டுபோச்சு' தினக்கு ரல் - 29.11.98)

எனக்குள்ள முறிஞ்சு கொட்டிண்டு போய்க் கிடக்கிற மனத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துத் தர உங்கள் ஒருத்தராலையும் முடியாது.

33. பட்டத்து யானைக்குப் படாம் போர்த்த மாதிரி — இருபுறமும் மணிக்குஞ்சலங்களுடன் தொங்க, ஒரே புஷ்பாலங்காரமாக ஜல்ஜல் என்று சலங்கை மாலையும், கொம்பு, கால் சதங்கைகளும் அசை வுக்கு அசை விட்டு விட்டு ஒலிக்க நாட்டியக்காரி மேடைக்கு வருகிற மாதிரி நிமிர்ந்து நிமிராமலும் முகம் லேசாகத் தணித்துக் கண்கள் கீழ்நோக்கி இரு பக்கமும் பார்க்கக் கம்பீர நடைபோட்டு அமரிக்கையாக வந்தது காரி. (**சி.சு.செல்லப்பா** வாடிவாசல்)

34. மங்கிய நிலவில் நனைந்து நிற்கும் அந்த வீடு திரிகோணமான தலையைக் கொண்ட ஒரு விசித்திர விலங்காய் உள்ளத்தைத் துணுக்குற வைத்தது.

(**நீல.பத்மநாதன்** - சாளரத்தின் ஊடே, மல்லிகை இருபதாம் ஆண்டு மலர் 1984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைக்குள் குபீரென்று பாய்ந்துவரும் வாடைக்காற்று.
...... என்னவோ ஒரு நெடி. இதுதான் இரவின் மணமா?

(மேலது)

35. பிரளய காலத்தில் ஏழுகடலும் சேர்ந்து பொங்குவது போல் பொங்கி முன்னேறி வந்த அந்தச் சேனா சமுத்திரம் தென்னாட்டை அடியோடு மூழ்க அடித்துவிடும் என்று தோன்றியது.

(கல்கி—பாட்டனும் பேரனும்—பொன்னியின் செல்வன்)

ஆதித்தா! அற்புதம் அந்தக் கல்லிலே மட்டும் இல்லை! உன் கண்களிலும் இருக்கிறது. உன் மனத்துக்குள்ளேயும இருக்கிறது.

(பருந்தும் புறாவும் — மேலது)

சிவபெருமான் தொண்டையிலே விஷத்தை வைத்துக் கொண்டார்; நீ நாக்கிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாய்.

(சிரிப்பும் நெருப்பும் — மேலது)

36. தாடி மயிர்கள்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரைதட்டி அவரின் முதுமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

(நெல்லை க. பேரன்—ஒரு பென்சன் காரர் பயணம் போகிறார்—சத்தியங்கள்)

ஒரு பெண்மணியின் புறுபுறுப்பு - கச்சேரியில் வேலை செய்யும் ஒருவரின் - அப்பெண்ணுக்கு ஆதரவான - விமர்சன அறிக்கை. (மேலது)

37. அவனது மனத்தவிப்பு சூடாறவில்லை.

டொமினிக் ஜீவா - பேப்பர்ப் பிரசவம்—மல்லிகை - 22ஆவது ஆண்டுமலர் - ஜூலை 1986)

சத்தம் மீண்டும் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தது.

(மேலது)

38. நினைவோட்டங்களிடையே, தப்பித் தவறிக் காதில் விழுந்தபின் 'ஸீற்' சம்பாஷணை அவளைத் திடுக்குறச் செய்தது.

(சாந்தன் - பார்வை—பார்வை)

பின்னே? சரியான சிங்களத்தி! அண்ணையும் 'அள்ளிக் கொண்டு' வந்தார்.

(அப்பா பாவம்—மேலது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் ஊமைக் காயமாக ஏதோ வலித்தது.

(ஓ! இந்த ஆண்பிள்ளைகள்தான் என்ன செய்கிறார்கள்!? மேலது).

39. 'கங்கணபதே —— நமோ — நமோ — சங்கரி — தந்யா நமோ — நமோ — என்ற கீர்த்தனை ராஜபாவத்துடனும் உயிரோட்டத்துடனும் எழுந்து மெல்லிய நுண் அலைகளாக மண்டபத்தில் இருந்தவர்களின் செவிவழியாகப் புகுந்த இதய நாடிகளை இதமுடன் வருடியது.

**(இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் - ஆரோகணம் - அவரோகணம் - வெட்டுமுகம்)**

மென்காற்றில் அசையும் நாற்றங்கால்களாக மனங்ளை அசைய விட்டு வேப்பரமர நிழலின் குளிர்மையையும் பனிக் காலத்து விடியற் காலையின் சிலிர்ப்பையும் அநுபவித்துக் கொண்டிருந்தனர். (மேலது)

நகரத்தின் சகல குளறுபடிகளும் அந்த றோட்டின் இரு புறங்களிலும் கடை விரித்திருந்தன.

(முகமூடி மனிதர்கள் - மேலது)

40. திபுதிபு எனச் சனம் நெரிபட்டு கோபுரவாசலில் இடிபட்டுப் பிதுங்கிக் கொண்டு வெளியேறியது.

('ஈழத்துச் சோமு' - விடிவெள்ளி பூத்தது)

அவருடைய புத்திரர்கள் இருவரும் சாக்குகள் சகிதமாக ஏற்கெனவே தேரில் ஏறி வயிரவர்கள் போலக் காத்து நின்றனர். (மேலது)

பச்சைச் சிவப்புக் குஞ்சம், தாமரைப்பூ மேனி - அன்று காலையில் தான் அவன் கைக்கு வந்த, எட்டுமூலைப் பட்டத்தைத் தேடிப் பனங்கூடலின் காரை முட்களையும் கவனிக்காமல், கண்கள் பனை வட்டுக்களைக் குடைய அவன் புதுவேகத்தில் ஓடினான். (மேலது)

## சிறுகுறிப்பு

1. எழுத்தாளர்கள், நாற்பதின்மர், தம் படைப்புக்களிலே கையாண்டுள்ள உவமைகள், உருவகங்கள் (100) மேலே தரப்பட்டன.

2. இவற்றைத் தொகுத்த பொழுது எழுத்தாளரின் தரத்தினையோ மூப்பையோ கருத்திற் கொள்ளவில்லை. எனவே கால ஒழுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவரிசையோ முதன்மைப்படுத்தப் பாடமையைப் படிப்போர் கவனத்திற் கொள்ளல் நன்று.

3. உவமை, உருவகங்கள் என்பன எழுத்தாக்கங்களுக்கு அணிகளாயும் விளக்கங்களாயும் அமைவன என்பதால், அவற்றையே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எழுத்தாளர் முதன்மைப் படுத்துவர் என்பதும் இல்லை. இவை மட்டுமே ஆக்கங்களுக்கு வலுவூட்டுகின்றன என்ற முடிவிற்கு வர வேண்டுவதும் இல்லை.

4. ஒரு சிலரின் படைப்புக்களிலிருந்து கூடுதலான உவமை உருவகங்களையும், மற்றும பலரின் படைப்புக்களிலிருந்து ஓரிரு உவமை உருவகங்களையும் மேற்கோள்களாய்த் தந்துள்ளமையைத் தரமதிப்பீடு என்று முடிவு செய்ய வேண்டியதில்லை.

5. எழுத்தாளரிற் சிலர், தமது படைப்புக்களிலே உவமை உருவகங்களுக்குக் கணிசமான இடம் அளிக்கின்றனர். சிலர் தமது எதார்த்தபூர்வமான சித்திரிப்புத்திறனுக்கு முதன்மை வழங்குகின்றனர். இவ்விரு சாராரும் தாம் எடுத்துக்கொண்ட கருவை வளர்த்துத் திறம்பட வெளியிடுகின்றனரா, என்பதே முக்கியம். எனவே உவமை உருவகங்களை ஒறுப்பாகக் கையாள்வது இலக்கிய தரத்தினைக் குறைத்துவிடும் என்ற முடிவுற்கு வரவேண்டியதில்லை.

6. இங்கு எடுத்துக் காட்டியவற்றுட் சில, வாசகருக்கு மிகுதியும் அறிமுகமானவையாய் இருக்கலாம். பல, புதுமையானவையாய் இருக்கலாம். நாம் 'புதுமை' என்றது பெரும்பான்மையைக் கருதியே.

7. **நாம் முதலிலேயே கூறியவாறு இங்கு எடுத்துக்காட்டப்பட்டவற்றையே கையாளாது, புதியனவற்றை உருவாக்க இவைதூண்டுவனவாய் அமைதல் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு வேணவா.**

8. படிமங்கள், குறியீடுகள் என்பன, படிப்போரின் தற்சிந்தனைக்கு விருந்தாவன. அவற்றை விளக்க முற்படுவதும் படிப்பவரின் சிந்தனை உரிமையிலே தலையிடுவதாகும் என்று கருதி, அவற்றிற்கான மேற்கோள்கள் தரப்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதறிஞர் ராஜாஜி
## 'பேச்சு நடை' பற்றிக் கூறியவை

தமிழில் பேச்சுக் கெட்டுப் போயிருப்பது மூன்று விதத்தில். ஒன்று, கொச்சைப் பதங்களுக்கு அளவுக்கு மிஞ்சி இடங்கொடுத்து வருவது; இரண்டாவது, ஆங்கில மொழிகளைத் தயக்கமின்றி எல்லாக் காரியங்களுக்கும் எல்லாச் சமயங்களிலும் கலந்து பேசும் வழக்கம்; மூன்றாவது பேசும் பொழுது கையையும் காலையும் ஆட்டிப் பேச்சுக்குப் பதிலாக உடலை உபயோகித்துச் சம்பாஷணை செய்யும் வழக்கம்.

ராஜாஜி கட்டுரைகள் - வசன நடை-90

பாரதி பதிப்பகம் - திருவனந்தபுரம் - சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு II

# கல்விப் பணி (Education Service) தொடர்பான கலைச்சொற்கள் சில

கீழே தரப்படும் கலைச்சொற்களிற் சில, முன்னரே கல்விப் பணியாள ருக்கு அறிமுகமானவையாயும் சில, புதியனவாக எம்மால் அறிமுகப்ப டுத்தப்படுவனவாயும் உள்ளன. கற்பித்தலிலும் கல்விப்பணியிலும் பட்ட றிவு உடைய எமது வேணவாவின் விளைபயனே. இவற்றை நாம் தொகுத்துத் தருவதன் அடிப்படை நோக்கம். 'தமிழில் முடியுமா?' என்ற வினாவுக்கு எம்மால் இயன்றதொரு விடையே இக்கலைச்சொற் பட்டிய லாகும். இவை, பொருத்தமானவையோ பொருத்தமற்றவையோ என்ற முடிவினைக் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எடுத்துக் காட்டினால் மிகவும் நன்றியுடையோம். பிழைகள் சுட்டிக்காட்டப்படுமாயின் அவற் றைத் திருத்திக் கொள்ளவும் தயங்கோம். பலர் கூடி இழுக்கவேண்டிய தேர் இது. ''வடக்கயிற்றைப்பிடித்து இழுக்க வாரும்'' என்று அனைவரை யும் அன்புடன் அழைக்கின்றோம். (இப் பட்டியலில் அடங்கியவற்றிற் சில கலைச் சொற்கள், பொதுப் பணியாட்சிக்கும் பொருந்துவனவே.)

க. சொக்கலிங்கம்
க. கனகசிங்கம்

| கலைச்சொல் (இன்று) - | கலைச் சொல் (இனி) - | ஆங்கில வடிவம் |
|---|---|---|
| அங்கீகரித்தல், அங்கீகரிப்பு | ஏற்பு, ஏற்றல் | Approval |
| அங்குரார்ப்பணம் | கால்கோள் | Inauguration |
| அதிகாரி | அலுவலர் | Officer |
| அதிபர் | முதல்வர் | Principal |
| அநுமதி | இசைவு | Permission |
| அமுல்படுத்தல், அமுலாக்கல் | செயற்படுத்தல் | Implementation |
| அரைச் சம்பள லீவு | அரை ஊதிய விடுப்பு, ஈவு | Half pay leave |
| அமைப்பாளர் | அமைப்பாளர் | Organiser |
| அவதானிப்பு | நோக்குகை | Observation |
| அறிக்கை | அறிக்கை | Statement |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அறிவுறுத்தல் | அறிவுறுத்தல், அறிவுரை | Advice |
| போதனாசிரியர் | அறிவுறுத்துநர் | Instructor |
| ஆசிரியர் | ஆசிரியர் | Teacher |
| ஆய்வுகூட உதவியாளர் | செய்ம்முறை உதவியாளர் | Laboratory Assistant |
| ஆய்வுகூடப் பணியாள் | செய்ம்முறைக்கூடப் பணியாள் | Laboratory Attendant |
| விஞ்ஞான ஆய்வுகூடம் | அறிவியல் ஆய்வுகூடம் | Science |
| ஆய்வுகூடம் பரிசோதனைக்கூடம் | செய்ம்முறைக்கூடம் | Laboratory |
| இடைநிறுத்தம் | இடைநீக்கம் | Suspension |
| இடைநிறுத்தம் | பணியிடை நிறுத்தம் | Interdiction |
| இணைக்கப் பட்டுள்ளது | இணைக்கப் பட்டுள்ளது | Annexed |
| இணைப்பாட விதானச் செயற்பாடுகள் | இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகள் | Co-Curricular Activities |
| இணைப்பாளர் | இணைப்பாளர் | Cordinator |
| உதவிப் பணிப்பாளர் | உதவி நெறியாளர் | Assitant Director |
| உயர்தரம் | உயர் தகைமை | Advanced level |
| உள்வாங்கல் | உள்ளீர்ப்பு | Absorption |
| ஒத்துமாறல் | ஒத்துமாறல் | Mutual transfer |
| ...... | ஒப்பளிப்பு | Sanction |
| ...... | ஒப்பிணைப்படி | (Combined Allowance |
| ....... | ஒப்பியபடி | Allowance |
| ஒழுக்காறு | ஒழுக்காறு | Discipline |
| ஒழுக்காற்று நடவடிக்கை | ஒழுக்காற்று நடவடிக்கை | Disciplinary Action |
| ஒழுங்குபடுத்தல் | ஒழுங்குபடுத்தல் | Arrangement |
| ஊக்குவிப்பு | ஊக்குவிப்பு | Incentive |
| கடமைலீவு | கடமை விடுப்பு | Duty leave |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கருத்தரங்கு | பயிலமர்வு | Seminar |
| கவனத்திற் கெடுத்தல் | கருத்திற் கொள்ளல் | Consideration |
| காரியாலயம், கந்தோர் | அலுவலகம் பணியகம் | Office |
| கூட்ட அறிக்கை | கூட்ட அறிக்கை | Minutes |
| கூட்ட விளம்பரம் | நிகழ்ச்சியறிக்கை | Notice |
| கூலி | கூலி | Wage |
| கோரிக்கை | வேண்டுதல், வேண்டுகை | Request |
| கோவை | கோவை, கோப்பு | File |
| சத்தியப் பிரமாணம் | உறுதிமொழி | Oath |
| சம்பளத்துடன் கூடிய லீவு | முற்றூதிய விடுப்பு | Full Pay Leave |
| சம்பளமற்ற லீவு | ஊதியமற்றவிடுப்பு, ஊதியமில்விடுப்பு | No Pay Leave |
| சம்பளம் | ஊதியம் | Salary |
| சாதாரணதரம் | பொதுத் தகைமை | Ordinary level |
| சான்றிதழ் | நற்சான்றிதழ் | Character Certificate |
| அத்தாட்சிப்படுத்தல் | சான்றுரைத்தல் | Certify |
| சுகாதாரத் தொழிலாளி | துப்புரவுத் தொழிலாளி | Sanitary Labourer |
| சுருக்கெழுத்தாளர் | சுருக்கெழுத்தர் | Stenographer |
| சுற்று நிருபம் | சுற்றறிக்கை | Circular |
| ...... | செய்கை, செயற்படல் | Function |
| செய்திட்டம் | செய்திட்டம், செயற்றிட்டம் | Project |
| செய்தியறிக்கை | செய்தியறிக்கை | Report |
| சேவகன் | ஏவலாள் | Peon |
| சேவைக்கால ஆலோசகர் | பணிக்கால அறிவுறுத்துநர் | In-sevice adviser |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சேவைக்காலப் பயிற்சி | பணியிடைப்பயிற்சி<br>பணிக்காலப்பயிற்சி | In Service Training |
| சேவை நிறுத்தம் | பணி நிறுத்தம் | Termination |
| சேவை நீடிப்பு | பணி நீட்டிப்பு | Extension of Service |
| தட்டெழுத்தாளர் | தட்டச்சர், தட்டெழுத்தர் | Typist |
| தண்டனை | ஒறுப்பு | Punishment |
| தரா தரப்பத்திரம் சான்றிதழ் | சான்றிதழ் | Certificate |
| தராதரம் | தகுதி, தகைமை | Level |
| ...... | தவிர்வு, தவிர்ப்பு | Excemption |
| தற்காலிகம் | நிலையற்ற | Temporary |
| தாபகர் | நிறுவுநர் | Founder |
| ...... | திரட்டியவிடுப்பு<br>திரட்டிய ஈவு,<br>திரட்டீவு | Accumulated Leave |
| ...... | தீர்ந்த விடுப்பு<br>தீர்ந்த ஈவு | Lapsed Leave |
| ...... | தொலைமடல் | Fax |
| நாட்சம்பளம் | நாளூதியம் | Daily Pay |
| நிகழ்ச்சிநிரல் | நிகழ்ச்சி நிரல் | Agenda |
| நிரந்தரம் | நிலையான | Permanent |
| நிருவாகம் | பணியாட்சி | Administration |
| நியமனம் | (பணி) அமர்த்துதல்,<br>அமர்த்துகை | Appointment |
| நிலையம், தாபனம் | நிலையம் | Institute |
| ...... | நிறுத்துகை | Stoppage |
| நிறுவனம் | நிறுவனம் | Institution |
| நிறைவேற்றுகை | நிறைவேற்றல் | Execution |
| நோக்குநர் | நோக்குநர் | Invigilator |
| பதவிநிலை உதவியாளர் | பணிக்குழு உதவியாளர் | Staff Assistant |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ....... | பணிக்குறிப்பு | Endorsement |
| பணிப்பாளர், இயக்குநர் | நெறியாளர் | Director |
| பயிலுநர் | பயிலுநர் | Trainee |
| பயிற்சிநெறி | பயில்நெறி | Course |
| பயிற்சிப் பட்டறை | செயலமர்வு | Workshop |
| பரீட்சகர் | தேர்வாளர் | Examiner |
| பரீட்சார்த்தி | தேர்வுநாடி | Candidate |
| பாடசாலை, பள்ளிக்கூடம் | பள்ளி | School |
| பாடத்திட்டம் | பாட உள்ளுறை | Syllabus |
| பாடத்திட்டம் | பாடத்திட்டம் | Scheme of lesson |
| பாடவிதானம் | கலைத்திட்டம் | Curriculem |
| பார்வைக் கனுப்புதல் | மேலளித்தல், மேலளிக்கப்படுகிறது | Forward Forwarded |
| பிரதமலிகிதர் | தலைமை எழுத்தர் | Chief Clerk |
| பிரதிப்பணிப்பாளர் | பதில்நெறியாளர் | Deputy Director |
| | பொறி இயக்குநர் | Operator |
| பிற்போடல் | பிற்போடல் | Deferment |
| பொறியியலாளர் | பொறியியலாளர், பொறிஞர் | Engineer |
| போதனாசிரியர் | செய்ம்முறைக் காட்டுநர் | Demonstrater |
| மாணவன், மாணவி | மாணாக்கன், மாணாக்கி | Student, Pupil |
| மீளச்செயல் | மீள்செயல் | — |
| மீள் நியமனம் | மீளமர்த்தல் | Re-instatement |
| மீள்பரீட்சார்த்தி | மீள்தேர்வுநாடி | Repeat Candidate |
| முகாமைத்துவம் | முகாமையம் | Management |
| முகாமையாளர் | முகாமையர் | Manager |
| முதன்மை ஆசிரியர் | முதன்மை ஆசிரியர் | Master teacher |
| முறைப்பாடு | முறைப்பாடு | Complaint |
| முறையீடு | முறையிடு | Appeal |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முன்னறிவிப்பு | முன்னறிவிப்பு, முன்னறிவித்தல் | Notice |
| முன்னாயத்தம் | முன்னேற்பாடு, முன்னொழுங்கு | Preliminary arrangement |
| மெய்வல்லுநர் போட்டி | மெய்வன்மைப் போட்டி | Atheletic Meet |
| மேற்பார்வையாளர் | மேற்பார்வையாளர் | Supervisor |
| மொடியூல் | பயில்வேடு, பயிற்சிக் கையேடு | Module |
| விகிதர் எழுதுவினைஞர் | எழுத்தர் | Clerk |
| லீவு | விடுப்பு, ஈவு | Leave |
| லீவுச் சீரமைப்பு | ஈவுச் சீரமைப்பு, விடுப்புச் சீரமைப்பு | Leave assessment |
| லீவு மாற்றியமைப்பு | ஈவுமாற்றமைப்பு, விடுப்பு மாற்றமைப்பு | leave Mutation |
| வாசக்காலப்பயிற்சி வதிவிடப்பயிற்சி | தங்கிடப் பயில்நெறி | Residential Course |
| விசாரணை | முறையாய்வு | Inquiry |
| விடய எழுது வினைஞர், விடய விகிதர் | குறிபொருள் எழுத்தர் | Subject Clerk |
| விதந்துரை, விதப்புரை, சிபார்சு, பரிந்துரை, | எடுத்துரை | Recommendation |
| விதப்புரை விதந்துரை | பாராட்டுரை, விதப்புரை | Commendation |
| வைத்திய லீவு | மருத்துவ விடுப்பு மருத்துவ ஈவு | Medical Leave |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு III

# சில வடசொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

இந்த நூலினைப் படிப்போருக்கு எளிதில் விளங்கவென அவர்களுக்கு அறிமுகமான வடசொற்கள் சில கையாளப்பட்டுள்ளன. அவற்றிற்கு இணைவான தமிழ்ச்சொற்கள், கீழே தரப்படுகின்றன.

அகதி - ஏதிலி, ஏதுமிலி
அமிசம் - கூறு
அவதானமாய் — விழிப்பாய்
அவதானித்தல் - நோக்கல், கூர்ந்துநோக்கல்
ஆசை - அவா, பெருவிருப்பு
ஆணை - கட்டளை, பணிப்பு
ஊகிப்பு - கருதல், மட்டுக்கட்டல் (பேச்சுவழக்கு)
எதார்த்தம் (யதார்த்தம்) - இயன்மை, இயல்பியம்
ஏகாதிபத்தியம் - தனிமேலாண்மை
கணிசம் - (குறிப்பிடத்தக்க) அளவு
காரணம் — கரணியம் (தேவநேயப் பாவாணர்)
கோபுரம் - எழுநிலைமாடம்
சங்கம் - கழகம்
சஞ்சிகை - தாளிகை
**சமுதாயம்** - குமுதாயம் (தேவநேயப் பாவாணர்)
சமூகம் - குமுமம்
சாமானிய மக்கள் - பொதுமக்கள்
சிந்தனை - எண்ணல், உள்ளல்.
சுதந்திரம் - தன்னாட்சி
**சுருதி** - இசைவொலி, இசையொலி
பதம் - சொல் (பதம் **(Term)** எனவரின் 'கலைச்சொல்' எனலாம்.)
பத்திரிகை - (செய்தித்)தாள்
பந்தி - தொடரி **(Paragraph)**
பரம்பரை - வழிவந்தோர், கால்வழியினர், மரபினர்
பிரதி - படி
மிதம் - அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசம் - பெருநிலம்
தந்தம் - கொம்பு (பல்) - (யானைத் தந்தம் - யானைக் கொம்பு)
தருக்கவியல் - அளவையியல்
தாது - வேர்(ச்சொல்)
நவீனம் - புதினம் (Novel)
நிபுணர் - திறலர்
வருணனை - காட்சி விளக்கம், காட்டுரை
வாக்கியம் - தொடரியம்
வாசகர் - படிப்போர்
வாதி - கருத்துப் போராளி
விடயம் - பொருள்
வேளை - போது, காலை (அதுகாலை)
லயம் - தாள அறுதி

<u>திசைச் சொல்</u>

இராணுவம் - படை

**(மேற்கோள்களில், வந்த வடசொற்கள் அவ்வாறே விடப்பட்டன. 'கவிதை'க்குப் 'பா' என்ற சொல் இணையானதாயினும் முன்னதன் கருத்துப் பரப்பு (Conotation) கூடிய பொருட்பேறுடைய தாயும் அஃது எல்லாரும் ஏற்றுக் கொண்டதாயும் விலக்கமுடியாத தாயும் உள்ளது.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு IV

## (அ) தமிழில் வழங்கிவரும் சில வடசொற்கள், சொற்றொடர்களின் திருத்தமான வடிவங்கள்.

| வழக்கு | திருத்தம் | விளக்கம் |
|---|---|---|
| 1. அகோரம் (கொடுமையற்றது) | கோரம் (கொடுமையானது) | ''இன்று அகோரமான வெயில்'' என்பது கொடுமையற்ற வெயில் என்று பொருள்படும். 'கோரமான வெயில்' |
| 2. ஆச்சாரியர் | ஆசாரியர் | 'ச்' வராது. ஆசாரியர் என வழங்குக. ஆசாரியார், சிவா சாரியார் எனவும் கையாளலாம். |
| 3. ஆன்மீகம் | ஆன்மிகம் | 'இகம்' என்பது பின்னொட்டு. (விசர்க்கம்) எனவே 'ஆன்மிகம்' எனவே வழங்குக. |
| 4. கலாச்சாரம் | கலாசாரம் | 'ச்' வராது. |
| 5. கிரகப்பிரவேசம் | கிருகப்பிரவேசம் | கிரகம் - கோள் (Planet) கிருகம் - மனை, கிருகப்பிர வேசம் - மனைபுகல். |
| 6. கிரிகை (கிரிசை) | கிரியை | 'க்கிரியா' - கிரியை - செய்கை. இச்சொல் பெரும்பாலும் வைதிகச் செய்கைகளைக் குறிக்கவே வழங்குகின்றது. |
| 7. கிருஸ்ணன் | கிருஷ்ணன் | 'ஸ வராது. கிருஷ்ண - கரியன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 8. சாத்வீகம் | சாத்(து)விகம் | பின்னொட்ட - இகம் - பின்னொட்டு சாந்தப் பண்பு |
| 9. சித்தரித்தல் | சித்திரித்தல் | 'சித்திரம் என்ற பெயரடியாய்ப் பிறந்த தொழிற்பெயர் சித்திரித்தல் |
| 10. சிரார்த்தம் | சிராத்தம் | சிரத்தையுடன் செய்யப்படுவது சிரார்த்தம் |
| 11. சிரேஷ்ட (புத்திரன், புத்திரி) | சியேஷ்ட (புத்திரன், புத்திரி) | ஜ்யேஷ்ட-சியேஷ்ட (சியேட்ட)-மூத்த சிரேஷ்ட (சிரேட்ட)- உயர்ந்த, சிறந்த |
| 12. சுபீட்சம் | சுபிட்சம் | 'சு'-பிட்சம்-சுபீட்சம். செழிப்பு, வளம். |
| 13. தீபாவழி | தீபாவலி, தீபாவளி | தீப+ஆவலி-தீபாவலி தீப+ஆவளி-தீபாவளி ஆவலி-வரிசை |
| 14. (அங்கப் பிரதட்டை | (அங்கப்) பிரதட்சணம் | (உடலால்) வலம் வரல் பிரதட்சணம் - வலம்வரல் |
| 15. புஸ்பம் | புஷ்பம் (புட்பம்) | 'ஸ்' வராது. |
| 16. மரணித்தல் | மரணமடைதல் மரணமாதல் | மரணித்தல்-பிறரை மரணமடையச்செய்தல் (பிறவினை) |
| 17. லாவகம் | (இ)லாகவம் | (இ) 'லகு' விலிருந்து பிறந்தது லகு-எளிது. |
| 18. விஷேசம் | விசேஷம் | வி+சேஷம்-விசேஷம் (விசேடம்) |

நாகரீகம் நாகரிகம் 9நகர் என்ற தமிழ்ச் சொல்லுடன் 'இகம்' என்ற வடசொற் பின்னொட்டு இணைந்த கலப்புச் சொல் நாகரிகமா? என்பது ஆராயத்தக்கது.)

**(அ) பொருள் மயக்கம் தரும் சில தமிழ்ச் சொற்கள்:**

**i. தந்நலம், தன்னலம்,**

தம்+நலம் = தந்நலம் - அவர்கள் தந்நலம் உடையவர்கள்.

தன்+நலம் = தன்னலம் - அவன் தன்னலம் உடையவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. தேநீர், தேனீர்.

தேய்+நீர் = தே+நீர் = தேநீர்
தேன்+நீர் = தேனீர்

iii. தந்நாடு, தன்னாடு
தம்+நாடு = தந்நாடு
தன்+நாடு = தன்னாடு.

iv. முந்நூறு, முன்னூறு
மூன்று+நூறு, மு+ந்நூறு = முந்நூறு
முன்+நூறு = முன்புநூறு = முன்னூறு.

v. வெந்நீர், வென்னீர்

வெம்மை+நீர் = வெ+நீர் = வெந்நீர்
வென்னீர் = பொருளில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிதா 151
அண்ணாதுரை, அறிஞர் 115, 128, 128, 129
அரவிந்தன் மு. 116, 119
ஆகுதி 150
ஆறுமுகநாவலர் 89, 100, 124, 131
ஆறுமுகம் வ. பேராசிரியர் 98
இதழ்கள் 121
இந்தியா டுடே 32
இராசரத்தினம் வ. அ 141
இராமானுஜாச்சாரியார் 109
இருபதுகளில் சிறுகதை 122
இலக்கிச் சிந்தனைக் களம் 77
இலக்கியத் திறன் 131
இலக்கியவழி 123, 127
இலங்யைர்கோன் 146
இளமுருகனார் 126
இறையனார் களவியல் 117
உதயம் சஞ்சிகை 89
உரையாசிரியர்கள் 116, 119
ஏகலைவன் 145
கணபதிப்பிள்ளை சி. (பண்டிதமணி) 50, 67, 127
கணேசையர் சி. மகாவித்துவான் 15, 112, 126
கதிர்காமநாதன் செ. 138
கமலாம்பாள் சரித்திரம் 115, 130
கமால், திக்குவல்லை 144
கம்பராமாயணம் 57, 71, 109, 126
கம்பன் 14
கருணாநிதி கலைஞர் 129
கலியாணசுந்தரமுதலியார், திரு. (திரு.வி.க) 126
கலைச்சொல்லாக்கம் - 49
கல்கி 132, 147
கார்லைல் 112
காளமேகம் 115
குமாரசுவாமிப்புலவர், சுன்னை 126
கூரியர் 31
கைலாசபதி க. பேராசிரியர் 122, 123, 130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபிள்ளை த. ஸ்ரீமத் 126
கோகிலா மகேந்திரன் 146
கோதண்டராமன் ப. 123
சட்டநாதன் கே. 137
சண்முகபாலசுப்பிரமணியம் 48
சண்முகதாஸ் அ. பேராசிரியர் 70, 91
சம்பந்தன் 141
சலதி 143
சாந்தன் 147
சிதம்பர திருச்செந்திநாதன் 148
சிதம்பரநாதமுதலியார் டி. கே. இரசிகமணி 92
சிதம்பர ரகுநாதன் 116, 117
சிந்தனைக்களங்கள் 101, 103
சிலப்பதிகாரம் 116, 117
சிலநேரங்களில் சில மனிதர்கள் 142
சிவசங்கரி 31, 137
சிவஞானமுனிவர் 117
சிவத்தம்பி கா. பேராசிரியர் 111, 130
சீனிவாசன் கே. 132
சீனிவாசன் ரா. டாக்டர் 44, 56, 61
சுந்தரம்பிள்ளை பெ. 111
சுபமங்களா 30
சுப்பிரமணிய ஐயர் வ. வே. (வ.வே,சு.) 117
சுப்பிரமணிய பாரதி 59, 125, 131, 132, 139
சுப்பிரமணியன் சங்கு 123, 125
சுஜாதா 29
சூரியநாராயண சாஸ்திரியார் வி.கோ. 117
செங்கை ஆழியான் 142
செம்பியன் செல்வன் 138
செல்லப்பா சி. சு 100. 146
செல்வநாயகம் வி, 130
சேதுப்பிள்ளை ரா. பி. 56, 116, 129
சேனாவரையர் 17, 19, 52, 53
சொக்கன் 143
சோமசுந்தரபாரதி, நாவலர் 125
சோமு, ஈழத்து 148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு, மாத்தளை 144
ஞானப்பிரகாசர், சுவாமி 61
ஞானி, கோவை 30
டானியல் கே, 143
டேவிட் கே. ஆர். 139
டொமினிக்ஜீவா 140
தகவம் பரிசுக்கதைகள் 139, 141, 144, 145
தமிழர் கொள்கை 125
தமிழ்மொழி இலக்கண இயல்புகள் 2, 3
தமிழ்வரலாறு 66, 76
தமிழ் வரலாற்றிலக்கணம் 76
தமிழ்விருந்து 56
தம்பிக்குக் கடிதங்கள் 128
திருக்குறள் 12, 19, 42, 55, 56, 84, 107, 115
திருச்சிற்றம்பலம் 139
திருவிளையாடற்புராண வசனம் 123
தெணியான் 145
தேவநேயப்பாவாணர் 61, 67, 76, 125
தேவாரம் 55, 74
தொல்காப்பியம் 8, 18, 25, 26, 28, 36, 52, 53, 67
தொல்காப்பியர் 68, 70, 74, 81, 98, 100, 105, 109, 110, 115, 119
நச்சினார்க்கினியர் 70, 117
நந்தி (சிவஞானசுந்தரம் செ பேராசிரியர்) 133, 134
நன்னூல் 1, 2, 9, 26, 28, 32, 37, 38, 49, 53, 69, 74
நன்னூலார் 80, 90, 101, 108, 109, 112, 116, 117, 120
நாணலின் கீதை 138
நான்காம் பாலபாடம் 99
நான் நானாக 138
தொறிஸ் B. W. 97
பஞ்சும் பசியும் 143
பத்மநாதன். நீல 146
பத்மாவதி சரித்திரம் 116
பரமார்த்த குரு கதை 116
பரிமேலழகர் 57
பவணந்தி 20, 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி ஆய்வுகள் 124
பாரதி
பாலசுந்தரனார் 125
பிச்சமூர்த்தி 132
பியூலா பேர்சி 122
பிளாபட் 122
புதுமைப்பித்தன் 132, 133
புதுமைப்பித்தன் கதைகள் 133
புறநானூறு 115
பேரன் க. நெல்லை 147
பேராசிரியர் 110, 117
பொன்னம்பலபிள்ளை, வித்துவசிரோமணி 126
பொன்னுத்துரை, எஸ் 139
மணிக்கொடி 132, 133
மண்ணின் தாகம் 143
மலர்மஞ்சம் 137
மலைக்கொழுந்து 133
மலைபடுகடாம் 87
மல்லிகை 20 ஆம் ஆண்டு மலர் 147
மல்லிகை 30 ஆம் ஆண்டு மலர் 137
மல்லிகை பெப்ரவரி 1984 147
மறுமலர்ச்சிக் கதைகள் 141
மறைமலை அடிகள் 125, 126
மன்சூர் எம். எஸ். என். 144
மாதவையா 116
மாணிக்கம். சுப. டாக்டர். 26, 100, 101, 104
மாணிக்கவாசகர் 100
முத்துக்குமாரன் பொன். 67
முருகன் அல்லது அழகு 125, 126
முருகானந்தன் அ. செ. (அ செ. மு.) 141
முருங்கையிலைக் கஞ்சி 143
மூவர் கதைகள் 139
மோகவாசல் 146
மௌனி 132, 140
மௌனி கதைகள் 140
யோகநாதன் செ 139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகுநாதன் சிதம்பர 142
ரஞ்சகுமார் 145
ரதி கந்தசாமி 145
ராமசாமி ஐயங்கார் வ. (வ. ரா.) 138
ராமாம்ரிதம் லா ச, 140
ராஜகோபாலன் கு. ப. (கு. ப ரா) 144
ராமையா பி.எஸ் 120
ராஜமையர் 116, 133
ராஜாஜி 150
வகுப்பறைக் கற்பித்தல் 98
வரதராசன் மு. பேராசிரியர் 110, 131
வரதராஜன், வடகோவை 145
வ. ரா. வாசகம் 138
வாடி வால், 147
விடிவெள்ளி பூத்தது 149
விபுலாநந்த அடிகள் - 32, 120, 128
வீரசோழியம் 30
வீர மாமுனிவர் 69, 117
வெட்டுமுகம் 148
வெள்ளிப் பாதரசம் 146
வேதநாயகம்பிள்ளை, மாயூரம் 117
வேந்தனார் 126
வேலுப்பிள்ளை சு. (சு. வே.) 126, 142
வேலுப்பிள்ளை ஆ. பேராசிரியர் 126, 142
வைகை 145
வையாபுரிப்பிள்ளை சு. 36, 78
றொபேட் லூபிஸ் ஸ்டீவின்சன் 129
ஜானகிராமன் தி. 137
ஜூனியர் விகடன் 30
ஜெகந்நாதன் காவலூர் 143
ஜெயகாந்தன் 142
ஸ்ரீனிவாசன் 138
ஷேக்ஸ்பியர் 97
ஹம்லெற் 97
**Brooks & Warren 120**
**Eliot T.S. 112**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரைநடைத் தெளிவு

- ★ இந்நூல் நல்ல தமிழ் எழுதத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.
- ★ நூலின் ஒவ்வொரு பகுதியும் தமிழ் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டிற்குப் பயன்படும்.
- ★ ஆரம்பப் பள்ளிக்கூடம் தொடக்கம் பல்கலைக் கழகம் வரை கல்வி கற்போருக்கும் உதவும் நூல்.
- ★ சொற் பிழை, வாக்கிய அமைப்பு, புத்தாக்கச்சொல், பிற மொழிச் சொற்களைக் கையாள்வது யாவும் விளக்கும்.
- ★ அறிவியல் வளர்ச்சிக்கேற்ப தமிழ் மொழி மேம்பாட்டுக்கு உதவும்.
- ★ தமிழைச் சிறப்பாக எழுத விரும்பும் அனைவர்க்கும் மாணவர்க்கும் நன்கு பயன்படும் நூல்.
- ★ தமிழ் மொழிப் புலமையும் நீண்ட காலம் மொழியைக் கற்பித்தலிலும் ஆற்றல் மிக்கவரால் எழுதப்பட்டது.

Rs 140.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org